

கழுத்தில்
விழுந்தமாலை
லக்ஷ்மி
பூங்கொடி பதிப்பகம்

## நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கழுத்தில் விழுந்த மாலை |
| ஆசிரியர் | : | லக்ஷ்மி |
| நூலின் பொருள் | : | நாவல் |
| வெளியீடு | : | பூங்கொடி பதிப்பகம்<br>மயிலாப்பூர், சென்னை-4. |
| நூல் உரிமை | : | டாக்டர் கே. மகேஸ்வரன் |
| அச்செழுத்து | : | 12 புள்ளிகள் |
| வெளியிட்ட ஆண்டு | : | முதற் பதிப்பு டிசம்பர், 1981<br>2ஆம் பதிப்பு டிசம்பர், 1984<br>3ஆம் பதிப்பு மே, 1987<br>4ஆம் பதிப்பு ஜூலை, 1990<br>5ஆம் பதிப்பு மே, 1992<br>6ஆம் பதிப்பு பிப்ரவரி, 1998<br>7ஆம் பதிப்பு டிசம்பர், 2007 |
| நூல் அளவு | : | கிரவுன் 1 × 8 |
| பக்கங்கள் | : | 189 |
| பயன்படுத்திய தாள் | : | 10.9 கி.கி. வெள்ளைத்தாள் |
| ஒளி அச்சு | : | செங்கமலம் எண்டர்பிரைஸஸ்<br>சென்னை 600 004 |
| அச்சிட்டோர் | : | வசந்த் ஆப்செட் பிரஸ்<br>சென்னை-24. ✆ : 23726603 |

விலை: ரூ. 70.00


## பதிப்புரை

இந்நாவலின் நாயகி மாதங்கி தன் பெரியம்மாவின் வீட்டில் வளர்கிறாள். பெரியம்மா பெண் ஜயந்தியின் கழுத்தில் விழ இருந்த மண மாலை, அவள் காதலனொருவனுடன் காணாமல் போனதால் இவள் கழுத்தில் வந்து விழுகிறது.

கைப்பிடித்த கணவன் ஹர்ஷனால் கண் கலங்க வைக்கப்படும் மாதங்கி பெங்களூர் செல்கிறாள். தன் பத்தாம்பசலித்தனமான பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு,

"பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி கனவு கண்ட புதுமைப் பெண்ணாக மாறுகிறாள்.

"பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா"

என்று பாரதி கண்ட ஆண்கள் சமுதாயம் பெண் களிடம் தன் தோல்வியை மகிழ்ச்சியுடன்

ஒப்புக் கொள்வதைப் போல் மாதங்கியைக் கைப்பிடித்த கணவன் ஹர்ஷனும் கடைசியில் தன் தோல்வியை அவளிடம் ஒப்புக் கொள்கிறான்.

பெண்களுரிமைக்காகப் பாடல்கள் பாடிய கவி பாரதியின் நூற்றாண்டு விழா நடைபெற்ற நேரத்தில் முதற் பதிப்பாக வெளிவந்த இந்த நாவலின் ஏழாம் பதிப்பை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

# கழுத்தில் விழுந்த மாலை

அவர்களுடைய பஸ் திருத்தணியை அடைவதற்குள் பொழுது சாயத் தொடங்கி விட்டது.

மாப்பிள்ளை வீட்டவர்கள் எடுத்து நடத்தும் கல்யாணம். எனவே அவர்கள் எல்லாவற்றையும் கவனிக்க முன்னதாகவே வந்துவிட்டிருந்தனர். எல்லோருக்கும் வசதியாகத் தங்குவதற்கு தேவஸ்தான தங்கும் அறைகள் வாடகைக்கு எடுக்கப்பட்டுத் தயாராக இருந்தன. பெண் வீட்டவர்கள் ஒரு பகுதியிலும் மாப்பிள்ளை வீட்டவர்கள் எதிர்ப்பகுதியிலும் தங்குவது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பஸ்ஸிலிருந்து பெட்டி படுக்கைகளை ஆட்கள் இறக்கி எடுத்துவர அவர்களுக்குப் பின்னால் மாதங்கி நடந்து வந்துகொண்டிருந்தாள். "எல்லாரும் பார்க்கறதுக்கு முன்னாடி உள்ளே போயிடு. சொன்னதைக் கேட்டாதானே? இன்னிக்குக்கூட பெல்பாட்டமும் டாப்சும் போட்டுக்கணுமா? மாதங்கியைப் போல நூல் புடவை யாவது சுத்திக்கிட்டு வந்திருக்கக் கூடாது?" கடுகடுத்துக் கொண்டு பெண்ணைப் பெற்ற சுமதி, பெல்பாட்டம் தரித்த மகளுக்குப் பின்னால் வேகமாக நடந்து கொண்டிருந்தாள்.

"இந்த அறை எங்களுக்கு. இரண்டு படுக்கைகள் இருக்கு. அதனாலே எங்களுக்குச் சௌகரியமாக இருக்கும்" என்று உறவினர்களும் நண்பர்களும் அறைகளைத் தேர்ந்தெடுப்பதில் அவசரப்பட்டுக் கொண்டிருந்தனர்.

பெட்டி, படுக்கை, கூஜா, டம்ளர், கூடைகளெல்லாம் ஒழுங்காக வந்து சேர்ந்தனவா என்று மேற்பார்வையிடும் வேலை மாதங்கிக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அறைக்குள்ளே சாமான்களை வைத்துவிட்டுப் போனதும் அவைகளை ஒருமுறை எண்ணிப் பார்த்தாள். ஜெயந்தியின் ஒப்பனைப் பொருட்கள் கொண்ட வி ஐ பி பெட்டி உள்பட எல்லாம் சரியாக வந்து சேர்ந்துவிட்டிருந்தன. பெரியம்மா சுமதிக்குப் பஸ் பயணம் என்றாலே கால்கள் வீங்கிக் கொண்டு விடும் என்பது அவளுக்குத் தெரியும்.

பரபரப்புடன் ஒரு பெட்டியைத் திறந்து சுத்தமான தொரு விரிப்பை எடுத்து அறைக்குள் கிடந்த படுக்கையின் மீது விரித்துத் தயாராக்கினாள்.

''அப்பாடா! ஒரு பத்து நிமிஷமாவது படுத்துக்கிறேன். ராத்திரி சாப்பாட்டுக்கப்பறந்தான் பரிசமும், நலங்கும் வைச்சுக்கப் போறாங்க. என்னால் மண்டபத்துக்கும் இந்த அறைக்கும் பல தடவை நடக்க முடியாது. நீ ஒரு டிபன் செட்டிலே சாப்பாட்டை எடுத்து வந்து எனக்குப் பரிமாறிட்டு, பிறகு போய் மத்தவங்களோட சாப்பிட்டு வரலாம். அப்படியே பெரியப்பா எந்த அறையிலே தங்கியிருக்கார்னு கண்டுக்கிட்டு வந்துடு. எங்களுக்கு அடுத்தபடியா இருக்கிற அறையை எடுத்துக்கோங்கன்னு கரடியா கத்தியிருக்கேன். ஒரு அவசரப் போதுக்கு இவரைத் தேடணும்னா...'' பெருமூச்செறிந்தபடி கட்டிலின் மீது சாய்ந்துகொண்டாள் சுமதி.

''நான் கூட அங்கே போகப் போறதில்லை. உங்களோட இங்கேயே சாப்பிட்டுக்கிறேன். இப்போ எல்லோரும் என்னை முறைக்க வேணாம்'' ஜெயந்தி பிடிவாதம் செய்தாள்.



பெரியம்மாவின் உத்தரவுகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் அவள் பொரிந்து கொட்டிவிடுவாள். மாதங்கி அவசரமாக முகத்தைக் கழுவித் துடைத்துக்கொண்டு பொட்டு வைத்துக் கூந்தலை வாரி முடித்துக்கொண்டாள். பஸ் பயணத்தில் அலங்கிவிட்டிருந்த புடவையைக் களைந்து விட்டுத் தன் சிறு பெட்டியில் கொண்டு வந்திருந்த வாயில் சேலை ஒன்றை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

அது சமயம் மாப்பிள்ளை வீட்டிலிருந்து, ஒரு இளம் பெண் உள்ளே வந்தாள்.

''எல்லாரையும் முதல்லே சாப்பிட வரச்சொன்னாங்க அத்தை. பெண்களுக்குத் தலைக்கு வச்சுக்கப் பூக்கொடுத்து அனுப்பியிருக்காங்க...'' புன்னகைத்தபடி கையில் சுமந்து வந்த மல்லிகைப் பூ பந்தொன்றை மேஜையின் மீது வைத்தாள்.

''கல்யாணப் பெண்ணைப் பார்க்கணும்... நீங்கதானே சம்பந்தியம்மா?'' கேட்டுக்கொண்டே நின்றுவிட்டாள் அவள்.

சுமதி திரும்பிப் பார்த்தாள். அருகில் உட்கார்ந்திருந்த மகளைக் காணவில்லை. குளியலறைக் கதவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளே குழாயில் தண்ணீர் ஓடும் சப்தம் கேட்டது.

''குளிக்கிறா, பஸ்ஸிலே வந்த களைப்பு வேறே... சித்த பொறுத்துப் பரிசம் இருக்கே. அப்போ பார்க்கலாம்!'' எரிச்சலை அடக்கிக்கொண்டு மெலிதாய்ச் சிரித்தாள். வந்தவளின் முகம் சுருங்கிப் போனது.

''சரி வரேன்... சாப்பிட மண்டபத்துக்கு வந்துடுங்கோ'' அவள் விரைந்து விட்டாள்.

சுமதி மேஜையிலிருந்த பூப்பந்தை அசட்டையாகப் பார்த்தாள். அவளுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது.

''சம்பந்தியம்மா பலே கருமியா இருக்காங்களே. ஒரு பூப் பந்திலே பெண்ணுக்குத் தலை அலங்காரம் செய்துட்டு நாம் எல்லோரும் வச்சுக்கணும்னு அனுப்பியிருக்காங்க, மாதங்கி! நீ ஒரு காரியம் செய்! போய் அவங்களைப் பார்த்து, பெண் ணுக்குத் தலை அலங்காரம் செய்யக் கொஞ்சம் தனிப்படப் பூ வாங்கிட்டு வரச்சொன்னேன்னு சொல்லு...'' என்று உத்தரவிட்டாள்.

மாப்பிள்ளை வீட்டவர்கள் தங்கியிருந்த பகுதிக்கு வந்ததும் மாதங்கிக்கு ஒரே தயக்கம்.

சம்பந்தியம்மாள் எந்த அறையில் தங்கியிருக்காங்க என்று கேட்டுக்கொள்ளவில்லை.

முதல் இரண்டு அறைகளின் கதவுகள் சாத்தப்பட்டிருந் தன. உள்ளே ஆண்களின் பேச்சுக் குரல் கேட்டது. மூன்றா வது அறைக் கதவு ஒருக்களித்த நிலையில் திறந்து வைக்கப் பட்டிருந்தது. அதன் முன்னால் சிறிது அச்சத்துடன் நின்றாள். உள்ளேயிருந்து விசிறி சுழலும் சப்தம் மட்டுமேதான் வந்தது.

மெல்ல விரல்களால் கதவை லேசாகத்-தட்டினாள்.

''யார் அது?'' அதட்டலாக எழுந்த ஆண்குரலைக் கேட்ட தும் அதிர்ந்து போய்விட்டாள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த அவனைக் கண்டதும் முகம் சிவந்து-நெஞ்சு பதறப் பேசத் தோன்றாது மௌனியாகி விட்டாள். நீல ஷர்ட்டும் பட்டுக்கரை வேட்டியுமாக மண்டபத்துக்குக் கிளம்பத் தயாராகி விட்டிருந்த ஹர்ஷன், பெண் பார்க்க வந்த அன்று இருந்ததைவிடத் திடீரென்று ஒரு பிடி உயரமாகி விட்டது போன்ற மலைப்பு அவளுக்கு.

''சம்பந்தி அம்மாளைப் பார்க்கணும்...'' மென்று விழுங் கினாள்.



காலோடு தலைவரை அவளை உற்றுப் பார்த்த ஹர்ஷன் சிரித்துவிட்டான்.

''ரொம்ப அவசரமோ? அந்தக் கடைசி அறையிலே இருக்காங்க... போய்ப் பார்.'' கையைக் காட்டிவிட்டு உள்ளே சென்றுவிட்டான். இன்னும் கொஞ்ச நேரம் அவன் சிரித்துக்கொண்டு பேசமாட்டானா? இன்னும் ஒருசில விநாடிகள் அவன் அவள் எதிரே நின்றுகொண்டிருக்கக் கூடாதா? ... ஒரு விநோதமான ஏக்கம் உள்ளத்தில் எழு வதை உணர்ந்தாள்.

சே! இதென்ன ஆசை... இன்னும் கொஞ்ச நேரத்திலே பரிசம், விடிந்தால் கல்யாணம். நாளை இந்த நேரத்தில் ஜயந்தி யோட தேன்நிலவுக்குப் புறப்பட்டு விடுவான். ஜயந்திக்குக் கணவனாகப் போகிறவனைப் பார்த்து இப்படி வக்கிரமாக ஒரு ஆசையா!...

உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே குலுக்கிய இனங் காணாத உணர்வை உதறி விட்டுக்கொண்டு அவள் அந்தக் கடைசி அறைப் பக்கம் வந்தாள். அறையின் கதவு மூடி யிருந்தது. சிறிது தயங்கிவிட்டு மெல்லத் தட்டினாள். கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்ட சம்பந்தி அம்மாள் கஸ்தூரி அவளை வியப்போடு பார்த்தாள்.

சரிகைக் கரை போட்ட காஞ்சிபுரப் பட்டுச்சேலையில் கழுத்தும் காதும் மின்னச் சம்பந்தி அம்மாள் பந்தலுக்கு வேண் டிய அலங்காரத்தில் பாந்தமாகவே இருந்தாள்.

''உன்னை நான் இதுக்கு முன்னாடி பார்த்திருக்கிறேனே? ஆமாம்! இப்ப ஞாபகம் வருகிறது. நீ மிஸ்டர் தயானந்தின் தம்பி மகள்தானே... அப்படித்தான் அன்னிக்கு அறிமுகம் செய்துவைச்ச நினைவு. உள்ளே வாம்மா!'' பரிவுடன் அழைத் தாள்.

கம்மென்று அறைக்குள்ளே சந்தனம்—மல்லிகையின் கலவை வாசனை, கல்யாண மண்டபத்துக்குள் புகுந்து விட்டது போன்ற நினைவில், ஏக்கம் நெஞ்சை இறுக்க உள்ளே சென்றாள்.

"பெண்ணுக்குத் தலை அலங்காரத்துக்குப் பூ வாங்கிட்டு வரச் சொன்னாங்க"—மூலையிலிருந்த பூக்கூடையைப் பார்த்த படி சொன்னாள்.

"அனுப்பி வைக்கத்தான் நினைச்சேன். அதுக்குள்ளே ஆயிரம் வேலைகள், வேண்டிய பூவை எடுத்துட்டுப் போ" சொல்லிக் கொண்டே பந்துபந்தாக மல்லிகை, கனகாம்பர மலர்களை ஒரு தட்டில் நிறைத்து அவளிடம் கொடுத்தாள். "நீயும் நிறைய வச்சுக் கொண்டு வாம்மா" புன்முறுவலித்தாள் கஸ்தூரி.

பூத்தட்டைக் கொண்டு வந்து அறைக்குள் வைத்து விட்டு நிமிர்வதற்குள் பெரியம்மா படுக்கையிலிருந்து முனகினாள். "சட்டுனு போய்ச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வந்துடு. பிறகு மத்த விஷயங்களைக் கவனிக்கலாம்..." நிற்க விடாது அவளை அடுத்த பணிக்கு ஏவினாள்.

கல்யாண மண்டபத்துக்கு டிபன் செட்டைத் தூக்கிக் கொண்டு நடந்த மாதங்கியின் மனம் கனத்தது.

அவளுக்கு மட்டும் பெற்றோர்கள் உயிருடன் இருந்திருந்தால் இப்படி எடுபிடி ஆளாகப் பெரியம்மாவுக்கு நாள் முழுவதும் ஓடிக் கொண்டிருப்பாளா?

பெண் பார்க்க வந்த அன்றே அவளுக்குச் சம்பந்தி அம்மாள் கஸ்தூரியைப் பிடித்து விட்டிருந்தது. தாயைப் பார்ப்பது போல ஒரு தனி அன்பு மனத்தில் சுரந்ததை உணர்ந்தாள்.



"பிள்ளையின் தாயார் படிச்சவங்க. வேலை பார்த்துக் கொண்டிருக்காங்க..." பெருமையாகப் பேசினாள் சுமதி.

"வேலைக்குப் போகும் மாமியாரா? எனக்கு வேண்டாம். வீட்டு வேலை முழுவதையும் என் தலையில் தள்ளி விட்டுப் போயிடுவாங்க" எடுத்த எடுப்பிலேயே ஜயந்தி முட்டுக்கட்டை போட்டாள்.

"மாமியாரோட இருக்கப் பிடிக்கலைன்னா நீ உன் புருஷனோட தனிக் குடித்தனம் செய்யப் புறப்பட்டு விடறது. கல்யாணத்துக்குப் பிறகு சிந்திக்க வேண்டிய சங்கதி. மாப்பிள்ளையைப் பார்த்துட்டுப் பேசலாம்" அம்மா அதட்டி மகளை அடக்கிவிட்டிருந்தாள்.

அடுத்தபடியாக அவர்கள் வீட்டுக்குப் பையனைப் பார்க்கப் போயிருந்தவர்கள் திரும்பியபோது வாயூறிப் போனார்கள். பெரியப்பா மிகவும் சந்தோஷமாகத் தலை ஆட்டினார்.

"ஹர்ஷன்னு பேர், அதுக்கு ஏத்தாப்பல ராஜாவாட்டமா பையன் நல்லாவே இருக்கான். நல்ல படிப்பு, கை நிறையச் சம்பளம். தாயாருக்கு ஒரே பிள்ளை. கார்—வீடுன்னு வசதியான குடும்பம். வரதட்சிணை வாங்கற பழக்கம் இல்லையாம். அவங்களுக்குப் பெண்ணைப் பிடிச்சுட்டா நமக்கு இது பெரிய அதிர்ஷ்டம்னு சொல்வேன்" ஆர்ப்பரித்தார்.

"பையனுடைய போட்டோ—இருந்தாக் கொடுங்க; கிராமத்திலிருக்கிற என் மாமாவுக்கு அனுப்பி வைக்கணும். வீட்டுக்குப் பெரியவர். அவர் ஆசி 'ரொம்ப முக்கியம்'னு சொல்லி வாங்கிட்டு வந்திருக்கேன். ஜயந்தி முதலில் போட்டோவைப் பார்த்திட்ட பிறகு பேசிக்கலாம்" சவால் விடும் தோரணையில் சட்டைப் பையிலிருந்த ஒரு புகைப் படத்தை முன்னறை மேஜை மீது வைத்தார்.

நாற்காலியில் சாய்ந்தபடி கதைப் புத்தகம் ஒன்றில் ஆழ்ந்து விட்டிருந்த ஜயந்தி சட்டென்று எழுந்து வந்து ஆவலுடன் அதைப் பார்க்க முற்படவில்லை.

ஆனால் மாதங்கியினால் ஆவலைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

அசட்டையாகப் படத்தைப் பார்த்துவிட்டு ஜயந்தி எழுந்து உள்ளே போய்விட்டாள். யாரும் இல்லாத சமயம் மெல்ல அதை எடுத்து மாதங்கி பார்த்தாள்... பார்த்துக் கொண்டே நின்றுவிட்டாள்.

''விளக்கை அணைக்காம முன்னறையிலே என்ன செய்யறே''—பெரியம்மா கூவிய போதுதான் விழிப்பு ஏற்பட்டது. புகைப்படத்தைப் பார்த்தபோதே அவளுக்கு அவனைப் பிடித்துவிட்டிருந்தது.

பெண் பார்க்க அவனும் தாயாரும் மற்றவர்களுடன் வந்தபோது உள்ளே நுழைந்தவனைக் கண்டு அப்படியே மெய் மறந்து போனாள் மாதங்கி.

ஆனால் அவனுக்கு ஜயந்தியை ரொம்பப் பிடித்துப் போயிற்று. உடனடியாகத் திருமணநாள் வைத்தாகி விட்டது. விரைவில் திருத்தணியில் கல்யாணம் என்றும் ஏற்பாடாகி விட்டது. அந்தச் சில தினங்களில் அவன் இரு முறை அவர்கள் வீட்டுக்கு வந்து போனான்.

எத்தனையோ தடவைகள் தொலைபேசியில் ஜயந்தியை அழைத்துப் பேச முற்பட்டான்.

ஆனால் ஜயந்தி... வேடிக்கையான பெண், பட்டும் படாமலும் மிகவும் அசட்டையாகவல்லவோ இருக்கிறாள்? ஏன்?



சாப்பாடு முடிந்ததும் அடுத்தபடியான ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன.

''பரிசம் போடக் காத்திருக்காங்க. பெண்ணை அழைச்சிக்கிட்டு எல்லோரும் மண்டபத்துக்கு வாங்க''—அதே இளம் பெண் ஓடிவந்து அறிவித்தாள்.

இரவு நிகழ்ச்சிகளுக்கென்று தயாராக வைத்திருந்த புடவையைப் பெட்டிக்குள்ளிருந்து மாதங்கி எடுப்பதைப் பார்த்த பெரியம்மா எரிந்து விழுந்தாள்.

''உன் அலங்காரம் பிறகு இருக்கட்டும். ஜயந்தி தன் தோழி தலையலங்காரம் செய்து விடுவான்னு சொல்லிட்டுத் தலை சாமான்—பூ எல்லாத்தோடும் போனவள் இன்னும் வரலை. நாழியாச்சுன்னு சொல்லிச் சீக்கிரம் அலங்காரத்தை முடிச்சுட்டு வரச் சொல்லு... முதல்லே நாங்கள்ளாம் மண்டபத்துக்குப் போயிடறோம். நீ உடுத்திக்கிட்டுப் பத்திரமாக கதவைப் பூட்டிக்கிட்டு வந்து சேர். புரிஞ்சுதா?'' அதட்டினாள்.

ஏழாவது எண் அறையைத் தொட்டதும் திறந்து கொண்டது. ஆனால் அங்கே யாரும் இல்லை. பதற்றமாக வரிசையாக இருந்த ஒவ்வொரு அறையிலும் தேடினாள். ஜயந்தியை எங்குமே காணவில்லை.

எங்கே போயிருப்பாள் இந்தச் சமயம்? மாதங்கிக்குப் பயத்தில் வாய் உலர்ந்து போயிற்று. மார்பு படபடத்தது.

''என்னம்மா... என்ன இங்கே நின்னுட்டு?...'' விசாரித்தபடி அங்கவஸ்திரத்தைத் தோளில் போட்டுக் கொண்டு வெளிப்பட்ட பெரியப்பா கதவைப் பூட்டினார்.

''ஜயந்தி அக்காவைத் தேடிக்கிட்டிருக்கேன்...''

''என்னம்மா சொல்றே?''

''தலைக்கு ஜோடனை செய்துவிட்டு வரத் தன் சிநேகிதியின் அறைக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போன ஜயந்தி அக்காவை அங்கே காணலை. எங்கேயும் காணலை ... தேடித் தேடி ஓஞ்சு போனேன்'' மாதங்கிக்கு அச்சத்தில் வார்த்தைகள் தடுமாறின.

''நிசமாவா சொல்றே?...'' திகிலில் உறைந்து போய் நின்றுவிட்டார், பெண்ணைப் பெற்ற தந்தை தயானந்தன்.

## 2

கல்யாண மண்டபத்தில் சாப்பாட்டுப் பகுதியைக் கஸ்தூரியின் அண்ணன் வேதாசலம் கவனித்துக் கொண் டிருந்தார். இருந்தாலும் பெண் வீட்டவர்களை சீராகக் கவ னித்து உபசரிக்க மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தாள் கஸ்தூரி. கல்யாணத்துக்கு சில நாட்கள் முன்னாலேயே அவளுள் ஒரு கலவர உணர்வு உருவாகி விட்டிருந்தது. மகனிடமோ, அவளுக்கு உதவ வேண்டி மதுரையிலிருந்து தமது குடும் பத்துடன் வந்திருந்த அண்ணனிடமோ பேசித் தெளிவு காண அச்சமாக இருந்தது.

ஹர்ஷன் அந்தக் கார் விபத்துக்குப் பின்னர் பிழைத்து எழுந்திருந்தால் போதுமென்று அவள் வேண்டாத தெய்வம் பாக்கியிருக்கவில்லை. காயங்கள் குணமாகி நன்றாக நட மாடத் தொடங்கிவிட்டிருந்த சமயம் மறுபடியும் அவ னுக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. இது அதிர்ச்சி தரும் பேரிடி.

அவனது அலுவலகத்திலே வேலை பார்த்த ஊர்மிளா வுக்கும் அவனுக்கும் இரண்டாண்டு காலமாக ஏற்பட்டிருந்த நட்பு காதலாகவே மலர்ந்திருந்தது.



கணவனுக்குப் பின்னர் மகனைக் கண்ணின் கருமணி யாகக் காத்து வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கியிருந்தாள் கஸ்தூரி.

பெண் உரிமைப் போராட்டங்களில் முதல்கொடி பிடித்துக்கொண்டு நடக்கும் ஆவேசக்காரி. அவர்கள் வசித்த பகுதியில் இயங்கிய மாதர் சங்கத் தலைவி, வரதட்சணைக் கொடுமை ஒழிய வேண்டும் என்று வாய் அலுக்காது பேசு கிறவள். மகனுக்கு காதல் திருமணத்துக்கு ஒப்புதல் கொடுக் காது முட்டுக்கட்டை போட இயலுமோ?

ஊர்மிளா—ஹர்ஷன் திருமணத்துக்கு ஒத்துக் கொண்டு விட்டிருந்தாள். ஆனால் மனப்பூர்வமாக இசைந்தாள் என்று சொல்லிவிட முடியாது.

ஊர்மிளா அழகி, படித்தவள், வேலை பார்ப்பவள், வசதியான வீட்டுப் பெண் என்ற பல தகுதிகள் இருந்தன.

தங்களைவிட உயர்ந்த இடத்திலிருந்து வரும் ஊர்மிளா தனக்கு உகந்த மருமகளாக இருப்பாளா என்றதொரு சந்தேகம் அவளுக்கு இருந்தது. ஊர்மிளா அவர்களது வீட்டுக்கு வந்து போன இரண்டு தடவைகளிலும் நடந்த சிறு சம்பவங்கள் அதனை உறுதிப்படுத்திவிட்டன.

தன் வருங்கால மருகளிடம் கஸ்தூரி பொறுப்புணர்ச் சியைத்தான் முக்கியமாக எதிர்பார்த்தாள்.

பெண்களுக்கு அது மிகவும் அவசியம் என்ற அழுத்த மான கொள்கை அவளுக்கு இருந்தது.

பொறுப்பே இல்லாது எதற்கும் சிரித்து மழுப்பும் இளம் பெண்ணை அவளுக்குக் கட்டோடு பிடிக்காது.

ஊர்மிளா முதல் தடவையாகத் தன்னைச் சந்திக்க வீட் டுக்கு வந்தபோது அவள் கவனித்துவிட்டிருந்தாள். பொறுப்

புணர்வுக்கும் அந்தப் பெண்ணுக்கும் காத தூரம் என்று கண்டுவிட்டாள். சிறிது நேரம் பேசியிருந்துவிட்டுக் காப்பி டிபன் சாப்பிட்டதும் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட ஊர்மிளா தன் கைப்பையை மேஜையின்மீது வைத்துவிட்டு மறந்து போய்விட்டாள்.

சிறிது பொழுதில் தொலைபேசியில் கஸ்தூரியைக் கூப்பிட்டாள். ''சாப்பாட்டு மேஜைமீது பையை வச்சுட்டு வந்துட்டேன். அம்மா, நகைக்கடையில் பழுது பார்க்க கொடுத்தனுப்பின பவள நெக்லசும், ஆபீஸ் அலமாரி சாவியும், காலையில் பாங்கிலிருந்து எடுத்த பணமும் அதில் இருக்கு... இப்படி—மறந்து... ஹி... ஹி...'' வேடிக்கையாக மறுபுறத்திலிருந்து சிரித்தாள் ஊர்மிளா.

கஸ்தூரிக்குச் சிரிப்பு வரவில்லை. கோபம்தான் வந்தது. பையை எடுத்துக்கொண்டு ஊர்மிளாவிடம் ஒப்படைக்க உடனடியாக ஓடின மகனின் அவசரத்தை எண்ணி எரிச்சல் பட்டாள்.

இன்னொரு முறை வந்திருந்தபோது முகம் கழுவக் குளியலறைக்குச் சென்றவள், கை கடிகாரத்தை வாஷ் பேசின் அருகே கழற்றி வைத்துவிட்டுப் போயிருந்தாள். அதை அவளிடம் ஒப்படைக்க மறுபடியும் ஹர்ஷன் ஓட வேண்டியிருந்தது.

இந்தப் பெண் ஊர்மிளா தன் குடும்பத்துக்கு ஏற்ற மருமகளா? என்று உள்ளூர அவள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில்தான் அந்த அதிர்ச்சிச் செய்தி கிடைத்தது.

நிச்சயதார்த்த ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தபோது ஒருநாள் மாலை ஊர்மிளாவின் தந்தை-தமது அந்தஸ்தைக் கைவிட மனமின்றித் தன் வீட்டிலிருந்து கொண்டே ஹர்ஷனைத்



தொலைபேசியில் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லி விட்டார். வேண்டாத ஒரு சாமானைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிவதுபோல அசட்டையாகவே பேசிவிட்டார்.

''ஊர்மிளாவுக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பமில்லையாம். அதனால் நிச்சயதார்த்தத்தை நிறுத்தி விட்டேன்.''

இந்த இடியை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மிகவும் நெருங்கிப் பழகிவிட்டு, காதல் என்று கதை அளந்துவிட்டுப் பலர் முன்னிலையில் அவனை அவமானப்படுத்திவிட்ட ஊர்மிளாவின் துரோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

காய்ச்சல் அடித்தவன் போல—பித்தம் பிடித்தவன் போல—எதிலும் நாட்டமின்றி, வேலையினின்று லீவு எடுத்துக்கொண்டு ஊர் ஊராக அவன் சுற்றிக்கொண்டிருந்தான்.

ஊர்மிளாவுக்கு வேறு இடத்தில் கல்யாணம் ஏற்பாடாகிவிட்டது என்று தெரிந்ததும் அவன் யாரிடமும் பேசாது பல நாட்கள் மௌனமாக இருந்தான். அப்படிப்பட்டதோர் அதிர்ச்சி அந்தச் சம்பவம்.

''ஊர்மிளா கல்யாணமாகிப் புக்ககம் போய் ஒரு குழந்தைக்குத் தாயான பின்புகூட அவன் அந்தத் துயர அனுபவத்தினின்று பூரணமாக மீளவில்லை.

அதற்குப் பின்னர் அவன் கல்யாணம் என்ற பேச்சையே கேட்க வெறுத்தான். கஸ்தூரிக்கு வாயைத் திறக்கவும் பயமாகவே இருந்தது. வருடங்கள் இரண்டு முழுதாகக் கழிந்த பின்னர்தான் அந்தப் பழைய களையைச் சிறிது அவன் முகத்தில் காண முடிந்தது.

குடும்பத்து நண்பர் ஒருவர் மூலம் கிடைத்த வரன் அது. தயானந்தின் குடும்பத்தைக் கஸ்தூரிக்கு மிகவும் பிடித்து

விட்டிருந்தது. மகனுக்குப் பிடிக்கவேண்டுமே என்று தன் குலதெய்வத்தை வேண்டிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

வேண்டா வெறுப்பாகத் தாயாரின் வற்புறுத்தலைத் தாங்க முடியாதுதான் ஹர்ஷன் பெண்ணைப் பார்க்க வந்தான்.

நல்லவேளை அவனுக்குப் பெண்ணைப் பிடித்து விட்டிருந்தது. கல்யாணத்துக்கு சம்மதமும் தெரிவித்து விட்டான்.

அவ்வளவுதான், கஸ்தூரிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை! மதுரையிலிருந்து அண்ணனை வரவழைத்துச் சூட்டோடு சூடாக விரைவில் திருமணத்தை முடிக்க அவசரப்பட்டாள். பெரிய விபத்திலின்று மகன் உயிர் பிழைத்ததற்கும், ஊர்மிளாவின் துரோகத்தை மறந்து அம்மா பார்த்துக் கொடுத்த பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளச் சம்மதித்ததிற்கும் ஒட்டுமொத்தமாக நன்றி செலுத்தத்தான் திருத்தணியில் கல்யாணம் நடத்துவதாக வேண்டிக் கொண்டிருந்தாள்.

கல்யாணத்துக்குச் சில தினங்களுக்கு முன்னால் கடைத் தெருவில் வேண்டிய சாமான்களை வாங்கிக் கடற்கரை ஓரமாகத் தானே காரை ஓட்டிக் கொண்டு வந்தவள் திடுக்கிட்டுப் போனாள். காந்தி சிலையருகே பெல்பாட்டம், ஜுர்தாவில் அவளது வருங்கால மருமகள் ஜயந்தி, கழுத்தில் முடிவழிந்து கொண்டிருந்த ஒடிசலான ஒரு வாலிபனுடன் நெருக்கமாக நின்று பேசிக்கொண்டிருந்தாள்.

வேறு யாராவது சொல்லியிருந்தால் நம்பியிருக்க மாட்டாள். தன் கண்களாலேயே பார்த்துவிட்ட காட்சி.

ஊர்மிளாவின் கதைதான் அப்படி முடிந்தது என்றால் இந்தப் பெண் ஜயந்தி?



சிந்திக்க முடியாது குழம்பிப் போய்விட்டாள்.

கல்யாணத்தை மிக அருகில் வைத்துக்கொண்டு இந்தக் கலவரமான செய்தியை அவள் யாரிடம் சொல்ல முடியும்? என்ன செய்வது? ஏற்கனவே ஒருமுறை ஏற்பட்ட அவமானத்தில் அடிபட்டு உணர்வுகள் சிதைந்து மனம் உடைந்து விட்டவன் ஹர்ஷன். அவனிடம் இதைப்பற்றிப் பேசுவது சாத்தியப்படாத சங்கதி. அண்ணன் பழங்காலத்து மனிதர். பெண்கள் சிரித்தாலே போச்சு என்று அலறிவிடும் ஆசாமி. அவரிடம் போய் சொல்வதும் சரிப்படாத காரியம். யாரிடமும் பேசிப் பயன் இல்லை. இப்போது நேரம் இல்லை. முருகன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு அவள் மேற்கொண்டு காரியங்களைத் துரிதமாகக் கவனித்தாக வேண்டும். அதுதான் முக்கியம்.

சாப்பிட உட்கார்ந்திருந்த சம்மந்தி வீட்டவர்களின் கூட்டத்தில் கல்யாணப் பெண்ணைக் கண்களால் துழாவினாள்.

சம்மந்திம்மாள் சுமதியையும் பந்தியில் காணவில்லை.

சாப்பாடு நிறைந்த டிபன் செட்டைத் தூக்கிக்கொண்டு சமையற்கட்டிலிருந்து வெளிப்பட்ட மாதங்கி கஸ்தூரியைக் கண்டு நாணிப் புன்முறுவலித்தாள்.

"பெரியம்மாவுக்கு வர முடியலை—முட்டி நோவு. அதனால் சாப்பாட்டை அறைக்கே எடுத்துட்டுப் போறேன்."

"அதுக்கென்ன பேஷாய்ச் செய். ஒண்ணையும் மறக்காம கேட்டு எடுத்துக்கிட்டுப் போ. ஆமாம், கல்யாணப் பெண் இன்னும் சாப்பிட வரலையே. உடனே பரிசத்துக்கு உட்காரணுமே... தெரியுமில்லையா?" யாருக்கும் கேட்காத குரலில் வினவினாள் கஸ்தூரி.

"தலையலங்காரம் செய்ய நேரம் பிடிக்கும். அதனாலே அக்காவும் அங்கேயே சாப்பிட்டுக்கிறதாகச் சொல்லித்து."

நெற்றியில் கொப்பளித்த வியர்வைத் துளிகளை மெல்லக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள் கஸ்தூரி. மாதங்கிக்குத் தலையசைத்து விடை கொடுத்துவிட்டு மண்டபத்துக்குள் புகுந்தாள். அடிவயிற்றைப் பிசைந்த அந்தத் திகில் உணர்வு சிறிது அடங்கிப் போனது. அப்பாடா என்று பெருமூச்சு வந்தது. அண்ணன் கொடுத்த குரலுக்கு உதவ அதற்குள்ளே விரைந்தாள்.

கல்யாணக் கூடத்திலே ஜமுக்காளத்தையும் பாய்களையும் பரபரப்பாக ஆட்கள் விரித்தனர். தேங்காய், பழங்கள், மிட்டாய் என்று தட்டுகளைச் சுமந்து கொண்டு சுமங்கலிப் பெண்கள் பாயின் மீது வரிசை வைத்தார்கள்.

"பெண்ணைக் கூட்டிவர ஆளை அனுப்பு. மசமசன்னு நின்னுக்கிட்டிருந்தால்...?" அடிக்குரலில் அண்ணன் தங்கையை அதட்டினார்.

"ஆள் அனுப்பியாச்சு. அவங்கள்ளாம் வரவேண்டியதுதான் பாக்கி. எந்த நிமிஷமும் வரலாம்..." என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள் கஸ்தூரி.

அங்கவஸ்திரத்தைக் கையில் பிடித்துக் கொண்டு தலைதெறிக்கும் வேகத்தில் சம்பந்தி தயானந்தன் ஓடிவருவதைக் கவனித்தாள்.

பகீர் என்ற உணர்வு நெஞ்சைக் கவ்வியது. "இப்போ என்ன ஆச்சு? ஏன் இவர் இப்படி ஓடி வருகிறார்?"

"உங்களைத்தானே... இப்படி வரீங்களா?" மிக மெல்லிய குரலில் ரகசியமாக அழைத்த தயானந்தின் பின்னால் சாமான்கள் வைத்திருந்த அறைக்குள் சென்றாள். உடம்பு முழுவதி



லும் வியர்வை ஆறாக வழிவதை உணர்ந்தாள். நெஞ்சு படபடக்க மூச்சுத் திணற ஆவலுடன் அவர் முகத்தைப் பார்த்தாள்.

"இந்தக் கடிதாசியை எழுதி வச்சுட்டு என் பெண் சென்னைக்குப் போய்விட்டாள்! நான் என்னம்மா செய்வேன். நடக்கக் கூடாதது நடந்துடுச்சு..." அவரது குரல் நடுங்கியது. சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத் துண்டை எடுத்து அவளிடம் நீட்டினார் தயானந்த்.

"அன்புள்ள அப்பா!

எனக்கு இந்தக் கல்யாணத்தில் சிறிதும் விருப்பமில்லை. உங்களுக்கு ஜாடையாகப் பல தடவைகள் சொல்லியும் புரிந்து கொள்ளாது என்னை வற்புறுத்தினீர்கள். காரியம் மிஞ்சுவதற்கு முன் தப்பித்துக் கொள்வதுதான் சிறந்தது என்ற முடிவில் நான் விரும்பியவரின் உதவியுடன் சென்னைக்குத் திரும்பி விட்டேன். என்னை அங்கே ஓடிவந்து தேடுவதில் பயனில்லை. பம்பாய்க்கு நாங்கள் பயணப்பட்டுக் கொண்டிருப்போம். மன்னிக்கவும்.

— ஜயந்தி"

கஸ்தூரி கீழே விழுந்துவிடாவண்ணம் சுவரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டாள். உயிரெல்லாம் போய் உடல் தக்கையாகிவிட்ட பிரமிப்பு.

இனி என்ன செய்யப் போகிறோம்? நண்பர்கள், உறவினர்கள் முன்னால் அவளுக்கு இப்படி ஓர் அவமானமா?

இந்த இரண்டாவது இடியை ஹர்ஷன் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறான்...? முருகா...! இப்படி ஒரு சோதனை எனக்கேன்? மௌனமாக அவள் மனம் அலறி அழுதது.

# 3

சம்பந்தி தயானந்த் தமது சட்டையைப் பற்றி மெல்ல இழுத்து 'இப்படி வாங்கோ' என்று மெல்லிய குரலில் காதருகே பேசியதைக் கேட்டு வேதாசலம் வியப்புடன் திரும்பினார்.

எப்பொழுதுமே இரைந்து பேசிப் பழக்கப்பட்டவர் இதென்ன கிசுகிசு? 'பரிசம் போடும் சமயத்தில் தயானந்த் தகராறு செய்ய நினைக்கிறானா?' அவருக்கு ஆத்திரமும் கோபமும் தோன்றின.

'நகை போதாது—அது இதுன்னு ஏதோ ஆரம்பிக்கப் போறான். அப்பவே சொல்லணும்னுதான் இருந்தேன். இந்தக் காலத்தில் கைநிறைய வரதட்சிணை, கார் பங்களான்னு கொடுத்துப் பெண்ணையும் கொடுக்க, பெற்றவன் வரிசையில் நிற்கும் போது நாம் ஏன் இப்படித் தாழ்ந்து வலியப் போகணும்னு கஸ்தூரி கிட்டக் கேட்கணும்னுதான் துடிச்சுக்கிட்டிருந்தேன். நேரமில்லை. எல்லாம் ஓர் அவசரம். என்னவோ கொள்கைன்னுட்டுப் பிடிவாதமா எல்லாத்தையும் தன் தலையில் போட்டுக்கிட்டா. இப்போ சம்பந்தி ஒரு கொம்பிலே ஏறி உட்கார்ந்து கொண்டு எல்லாரையும் விரட்டறானா?

கணப் பொழுதில் பலவும் எண்ணிய வேதாசலம் வெகுண்டு முகத்தைச் சுளித்தார்.

''என்ன விஷயம்? இங்கேயே சொல்லுங்க, பரவாயில்லை'' என்று அதட்டினார்.

''நாலு பேர் நடுவே பேச முடியாத சங்கதி, உங்க தங்கச்சி கூப்பிடறாங்க''—மறுபடியும் தயானந்த் காதுக்குள் மெல்லச் சொன்னார்.



அடி வயிற்றிலே சில்லென்ற உணர்வில் அதிர்ந்து போனார் வேதாசலம்.

இடுப்பிலே இறுக்கமாக சட்டை மீது கட்டிக் கொண்டிருந்த மேல்துண்டை அவிழ்த்துத் தோளில் உதறிப் போட்டுக் கொண்டார். மூச்சு நின்று விடும் போன்றதொரு படபடப்புடன் சாமான் வைத்திருந்த அறைக்குள் விரைந்தார்.

பழக்கூடை அருகே கிடந்த அரிசி மூட்டை மீது கஸ்தூரி உட்கார்ந்திருந்தாள். பக்கத்திலே அவளது புத்தம் புது காஞ்சிபுரம் பட்டுச் சேலை மீது தொட்டுக் கொண்டு ஒரு கரி பிடித்த அண்டா வைக்கப்பட்டிருந்தது. ''பத்திரம்—புடவைத் தலைப்பை இழுத்துக்கோ... கரி பட்டுடப் போறது''—எச்சரித்தபடி அருகில் ஓடி வந்து நின்றார் அண்ணன்.

''மூஞ்சியிலே கரி பூசிட்டா அண்ணா! புடவையாவது தோய்ச்சுச் சரிப்படுத்திக்கலாம். ஆனால்...'' அதற்குமேல் பேசமுடியாமல் கஸ்தூரிக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

வெளிறடைந்துவிட்ட அவளது முகமும்—நீர் ததும்பிய கண்களும்—அவள் பேச்சும் ஏதோ விபரீதம் நடந்து விட்டது என்பதை அறிவுறுத்தவே, வேதாசலம் சாமான் அறைக் கதவைத் தாளிட்டு விட்டுச் சகோதரி அருகே தரையில் வந்து உட்கார்ந்தார். சற்றுத் தள்ளியபடி சுவர் ஓரமாகத் தயானந்த் தவித்துக் கொண்டு நின்றார்.

தன்னிடமிருந்த அந்தக் கடிதத் துண்டை அண்ணனிடம் கொடுத்ததும் அடக்க மாட்டாது விம்மி விட்டாள், கஸ்தூரி.

வேதாசலம் வேகமாக அதைப் படித்துவிட்டுக் கோபத்துடன் தயானந்தை வெறித்துப் பார்த்தார்.

''இது நிஜமா? இப்படி எங்களை அவமானப்படுத்தறதுக்கு அந்தப் பெண்ணுக்கு எத்தனை துணிச்சல்! பிடிக்காத இடத்திலே கட்டிக் கொடுக்க உங்க பெண்ணை நீங்க ஏன் வற்புறுத்தணும்? இந்தச் சமாச்சாரத்தை நாங்க சும்மா விட மாட்டோம்'' படபடவென்று கொஞ்சம் உரத்த குரலில் ஆத்திரமாகக் கத்தி விட்டார்.

''அண்ணா! இப்போது இது சண்டை போடற விஷயம் இல்லை. மானம் போற சங்கதி,'' விம்மலில் குலுங்கினாள் தங்கை.

''கஸ்தூரி... என்னத்துக்கு அழுகிறே... அவமானம் நமக்கு மட்டுமில்லை. சொல்லப் போனா பெண்ணைப் பெத்தவர்தான் நம்மைவிட இரண்டு பங்கு வெட்கப்பட்டுக் கொண்டு அழணும். போகட்டும்,இந்தப் பொண்ணு இல்லாட்டி இன்னொரு பொண்ணு நம்ம பையனுக்குக் கிடைக்காமலா போயிடும்...'' அடிக் குரலில் அதட்டினார்.

''கல்யாணப் பொண்ணு... கத்தரிக்காயா வெண்டைக்காயா? சட்டுனு கடையில போய் 'வாங்கிட்டு வந்துட? பரிசம் போடறதைப் பார்க்க எல்லாரும் வரப் போற சமயத்திலே... எல்லார் முன்னாலும் இப்படி ஓர் அவமானமா... அதை நினைக்க...'' மேலே பேச முடியாது திணறினாள்.

''ஊர்ல உலகத்திலே நடக்காத அதிசயம் முதல் தடவை நம்ம வீட்டுக் கல்யாணத்திலே நடந்து விட்டதாக நினைக்காதே கஸ்தூரி! உனக்கு ஞாபகம் இருக்கா—நம்ம கிராமத்திலே மேலத் தெரு சுப்பையா மகன் கல்யாணத்தின் போது கல்யாணப் பெண் திடீர்னு காணாமப் போயிட்டா... அவர் பயந்துகிட்டுக் கல்யாணத்தை நிறுத்தி விடலையே? தன் அக்கா மகளை மணையில் உட்கார வைச்சி ஜாம் ஜாம்னு நடத்தி முடிச்சுட்டாரே...!''



''என்ன சொல்றீங்க அண்ணா''—தழுதழுத்தாள் கஸ்தூரி.

''தைரியமா இரு. மலைபோல ஓர் அண்ணன் நான் இருக்கச்சே நீ ஏன் கலங்கணும்?'' என்று ஆறுதல் கூறிய வேதாசலம் கோபமாக தயானந்தின் பக்கம் திரும்பினார்.

'''மரமாட்டம் அப்படி நின்னா என்ன அர்த்தம்? இப்படி வாங்கோ. இந்த விஷயத்தை நம்மோடு ரகசியமா வச்சுக்குவோம். ஒரே முட்டா அமுக்கிட முடியாது. பின்னால் மெல்ல எல்லாருக்கும் தெரிஞ்சாக் குத்தமில்லை. இப்ப எனக்கு ஒரு யோசனை தோணுது. உங்களுக்கு இதுக்கு அடுத்த படியா கல்யாணத்துக்குப் பெண் இருக்கா?''

தயானந்த் தலையைச் சொறிந்து கொண்டார். ''எனக்கு ஜயந்திதான் கடைக்குட்டி, எங்க வீட்டிலே எங்களோட இப்ப இருக்கிறது என் தம்பி மக ஒருத்திதான்.''

''அந்தப் பெண்ணுக்கு வேற இடத்திலே கல்யாணம் பேசி முடிச்சிருக்கீங்களா?''

''இல்லை...''—மென்று விழுங்கினார் தயானந்த். தம் மகளுக்குப் பார்த்து நிச்சயம் செய்த மாப்பிள்ளையை மாதங்கிக்கு விட்டுக்கொடுப்பதா?—அவர் மனத்தில் லேசாக எரிச்சல் மூண்டது.

''இவருக்குத் தம்பி மகள் ஒரு பெண் இருக்கு. இவர் ஆதரவிலேதான் வளருகிறாள். பெண் பார்க்கப் போன போது சம்பந்தியம்மா சொன்னாங்க. சித்தமுன்னேகூட அந்தப் பெண்ணைப் பார்த்தேன். மூக்கும் முழியுமா நல்லாவே இருக்கா அந்தப் பொண்ணு. ஆனா ஹர்ஷன் இதுக்கு ஒத்துக்கணுமே?''

''நீ சும்மா இரு கஸ்தூரி, அவனைச் சமாளிக்கிறது என் பொறுப்பு.''

''என் மனைவி என்ன சொல்வாளோ?''

''என்னய்யா விளையாடுறீங்க. இத்தனை பெரிய அவமானத்திலே எங்களை மாட்டி வைச்சுட்டு, பரிகாரம் சொன்னா பசப்புறீங்க. உங்க மனைவிக்கிட்ட சொல்லி அந்தப் பெண்ணைப் புதுசு கட்டிக்கிட்டு மண்டபத்துக்கு வரச் சொல்லுங்க...''

''மாதங்கி சம்மதிக்காட்டி...''

''சம்மதிக்க வைக்கிறது உங்க பொறுப்பு. இந்தக் கதையெல்லாம் வேண்டாம். எங்களுக்கு இந்தக் கல்யாணம் நடந்தாகணும்.''

''கஸ்தூரி கண்களைத் துடைச்சுகோ... எழுந்திரு. சீக்கிரமா எல்லாத்தையும் கவனி. நான் போய் ஹர்ஷனைக் கண்டு பேசி அழைச்சிட்டு வரேன்'' துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினார்.

கணவன் கூறியதைக் கேட்ட சுமதிக்குப் பேயறைந்து விட்ட அதிர்ச்சி. ''இந்தப் பெண் ஜயந்தி இப்படி ஒரு கல்லைத் தூக்கித் தலையில் போடுவாளா? ஒரு கோடி காட்டியிருந்தாக் கூட கல்யாணம் வரை வந்து இப்படி ஒரு அவமானத்திலே சிக்கியிருக்க வேண்டாமே..'' மனம் புழுங்கிப் போனாள்.

'மாதங்கிக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டமா!' என்று பொறாமையால் கொதித்துப் போனாள்.

''உன் அக்கா செஞ்ச வேலையால் உனக்கு இப்ப யோகம்—அந்தப் பொண்ணுக்குப் பதிலா உன்னை வெச்சுக் கல்யாணம் நடத்துணும்னு சம்பந்தி வீட்டிலே ஒரே பிடிவாதமா இருக்காங்க. நீயும் சமயத்துக்கு கழுத்தை அறுத்திடாதே. இஷ்டமில்லாட்டி இப்பவே சொல்லிடு—பிடிச்சா அந்தப்



பட்டுப் புடவையை எடுத்துச் சுத்திக்கிட்டு கிளம்பு ...'' மெல்லிய குரலில் சீறினாள் கோபத்துடன்.

கல்யாண மண்டபத்துள் தயங்கிக்கொண்டு வந்த மாதங்கியை முன்வந்து பிள்ளை வீட்டைச் சேர்ந்த அந்தப் பெண் கையைப் பற்றிக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாள்.

''நீதான் கல்யாணப் பொண்ணுன்னு... பூ கொடுக்க வந்தப்பவே கண்டு பிடிச்சுட்டேன்!'' மகிழ்ச்சியோடு ஆர்ப்பரித்தாள்.

வேதாசலமும் தயானந்தும் ஜமுக்காளத்தில் எதிர் எதிராக அமர்ந்துகொண்டனர். எல்லோரும் சுற்றிலும் சூழ்ந்து உட்கார்ந்ததும் மாப்பிள்ளை வீட்டுப் பெண்களில் சிலர் புடவை, நகை பெட்டிகளைக் கொண்ட தட்டுகளை வரிசையா சுமந்து வந்து அருகில் வைத்தனர். குத்து விளக்கைத் தூண்டி நன்றாக எரியவிட்டாள் ஒரு பெண்.

நாதஸ்வரம் ஓய்ந்து மண்டபத்திலே ஆவல் நிறைந்த அமைதி நிலவியது. இரண்டு சம்பந்திகளும் ஒருவருக்கொருவர் சந்தனம் பூசி பொட்டு வைத்து பூமாலை அணிவித்து மரியாதை செய்து முடித்தனர்.

''கிட்ட வாங்க சம்பந்தி... வெற்றிலைப் பாக்கு மாத்திக்குவோம். சபை கேட்கிறாப்பல சம்மதம்னு மூணு வாட்டி சொல்லுங்கோ'' இரைந்து பேசினார் வேதாசலம். ''என்ன கூச்சப்படறீங்க, கிட்ட வாங்கோ'' உரத்துச் சிரித்தார். சபையிலும் வேடிக்கையான பேச்சும் சிரிப்பும் பரவியது.

பாக்கு வெற்றிலை மாற்றி முடிந்ததும் நகை, புடவை இருந்த தட்டைக் கையில் தூக்கிக் கொண்டார் வேதாசலம். சுற்றிலும் பெருமையாகப் பார்வையை ஓட விட்டார்.

''எல்லோரும் கேட்டுக்கோங்கோ—பெண் வீட்டவங்க நல்லாக் கேட்டுக்கட்டும். பெண்ணுக்குப் போடறதாகச் சொன்ன நகைகள் எல்லாம் இந்தப் பெட்டிக்குள்ளே இருக்கு. கழுத்துக்கு ரெண்டு கொத்துச் சங்கிலி—கைகளுக்கு நாலு ஜோடி வளையல்கள்—வைரக்கம்மல், கெம்பு அட்டிகை, பச்சைக்கல் நெக்லஸ் செட்டு-முத்து மாலை, தங்க மோதிரம்... சம்பந்தி நல்லாப் பார்த்துக்கலாம், சரிதானே... எங்கே பெண்ணைக் கூப்பிடுங்கோ... இதுகளை உங்க ஆசிகளோட கொடுக்கணும்'' அதட்டலாகப் பேசினார்.

மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த அதே பெண் மாதங்கியைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு வந்தபோது கூடியிருந்தவர்களிடையே ஒரு சலசலப்பு... இதுதான் கல்யாணப் பெண்ணா? வியப்பு நிறைந்த பல பேச்சுக் குரல்கள் எழுந்தன. மாதங்கி கூடியிருந்தவர்களைப் பார்க்க அஞ்சி மகிழ்ச்சியும் அச்சமும் கலந்த உணர்விலே நெஞ்சு படபடக்க மெல்ல வந்து கை நீட்டிப் பரிசத்தட்டைப் பெற்றுக் கொண்டு வணங்கினாள்.

கண்களில் வழிந்த கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டாள் கஸ்தூரி.

சற்றுத் தொலைவில் ஆண்கள் கூட்டத்தில்''உட்கார்ந்திருந்த மகனைப் பார்க்க அவளுக்கு மிகவும் பயமாகத்தான் இருந்தது.

பரிசம் முடிந்ததும் நலங்கு ஆரம்பமாகியது. ஊதா வண்ணப் பனாரஸ் புடவையை எடுத்துக்கொண்டு நகைகள் அணிந்து கழுத்தில் கனமான ரோஜா மாலையுடன் மெல்ல அசைந்து வந்து மாதங்கி உட்கார்ந்தாள்.

மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஒரு வயதான சுமங்கலி அம்மாள் எழுந்து சடங்கை ஆரம்பித்து வைத்தாள்.



சந்தனத்தை மாதங்கியின் கழுத்து, கன்னம் மீது பூசி பொட்டு வைத்துப் பூச்சூட்டி, ஆரத்தி எடுத்துத் திருஷ்டி சுழித்தாள். பின் பல பெண்கள் தொடர்ந்தனர்.

முருகா! இப்படி ஓர் அதிசயமா? எனக்குப் பிடித்தவரையே எனக்குக் கொடுத்து... இன்ப சிலிர்ப்புடன் மெல்ல நிமிர்ந்து ஹர்ஷன் பக்கம் பார்த்தாள் மாதங்கி.

நெருப்பாக ஏன் அவளை அவன் வெறிக்கிறான்? அப்படியென்றால் அவனுக்கு அவளைப் பிடிக்கவில்லையா?

சட்டெனத் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் மாதங்கி. கண் இமைகளினின்று இரண்டு சொட்டுக் கண்ணீர் கைகள் மீது உதிர்ந்தன.

## 4

**வி**டியற்காலை முகூர்த்தம் எவ்விதமான கலவரமும் இன்றி இனிதே நடந்தேறியது. கஸ்தூரிக்கிருந்த கவலையில் அவள் இரவு ஏதும் சாப்பிடவில்லை. அண்ணனின் வற்புறுத்தலை ஒதுக்க முடியாது ஒரு டம்ளர் மோரைக் குடித்துவிட்டுத் தனது அறையில் தன்னந்தனியே படுத்துக் கொண்டு விடியும் வரை விழித்துக்கொண்டே இருந்தாள்.

''இந்தப் பிள்ளை ஹர்ஷன் திடீரென்று காலை மண்டபத்துக்கு வர மறுத்துவிட்டால்?... முருகா! தாலி கட்டிய கையோட உனக்கு அபிஷேகம் செய்து வைக்க உன் சந்நிதிக்கு ஓடி வருகிறோம். கைவிட்டு விடாதே அப்பா'' கண்களில் நீர் ஒழுக மனமுருகப் பன்முறை பிரார்த்தித்துக் கொண்டாள்.

மணையிலிருந்தபடியே தாயை வெட்டி விடுவது போல் ஹர்ஷன் பலமுறை பார்த்தான். ஆனால் அவள் எதிர்பார்த்த பைத்தியக்காரச் செயல் ஏதும் நடைபெறவில்லை.

பச்சைத் தண்ணீரைக்கூட வாயில் விடாது கடும் பட்டினியாக இருந்த கஸ்தூரி தாலி கட்டி முடிந்து மற்ற சடங்குகள் முடிவு பெற்ற உடனேயே வேதாசலத்தைக் கூப்பிட்டுச் சொன்னாள்: "அண்ணா! கல்யாணப் பெண் மாப்பிள்ளையோடு நீங்க காரில் கோவிலுக்கு வந்துடுங்க. நானும் விரைவில் அங்கு வந்து சேர்ந்துக்கிறேன்."

கருணை காட்டிய முருகனுக்குக் காணிக்கை அளிப்பவள்போல மூச்சிரைக்க முருகா... முருகா... என்று முணுமுணுத்த வண்ணம் அவள் படிகளில் ஏறி மேலே கோவிலுக்கு வந்து சேர்ந்தாள்.

அபிஷேகத்துக்கு, முன்பே ஏற்பாடாகிவிட்டிருந்ததனால் அதுவும் மிகவும் இனிதே நடந்தேறியது.

மாலையும் கழுத்துமாகத் தன் எதிரே நின்ற மணமக்களை மெல்லப் பார்த்தாள் கஸ்தூரி.

ஆனந்தத்தின் அழுத்தத்தினால் அவள் கண்கள் பனித்தன.

உறவினர்கள், நண்பர்கள் எதிரே அவமானப்படாது எப்படியோ சமாளித்தாகிவிட்டது.

"இனி அவர்கள் பாடு" என்று எண்ணிக் கொண்டாள்.

பிரார்த்தனையை முடித்துக்கொண்டு அவர்கள் கீழே வருவதற்குள் பகல் சாப்பாடு தயாராகிவிட்டிருந்தது. ஊருக்கு உடனே திரும்ப நினைத்தவர்கள் முதல் பந்தியிலேயே உட்கார்ந்துவிட்டனர்.

கல்யாணத்துக்குத் தலையலங்காரம் செய்ய எடுத்து வந்த கவரிங் நகைகளைப் பற்றித்தான் பெரியம்மா சுமதிக்குக் கவலையாக இருந்தது. அவைகளைச் சேகரித்துக் கொண்டு கிளம்ப அவசரப்பட்டாள். சுமையாக அழுத்திய கவரிங் காசு மாலை மாதங்கியின் ரவிக்கையையும் கழுத்தையும் பிய்த்துக்



கொண்டிருந்தது. அது போதாது போல் சுமதி வேகமாகப் பெண்கள் மண்டபத்திலே தங்கியிருந்த அறைக்குள் வந்தாள்.

"எங்களுக்கு இனி என்ன வேலையிருக்கு? சாப்பாட்டுக்குப் பிறகு கிளம்பணும். தலைச்சாமான், காசு மாலை எல்லாத்தையும் கழற்றிக் கொடு. வாடகைக்கு எடுத்துட்டு வந்தேன். எந்த வேளையில் எடுத்தேனோ இப்படியாச்சு!" கோபத்துடன் படபடத்தாள்.

கழுத்தில் கனத்த காசு மாலையை எடுக்க முதலில் பூ மாலையைக் கழற்ற மாதங்கி முயன்றபோது அது காசு மாலையுடன் சிக்கிக் கொண்டு விட்டது.

"என்ன சிங்கிநாதம் பண்றே? கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியலைன்னு அந்தக் காலத்திலே ஒரு நாடகப் பாட்டுக் கேட்டிருக்கேன். அது போல ஆடறியா? ..." கோபத்துடன் கூறிவிட்டு அவள் கழுத்திலிருந்த மாலையை வேகமாக அப்புறப்படுத்த முயன்றாள்.

ரோஜாப்பூ இதழ்கள் பொல பொலவென்று தரையில் உதிர்ந்தன.

உள்ளே வந்த கஸ்தூரி பதறிப் போனாள்.

"இருங்க. அப்படி அவசரப்பட்டா... கல்யாண மாலைகளை அவிழ்த்து நான் வீட்டிலே எங்க அறையிலே மாட்டி வைக்கணும்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன். இங்கே உதறிக் கொட்டுகிறீர்களே நியாயமா... இந்தத் தலை ஜோடிப்பை நாளைக்கு நானே கொண்டு வந்து உங்க வீட்டிலே கொடுத்து விடமாட்டேனா? இதென்ன வைரச்செட்டா பயப்பட..." எரிச்சலுடன் கூறிவிட்டு மாதங்கியை மெல்லத் தன் அருகே அழைத்துக் கொண்டாள்.

மாலையில் ஏற்பட்ட சிக்கலை லாவகமாகத் தளர்த்திப் பூமாலையைக் கழற்றி ஒரு கூடைக்குள் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

''ரோசாப்பூ மாலை சித்த நேரத்திலே கொட்டிப் போகும். ஊர் போறதுக்குள்ளே காஞ்சு போயிடும்...'' என்று முணுமுணுத்தாள் சுமதி.

''மாலை காஞ்சு போனால் என்ன? கல்யாணத்தின் நினைவு பசுமையா எப்பவும் மனசிலே நிற்குமே!'' சுடச்சுடப் பதிலளித்த கஸ்தூரி காசு மாலை, தலைச் சாமான் அனைத்தையும் மெல்ல உருவி எடுத்து சுமதியிடம் கொடுத்தாள்.

''இவ்வளவுதானே? இன்னும் ஏதாவது பெண் கழுத்திலே நீங்க போட்டிருக்கீங்களான்னு பார்த்துக்கோங்கோ; பிறகு பேச்சு ஏதும் வேண்டாம்'' கண்டிப்பாக அவள் பேசியதைக் கேட்ட சுமதிக்கு முகம் சுருங்கிப் போயிற்று. தொடர்ந்து அங்கே நிற்க அவளுக்குப் பிடிக்கவில்லை. தன் மகளுக்குக் கிடைத்திருக்க வேண்டிய பாக்கியத்தை ஒரு நொடியில் தட்டிக்கொண்டு போய்விட்ட மாதங்கியைப் பார்க்க நெஞ்சு நெருப்பாக எரிந்தது.

''சாப்பாட்டுக்குப் பிறகு நாங்க கிளம்பணும். எங்களுக்கு ஊரில் கவனிக்க எத்தனையோ இருக்கு'' இரு பொருள் படக் கூறிவிட்டுச் சுமதி அப்பால் சென்று விட்டாள்.

மாதங்கிக்கு துக்கம் நெஞ்சை அடைத்தது. கல்யாண மண்டபத்தில் கூடியிருந்த பலர்... யார் யாரோ... அவளுக்கு நினைப்புக்கூட இல்லை, தாலி கட்டியதும் அவளை நெருங்கி வந்து மலர் தூவிப் பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் வழங்கிச் சென்றனர். அத்தனை ஆண்டுகள் அவர்களே கதி என்று அவள் பெரியப்பா குடும்பத்துடன் ஒட்டிக் கொண்டு வாழ்ந்தவள். அந்தத் தகுதிகளுக்காகவாவது ஒரு வார்த்தை



—ஒப்புக்காகிலும் பெரியப்பாவோ—பெரியம்மாவோ வாழ்த்த வில்லை, பாராட்டவில்லை. அதற்குப் பதில் பெரியம்மா சிடுசிடுவென்று என்னென்னவோ பேசிவிட்டாளே! தன்னைத் திரும்பிப் பாராது வெடுக்கென்று வெளியேறிவிட்ட பெரியம்மாவின் அசட்டையை நினைத்து மாதங்கி கண்கலங்கிப் போனாள்.

''என்ன இது... நல்ல நாளும் அதுவுமா?'' கஸ்தூரி விரைந்து வந்து மருமகளைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள். கன்னங்களில் கோடிட்ட கண்ணீரை மெல்லத் தன் கரத்தால் துடைத்துவிட்டாள். ''காப்பிகூடச் சாப்பிடலை —பசியா இருக்கே. அதனாலே மனமும் பலவீனமாகி விட்டது போல பிரமிப்பு. கொஞ்சம் பால் கொண்டு வரச்சொல்கிறேன், சாப்பிடு. பிறகு நாம எல்லாரும் ஒரு பந்தியா உட்கார்ந்து விருந்து சாப்பிடுவோம். முகத்தைக் கழுவி பொட்டு வச்சுக்கிட்டுத் தலை வாரிக்கோ... என் பெட்டி மேலே உனக்கு மாத்துப் புடவை எடுத்து வைச்சிருக்கேன். காஷ்மீர் சில்க். இந்தப் புடவையைப் போலக் கனமாக இருக்காது. அதைக் கட்டிக் கொண்டதும் உன் மனமும் லேசாகிப் போயிடும்...'' அன்போடு அவளது கன்னங்களை வருடினாள்.

மாதங்கிக்கு மிக்க ஆறுதலாக இருந்தது. சாப்பாட்டுக்குப் பின்னர் கல்யாணத்துக்கு வந்தவர்கள் விடைபெற்றுக் கொண்டு விட்டதால் மண்டபம் காலியாகத் தெரிந்தது.

கல்யாணத்துக்கு முன் ஏற்பட்ட கலவரத்தைச் சமாளிக்க அண்ணன் வேதாசலம் மாதங்கியை மணையில் வைக்கத் துணிந்து விட்டபோது ஹர்ஷன் உடனேயே சம்மதித்து விட வில்லை. பலவிதமாகப் பேசி வாதாடித்தான் அவர் வெற்றி பெற்றிருந்தார். ஆனாலும் அவர் மனத்தை ஒரு சந்தேகம் உறுத்திக் கொண்டுதானிருந்தது. வற்புறுத்தியதால் நடந்த

கல்யாணம்—வேண்டாம் இந்தப் பெண் என்று பயல் பின்னால் மாதங்கியை உதறி விட்டால்?

யாரோ பெற்ற பெண் குழந்தை! அவளைக் கண் கலங்க விடுவது மகா பாவமாயிற்றே. ஹர்ஷனுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கக் கூடாது. பரபரவென்று இரவே திட்டம் போட்டு விட்டிருந்தார் வேதாசலம்.

கல்யாண விருந்து முடிந்தது. மணமக்களையும் கூட இருவரையும் காரில் ஏற்றிக் கொண்டு கிளம்பி விட்டார்.

''மாமா! இதெல்லாம் என்ன?'' கோபமாகக் கேட்ட ஹர்ஷனை அவர் பேச விடவில்லை.

''நாளைக்கு நீ வெளி நாடு போகத் தீர்மானிச்சா பதிவுத் திருமணம் செய்து கொண்ட சான்றிதழ் தேவைப்படுமே. அதனாலேதான் உடனுக்குடன் பதிவுத் திருமணத்தை முடிச்சுட ஏற்பாடு செய்தேன். சாட்சிகளையும் கூட்டிக் கொண்டு வந்திருக்கேன். உம், வா உள்ளே'' பதிவுத் திருமண அலுவலகத்திற்குள் அவனைத் தள்ளிக் கொண்டு சென்றார்.

''கஸ்தூரி இனி கவலையை விடு, சாமிக்கு முன்னாலும்—சட்டத்துக்கு முன்னாலும் இந்தக் கல்யாணத்தை நடத்தி முடிச்சாச்சு. இதை இனி யாரும் அசைக்க முடியாது. புரிஞ்சுக்கோ...'' உற்சாகத்துடன் தங்கையிடம் வந்து ஆர்ப்பரித்தார்.

அவர்கள் அன்று மாலை ஊர் வந்து சேர்வதற்குள் இருட்டி விட்டது. முன்னதாகவே கிளம்பி வந்திருந்த உறவினர்கள் மணமக்களை வரவேற்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தனர். காரினின்று இறங்கிய மணமக்களை ஆரத்தி சுற்றி வரவேற்றாள் ஒரு சுமங்கலி.

வலது காலை எடுத்து வைத்துத்தான் மாதங்கி மருமகளாக அந்த வீட்டுக்குள் நுழைந்தாள்.



இரவு சாப்பாடு முடிந்தது. வந்தவர்கள் அனைவரும் கிளம்பி விட்டனர். சற்று முன் சிரிப்பும் பேச்சுமாகக் கலகலத்த வீட்டில் இப்போது வேதாசலமும் அவர் மனைவியும், கஸ்தூரியும் மணமக்களும் மட்டுமே தான் இருந்தனர்.

அடுத்தபடியாக மணமக்கள் தேனிலவுக்கு பெங்களூருக்குக் கிளம்புவது என்று திட்டம். முன்னதாகவே அண்ணன் வேதாசலம் எடுத்த முடிவு—மெயில் வண்டிக்கு டிக்கட்டுகளை எடுத்துக் கொடுத்திருந்தார்.

மாடி அறையினின்று அவன் மட்டுமே கையில் பெட்டியுடன் இறங்கி வருவதைக் கண்ட கஸ்தூரி திகைத்துப் போனாள்.

''மாதங்கி இன்னும் தயாராகவில்லையா?... வண்டிக்கு நேரமாகுதே?'' கவலையுடன் கேட்டாள் கஸ்தூரி.

''அவள் வரப்போவதாக யார் சொன்னது? என் கம்பெனி காரியமாக நான் மட்டும் பெங்களூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.''

மகன் சீறியதைக் கேட்டு வாயடைத்துப் போனாள் தாயார்.

''நீயும் உன் மனைவியும் பங்களூர், மைசூர், எல்லாம் சுத்திப் பார்க்கணும்னு ஏற்பாடு செய்துவிட்டு... இதென்ன விளையாட்டு...'' மாமா வேதாசலம் குறுக்கிட்டபோது ஹர்ஷன் வெகுண்டு போனான்.

''மாமா, பெரியவங்களுக்கு நாலு பேர் முன்னாலே அவமானம் வரக்கூடாதுன்னு நான் உங்க முடிவுக்கு எதிர் பேசாது ஒப்புக் கொண்டேன். இனியும் நீங்க என் விஷயத்தில் குறுக்கிட்டால் நான் பொறுக்கமாட்டேன். சொல்லிவிட்டேன். உங்க இஷ்டத்துக்கு கல்யாணத்தை நடத்தி

வக்கீட்டங்க என் இஷ்டத்துக்கு நிம்மதியைத் தேடிக் கொண்டு நான் தனியே போகிறதைத் தடுக்கிறது தவறு—தடுக்கவும் விடமாட்டேன்."

"என்னப்பா சொல்றே?"

"பெங்களூருக்கு நான் தனியாகக் கிளம்புறேன். அவ்வளவுதான்."

வேலையாளை விட்டுக் கொண்டுவரச் சொன்ன டாக்சியில் ஏறிக் கொண்டு ஹர்ஷன் போய்விட்டான்.

திகைப்பினின்று விழித்துக் கொண்ட கஸ்தூரி மெல்ல மாடிப்படிகளைக் கடந்து மேலே வந்தாள்.

மணமக்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த அறையின் கதவு ஒருக்களித்துக் கிடந்தது.

ஓசைப்படாது திறந்து கொண்டு உள்ளே வந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

ஜன்னல் ஓரமாகச் சுவரின் மீது சாய்ந்து கொண்டு மாதங்கி விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள்.

ஹர்ஷன் அவளிடம் கடுமையாகப் பேசியிருக்க வேண்டும். இதென்ன கொடுமை... ஒரு புது மணப் பெண்ணுக்குப் புக்ககத்தில் முதல் முதலாக இப்படி ஒரு வரவேற்பா?

கஸ்தூரி அதிர்ந்து போனாள்.

## 5

அருகில் வந்து கஸ்தூரி தன் தோளைத் தொட்டதும் அவள் மார்பின் மீது தன் முகத்தைப் பதித்துக் கொண்டு மாதங்கி தாங்க முடியாத துயரத்தில் குலுங்கி விட்டாள்.



"அத்தை! நான் என்ன தப்புச் செய்தேன். என்னை ஏன் கோவிக்கணும்?" விம்மல்களுக்கிடையே திணறினாள்.

கஸ்தூரி நடந்த விவகாரத்தை உடனடியாக விவரமாகத் தெரிந்து கொள்ள விரும்பவில்லை.

இந்த அசம்பாவிதமான நிலைமையை மேற்கொண்டு எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதுதான் அவளது அடுத்த கவலை.

"அழாதே மாதங்கி! முகத்தைக் கழுவிக்கோ... இதோ வந்துட்டேன்" சொல்லிக் கொண்டே அவள் கீழே இறங்கிச் சென்றாள்.

அண்ணா வேதாசலம் தமது மனைவியுடன் இரவு பஸ்ஸுக்கு ஊருக்குத் திரும்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அவர் போன பின்பு வீட்டில் அவளும் மாதங்கியும் மட்டுமே இருப்பார்கள்.

நுங்கம்பாக்கத்தில் அவளது மாமனார் ஒரு பெரிய வக்கீலாக வாழ்ந்த காலத்தில் காலேஜ் அவென்யூவில் வாங்கிப் போட்டுவிட்டுப் போயிருந்த வீடு அது. உயரமான சுற்றுச் சுவர்களுக்குள் வேப்ப மரங்கள் சூழ உள்ளே எங்கேயோ ஒளிந்து கொண்டு விட்டது போன்றதொரு பழைய காலத்து வீடு. அடுத்தடுத்து உருவாகியிருந்த புதிய மாடல் பங்களாவாசிகள், உயர்மட்டத்தைச் சேர்ந்தவர்கள்—அவர்களால்—அவளுக்குத் தொல்லைகள் கிடையாது. தப்பித் தவறிக்கூட அடுத்த பங்களாவின் பையன் வீசிய பந்து அவர்கள் தோட்டத்துக்குள் விழுந்ததில்லை. அப்படிப்பட்டதொரு தனித்தன்மை வாய்ந்த அண்டை அயலார் வசித்த பகுதி அது.

கம்பெனி காரியமாக ஹர்ஷன் அடிக்கடி வெளியில் போக நேர்ந்தது. அந்தச் சமயங்களில் வீட்டு நாய் தோட்டத்

தில் காவல் காக்க வேலைக்காரியுடன் அவள் மாடி அறையில் உறங்கும் போது, அவளுக்கு மிகவும் பயமாக இருக்கும்.

அடித்துப் போட்டாலும் கேட்பாரில்லாது இதென்ன தனிமை? என்று சலித்துக் கொள்வதுண்டு.

பழுதாகிவிட்ட பாகங்களைச் சீர்திருத்தியும் சோபா, கட்டில், புத்தக அலமாரி என்று பல பொருள்களை வாங்கிப் போட்டும் வீட்டை மகன் அலங்கரித்ததை அவள் விரும்பவில்லை. அந்த வீட்டை விற்றுவிட்டு, ஜனப் புழக்கம் அதிகமானதொரு பகுதியில் ஒரு சிறிய ஃப்ளாட்டில் குடியேறி வாழ அவள் பெரிதும் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தாள். வேதாசலம், மனைவி இருவரும் புறப்பட்டுப் போன பின்னர் கதவை அடைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். இருட்டத் தொடங்கி விட்ட பின்னர் ஆள் அரவம் அடங்கிப் போகும் அந்தப் பகுதி இப்பொழுது ஓர் ஆழ்ந்த அமைதியில் மூழ்கிக் கிடந்தது. கல்யாணத்துக்கு வந்திருந்த உறவினர் கூட்டத்தில் கலகலத்த வீடு 'ஹோ' என்ற நிசப்தத்தில் மூழ்கிக் கிடந்தது. தோட்டத்துக்குள்ளே ரோவர் மூச்சிரைக்க இங்குமங்கும் ஓடும் சப்தம் துல்லியமாகக் கேட்டது.

அந்தத் தனிமையையும் அமைதியையும் இப்பொழுது கஸ்தூரி மிகவும் வரவேற்றாள்.

மனைவியைத் தனியே விட்டு விட்டு அவள் மகன் ஊருக்குப் போனதின் மர்மம் என்ன?

அக்கம் பக்கத்தவர்களில் யாரும் அதைப்பற்றி அக்கறை காட்டமாட்டார்கள் நிச்சயம்.

வேலைக்காரிக்குக் கொஞ்சம் சந்தேகம் ஏற்படக்கூடும். "அவசரமாகக் கம்பெனி அனுப்பி வைச்சுட்டது. என்ன செய்கிறது. வயிற்றுப் பிழைப்பு" என்று சமாளித்துவிட முடியும்.



ஆனால் அவள் தலைவியாக விளங்கும் அந்த மாதர் சங்கத்து உறுப்பினர்கள் அவளை லேசில் விட மாட்டார்களே? தனக்குத் தலைவி பதவி கிடைக்கவில்லை என்று காரமாக இருக்கும் காமாட்சி ஒருத்தியே போதும்.

அடுத்த நாளே அவள் கல்யாணத்துக்கு வரமுடியாது நின்றுவிட்ட அங்கத்தினர்களுடன் வீட்டுக்கே விசாரிக்க வந்து விடுவாள். கூண்டில் நிறுத்தி வைத்துக் குறுக்கு விசாரணை செய்வது போல் கேள்வி மேல் கேள்வியாக எழுப்பித் துளைத்து விடுவாள்.

'தேன் நிலவுக்கு மனைவியைக் கூட்டிச் செல்லாமல் கம்பெனி காரியமாகவா ஹர்ஷன் போயிருக்கான்? நம்ப முடியாத சங்கதி... இதில் என்னவோ இருக்கு.'

'ஆமாம்! கல்யாணப் பத்திரிகையில் பெண்ணின் பெயர் வேறு என்னவோ போட்டிருந்தது. மாதங்கி என்று பார்த்தது நினைவில்லையே?'

உண்மையைக் கக்கும்வரை அவள் குத்திக் குதறி விடுவாள். கல்யாணத்துக்கு வந்திருந்த சில உறுப்பினர்கள் விஷயத்தை இதற்குள் பல திசைகளிலும் பரிமாற விட்டிருப்பார்கள்.

'செய்தி தெரியுமா?... ஹர்ஷனை வேண்டாம்னு உதறிட்டு அந்தப் பெண் கல்யாணத்துக்கு முதல் நாளே மண்டபத்திலிருந்து மறைஞ்சுட்டா, யாருக்கும் தெரியாம விஷயத்தை அமுக்கிச் சட்டுன்னு வேறே ஒரு பெண்ணை வைச்சுக் கல்யாணத்தை முடிச்சுட்டாள் கஸ்தூரி... அம்மாவுக்கும் பிள்ளைக்கும், இந்த ஆள் மாறாட்ட விவகாரத்திலே மனஸ்தாபமாம்.'

'ஆனாலும் கஸ்தூரி தன் மகனை இப்படி வற்புறுத்தியிருக்கக்கூடாது. மேடையிலே பேசுறது ஒண்ணு தன் வீட்டுக்குன்னு வந்தால் நடந்துக்கிறது வேறே...'

பலவாறு சங்கத்து அங்கத்தினர்கள் அவளது வீட்டு விவகாரத்தைக் கிசுகிசுப்பார்கள்.

அடிவயிற்றில் சில்லென்ற உணர்வு வேதனையாகச் சுருட்டிக் கொண்டது.

சமையலறைக்குச் சென்று கொஞ்சம் பாலை சூடாக்கி டம்ளரில் நிறைத்து எடுத்துக் கொண்டாள். விளக்குகளை அணைத்து விட்டு மேல்மாடிப் பக்கம் வந்தாள்.

மாதங்கி ஒரு வழியா அழுது முடித்துவிட்டு, முகத்தைக் கழுவிப் பொட்டிட்டுக் கலைந்த முடியை வாரிச் சரிசெய்து கொண்டு விட்டிருந்தாள்.

வெகு நேரம் அழுததன் விளைவு முகம் உப்பிக் கண்கள் சிவந்து இடுங்கி விட்டிருந்தன.

கஸ்தூரிக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''இந்தப் பாலைச் சாப்பிடு. முதன் முதலாக இந்த வீட்டுக்குள் வந்திருக்கே. பட்டினியாகப் படுக்கக் கூடாது''— உபசரித்தாள்.

அடிவாங்கி அழுது சோர்ந்துவிட்ட குழந்தையைப் போல ஒடுங்கி நின்ற மாதங்கி, மாமியார் கட்டளையை மறுக்கவில்லை.

அறையின் கதவைத் தாளிட்டு விட்டுப் படுக்கையின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள், கஸ்தூரி.

விடிவிளக்கின் ஒளியில் மருமகளை உற்றுப் பார்த்தாள்.



''ஹர்ஷன் என்ன சொல்லிவிட்டுப் போனான்?'' துணிவுடன் மெல்லக் கேட்டாள்.

''அம்மாவுக்கு அவமானம் ஏற்படக் கூடாதே என்ற ஆதங்கத்தில் ஒப்புக் கொண்டேன். அதனாலே இந்தக் கல்யாணத்தினாலே நீ என் மனைவியாகிவிட்டதாக மனப்பால் குடிக்காதேன்னார்...'' தழுதழுத்தாள் மாதங்கி.

''அப்படியா சொன்னான் அந்த முட்டாள்? அவன் கிடக்கிறான்.''

''அவர் வருவதற்குள் நான் பெரியப்பா வீட்டுக்குப் போய் விடணுமாம். இல்லாட்டா ரொம்பக் கஷ்டப்படுவேனாம்... அவமானப்படுவேனாம்.''

''பயமுறுத்துகிறானா? அதையும் பார்த்துவிடலாமே'', கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள் கஸ்தூரி.

''பெரியப்பா வீட்டில் இனி எனக்கு வரவேற்புக் கிடையாது. பெத்தவங்களும் பிறந்தவர்களும் இல்லாத அனாதை நான். இப்போ எங்கே போவேன்? எனக்குப் பயமா இருக்கு'' இணறினாள் மாதங்கி.

''இனி இது உன் வீடு. உன்னை இங்கிருந்து போகச் சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது. உன் பெரியப்பா வீட்டுக்கு நீ அனாவசியமாகப் போகத் தேவையில்லை. மாதங்கி அழுகையை நிறுத்திவிட்டு நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேள். இந்த மனஸ்தாபத்தைப் பத்தி வெளியிலே யாருக்கும் தெரிய வேண்டாம். ஹர்ஷன் கொஞ்சம் முன் கோபி. அவ்வளவுதான், சீக்கிரம் மனம் மாறிப் போய் விடுவான். கவலைப்படாதே. அதுவரை உன் மனத்தைத் தளர விடாம வச்சுக்கோ. இந்த வீட்டில் நீ கவனிச்சுக் கொள்ள வேலை நிறைய இருக்கு. நாளைக் காலையிலிருந்து நான்

வேலைக்குப் போகணும். உன்னோட கூடத் துணையா வீட்டு வேலைக்காரி நான் வரும்வரை இருப்பாள். ரோவர் கிட்டப் பழகிட்டா உன் பின்னாலேயே நிழலாகச் சுத்திக் கொண்டு காவல் காத்துக் கொண்டிருக்கும். இந்த வீட்டு நிர்வாகம் முழுவதும் இனி உன்னுடையது. இந்தா பிடி வீட்டுச் சாவியை, பத்திரமா வச்சுக்கோ.''

தன் இடுப்பில் வெள்ளி வளையத்தில் குலுங்கிக் கொண்டிருந்த சாவிக்கொத்தை உருவி மருமகள் கையில் வைத்தாள் கஸ்தூரி.

''சரி, நீ ரொம்ப களைச்சுப் போயிருப்பே, படுத்துக்கோ.'' உபசரித்துவிட்டுப் படுக்கையின் மீது தானும் ஒரு பக்கம் சாய்ந்து கொண்டாள்.

சில நாட்களாக எல்லாவற்றையும் தானே ஓடியாடிக் கவனித்ததன் அயர்ச்சி, அவளையுமறியாமல் உறங்கிப் போனாள் கஸ்தூரி.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டபோது பொழுது நன்றாக விடிந்துவிட்டிருந்தது.

அருகில் மாதங்கியைப் படுக்கையில் காணவில்லை. கீழே சமையலறையில் பாத்திரங்களின் ஓசை மெலிதாகக் கேட்டது. பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு வேகமாகக் கீழே வந்தாள் கஸ்தூரி.

மாதங்கி காப்பியைக் கலந்து கொண்டு வந்து மேசை மீது அவள் முன்னால் வைத்தாள்.

கணவனை இழந்த பின் வேலைக்குப் போய்க் குடும்பத்தைக் கவனித்து, பிள்ளையை வளர்த்து ஆளாக்கப் பாடு பட்ட கஸ்தூரிக்குச் சரியாக உட்கார்ந்து ஒரு பிடி சாப்பிடக் கூடப் பொழுது இருந்ததில்லை. அடுப்பருகிலேயே தட்டைக்



கையில் பிடித்துக் கொண்டு இரண்டே வாயாகச் சாப்பிட்டு முடித்து வேலைக்கு ஓடவேண்டிய அவசர வாழ்க்கை. முதல் முதலாக அவள் உட்கார வைத்து உபசரிக்கப்படுகிறாள். வீட்டை நிர்வகிக்கவும் கடைசிக் காலத்தில் தன்னைக் கவனித்துக் கொள்ளவும் அவள் அப்படிப்பட்டதொரு மருமகளைத்தானே அடைய விரும்பினாள்!

மகிழ்ச்சி, திருப்தி, துன்பம் என்ற கவலை உணர்வு நெஞ்சை அடைக்க அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

ஸ்நானம் செய்துவிட்டு ஈரக் கூந்தலைத் தளர முடிந்து கொண்டு குங்குமம் துலங்கப் பளிச்சென்று காணப்பட்ட மாதங்கிக்கு அழகுக்குக் குறைச்சலா?

மருமகளை மீண்டும் ஒரு முறை காலோடு தலைவரை பார்த்தாள். ஹர்ஷன் மீது அவளுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

வாழ்க்கையில் அவன் மனைவி என்பவளிடம் என்ன தான் எதிர்பார்க்கிறான்?

அழகையா? அறிவையா? அடக்கத்தையா? அன்பையா?

''அத்தை, குளிக்க எல்லாம் தயாராக எடுத்து வச்சிருக்கேன்'' சங்கோஜத்துடன் புன்னகைத்தாள் மாதங்கி.

''இத்தனை குணங்களையும் ஒட்டுமொத்தமாகக் கொண்டிருக்கிற இந்தப் பெண்ணிடம் என்ன குறையைக் கண்டு விட்டான்? வாழத் தெரியாத மடையன்...'' எண்ணியபடி கஸ்தூரி குளியலறையை நோக்கி நடந்தாள்.

## 6

பெரியம்மா வீட்டில் நாள் முழுவதும் சலிக்காது உழைத்துப் பழக்கப்பட்ட மாதங்கிக்கு வீட்டு வேலைகளைக்

கவனிக்கச் சிரமமே இருக்கவில்லை. மேலும் வீடு தன்னுடையது என்ற உற்சாகம். தன்னை மதித்துச் சாவிக் கொத்தையே மாமியார் தந்துவிட்டாளே என்ற மகிழ்ச்சி. ஒரு சில நாட்களில் ஆண்டாண்டு பழகினவள் போல வீட்டைப் பொறுப்புடன் கவனித்து எல்லா வேலைகளையும் செவ்வனே செய்யத் தொடங்கிவிட்டிருந்தாள்.

வம்பு சேகரிக்கும் நிமித்தம் கல்யாணம் விசாரிக்க வந்த சங்கத்து அங்கத்தினர்கள் காமாட்சிக்கும் அவள் தோழிகளுக்கும் பெரிய தோல்வி. வந்தவர்களை உட்காரச் சொல்லி கஸ்தூரி உபசரித்து முடிப்பதற்குள் கெட்டிலில் காப்பியும் தட்டுகளில் கல்யாணப் பலகாரங்களுமாக எடுத்து வந்து இன்முகத்துடன் வந்தவர்களுக்குக் கொடுத்து மாதங்கி மிகவும் கவனித்துக் கொண்டாள்.

'ஹார்ஷன் கட்டாயமாகக் கம்பெனி காரியமாகத்தான் வெளியூர் போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பெண் முகத்தில் இத்தனை சிரிப்பைக் காண முடியுமா?'

விமரிசனம் திசை திரும்பிப் போய் விட்டது.

மகனின் அசட்டைக்கு ஈடு செய்வது போல் கஸ்தூரி தன் மருமகளிடம் மிகவும் அன்பு பாராட்டினாள்.

'கல்யாணம் விசாரிக்க வருகிறவங்க இந்த மாதம் பூராவும் வந்து போய்க் கொண்டே இருப்பாங்க. அதனால் நீ வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டதும் நல்ல புடவையாகப் பார்த்து உடுத்திக் கொண்டு நகைகள் போட்டுக் கொண்டு கல்யாணப் பெண்ணாக லட்சணமாக இரு'' மருமகளிடம் ஏற்கெனவே சொல்லிவிட்டிருந்தாள்.

அந்த வீட்டிலேயே அம்மாவும் பிள்ளையும் வேலைக்குப் போகிறவர்கள். காலையில் காப்பி பலகாரம், கையோடு



டிபன், இரவுதான் சம்பிரதாயமான சாப்பாடு என்ற வழக்கம். ஓய்வு நாட்களில்தான் பகலில் விமரிசையான சமையல். மாமியார் வீட்டின் நடப்புகளை வந்த சில நாட்களிலேயே புரிந்து கொண்டு விட்டாள் மாதங்கி.

வாரம் முழுவதும் கஸ்தூரி வேலைக்கு ஓடிக் கொண்டிருந்தாள். ஓய்வு நாளில் களைப்பாறக் கொஞ்சம் பகலில் தூங்கி எழத்தான் சரியாக இருந்தது. அத்தனை பெரிய வீட்டைத் துப்புரவாகச் சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ளப் பொழுது இல்லாது சாமான்களெல்லாம் போட்டது போட்ட இடத்தில் கிடந்தன. தோட்டத்தைக் கவனிக்க நேரம் இருக்கவில்லை. அண்டை அயலார் பங்களாக்களில் பசிய புல் தரைகளும் பூச்செடிகளும் கண்களுக்கு ஒரு விருந்தாக இருந்தன. அவை நடுவே அவர்களது தோட்டம் திருஷ்டிப் பரிகாரமாகப் புதர்கள் மண்டிக் கிடந்தது.

இன்பமான எதிர்பார்ப்பில் ஏற்பட்ட பயங்கர ஏமாற்றத்தையும் துயரத்தையும் மறக்க மாதங்கி நாள் முழுவதும் அயராது வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஒரு சில தினங்களில் அந்த வீடு புதுமுகம் பெற்றுப் பொலிவோடு காணப்பட்டது. தரை சுத்தமாகப் பளிச்சென்று இருந்தது. சாமான்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒழுங்காக அடுக்கப்பட்டு இருந்தன. புத்தக அலமாரி துப்புரவாகத் துடைக்கப்பட்டு, வரிசையாகப் புத்தகங்கள் நின்றன. மேஜைமேல் கிடந்த அழுக்குத் துணிகளும் மாயமாயின. வேலைக்காரியின் கணவனை உதவிக்கு அழைத்து, தோட்டத்தைச் சீராக்கி, புதிய பூச்செடிகளை நட்டு வைத்திருந்தாள் மாதங்கி.

மாமியார் எழுந்து குளித்து முடித்துவிட்டு, காலைப் பலகாரம் சாப்பிடு முன் அவளது அலுவலகக் கடிதங்களைக்

கொண்ட பிரீஃப்கேஸ், பகல் உணவு டிபன் டப்பா இத்யாதிகளுடன் காரேஜ் அருகே நின்று கொள்வாள் அவள்.

"அத்தை டிபனை மறக்காதீங்க பத்திரம். சாலையைப் பார்த்து நிதானமா காரை ஓட்டுங்க... நான் எல்லாம் கவனிச்சுக்கிறேன்... போயிட்டு வாங்க..." பரிவோடு நித்தம் வேலைக்கு அனுப்பி வைத்தாள்.

பத்துமாதம் சுமந்து பெற்ற பெண்ணாக இருந்தால் கூட இத்தனை கருத்துடன் கவனிக்க மாட்டாளே! இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு அதிசயமான பெண் உண்டா?

உயிர் போனாலும் சரி. எந்தவிதமான கஷ்டமும் இவளை அணுக அனுமதிக்க மாட்டேன்—மாமியார் மனத்தில் மருமகள் மீது ஒரு அழுத்தமான பிடிப்பு ஏற்பட்டுவிட்டிருந்தது.

அன்று மாலை அவர்களது உபயோகத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்த பெரிய படுக்கை அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோதுதான் கவனித்தாள்—மூடியிருந்த அலமாரியின் மேல் தட்டில் ஒரு பக்கம் இரண்டு அழுக்குச் சட்டைகள் துவைக்கப்படாது சுருட்டி வைக்கப்பட்டிருந்தன.

அவை ஹர்ஷனுடையவை. கையில் அவைகளை எடுத்ததுமே கணவனைத் திரும்பக் கண்டுவிட்டது போன்றதொரு பரிவில் மனம் குழைந்து போனாள். வேலைக்காரியிடம் கொடுத்துத் தோய்க்க மனமின்றி தானே துவைத்துக் கொடியில் உலரப் போட்டாள். மடிப்புகளை இழுத்து உதறிவிட்டபடி அவைகளை மெல்ல விரலால் தடவிப் பார்த்தாள். மெத்தென்று கைக்கு இதமாக இருந்தது. மென்மையான உடைகளை உடுக்கத் தெரிந்த ஹர்ஷனுக்கு ஏன் கடுமையானதொரு சுபாவம்? நினைக்கவும் அவளுக்குத் துக்கமாகத்தான் இருந்தது.



அன்று மாலை வீட்டுக்குத் திரும்பியதும் மருமகளைத் தன்னுடன் கோவிலுக்கு அழைத்துப் போக விரும்புவதாக கஸ்தூரி சொல்லிவிட்டுப் போயிருந்தாள். வீணான சிந்தனைகளில் நேரத்தை ஓட்டிக்கொண்டு தயங்கி நிற்க அவளுக்குப் பொழுது இருக்கவில்லை.

இரவு சமையலை வேகமாக முடித்து வைத்தாள். அலுப்புடன் அலுவலகத்திலிருந்து மாமியார் வந்ததும் சாப்பிடக் கொடுக்க, காப்பிக்கு எல்லாம் தயாராக வைத்திருந்தாள்.

பொழுது சாயும் நேரம் வாயிலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

பின்புறத் தோட்டத்தில் சங்கிலியால் தூணோடு பிணைக்கப்பட்டிருந்த ரோவர் உற்சாகமாகக் குரைக்கத் தொடங்கியது.

பரபரப்புடன் அவள் வாயிலுக்கு விரைந்தாள். அதற்குள் தன்னிடமிருந்த மாற்றுச் சாவியால் வாயிற் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த ஹர்ஷனைக் கண்டு அவள் ஒரு கணம் அதிர்ந்து போய்விட்டாள்.

அவனும் ஆச்சரியத்துடன் அவளை ஏற இறங்க உற்றுப் பார்த்தான். பச்சைப் பட்டுச் சேலையில் பச்சைக்கல் நகைகளில் கண்களுக்குக் குளுமையாக—கல்யாணத்தின் போது பார்த்ததைவிட புது மெருகுடன் எதிரே தயக்கமாக நின்றவளை மீண்டும் ஒருமுறை வியப்போடு பார்த்தான்.

இல்லை... இல்லை... இந்த அம்மாவின் இஷ்டத்துக்கு வணங்கிப் போவதா?—அவனது உள்ளம் புரட்சி செய்யவே, தொண்டையைச் செருமிக்கொண்டு முகத்தில் கடுமை பொங்க சுற்றும் முற்றும் கவனித்தான்.

''அத்தை வரும் நேரம்தான். கோவிலுக்குப் போகலாம்னு சொன்னாங்க. நீங்க வந்தது நல்லதாப் போச்சு...'' சொல்லிக் கொண்டே அவன் பதிலுக்குக் காத்திராமல் உள்ளே திரும்பி விரைந்தாள்.

மேஜை மீது கொண்டு வந்து வைத்த காப்பி டம்ளரை வெறித்துப் பார்த்தான்.

அவளிடம் அவனை மெல்ல இணைத்து வைக்க அம்மா செய்திருக்கும் போதனை... பயிற்சி! அவனுக்கு கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

''தேவையில்லை—உள்ளே எடுத்துக் கொண்டு போ'' அதட்டிவிட்டுக் கையில் சுமந்து கொண்டிருந்த பெட்டியைத் தரையில் ஒரு பக்கமாக வைத்தான். மடமடவென்று உள்ளே சென்றான். பிரிட்ஜைத் திறந்து அம்மா தயாரித்து வைத்திருக்கும் கிரேப் ஜூஸ் கொண்ட பாட்டிலைக் கையில் எடுத்து ஒரு கண்ணாடி டம்ளரில் ஊற்றி நீரை அளவோடு கலந்து கொண்டான்.

எரித்து விடுகிறவன் போல மாதங்கியை உறுத்துப் பார்த்தபடி மேஜை மேல் தான் வைத்த பழரச டம்ளரை எடுக்கக் கையை நீட்டியவன் தவறித் தட்டிவிடவே டமால் என்ற சப்தத்துடன் டம்ளர் கீழே விழுந்து நொறுங்கியது. திராட்சை ரசம் அவனது சட்டை, பாண்ட், முகம், கை எங்கும் தெறித்துக் கறையாக்கியது.

குப்பென்று முகம் சிவக்கத் தரையில் சிதறிக் கிடந்த கண்ணாடித் துண்டங்களைத் திகைப்பும் எரிச்சலுமாகப் பார்த்தான்.

''பரவாயில்லை, அதை நான் கவனிச்சுக்கிறேன், நீங்க முகம் கைகளைக் கழுவிக்கொண்டு உடை மாத்திக்கோங்க'' சொல்லிவிட்டு மின்னலாக மறைந்தாள்.



மாற்று வேட்டி, சட்டை-துடைத்துக் கொள்ள துவாலை எல்லாவற்றையும் எடுத்து வந்து குளியலறைக் கம்பி மீது தொங்கவிட்டாள்.

மொஸைக் தரையில் கரையிட்டுக் கொண்டு ஓடிய பழ ரசத்தை மெல்ல ஒரு பழந்துணியால் ஒத்தி எடுத்து, கண்ணாடித் துண்டங்களை கவனமாகப் பெருக்கி அப்புறப் படுத்தி, அவன் உடை மாற்றிக் கொண்டு வெளியே வருவதற்குள் அந்த இடத்தை சுத்தப் படுத்திவிட்டிருந்தாள்.

''சூடா வேற கொஞ்சம் காப்பி கொண்டு வரட்டுமா?''—அவள் கேட்டபோது அவனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

ஒரு டம்ளர் பழ ரசத்தை எடுத்துத் தானே குடிக்கக் கூடத் தெரியாத மடையன் போல் அவள் முன் டம்ளரை உடைத்து அசடு வழிந்ததை எண்ணி அவனுள் ஆத்திரம்.

''நான் வருவதற்குள் மூட்டைகளைக் கட்டிக் கொண்டு இங்கிருந்து கிளம்பிடணும்னு சொல்லியிருந்தேனே. இன்னமும் இங்கே காம்ப் போட்டுக் கொண்டு...' இந்த வீண் உபசாரமெல்லாம் யாருக்கு வேணும்?''

அழைப்பு மணி ஒலிக்கவே அவனுக்குப் பதில் அளிக்காது மாதங்கி வாசலுக்கு ஓடிக் கதவைத் திறந்தாள்.

''எட்டு வீடு கேட்கிறாப் போல ஏன் கத்தறே? இந்த உபசாரம் எனக்கு வேணும். அவள் இங்கிருந்து எதுக்குப் போகணும்?'' கோபத்துடன் கேட்டுக் கொண்டே உள்ளே வந்த கஸ்தூரி மகனை முறைத்தாள்.

''அப்போ நான் இங்கேயிருந்து போகணும்னு சொல்கிறீங்களா? இந்த வீடு என் தந்தை வழிவந்த சொத்து தெரியுமில்லையா?'' மகன் கேட்டான்.

''தெரியும். இந்த வீடு என் கணவருடையது. அதனால் இங்கே தங்கியிருக்க எனக்கு உரிமை உண்டு. அதே போல இந்த வீடு மாதங்கியினுடைய புருஷனுடையதும் கூட. அதனாலே தொடர்ந்து அவள் இங்கே தங்கியிருக்க உரிமை உண்டு.''

''அவளுக்கு நீங்க சரியான வக்கீல்.''

கண்களில் துளிர்த்த கண்ணீரை விழுங்கிச் கொண் டாள் மாதங்கி. மாமியாரை நன்றி உணர்வோ ு நிமிர்ந்து பார்த்தாள்.

'அத்தை உங்களுக்கு காபி தயாரா இருக்கு. கொண்டு வரவா?''

''தாகம் உசிரு போறது. கொண்டு வாம்மா சீக்கிரம். நானும் விரைவா கோயிலுக்குக் கிளம்பத் தயாராயிடறேன். இருட்டறதுக்குள்ளே போய்விடலாம்... ஹர்ஷன் நீயும் கோயிலுக்கு எங்ககூட வாயேன்!'' மகன் பக்கம் திரும்பி மெல்லக் கேட்டாள் தாயார்.

''மாமியாரும், மருமகளும் மிகவும் ஒற்றுமையா வாழறாங்கன்னு உங்க சிநேகிதிகள் தெரிஞ்சுக்கட்டும், நான் இடையிலே எதுக்கு?'' சீறிய ஹர்ஷன் மாடிப் பக்கம் நகர்ந்தான்.

கவலையும் துயரமுமாக ஒடுங்கி நின்ற மருமகளைக் கனிவுடன் பார்த்தாள் கஸ்தூரி.

''கோயிலுக்கு எடுத்துப் போக வேண்டியதெல்லாம் தயாராக எடுத்துக்கோ... அஞ்சு நிமிஷத்திலே வந்துடறேன் ... இந்தப் பச்சை நெக்லஸ் உனக்கு ரொம்ப அழகா இருக்கு'' லேசாக மருமகள் கன்னத்தைத் தட்டிவிட்டுப் பின் பக்கம் சென்றாள்.



அதே சமயம் ஒங்கி மகன் கன்னத்தில் ஒரு அறை வைக்க முடியாது. வயது குறுக்கிட்டு விட்டதே என்ற இய லாமையை எண்ணி அவளது தாயுள்ளம் குமுறியது.

## 7

**நா**ட்கள் வேகமாக நகர்ந்தன. சாதாரணமாக, தனது அலுவலகக் காரில் அம்மாவையும் ஏற்றிக்கொண்டு ஹர்ஷன் கிளம்புவான். வழியில் கஸ்தூரியை அவள் வேலை செய்யும் அலுவலகத்தில் இறக்கி விட்டுவிட்டுப் போவது வழக்கம். மாலையில் வீடு திரும்பும் சமயம், அம்மாவுக் காகக் காத்திருந்து அழைத்து வருவான்.

இப்போது...? அவர்கள் தனித்தனியாக வேலைக்குப் புறப்பட்டனர். கஸ்தூரி, தங்கள் வீட்டின் காரைத் தனியே ஓட்டிக்கொண்டு சென்றாள். அலுவலகத்துக் காரில் அவன் மட்டும் கிளம்பிச் சென்றான்.

இரை தேடிய பின்னர் மாலை கூட்டிற்குள் வந்து அடைந்துகொள்ளும் பறவையைப்போல, இருவரும் ஒரே வீட்டிற்குள்தான் அடைய வேண்டியிருந்தது.

முதலில் சில நாட்கள்—அவன் தாயாருடன் கூடப் பேசாது முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு அவதிப்பட்டுக் கொண் டிருந்தான். பின்னர் அந்த நிலைமை மாறி, சிறிது சிறிதாகத் தளர்ந்துகொண்டு வந்தது. அம்மாவிடம் பேசத் துவங்கினான்.

''பத்துமாதம் சுமந்தவள் என் தாய்—அவளை ஒரே யடியாக ஒதுக்கிவிட என்னால் முடியாது. பத்து நாளைக்கு முன், வெறும் திடீர் பந்தத்தால் நீ இந்த வீட்டில் நுழைந்து விட்டாய்! உன்னை ஒதுக்க முடியும்'' சொல்லாமல் சொல்

வின அவனது செயல்கள்... மாதங்கி, அதைப் புரிந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

தான் சமைத்த உணவை மாமியாருக்கும் அவனுக்கும் ஒரே சமயத்தில், ஒரே பரிவுடன் பரிமாறினாள் அவள்.

மனத்தளவில் கோபம் பொங்கினாலும், வயிறு பசிக்கும்போது, என்ன செய்வது? அவனும் மறுப்புத் தெரிவிக்காமல் ருசித்துச் சாப்பிட்டான், ஏன் விருப்புடனே சாப்பிட்டான்.

அவனுக்கு மெத்தப் பிடித்த உணவு வகைகள், மாமியாரைக் கேட்டுக்கொண்டு, ருசியுடன், அவன் விரும்பிச் சாப்பிடும்படி, பக்குவம் செய்து படைக்கிறாள்! கெட்டிக்காரிதான்! ஒரு மனிதனின் மனத்தை அடைய அவனது வயிற்றுப்பாட்டை முதலில் கவனிக்கவேண்டும் என்று யாரோ சொல்லியிருந்த பழமொழியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டாளோ? சமையலில் குற்றம் காண முடியவில்லை. சரி! உடைகளைக் கவனிக்கும் விஷயத்தில்? ஊஹூம்! பேச முடியாது.

காலையில் அலுவலகம் புறப்படும் கணவன் மாடியினின்று இறங்கி வருமுன் வெந்நீர், மாற்று உடை யாவும் தயாராகக் குளியலறையில் காத்திருக்கும்.

முன்போல் அவன், ''அந்தக் கோடு போட்ட 'ஷர்ட்' எங்கே? இந்த வெள்ளை ஸ்லாக் பட்டன் உடைஞ்சு போச்சே?'' என்று அம்மாவிடம் கூச்சலிடத் தேவையே இருக்கவில்லை.

அவன் கேட்ட உடைகளை, நிமிஷங்களில் அவள் எடுத்து வந்து மேஜையின் மேல் வைத்துவிடுவாள். வேலையில் அப்படி ஒரு சுறுசுறுப்பு, கவனம்...!



ஆரம்பத்தில் அப்படி அவள் கொண்டுவந்து வைக்கும் உடைகளைக் கையில் வாங்கிக்கக்கூட அவனுக்கு வெறுப்பு... ஒரு தயக்கம். அவள் கீழே அறையில் இருந்தால் மாடிப் பக்கம் ஓடுவான். அவள் மாடிப்பக்கம் வந்தால்... திறந்த வெளியில் காற்று வாங்குபவன்போல், நழுவி விடுவான்.

தீண்டத் தகாதவள்போல், அவளைக் கண்டாலே காததூரம் விலகி ஓடியவனிடம் ஒரு சிறு அபிவிருத்தி தோன்றத்தான் செய்தது.

கையில் கொடுத்த பொருளைக் கைநீட்டி வாங்கிக் கொண்டான்.

'காப்பியில் சர்க்கரை குறைச்சலா இருக்கு' என்று சுவரைப் பார்த்துச் சொல்லிக்கொண்டு மேலும் ஒரு ஸ்பூன் சர்க்கரையை வாங்கிப் போட்டுக் கொண்டான்.

அன்று காலை அவன் உடுத்திச் செல்ல எடுத்து வந்த உடைகளை அவள் மேஜைமீது வைக்கவில்லை. அவன் வருகைக்காக அறையின் வெளியே வராந்தாவில் காத்திருந்தாள்.

''இன்னிக்கு வெயில் ரொம்ப அதிகமாக இருக்கும் போல இருக்குது. அதனாலே ஆபிசிற்குப் போட்டுக்கிட்டுப் போக இந்தக் 'காட்டன் சர்ட்' எடுத்து வச்சிருக்கேன். 'பாலிஸ்டர்' புழுங்கித் தொலைக்கும். 'காலர்' கழுத்தை உறுத்தும்'' சட்டையை அவள் அவனிடம் நீட்டினாள்.

அவனையுமறியாமல் சட்டென்று அதை வாங்கக் கையை நீட்டியபோது அவளது விரல்களைத் தீண்டியவன் ஏதோ, மின்விசைக்காளானவன் போல அதிர்ச்சியுடன் உற்றுப் பார்த்தான்.

முகமும், மூக்கும் சிவக்க இலேசாகப் புன்னகைத்தபடி அவள் அவனைப் பார்த்ததும், எரிச்சலாக வந்தது அவனுக்கு.

"நாளுக்கு நாள் இவள் முகத்தில் ஏன் இப்படி ஒரு மெருகு ஏறி வருகிறது? எப்படி இவளால் அமைதியாக, அழகாகப் புன்னகை பூக்க முடிகிறது?" காதோரத்தில் அரும்பிய வியர்வை, கழுத்தை நனைத்தது. குற்ற உணர்வால் மார்பு படபடத்தது. 'பாவம்!' என ஒரே கணம் மனம் உறுத்தியது. மீண்டும் பழைய எரிச்சல் அவனைச் சாடியதும் நிமிர்ந்தான்.

'இப்ப என்ன நடந்துவிட்டது? மனம் ஏன் சஞ்சலமடைய வேணும்?' பழைய வைராக்கியமும், பிடிவாதமும் தலைதூக்க வேகமாக மாடிப்பக்கம் விரைந்தான்.

அவனது கைப்பட்ட விரல்களை, வியப்பும் வேடிக்கையுமாகப் பார்த்தபடி நின்றிருந்த மாதங்கி சட்டென்று விழித்துக்கொண்டாள். மாமியார் கூப்பிடுவது கேட்டது. அவளது தேவைகளைக் கவனிக்க ஓட்டோடியும் சென்றுவிட்டாள்.

அன்று மாலை, வழக்கம்போல் வீட்டு வேலைகளை முடித்துவிட்டிருந்தாள் மாதங்கி. மாமியாரின் உத்திரவின்படி தன்னை அலங்கரித்துக் கொண்டாள். மிதமான ஒப்பனை முகத்திற்கு. தலையை வாரிக் கொண்டையிட்டு, பூச்சூடினாள். கஞ்சியில் நிமிர்ந்து நின்ற மல்மல் சேலையும், ரவிக்கையுமாகக் கச்சிதமாகக் காட்சியளித்தாள். ஒருசில நிமிட வித்தியாசத்தில் மாமியாரும் மகனும் ஒருவர்பின் ஒருவராக வீடு திரும்பி விடுவார்கள்.

முதலிலேயே, கேட்டைத் திறந்து தயாராக வைத்துவிட்டாள். ரோவரின் உற்சாகமான குரைப்புச் சத்தம் கேட்டது. வாயிற்பக்கம் தோட்டத்தினுள் விரையும் காரின் ஒலியைக் கேட்டு எட்டிப் பார்த்தாள் மாதங்கி.



போர்ட்டிகோவில் நின்ற டாக்ஸியிலிருந்து இறங்கிய அந்த அழகான, உயரமான, கறுப்புக் கண்ணாடியணிந்த அந்தப் பெண் யார்? கழுத்தில் புரண்ட கூந்தலை அசைத்தபடி, தோள்பட்டையினின்றும் நழுவிய பிரெஞ்சு ஷிபானைச் சரி செய்தபடி, உள்ளே வந்தாள் அவள்.

கறுப்புக் கண்ணாடியை இடது கையால் அலட்சியமாக எடுத்தவள், அவளை ஊன்றிப் பார்த்தாள்.

"ஹர்ஷா ஆபீசிலிருந்து வரலே?" வண்ணப்பூச்சு அதரங்கள் புன்னகைக்க, மிக்க உரிமையுடன் வினவினாள்.

'ஹர்ஷா வரலே?' என அதட்டலும் உரிமையுமாகக் கேட்கும் இவள் யார்? இவளை இதுவரை பார்த்ததே இல்லையே! சுள்ளென்று ஒரு எரிச்சல். அதை அடக்கியபடி "வாங்க உட்காருங்க, அவர் வர நேரம்தான்" என்று உபசரித்தாள்.

முன்னறை சோபாவில் உட்கார்ந்தவள், சுற்றுமுற்றும் பார்வையை ஓடவிட்டாள்.

"ரொம்ப சிரமப்பட்டு இருக்கீங்கன்னு தெரியுது. முன்னால் நான் பார்த்தபோது வீடு ஒரே களேபரமாக இருக்கும். தோட்டத்தைக் கூட சீராக்கி வச்சிருக்கீங்க. நீங்கதான் புது மருமகள்னு நினைக்கிறேன்!" மெல்லச் சிரித்தாள் அவள்.

'நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?' மாதங்கி கேட்க நினைத்தாள். "மாமியாருக்குத் தெரிஞ்சவளாக இருந்து கல்யாணம் விசாரிக்க வந்திருக்கலாமோ, இல்லாவிட்டால் இத்தனை உரிமையாகப் பேசுவாளா?" தானே முடிவிற்கு வந்தவளாக, "இருங்க, கொஞ்சம் சாப்பிட ஏதாச்சும் கொண்டு வரேன்" என உள்ளே விரைந்தாள்.

ஒரு சில விநாடிகளில், ஓமப்பொடி, பர்பி சகிதம் டீயும் சாப்பிட்டபடி, "நீங்க செய்ததா, சமையலிலும் கெட்டிக்காரியா இருக்கீங்களே!" என்று புகழ்ந்தாள் வந்தவள்.

காரை கராஜில் நிறுத்திய ஹர்ஷன், முன்னறையில் பேச்சுக் குரலைக் கேட்டுவிட்டுச் சற்றுத் தயங்கியபடி உள்ளே நுழைந்தான்.

"ஹாய் நீ... நீ... இங்கே... எப்படி?" தாள முடியாத வியப்பும், குதூகலமுமாக அந்தப் பெண்ணின் அருகே இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டான். கணவனைக் கண்டதும், மாதங்கி சமையலறைக்குள் ஓடினாள்.

"வந்தவள் யார்? இத்தனை நெருக்கமாகப் பேசும் அளவிற்கு... என்ன உறவு?" அவளது தொண்டைக்குள் என்னவோ அடைத்துக் கொண்டது.

மாமியார் கஸ்தூரி முகமெல்லாம் சிவக்க கோபமாக அருகில் வந்து நிற்பதை அப்போதுதான் உணர்ந்தாள் மாதங்கி.

"அவ வந்து ரொம்ப நேரமாகி விட்டதா?"

"அவர் வரத்துக்கு சித்த முன்ன வந்தாங்க. பேரைக் கூட நான் கேக்கலை. உங்களுக்கு தெரிஞ்சவங்கன்னு உ குடுத்து..."

"அது ஒண்ணுதான் பாக்கி. வெட்கம் கெட்டவ! என்ன தைரியம் இருந்தா... எந்த முகத்தை வச்சிக்கிட்டு இந்த வீட்ல நுழைஞ்சிருக்கா?" என்று சீறினாள் மாமியார் அடிக் குரலில்.

"எனக்கு யாருன்னு தெரியலை அத்தை!" தடுமாறினாள் மாதங்கி.

"தவறு என்னுடையது. ஆரம்பத்திலேயே எல்லாத்தையும் உங்கிட்ட சொல்லி இருக்கணும். ஆனா ஏற்கெனவே ஒரே குழப்பமா நடந்த கல்யாணம். இதை வேறே சொல்லிக் குழப்ப வேணாம்னு நினைச்சேன். கேட்டுக் கொள்ளு. இவ பேரு ஊர்மிளா. ஹர்ஷன் ஆசைப்பட்டுக் கட்டிக்கொள்ள



முடிவு செஞ்சபோது, திடீர்னு இவனை உதறிவிட்டு வேற ஒருத்தனைக் கட்டிக்கிட்டா. இவன் ஜாதகமே அப்படி. என்ன காரணமோ, கடைசி நிமிஷத்திலே, இரண்டு பெண்களுமே, உதறிட்டுப் போயிட்டாங்க, அது போகட்டும். விரும்பி வாழ வந்தவளை வைச்சுக்கிட்டு வாழத் தெரியாமல் இருக்கான். இந்தச் சமயம் எதுக்காக இவ வந்திருக்காளாம்?" என்று வெடித்தாள்.

அது சமயம், ஹர்ஷன் உள்ளே எட்டிப் பார்த்தான். "தாகம் உயிர் போவுது. இன்னுமா காப்பி தயாராகலை!" மொட்டையாகக் கேட்டு விட்டு. அம்மாவைப் பார்த்தான்.

கோபத்தில் கனன்று கொண்டிருந்த கஸ்தூரி, "அவ எதுக்காக வந்திருக்கா?" என்றாள் கடுமையாக.

"அவள் கணவன், அவளை ரொம்பக் கொடுமைப் படுத்தறானாம். இம்சை பொறுக்காம, கொஞ்ச நாள் பிறந்த வீட்ல இருக்கலாம்னு வந்தாளாம்."

"அப்படி, உங்கிட்ட சொல்லிக்க, அவளுக்கே வெக்கமா இல்லே? மனைவியை இம்சைப் படுத்தற உனக்கும் அதைக் கேட்க, அதைவிட வெட்கம் இல்லே?" படபடவெனப் பொரிந்தாள் தாயார்.

மாதங்கி அடுப்பையே பார்த்தாள். ஹர்ஷனுக்கு ரோஷம் பிய்த்துக் கொண்டது. வெடுக்கென அந்த இடத்தை விட்டு அகன்றான்.

மாதங்கி நடுங்கிப் போனாள். "நீ பயப்படாதே! சில சமயம் சூடாகச் சொன்னாத்தான் உறைக்கும். இவனை உதறிட்டுப் போனவ கிட்டே என்ன பேச்சு வேண்டிக் கிடக்குது? தன் கணவனைப் பத்தி இவன்கிட்டே பேசறது தவறுன்னு அவளுக்காவது புரியணும். படிச்சிட்டா போதுமா? பெரிய

வேலைக்குப் போனா போதுமா? விவேகம் வேணும்''
பல்லைக் கடித்தான் கஸ்தூரி.

சமையலறைப்பக்கம் நிழலாடியது. ஊர்மிளா, ''நான்
போயிட்டு வரேம்மா. ஹர்ஷன் கொண்டு வீட்ல விடறதா
சொன்னதாலே புறப்படறேன். உங்ககிட்ட பேச முடியலே,
ஒரு சமயம், அடிக்கடி வந்து கிட்டே இருப்பேன். அப்ப
பேசலாம்'' அலட்சியமாகச் சிரித்தபடி நின்றாள்.

வாயிலில் 'ஹார்ன்' பொறுமையின்றி ஒலித்தது.
''அப்பப்பா! கொஞ்சம்கூடப் பொறுமையே கிடையாது
ஹர்ஷனுக்கு, வரேன்!'' சிணுங்கியபடி, ஒரே துள்ளலில்
வெளியேறினாள் ஊர்மிளா.

மாதங்கி ஜன்னல் வழியே பார்த்தாள். காரின் முன்
ஆசனத்தின் கதவைத் திறந்து ஒய்யாரமாக அவன் மீது
உரசியபடி உட்கார்ந்தவளைக் கவனித்ததும் கண்களில் நீர்
முட்டியது. மனம் பதைத்தது.

''கவலைப்படாதே மாதங்கி! ஒரு குழந்தை எழுந்து
நடக்குமுன்னே, பல தடவை விழுந்து தத்தித்தத்தித்தான்
நடக்கக் கத்துக்கணும். திருமண வாழ்க்கையும் அப்படித்தான்.
இதுபோல் சின்னச்சின்ன விபத்துக்களைப் பார்த்துக் கண்
கலங்கிறியா? அசட்டுப் பெண்ணே! தைரியமா இரு. ம்!
நானும் தயாரா வரேன். வீட்டைப் பூட்டிக்கிட்டு ரெண்டு
பேரும் கொஞ்சம் கடற்கரைவரை போய் வரலாம். கிளம்பு!''
மருமகளை ஆறுதலாக, நெஞ்சோடு அணைத்துக் கொண்
டாள் கஸ்தூரி.

## 8

ஹர்ஷனுக்குத் தாய் மீது ஆழமான அன்பு உண்டு.
ஆனாலும் தான் என்ற அகம்பாவமும் அதிகம் உண்டு.



கஸ்தூரிக்கும் மகனிடம் அளவுக்கு மீறிய பாசம் இருந்தது.
ஆனாலும் தாயாகவும், தந்தையாகவும் இருந்து தானே வளர்த்த
பிள்ளை. தன் பேச்சு மீறி நடப்பதா என்று உள்ளூர ஓர்
ஆத்திரமும் கூடவே ஏற்பட்டிருந்தது. இதன் விளைவு இரு
வருக்குள்ளும் மனப் போராட்டமாக வளர்ந்து விட்
டிருந்தது. தர்க்கங்கள் சிறு பூசல்கள் தலையெடுத்தன. சில
நாட்களுக்குப் பின்னர் ஊர்மிளா மறுபடியும் ஹர்ஷனை
தேடிக் கொண்டு வந்தாள். பிறகு தொடர்ந்து வர ஆரம்பித்
தாள்.

''ஹர்ஷன்!'' என்று உரிமையுடன் அவனை அழைப்
பாள். பற்கள் தெரியச் சிரித்து, சாப்பாட்டறை மேஜை எதிரில்
வந்து உட்கார்ந்து கொண்டு காப்பியையும், டிபனையும்
சுவைத்தாள். கஸ்தூரிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.
மரியாதையை உத்தேசித்துத் தன்னைக் கட்டுப் படுத்திக்
கொண்டாள். வீடு தேடி வந்திருக்கிறாளே!

அதே சமயம், 'இப்படியே விஷயம் போய்க் கொண்
டிருந்தால்' கவலையும் உள்ளூர அரிக்கத் தொடங்கியிருந்தது.

அன்றிரவு சாப்பாட்டறையில் ஹர்ஷன் மெல்ல ஆரம்
பித்தான். உணவு வேளையில் அமைதியை விரும்புகிறவள்
கஸ்தூரி. சாப்பாட்டின் இடையில், அலுவலகத்துப் பிரச்சனை
கள், வீட்டு விஷயங்கள், ஊர் வம்பு இவைகளைப் பேச
அவளுக்குப் பிடிக்காது. ஹர்ஷன் அதற்கு நேர் எதிரி.
அப்போதுதான் எல்லாவிதமான பிரச்சனைகளும், தட்டுச்
சோற்றின் மீது ஏறிக் கொண்டுவிடும்!

அப்படித்தான் அன்றிரவு சாப்பாட்டின் போது அவன்
ஆரம்பித்தான். ''ஞாயிற்றுக் கிழமைதானே, அதனால் பகல்
சாப்பாட்டுக்கு ஊர்மிளாவை அழைக்கலாம்னு இருக்கேன்.
ஏதேனும் கொஞ்சம் ஸ்பெஷலா செஞ்சா நல்லா இருக்கும்.''

விருக்கெனத் தலை நிமிர்ந்தாள் கஸ்தூரி.

''யார் கிட்டே சொல்றே? இப்பல்லாம் வீட்டு வேலை நான் செய்யறதில்லே தெரியுமில்லையா?'' கோபத்துடன் கேட்டாள்.

''வீட்டு வேலை செய்யறவங்க கிட்டத்தான் சொல்லேன்னு வச்சுக்கிறது''—சீறினான் மகன்.

''மாதங்கி என் மருமகள். கண்டவங்களுக்குப் பொங்கிப் போட அவள் வேலைக்காரியில்லே. புரிஞ்சுக்கோ. அந்தப் பெண் ஊர்மிளா இங்கே வருவதை நான் விரும்பலே.''

''அம்மா!'' கத்தினான் மகன்.

''அவளுக்கு நம்ம கிட்ட எந்த விதமான உறவும் கிடையாது. அவள் இங்கே வந்ததே தப்பு, தப்புக்களை நான் தொடர்ந்து அனுமதிக்கப் போறதில்லே...''

''ஆனாலும், உங்களுக்கு ரொம்பக் குறுகிய புத்தியம்மா?''

''உனக்கு விசாலமான புத்தி இருக்குதே! அது என்னை எங்கே கொண்டு போய் விடும்னு எனக்குத் தெரியும். ஏன் வீணா வாதம் செய்யறே... அவள் இங்கே வரக்கூடாது. நான் வர விடமாட்டேன்,'' கோபத்தைத் தாளாமல் பற்களைக் கடித்தாள் கஸ்தூரி.

பாதிச் சாப்பாட்டில் கையை உதறிவிட்டு எழுந்தான் மகன். அவள் அதைப் பாராதது போல அசட்டையாய் இருந்தாள்.

''ரசம்கூடப் போட்டுக்கலையே அதுக்குள்ளே...'' மாதங்கி முணுமுணுத்தபோது கட்டுக்கடங்காத சினத்துடன் அவளை முறைத்தான் ஹர்ஷன்.



''உன் உபசாரம் தேவையில்லை. உன் மாமியாரை நல்லாக் கவனிக்கிறீல்ல. அது போதும்,'' ஏளனமாகக் கூறிவிட்டு வாஷ்பேசினில் பரபரப்பாகக் கையைக் கழுவிக் கொண்டு, வேகமாக மாடியறைக்குப் போய்விட்டான்.

கஸ்தூரிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. மேலே சாப்பாட்டைத் தொடரப் பிடிக்காமல், அவளும் பாதியிலேயே எழுந்து விட்டாள். மாதங்கியின் மனம் மிக்க வேதனைப்பட்டது.

ஹார்லிக்ஸ் கலந்த டம்ளரை மேஜை மீது வைத்துவிட்டுப் படுக்கையில் சுருண்டு கிடந்த மாமியாரின் அருகில் குனிந்தாள் மாதங்கி.

''அத்தை!''

கஸ்தூரி அசையாமல் கிடந்தாள்.

''சாப்பிடாம வந்துட்டீங்க. கொஞ்சம் ஹார்லிக்ஸாவது குடிங்க'' என்று சொன்னபடி மெல்ல அவளது கன்னத்தைத் தொட்டவள் துணுக்குற்றாள்.

'சில்'லென்ற கண்ணீர்த் துளிகள் கை விரலை நனைத்தன. மிகவும் துணிவாக அழுத்தமாகப் பேசத் தெரிந்த கஸ்தூரி... அவளுக்குப் பலவிதமாகத் தைரியம் சொன்ன மாமியார் கஸ்தூரி... இப்போது அழுது கொண்டிருக்கிறாள்!

''அத்தை என்ன இது? நீங்ககூட....'' செல்லமாகக் கடிந்தபடி அவளது முகத்தை நிமிர்த்தினாள் மாதங்கி.

''என்னை மட்டும் கல்லால கட்டி, சாந்தால பூசி வைச்சிருக்கா? நானும் ஒரு மனிதப் பிறவிதானே. நல்லா யோசிச்சேன். என் கௌரவத்தைக் காப்பாத்திக்கனும்னு நினைச்சுக் கிட்டே, மடத்தனமான ஒரு பெரிய தவறையே செய்துட்டோமேன்னு நினைச்சேன், துக்கமா வந்துட்டுது, அவ்வளவு

தான்'' தழுதழுத்தாள் கஸ்தூரி. கண்களைத் துடைத்தபடி எழுந்து மருமகளையே பரிதாபமாகப் பார்த்தாள்.

''இப்ப என்ன நடந்துட்டுன்னு நீங்க இப்படி மனசை அலட்டிக்கிறீங்க. வருத்தப்படாதீங்க அத்தை!'' மாதங்கி சமாதானம் செய்தாள்.

''கள்ளங் கபடமில்லாத உன்னை ஒரு முரட்டுப் பயலுக்குக் கட்டி வைச்சு... உன் வாழ்க்கையைப் பாழடிச்சிருக்கேனே... அதை நினைச்சு சந்தோஷமா பட முடியும்?'' கண்கள் கலங்கிப் போனாள்.

மாதங்கி மௌனமானாள்.

''ஆமை புகுந்த வீடு உருப்படாதுன்னு சொல்வாங்க. அதுபோல இந்த ஊர்மிளா கால் அடி எடுத்து வச்சாலே இந்த வீடு உருப்படாதுன்னு கவலையாயிருக்குதே!'' அரற்றினாள் மீண்டும்.

''பொறுமையா இருன்னு என்னைச் சொல்வீங்களே! இப்போ நீங்க...'' மெல்லக் கூறியபடி ஹார்லிக்ஸ் டம்ளரை அவளிடம் நீட்டினாள்.

அவளது அன்பான செயலை மறுக்க முடியாதவளாய் ஹார்லிக்ஸைப் பருகிய கஸ்தூரி, மீண்டும் படுக்கையில் சுருட்டிக் கொண்டாள்.

'இந்த ஊர்மிளா எதற்காக இப்போ வந்து இங்கே குழப்பம் விளைவிக்கிறாள்!' என்று எண்ணிக் கவலைப் பட்ட அவளால் உறங்கவே முடியவில்லை.

மறுநாள் காலை குளித்து முடித்த பின், ஹர்ஷன் வழக்கம் போல் முன் அறையில் உட்கார்ந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான்.



அவனது கோபமும் இன்னும் அடங்கின பாடில்லை. பக்கத்திலே மாதங்கி கொணர்ந்து வைத்த காப்பி டம்ளரைக் கவனியாதவன் போல விடுக்கென எழுந்து வெளியே சென்றுவிட்டான். சிறிது பொழுதில் கார் தோட்டத்தினின்றும் வெளியே செல்லும் ஒலி கேட்டது.

இரவு வெகுநேரம் கழித்து வீடு திரும்பிய ஹர்ஷன் நேராகப் படுக்கைக்குச் சென்றுவிட்டான். மறுநாள் காலையிலும் சாப்பிடவில்லை. மாதங்கி கட்டி வைத்த டிபனைக் கூடத் தொடாது வேலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

மாலை சற்று முன்னதாக வீட்டுக்குத் திரும்பிய போது தான் ஹர்ஷன் கவனித்தான் காரேஜிலிருந்து கார் எடுக்கப் படவில்லை என்பதை. 'அப்படியானால்...?' அவனையும் அறியாமல் திடீரென ஒரு பரபரப்பும் கவலையும் அவனுக்குள் எழுந்தன.

வாரத்தின் முதல் நாள். அலுவலகத்தில் அவனுக்கு மூச்சுவிடக் கூட நேரமின்றி வேலைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. பகல் வேளைக்கு உணவைத் தேடிக் கொண்டு ஓட்டலுக்குப் போக நேரம் இருக்கவில்லை. மாலை நடந்த போர்ட் மீட்டிங்கில் சாப்பிட்ட காப்பி அடிவயிற்றில் மறைந்து போகவே அகோரப் பசி...

பசி வந்து விட்டால் அவன் குழந்தை சுபாவம் படைத்தவனாகி விடுவான். வீட்டுக்கு வந்தவன் ப்ரீஃப்கேஸை சோபாவின் மீது வைத்துவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தான். மாதங்கி அம்மாவின் அறையிலிருந்து வெளியே வருவது தெரிந்தது.

விஷயம் என்னவென்று தெரிந்து கொண்டாக வேண்டுமே! வீண் ஜம்பம் அடித்துக் கொள்ள முடியாதே. தொண்டையைச் செருமிக் கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''ஒரு நொடியில் காப்பி டிபனை எடுத்து வைக்கிறேன்'' சொல்லிக் கொண்டே மாதங்கி சமையலறைக்குள் மறைந்துவிட்டாள்.

பசியின் குடைச்சல் தாங்க முடியாமல் அவனாகவே சமையலறைக்குள் சென்றான்! அவள் தட்டில் உப்புமாவை அள்ளி வைத்ததை எடுத்து ஸ்பூனால் விழுங்கினான். அடுத்து வைத்திருந்த காப்பி டம்ளரை எடுத்து ஒரே மடக்கில் 'லபக்'கென்று குடித்து முடித்தான்.

மாதங்கி சிரிப்பை அடக்க முயன்றாள். அலமாரியில் பாத்திரங்களை அடுக்குவது போல் அபிநயித்தாள். மீண்டும் இலேசாக இருமினான் அவன். என்ன என்பது போல் திரும்பினாள் அவள்.

''அம்மா, சீக்கிரமாகவே வேலையிலிருந்து திரும்பிட்டாங்களா?'' வலியப் போய் அவளிடம் பேச அவனுக்கு வெட்கமாகத்தான் இருந்தது. ஆனாலும் விஷயம் தெரிந்தாக வேண்டுமே!

''அத்தை வேலைக்குப் போகலை.''

''உடம்புக்கு என்ன?'' திடுக்கிட்டு வினவினான்.

''ரத்த அழுத்தம் அதிகமாயிருக்கு. ஒய்வா இருக்கனும்னு டாக்டர் சொன்னார்.''

''டாக்டர் வந்து பார்த்தாரா?''

''தலைவலி தாங்க முடியாம அத்தை ரொம்பக் கஷ்டப்பட்ட போது குடும்ப வைத்தியர் சிகாமணியைக் கூப்பிட்டேன். அவர்தான் வந்து மருந்து கொடுத்திருக்கார்!''

''எனக்கு எதுவுமே தெரியாதே. ஆபீஸுக்குப் போன் பண்ணியிருக்கலாமே!'' கடுகடுத்தான்.



''நீங்க கோபமா இருக்கும்போது என்ன செய்யறதுன்னு ஒன்னும் புரியலே.''

அவன், அவளைத் தாண்டிக் கொண்டு மௌனமாகத் தாயின் படுக்கை அறைக்குள் நுழைந்தான். மருந்து மயக்கத்தில் கஸ்தூரி ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். ஓசைப் படாது மெல்ல வெளியே வந்தான்.

''டாக்டர் என்ன சொன்னார்?'' என்று மாதங்கியிடம் அடிக்குரலில் கேட்டான்.

''பயப்பட ஒன்னுமில்லே. நல்ல ஓய்வு தேவைன்னார். கவனிச்சுக்கிறேன்னு சொல்லிட்டேன்'' முணுமுணுத்தாள் அவள்.

''தாங்க்யூ'' அதற்கு மேல் அவனுக்கே சங்கோஜமாக இருந்தது. வேகமாக முன்னறைப் பக்கம் நகர்ந்தான்.

அழைப்பு மணி ஒலித்தது. மாதங்கி ஓடிச்சென்று கதவைத் திறந்தாள். வாசலில் ஊர்மிளா நின்றுகொண்டிருந்தாள்.

''ஹர்ஷன்! இங்கே உட்கார நேரமில்லே. எங்காவது வெளியே போய் நிம்மதியா ஒரு இடத்தில் உட்கார்ந்து பேசித் தீர்மானிக்க வேண்டிய சங்கதி. உம். ஜல்தி'' அவசரப்பட்டாள். அவனையும் புறப்படும்படி அவசரப்படுத்தினாள்.

மாதங்கியின் மனம் ஆத்திரத்தில் குமுறியது. இவளுக்கு எத்தனை உரிமை? உதட்டைக் கடித்துக்கொண்டு உள்ளே திரும்பினாள்.

''வேண்டாம். தாகத்துக்கு எதுவும் வேண்டாம். அவசரமாப் போகணும்'' என்றாள் ஊர்மிளா.

ஹர்ஷன் மந்திரத்தால் கட்டுண்டவன் போல் கார் சாவியை கையிலெடுத்தான்.

"அம்மாவுக்கு உடம்புக்கு முடியலே. ரத்த அழுத்தம். படுத்திருக்காங்க" அவன் முடிக்குமுன் 'பக்'கெனச் சிரித்தாள் ஊர்மிளா.

"ரத்த அழுத்தம்தானே! நான்கூடப் பெரிசா என்னவோன்னு நினைச்சுட்டேன். இந்த வயசுக்கு வரவேண்டிய கோளாறு. ஊர் உலகத்திலே வராத நோயைப் போல நினைச்சுகிட்டுப் பயந்து போய் உட்கார்ந்துட்டீங்களே? ம், கிளம்புங்க..."

மிரட்டினாள் அவள். கழுத்தில் பூட்டிய சங்கிலியைப் பிடித்திழுத்துத் தரதரவென இழுத்துக்கொண்டு போகப்படும் நாய்க்குட்டி போல் அவனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

"டிரைவ்—இன்"னுக்கே நேரே போவோம்!" ஊர்மிளா அசட்டையாகப் பேசியபடி அவனுடன் வெளியே சென்றது மாதங்கியின் மனத்தை உறுத்திப் புண்ணாக்கியது. மனைவி மேல்கொண்ட கசப்பு மறைந்து பேசும் அளவுக்கு மாறிவிட்டிருந்த கணவனை, இவள் எதற்காக இப்போது இடையில்... அட கடவுளே! மாதங்கியின் மனம் புலம்பியது.

## 9

ஒரு வார காலமாகக் கஸ்தூரி வேலைக்குப் போகவில்லை. டாக்டர் உத்தரவின்படியே லீவு எடுத்துக் கொண்டு வீட்டிலேயே ஓய்வாக இருந்தாள். மருந்துகளின் மயக்கத்தில் நாளின் பெரும்பகுதியைத் தூங்கியே கழித்தாள். நிற்க நேரமின்றித் தன்னைப் பற்றிய நினைப்பும் இன்றிப் பல காலம் உழைத்து விட்டிருந்தவள்-மகனுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தினால் மனம் நொந்து போனவள்—அவனுக்கு நேர்ந்த கார் விபத்தின்போது அவள் பட்ட கவலைகள்—இவை அனைத்துக்கும் சேர்த்து இப்போது அவளுக்குப் படுக்கையில் இருக்கவேண்டிய அளவு ஓய்வு தேவைப்பட்டது.



ஹர்ஷன் காலையில் வெளியே கிளம்பும்போது அம்மாவின் அறை வாயிலில் நின்று எட்டிப் பார்த்தான். அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். மாலை வீட்டுக்குத் திரும்பும் போதும் அவள் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். வெளியிலிருந்து வெகுநேரம் சென்ற பின்னர் இரவு வீடு திரும்பிய போதும் அவள் உறங்கிக் கொண்டிருந்தாள்.

ஒருவார காலமாகத் தாயிடம் ஒரு வார்த்தைகூடப் பேசமுடியாது போனதை எண்ணி அவனுக்கு வேதனையாக இருந்தது. கொஞ்சம் வெட்கமாகக்கூட இருந்தது. ஆனால் அவனுடைய அன்றாட வாழ்க்கை நியதியில் எந்த விதமான மாறுதலும் இல்லை. மாதங்கி அவனை நன்றாகவே கவனித்துக் கொண்டாள்.

குளித்துவிட்டு வருவதற்குள் காலையில் அவனது காப்பி பலகாரம் மேஜைமீது தயாராக வைக்கப்பட்டிருக்கும். கையோடு எடுத்துப்போக, டிபன் டப்பாகூடத் தயாராக இருக்கும். மாலை வந்ததும் முகத்தைக் கழுவிக் கொண்டு வேறு உடுத்தி வருவதற்குள் டிபன் அவனுக்காகக் காத்திருக்கும். இரவு, அவன் எத்தனை நேரம் கழித்து வீடு திரும்பினாலும், சாப்பாடு பரிமாறிக் கவனித்துக்கொள்ள விழிப்புடன் இருந்தாள்.

முன்பெல்லாம்—தாயாருக்கு உடம்பு சுகமில்லாது ஒரு நாள் வீட்டில் தங்க நேரிட்டாலும் போதும். அவனுக்கு அலுவலகத்தில் வேலையே ஓடாது தவித்துக்கொண்டிருப்பான்.

'வேலைக்காரி வீட்டுக்குப் போய்விட்டிருப்பாளோ? அம்மாவுக்குக் காய்ச்சல், ஒரு வாய் தண்ணீர் எடுத்துக் கொடுக்கக்கூட யாரும் இல்லையே' என்று கவலைப்படுவது வழக்கம்.

இந்த ஒருவார காலமாக அப்படிப்பட்ட கவலையெல்லாம் அவனுக்கு ஏற்படவில்லை. மாதங்கி கவனித்துக் கொள்கிறாள் என்ற நிம்மதி! ஆனாலும் அம்மாவிடம் நேரிடையாக ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லையே என்ற குற்ற உணர்வு மனத்தைக் குடைந்துகொண்டே இருந்தது.

அன்று மாலை வெளியே சென்றவன், இருட்டியபின் சிறிது நேரத்துக்குள்ளேயே வீடு திரும்பிவிட்டிருந்தான். காரைக் காரேஜில் நிறுத்திப் பூட்டிவிட்டு உள்ளே நுழைந்தவன் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டான். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

அவர்களது குடும்ப நண்பர் நாராயணசாமியை எதிர்பாராதவிதமாகக் கடற்கரையில் சந்தித்துவிட்டான் அவன். ஊர்மிளாவும் அவனும் ஒருவார காலமாகத் தினசரி கடற்கரைக்குச் சென்று, மணலில் அமர்ந்தபடி தனியே வார்த்தையாடுவது வழக்கம்.

அவன் உள்ளத்தில் நீறு பூத்த நெருப்பாக இன்னமும் அவள்மீது ஆசை லேசாக மூண்டுகொண்டு இருந்தது உண்மை. எவ்வளவோ முயன்றும் அவனால் அதை அடக்கமுடியாத நிலை. போதை மருந்தைத் தின்று விட்டவன்போல அவளது பேச்சிலும் சிரிப்பிலும் இன்னமும் மயங்கிய நிலையில் தன்வசமிழந்து கொண்டிருந்தான்.

நாராயணசாமி அவர்கள் குடும்பத்துடன் நெருங்கிய பழக்கம் உள்ளவர். அவனது தந்தையுடன் படித்தவர். பழகியவர்... அவ்வப்போது குடும்ப நலனை விசாரித்து வரும் நல்லதொரு மனிதர். சங்கடமான சந்தர்ப்பங்களின் போதெல்லாம், கஸ்தூரி அவரது ஆலோசனையைக் கேட்கத் தவறியதில்லை. அவர் சொந்த வியாபார வேலைகள் இருந்தும்



கூட, அவனது கல்யாணத்தில் கலந்து கொள்ள, விடியுமுன் தமது காரில் புறப்பட்டுத் திருத்தணிக்கு ஓடோடி வந்திருந்தவர்.

அன்று மாலை, அந்த நாராயணசாமியும், கடற்கரையில் சற்று நேரம் காற்று வாங்க வந்தவர் கண்டுவிட்டார்.

காரிலிருந்து இறங்கி நடைபாதையில் சற்று நடந்து அலுத்தபின், மணலில் இறங்கியவர் முன் ஹர்ஷன்; கூடவே மகிழ்ச்சி குலுங்க அவன் அருகே... யார் அந்தப் பெண்?

மிக அருகாக நெருங்கியபோது தூக்கிவாரிப் போட்டது. சில நாட்களுக்கு முன் திருத்தணியில், கல்யாண மண்டபத்தில் அவன் அருகே உட்கார்ந்திருந்த அந்த அமைதியான பெண்... அவள் இல்லை...

மூக்கின் மீது நழுவிய கண்ணாடியைச் சரி செய்து கொண்டார். பளிச்சென்று வீசிக்கொண்டிருந்த மாலை வெய்யில் மறையத் துவங்கிய நேரம். மீண்டும் நன்கு உற்றுப் பார்த்தார்.

இரண்டு வருஷங்களுக்குமுன் ஹர்ஷனை வேண்டாம் என்று கல்யாண சமயம் வரும்போது தட்டிக் கழித்துவிட்டு வேறு ஒருத்தனை மணந்துகொண்டு மறைந்துபோன ஊர்மிளா அல்லவா? அவளுடன் இங்கே... 'என்ன சம்பந்தம்! அதுவும் தனியே உட்கார்ந்து கொண்டு...?

தொண்டையைக் கனைத்துக் கொண்டார் நாராயணசாமி.

திரும்பிப் பார்த்த ஹர்ஷன் தூக்கிவாரிப்போட எழுந்தான். குற்ற உணர்வில் குன்றிப் போய்விட்டான் ஒருகணம். பிறகு அவர் அருகே வந்தவன், சமாளித்தபடி "வீட்டுப் பக்கம் வந்து ரொம்ப நாளாச்சுதே" என்று விசாரித்தான்.

தலையைக் குனிந்துகொண்டு மணல்மீது கோலம் போட்டுக்கொண்டிருந்த ஊர்மிளாவை வெறுப்புடன் உற்றுப்

பார்த்தார் அவர். அதற்குமேல் சினம் கட்டுக்கடங்காமல் போயிற்று.

''ஏம்பா ஹர்ஷா! இன்னொருத்தன் மனைவியோட கடற்கரையில் உலாத்தறது எந்த நாகரிகத்தில் சேர்த்தி? உங்கப்பா உசிரோட இருந்தா இதைப் பார்த்தால் அப்படியே குன்னிப் போயிருப்பான். ரொம்ப கண்யமான மனுஷன். குழிப்பிள்ளையைத் தோண்டி எழவு கொண்டாடற கதையா —விட்டுப்போன விவகாரத்தை இப்போ எதுக்காகத் தொடரணும்? நீ என்ன சமாதானம் சொன்னாலும் என் மனசு ஏற்காது. உன்னைவிட வயசிலும் அனுபவத்திலும் நான் பெரியவன். நெருப்போட விளையாடினா என்ன நேரும்னு தெரியுமா?'' படபடவெனப் பொரிந்து விட்டு அவனது பதிலுக்குக்கூடக் காத்திராமல் அப்பால் சென்று விட்டார்.

ஹர்ஷன் முகம் சிவந்து போயிற்று.

''அந்த வழுக்கை மண்டை மனிதன் என்ன உளறினான்?'' ஏளனமும், கோபமுமாக ஊர்மிளா கேட்டாள்.

''அவர் எங்கள் குடும்ப நண்பர்.''

''தெரியுமே. இந்தக் கட்டுப்பெட்டியின் பேச்சுக்கு உங்கம்மா மதிப்புக் கொடுப்பாங்க. ஏன்னா அவங்களும் ஒரு பத்தாம் பசலி... ஹர்ஷன்! இப்ப நான் ஒரு உண்மையைச் சொல்லப் போறேன். நம்ம கல்யாணம் ஏன் நின்னுப் போச்சு தெரியுமா?''

ஹர்ஷன் நிமிர்ந்து பார்த்தான்.

''உங்கம்மா படிச்சு வேலைக்குப் போனால் மட்டும் போதுமா? கொள்கையளவில் ஒரு பழங்காலத்துக் கிராமாந்தரம்! அவர்களுக்கு அடிமையாயிருக்கிற மருமகள் வேணும்னு எதிர்பார்த்தாங்க; அதனால் என்னைப் பிடிக்கவில்லை!'' அசட்டையாகக் கூறினாள்.



ஹர்ஷன் நெஞ்சு துடிக்கக் கோபமாக நின்றான்.

''உங்கம்மாவுக்கு உடம்பு முடியலைன்னு படுத்திருப்பது எல்லாம் வெறும் வேஷம். மகனைத் தன் முந்தானையிலேயே முடிஞ்சு வச்சுக்கணும். மருமகளை விரட்டி வேலை வாங்கணும். அப்படி ஒரு நாடகம்.''

அவனுக்கு வார்த்தைகள் வறண்டன.

''ஹர்ஷன்! உங்க நிறுவனத்தில் உங்கக் கீழே எத்தனை பேரை வேலை வாங்கறீங்க. திறமையா நிர்வாகம் நடத்தறீங்க. ஆனால் வீட்ல... அம்மாகிட்ட நடுக்கம்! அதுதான் எனக்கு அதிசயமா இருக்கு. உங்க அம்மாவோட அதிகாரத்தைத் தாண்டிக்கிட்டு வந்தாத்தான் நமக்கு ஒரு நல்ல காலம் இருக்கும்.''

''என்ன சொல்றே ஊர்மிளா?''

''ஒரு வாரமாச் சொல்லிக்கிட்டு வரதைத்தான் சொல்றேன். எனக்கு என் மணவாழ்க்கை கசந்துவிட்டது. உங்களுக்கு மனம்போல் வாழ்க்கை அமையவில்லை. நாம் ஒருவருக்கொருவர் நேசிச்சவங்க...''

அதற்குமேல் ஹர்ஷனுக்குப் பிடிக்கவில்லை. நாராயணசாமியின் வார்த்தகளை, கடற்காற்று அலை அலையாக, சாட்டையடி போலக் காதுகளில் மோத மனம் வேதனைப் பட்டது.

''ஊர்மிளா! அவசரப்பட்டு முடிவு செய்கிற விசயம் இல்லே இது! இருட்டத் தொடங்கிவிட்டது. கிளம்புவோம்'' வேட்டிமீது ஒட்டிக்கொண்டிருந்த மணலை உதறி எறிந்த உணர்வு. வேகமாகக் காரை நோக்கி நடந்தான்.

ஊர்மிளாவை அவள் வீட்டில் இறக்கி விட்டுவிட்டுக் கிளம்பியபோது மனதில் உறுதி பிறந்தது. ''இந்த விவகாரத்

துக்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இல்லையானால், நாராயணசாமி சொன்னதுபோல் நெருப்புடன் விளையாடிய கதைதான்'' மனம் எச்சரித்தது.

வீடு திரும்பியதும் அவன் கேட்ட முதல் கேள்வி ''அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு?''—மாதங்கியிடம் தான். ஆனால் பார்வை சுவரை நோக்கி இருந்தது.

''ரத்த அழுத்தம் சீராகிவிட்டதுன்னு டாக்டர் சொன்னார். ஆனால் ஓய்வு தேவைன்னு சொல்லிட்டார்.''

''என்னைப்பத்தி கேட்டிருப்பாரே. எப்ப வந்தாலும் ஹர்ஷனைக் காணலையேன்னு விசாரிச்சிருப்பாரே!''

''உம்! கேட்டார். கம்பெனி வேலையா வெளியே போயிருக்கறதாச் சொன்னேன்.''

''ஏன் அப்படிச் சொல்லணும்?''

''குடும்ப டாக்டர். நம்பளைப்பத்தி உயர்வா நெனைச்சிண்டிருப்பவர். அம்மாவுக்கும் பிள்ளைக்குமிடையே மனத்தாங்கல்னு அவர் தவறா நினைக்கக் கூடாதேன்னுதான்.''

''இந்தக் குடும்பத்து மேலே அவ்வளவு அக்கறையா உனக்கு''-ஏளனமாகக் கூறினான் அவன்.

மாதங்கி உதட்டைக் கடித்துக்கொண்டு மௌனமாக நின்றாள். மனத்துக்குள் துயரம் கொந்தளித்தது.

'இந்த வீட்டு மருமகள் நான். உங்கள் மனைவி. கணவனைப் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் ஒரு பெண்ணுக்கு அக்கறை இருப்பது இயற்கைதானே...' சொல்லத் துடித்தது உள்ளம். ஹர்ஷன் குத்தலாகப் பேசி விட்டால்...?

''சின்ன வயசிலேயே நான் பெத்தவங்களை இழந்து விட்டேன். தாயாரைவிட அன்பு காட்டி என்னை ஆதரிக்கிற



உங்கம்மாவையும் எனக்குப் பாதுகாப்புக் கொடுத்திருக்கிற இந்த வீட்டையும் நான் ரொம்ப மதிக்கிறேன். மத்தவங்களும் மதிக்கணும்னு எனக்கு இயல்பாகவே அக்கறை உண்டாகியிருக்கு'' என்றாள் மெதுவாக.

''சரி! என்னைப்பத்தி-எதுவுமே சொல்லலையே!'' வேண்டுமென்றே கேட்டுவிட்டு, விஷமமாகப் பார்த்தான் அவன்.

''இந்த வீட்டுக்கு வந்த முதல் நாளே என்னை வெளியேறச் சொன்னீங்க. உங்கம்மா எனக்காகப் பரிந்து பேசி இங்கே இருக்க அனுமதிச்சாங்க. பிறகு... நான் தொடர்ந்து இங்கே இருக்கிறதை நீங்க மறுக்கலை... அதுக்கு என் நன்றி...''

பட்டும் படாமலும் பேசிய அவளது திறமையை அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

பார்வைக்கு வெகுளிபோலத் தென்பட்டாலும் உள்ளே இவள் அழுத்தமான பேர்வழிதான்! அளந்தல்லவா பேசுகிறாள்! கெட்டிக்காரி.

''என்ன படிச்சிருக்கே? பி.ஏ.வா. பி.எஸ்.ஸி.யா?'' கிண்டலாகக் கேட்டான்.

இதெல்லாம் கேட்கக்கூட விரும்பாத ஆசாமிக்கு... அவள் மறுக்காமல் பதில் சொன்னாள்.

''என் படிப்புக்கும் வளர்ச்சிக்கும் எங்கப்பா அம்மா பணம் எதுவுமே வைக்கலை. பெரியப்பா தயவிலே வளர்ந்தேன். பி.யூ.சி. வரை படிப்புக் கொடுத்தார்.''

''சங்கீதம்?''

''சமையல் அறையில்தான் அதிகம் உண்டு. பூஜை அறையில் தெய்வங்கள் கோவிச்சுக் கொண்டு போகாத

அளவு பாடத் தெரியும்!'' குப்பென்று சிரிப்பு வந்துவிட்டது அவளுக்கு.

பளிச்சென முகம் முழுதும் ஒளிவிட்டதைக் கண்டு அவனே பிரமித்துப் போனான். அவன் மன உணர்வுகள் குழைவதை உணர்ந்தான். 'அட சே! இப்போது என்ன ஆகி விட்டது தனக்கு... ஏன் இப்படி ஒரு தடுமாற்றம்? கனமான கல்லைக் கீழே இறக்கிப் போட்டதும் தட்டுத் தடுமாறி நிமிர்வது போல... ஊர்மிளா மீது கசப்பு தோன்றியதும் மாதங்கிமேல் அன்பாக மலர ஆரம்பித்து விட்டதே!'

வாயில் அழைப்பு மணி அழுத்தமாக ஒலித்தது. இருட்டிய பின்பு... அந்த வேளையில் யாராக இருக்கும்!

சட்டென விளக்கைப் போட்டுவிட்டு மாதங்கி வாசற் பக்கம் விரைந்தாள்.

கதவைத் திறந்தபோது வராந்தாவிலே பெரியப்பா தயானந்தும், பெரியம்மா சுமதியும் நின்றிருந்தனர்.

''சம்பந்தி அம்மாவுக்கு உடம்பு முடியலைன்னு கேள்விப்பட்டோம். அப்படியே உன்னையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம். ஆமாம், உன் புருசன் எங்கே? கல்யாணமாகி வந்தாலும் வந்தே. பெரியம்மா, பெரியப்பா எல்லாரையும் மறந்தே போயிட்டே. ஒரு போன் பண்ணி கூட விசாரிக்கப்படாதா? ஆனா உங்க பெரியப்பா சதா உன்னைப் பத்தித்தான் கவலைப்பட்டுக்கிட்டே இருக்காரு. ஜயந்திக்குப் பதில் மணையிலே உட்கார்த்தி வச்சுத் தாலி கட்டினமே, மாப்பிள்ளைக்குப் பிடிக்காமப் போயி அந்தப் பெண் அங்கே என்னெல்லாம் கஷ்டப்படுகிறதோன்னு சதா புலம்பல்...''

சுமதி கணீரென்று பேசியது ஹர்ஷனின் காதுகளில் ஓங்கி அறைவதுபோல் விழுந்தது. அவன் கடுங்கோபத்துடன் வேகமாய் மாடிப் பக்கம் சென்றுவிட்டான்!



## 10

பெரியம்மாவின் கண்கள் பரபரப்பாக ஆராய்ந்து கொண்டிருந்தன. தங்கள் பெண்ணுக்கு ஹர்ஷனை முடிவு செய்த பொழுது ஒரு தடவைதான் இந்த வீட்டுக்கு அவள் வந்திருந்தாள்.

'கடல்போல் எத்தனை பெரிய வீடு... சமாளிக்க ஜயந்தி கஷ்டப்படுவாள். இந்தக் காலத்துக்கு விலைக்கு ரொம்பப் பெரிய தொகை கிடைக்கும். ஒரு சின்ன பங்களா வாங்கி விட்டு மீதியை பாங்கில் கட்டி வைத்துவிடலாம்...' கற்பனையில் அந்த வீட்டை விலை பேசி முடித்துவிட்டிருந்தாள்.

அந்தக் கடல் போன்ற வீட்டின் யஜமானியாக இருக்க வேண்டிய பாக்கியத்தை வேலைக்காரி நிலையிலிருந்த மாதங்கி தட்டிக்கொண்டு போய்விட்டதை சுமதியால் இன்னமும் ஏற்கவே முடியவில்லை.

வரவேற்பறையில் காலுக்கடியில் மெத்தென்று மிதிபட்ட பாரசீகக் கம்பளத்தைப் பொறாமையுடன் பார்த்தாள்.

சாப்பாட்டறையைப் பிரித்துத் தடுத்துக்கொண்டு நின்ற டிவைடரில் வசதியான உயரத்தில் திணிக்கப்பட்டிருந்த டி.வி., ரேடியோ கிராம், டேப் ரிகார்டர் எல்லாவற்றையும் உற்றுப் பார்த்தாள்.

சந்தன மரத்தால் ஆன கணேசர் மேல்படியில் கொலுவீற்றிருந்தார். அடுத்தபடியாக தந்தத்தினால் ஆன கீதோபதேசக் கண்ணன். அவருக்கடுத்த பீடத்தில் சலவைக்கல்லில் பளபளத்த புத்தர்பிரான். உச்சியில் யானைத் தந்தங்களில் தொங்கிய ஊஞ்சலில் குழலூதிய வெள்ளிக் கிருஷ்ணன். அவனது இரு பக்கத்திலும் தங்கமாக மின்னிய திருச்சூர் குத்து விளக்குகள்... கண்ணாடி அலமாரியில் பொன் எழுத்துக்களைத் தாங்கியபடி வரிசையாகத் தடிமனான பல புத்தகங்கள்...

காப்பி மேஜை மீது கிரிஸ்டல் கிளாஸ் பூந்தொட்டியில் தோட்டத்து ரோஜாப் பூக்கள்... எதிர்ப்புற சுவரில் பத்தி வேலைப்பாட்டில் நடராசர்... என்று ஒவ்வொன்றையும் ஊன்றிப் பார்த்தவள் மனம் கபகபவென்று பற்றி எரிந்தது.

'இந்தப் பெண் ஜயந்தி... இப்படி ஒரு காரியத்தைச் செய்வாளா...' தனக்குள்ளே குமுறியபடி மெல்ல உள்ளே வந்து உட்கார்ந்தாள்.

''முதல்லே காப்பி டிபன் சாப்பிடுங்கோ... அத்தை எழுந்திருக்குற நேரம்தான்...'' சொல்லிக்கொண்டே முகம் தெரிந்த சன்மைக்கா இழைத்த சாப்பாட்டு மேஜை மீது தட்டுகளையும் காப்பி கெட்டிலையும் கொண்டு வந்து மாதங்கி வைத்தாள்.

தட்டிலிருந்த பாதாம் கேக்கையும் காரா பூந்தியையும் பார்த்த தயாளன் சட்டென்று கையைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

காப்பி டிபன் என்றால் போதும். அவர் எந்த இடத்திலும் எந்தச் சமயத்திலும் மறுக்கமாட்டார்.

கணவனை எரிச்சலுடன் பார்த்துவிட்டு மெல்ல எழுந்து குளியலறைக்குள் புகுந்து கையைக் கழுவிக் கொண்டு வந்தாள் சுமதி.

''நானே தயார் செய்தவை. அத்தை பாதாம் கேக் செய்யும் பக்குவத்தைச் சொல்லிக் கொடுத்தாங்க...'' முறுவலித்துக் கொண்டே அருகில் வந்து நின்ற மாதங்கியைப் பார்த்து அவள் மனம் பற்றி எரிந்தது.

கல்யாணத்துக்கு முன் எப்படி இருந்த பெண்...

ஜயந்தி கழற்றிப் போட்ட கிழிந்த புடவைகளைச் சீராக்கி உடுத்திக்கொண்டு கூப்பிட்ட குரலுக்கு நாயாக ஓடி உழைத்துக்



கொண்டிருந்தவளுக்கு இப்படி ஒரு யோகமா? கைகளிலும் கழுத்திலும் தங்கம் மின்ன காதில் வைரம் டாலடிக்க, இடையில் பட்டுச் சேலையும் முகத்தில் பணக்காரக் களையுமாக... ஆளே மாறிப்போய் விட்டிருக்கிறாளே?

வீட்டுக்குள் வரும்போதே சுமதி கவனித்து விட்டிருந்தாள். தோட்டத்துக்கு நீர்ப் பாய்ச்சிக் கொண்டிருந்த ஆள் ஹோஸ் பைப்பை வைத்துவிட்டு, பாதி திறந்த நிலையிலிருந்த காரேஜின் இழுப்புக் கதவை கீழே தள்ளி மூடிப் பூட்டினான்.

காரேஜில் இரண்டு கார்கள் நிற்பதை... சட்டென்று அந்த அவசரத்திலும் பார்த்துவிட்டாள்.

பத்து கிலோ அரிசியையும் மற்ற வீட்டுச் சாமான்களையும் அட்டைப் பெட்டிக்குள் வைத்து அதை இடுப்பில் தூக்கிக்கொண்டு, ரிக்ஷாவுக்குக் கொடுக்கக் கையில் காசில்லாமல் மூச்சிறைக்க வெயிலில் மளிகைக் கடையிலிருந்து வீட்டுக்கு நடந்து வருவாளே அந்த மாதங்கிக்கு இப்போ உல்லாசமாகப் போய்வர இரண்டு கார்கள்!...

இந்தப் பாவிப் பெண் ஜயந்தி தனக்கு வரவிருந்த அதிர்ஷ்டத்தை புரிந்துகொள்ளாமல், காதல் கத்தரிக்காய் என்று... மேலே சிந்திக்க முடியாது... அவளுக்குப் புரை ஏறிக் கொண்டுவிட்டது.

''காரா பூந்தியில் ரொம்ப காரம் போட்டிருக்கே...'' இருமிக்கொண்டு தலையைப் பலமாகத் தட்டிக் கொண்டாள் சுமதி.

''கொஞ்சம் தண்ணி சாப்பிடுங்கோ-சரியாயிடும்... அக்கா ஜயந்தி உங்களை நினைக்கிறாப் போலிருக்கு...'' மாதங்கி வேடிக்கையாகப் பேசியவண்ணம் தண்ணீர் டம்ளரை அருகில் நகர்த்தி வைத்தாள்.

மகளின் நினைப்பு சுமதியின் நெஞ்சில் நெருப்பைத் தான் கொட்டியது.

சென்னைக்கு ஓடோடி வந்த தயானந்த் தமது மகளை வலைபோட்டுத் தேடத் தொடங்கினார்.

அவர்கள் வசித்தது நெருக்கமாக வீடுகள் நிறைந்த தொரு குடியிருப்புப் பகுதி. எத்தனை முயன்றும் அதற்குள் எப்படியோ விஷயம் காட்டுத் தீயாகப் பரவி விட்டிருந்தது. ஒருசில தினங்கள் தலையை வெளியே நீட்ட அஞ்சி சுமதி வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள்.

பல நாட்களுக்குப் பின்னர் அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. மகள் ஜயந்திதான் எழுதியிருந்தாள்.

தனது நெடுநாளைய நண்பன் ரமேஷை அவள் கல்யாணம் செய்துகொண்டு மாமனார் மாமியாருடன் அருகில் கோடம்பாக்கத்தில்தான் வசிப்பதாகவும் எல்லாவற்றையும் மறந்து அவர்கள் இருவரும் அவசியம் அவள் புக்ககத்துக்கு ஒரு தடவை வந்து போகவேண்டும் என்றும் எழுதியிருந்தாள்-முகவரியையும் கொடுத்திருந்தாள்.

தயானந்தும் சுமதியும் ஆத்திரத்தில் ஆடிப்போய் விட்டனர். ஆனாலும் பெற்ற மனம் பித்தாகி மகளைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கத் தொடங்கவே... வெட்கத்தை உதறிவிட்டு மகளைக் காணப் புறப்பட்டனர்.

கோடம்பாக்கத்திலே இருந்த அந்தக் குறுகிய சந்துக்குள் நுழைந்தபோதுதான் சுமதி திடுக்கிட்டுப் போனாள்.

பங்களாவும் காருமாக வசதியான வாழ்க்கையை தேடிக் கொடுக்க அவர்கள் முயன்றதை உதறிவிட்டு... ஜயந்தி... ஐந்து குடித்தனக்காரர்களிடையே ஒண்டுக் குடித்தனவாசியாக



... வீட்டின் ஒரு சிறு பகுதியில் வசித்துக் கொண்டிருந்ததைக் காண அம்மாவுக்கு ஓவென்று அழவேண்டும் போன்று ஆத்திரமாகத்தான் இருந்தது. எலும்பும் தோலுமாக இருந்த மாமியார் ஆஸ்துமா நோயாளி... படுக்கையில் கிடந்தாள். சர்க்கரை வியாதிக்கார மாமனார் கொல் கொல்லென்று இருமியபடி வாசல் பக்கத்தில் உட்கார்ந்து இருந்தார்.

ஜயந்தியின் கணவன் நகரத்து அலுவலகம் ஒன்றில் வேலை பார்த்துக்கொண்டிருந்தான், குறைந்த சம்பளம் கஷ்ட ஜீவனம்.

அவள் போனபோது துடைப்பமும் கையுமாக வீட்டைப் பெருக்கிக்கொண்டு நின்ற மகளைப் பார்த்த போது அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

தளதளவென்று தங்க விக்கிரகமாக நின்ற அவளது செல்ல மகள் அந்தச் சில நாட்களில் ஒட்டி உலர்ந்து, கறுத்து இளைத்து' எப்படி மாறி விட்டிருந்தாள்!

'அடிப் பாவிப் பெண்ணே... உன் காதல் நாசமாப் போக...'-மனதுக்குள்ளே சபித்தபடி, பெற்றவள் மகளைக் கட்டிக் கொண்டு கண்ணீர் உகுத்தாள். இனிமேல் என்ன செய்ய முடியும்? "வீட்டுக்கு வந்துகொண்டு இரு..." சுருக்கமாகச் சொல்லிவிட்டு விரைவில் விடைபெற்றுக்கொண்டு கிளம்பிவிட்டாள்.

அதற்குப்பின் பல நாட்கள் சுமதி உறங்கவே இல்லை. மகளை நினைத்து நினைத்து அழுதழுது சோர்ந்து போனாள். பின்னர் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

மகள் இறந்துபோயிருந்தால், கூடவா செத்துவிட்டிருப்பாள்? கல்யாணம் பண்ணிக்கொண்டு தொலைந்து விட்டாள். ஒழியட்டும் என்று மனக்கவலைகளை அழித்துவிட்டு நிமிரத் தொடங்கியிருந்தாள்.

அது சமயந்தான் சம்பந்தி கஸ்தூரியின் உடல் நிலையைப் பற்றிக் கேள்விப்பட்டாள்.

அனுதாபம் காட்டி உதவி செய்ய வந்துவிடவில்லை.

காதல் என்று சொல்லி மகள் ஜயந்தி தன் வாழ்வைத் தானே அழித்துக் கொண்டுவிட்டாள்.

காதல் இல்லாது கட்டாயப்படுத்திச் செய்து வைத்த மாதங்கியின் கல்யாணம் எந்த நிலையில் இருக்கிறது என்று வம்பு விசாரிக்கத்தான் புறப்பட்டு வந்திருந்தாள் பெரியம்மா சுமதி.

முன்னைவிடச் சதைப் பிடிப்புடன், செல்வச் செழிப்புடன், வீட்டின் யஜமானியாக உயர்ந்த நிலையிலிருந்த மாதங்கியைக் காண அவளுக்குப் பொறாமையாகத்தான் இருந்தது.

''ஜயந்தி அக்கா சுகமா பெரியம்மா?'' கேட்டதும் நினைவினின்று விழித்துக்கொண்டாள் சுமதி.

''மனம் போல் மாங்கல்யம் அவளுக்கு அமைஞ்சுடுத்து. சுகமாத்தான் இருக்கா-மாமியார் ரொம்பத் தங்கமானவங்க, அவளை ஒரு வேலைகூடச் செய்ய விடறதில்லை. அவளுக்கு ஒரு குறையுமில்லை. ஜம்முன்னு இருக்கா... ஆமாம் ... இங்கே வந்ததும் நீ இன்னமும் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு இருக்கிறதைப் பார்க்க மனதுக்குக் கஷ்டமாக இருக்கு. எங்ககிட்ட இருக்கும்போது உனக்கு வீட்டு வேலைகள் தெரிஞ்சிருக்கட்டும்னு அதிகப்படியா பயிற்சி கொடுத்தேன். உன் மாமியார் கிட்டக்கூட முதல் முறை நம் வீட்டுக்கு வந்திருந்தபோது உன்னைப்பத்திச் சொன்னேன். அதுக்காக இப்படியா வேலை வாங்கறது? பணம் காசிலே உன் மாமியார் கை அத்தனை தாராளமில்லைனு கேள்வி... அப்படித்தானே?''



''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே பெரியம்மா. என்னை ரொம்ப நல்லா கவனிக்கிறாங்க. வீட்டு வேலைக்கு கூடமாட ஒத்தாசைக்கு ஆள் வைச்சிருக்காங்க. அத்தைக்கு உடம்பு முடியாம இருக்கிறதால நானே எல்லாத்தையும் கவனிக்கப் பிரியப்படறேன். அவ்வளவுதான்'' சட்டென்று மாதங்கி பதிலளித்தாள்.

''ரத்த அழுத்தம் ரொம்பப் பொல்லாத வியாதியாச்சே ... நல்லா அவங்களைக் கவனிச்சுக்கோ... நீ வந்த வேளை அம்மா மண்டையைப் போட்டுட்டாங்கன்னு ஹார்ஷன் உன்னைப்பத்தித் தப்பா எண்ணும்படி எதுவும் நடந்துடக் கூடாது...''

''ரத்த அழுத்தம் இறங்கிச் சரியாயிட்டது. இனிக் கவலை இல்லைன்னு டாக்டர் சொல்லியிருக்கார் பெரியம்மா'' பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு மெல்லப் பேசினாள் மாதங்கி.

''அப்படித்தான் எதிர் வீட்டுத் தாரணிக்குச் சொன்னார் டாக்டர். இப்ப என்ன நடந்தது. போனவாரம் தண்ணி குடிக்க எழுந்தவ அப்படியே மயங்கிக் கீழே விழுந்தா... அப்படியே போயிட்டா...''

'இந்தப் பெரியம்மா வாயிலே நல்லதே வராதா?' உள்ளூர வெகுண்டாள் மாதங்கி. என்ன இருந்தாலும் ஆதரவற்ற நிலையிலிருந்த போது சோறு போட்டு வளர்த்தவங்க... சூடாக ஏதும் பேசக் கூடாது. சிரமப்பட்டுத் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

எழுந்து கையைக் கழுவ வாஷ்பேசின் அருகே சென்ற சுமதி ஜாடை செய்து மாதங்கியைத் தன் அருகே அழைத்தாள். குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டாள்.

''மாப்பிள்ளை உன்கிட்டப் பிரியமா நடந்துக்கிறாரா''—ரகசியமாகக் கேட்டாள்.

கீழ் உதட்டைச் சட்டென்று கடித்துக் கொண்டாள் மாதங்கி. குப்பென்று அவள் முகம் சிவந்து போயிற்று. நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது.

''நல்லாத்தான் நடத்துகிறார். ஏன் கேட்கிறீங்க பெரியம்மா?...'' கலவரத்துடன் தரையைப் பார்த்தாள்.

''உன் பெரியப்பா சிநேகிதர் தங்கவேலுவைத் தெரியுமில்லையா? அவர் முந்தா நாள் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் பெரியப்பாகிட்ட சொன்னாராம். உங்க மக ஜயந்தி ஒரு விதத்திலே ரொம்ப அதிர்ஷ்டக்காரின்னு நினைக்கச் சந்தோசப் பட்டுக்குங்க. அந்தப் பையன் ஹர்ஷன் கொஞ்ச நாளைக்கு முன்னே ஒரு பெரிய கார் விபத்தில் சிக்கி ஆச்சு போச்சுன்னு ஆஸ்பத்திரியில் கிடந்தான். அப்போ ஏற்பட்ட ஊனத்தை அந்தம்மா கஸ்தூரி மறைச்சுவச்சு மகனுக்குக் கல்யாணம் முடிக்க ஏற்பாடு செய்தாங்க.''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் மாதங்கி. இதயம் இரண்டாகிவிடும் போலத் தீவிரமாகத் துடித்தது.

இந்தப் பெரியம்மா என்ன சொல்றாங்க? குழப்பமாக விழித்தாள்.

''அந்த விபத்துக்குப் பிறகு ஹர்சன் கல்யாணத்துக்கே லாயக்கில்லாத மனிதனாக ரொம்ப ஊனமாகி விட்டானாம்.''

உள்ளமும் உடலும் ஒருங்கே அவமான உணர்வில் அனலாக எரிவதை உணர்ந்தாள் மாதங்கி.

''கோவிச்சுக்காதே மாதங்கி... கேள்விப் பட்டதைச் சொன்னேன். உண்மை வேறாக இருந்தால் என்னைவிட யார் அதிக சந்தோஷப்படப் போறாங்க?''



''என் மருமகளுக்கு வளைகாப்பு வச்சிருக்கோம்னு உன் மாமியார் எங்க வீட்டைத் தேடி வந்து சொன்னா நான் உன் வாய்க்கு வேண்டியதைச் செய்துக்கிட்டு ஆசையோடு ஓடிவர மாட்டேனா? அதைக் கேட்டு நான் தவிச்ச தவிப்பை விவரிக்கவே முடியாது. பணம் காசு மட்டும் ஒரு பெண்ணுக்குப் போதுமா? திருமண வாழ்வு முற்றிலும் நிறைஞ்சு இருக்கணும் இல்லையா. ஆமாம் மாதங்கி... வந்து...'' மேலே பேச வந்தவள் சட்டென்று வாயை மூடிக் கொண்டாள்.

கையில் துவாலையும்—சோப்புப் பெட்டியுமாக கஸ்தூரி அவர்கள் அருகே வந்து நின்றாள்.

அவள் பேசியதை சம்பந்தி கேட்டு விட்டாளோ?... சுமதிக்கு நடுக்கமாக இருந்தது.

## 11

சில நிமிடங்களில் பளிச்சென்று உடைமாற்றிக் கொண்டு தங்கள் எதிரே முன்னறையில் வந்து உட்கார்ந்த கஸ்தூரியை வியப்புடன் பார்த்தாள் சுமதி.

இவளா ரத்த அழுத்தம் வந்து படுத்துக் கிடந்தாள்? பிடுங்கி எடுத்த முள்ளங்கிப் பத்தையைப் போல நிறமும் செழுமையுமாக மருமகள் எடுத்து விட்டவள் என்று சொல்ல முடியாதவாறு மினுமினுவென்று வச்சிவார்க்கப் படுத்தும் இளமையில் இன்னமும் ஜம்மென்று இருக்கிறாளே? படிப்புக்கும் பதவிஷ"க்கும் ஒரு தனிக் களையா? பொறாமை தீயாக அடிவயிற்றைப் பற்ற... புன்முறுவலித்தாள் சுமதி. தனது வரவால் அமைதியாக அழகாகக் காணப்படும் அந்தக் குடும்பத்தில் ஒரு சிறு சலசலப்பை ஏற்படுத்தாவிடில் மண்டை வெடித்து விடும் போன்றதொரு ஆத்திரம் அவளுக்கு.

''காபி—டிபன் சாப்பிட்டீங்களா?... நீங்க வந்தது தெரிந்தது. அதனாலே சட்டுனு எழுந்து வந்துட்டேன். இல்லாட்டா ராத்திரி மாதங்கி கஞ்சி எடுத்துக் கொண்டு வந்து எழுப்பற வரை தூங்கிவிட்டிருப்பேன்.''

''அடடா, உங்க ஓய்வை நாங்க கெடுத்துட்டமா?'' சூள் கொட்டினார் அனுதாபத்துடன் தயானந்த்.

''அப்படி ஒண்ணுமில்லை... நாளையிலிருந்து நான் வேலைக்குப் போகணும். தேவையில்லாத ஓய்வுகூட ஒரு வகை வியாதியைப் போல் உடம்பைக் கெடுத்துவிடும்'' கஸ்தூரி மெல்லியதாகச் சிரித்தாள்.

''மாப்பிள்ளை மாடியில் இருக்காப் போலிருக்கு...'' முனகியபடி தயானந்த் மெல்ல எழுந்தார்.

''மாதங்கி! போய் ஹர்ஷனை நான் கூப்பிட்டதாக வரச்சொல்'' மருமகளுக்கு உத்தரவிட்டாள் கஸ்தூரி.

என்னதான் சம்பந்தி என்ற போதிலும் மாடி அறைக்குத் தடதடவென்று தயானந்த் தானே உரிமையுடன் செல்ல முயன்றதை அவள் விரும்பாதவள்.

தயானந்த் புரிந்து கொண்டார். முகத்தில் அசடு வழிய அவர் அங்கிருந்து வராந்தா பக்கம் நழுவித் தோட்டத்தைப் பார்த்தபடி விழித்துக்கொண்டு நின்றார்.

அறைக் கதவை லேசாகத் தட்டிவிட்டுத் திறந்து கொண்டு மாதங்கி உள்ளே வந்தபோது படுக்கை மீது சாய்ந்தபடி வீக்லியைப் புரட்டிக் கொண்டிருந்தான் ஹர்ஷன்.

''அத்தை உங்களை உடனே கீழே வரச் சொன்னாங்க...''

''கீழே வரச் சொல்லி அம்மாவின் உத்தரவோ? உன் பெரியப்பா நடந்து கொண்ட அழகுக்கு அவரோட நான் வந்து பேசணுமா?''



பட்டென்று பத்திரிகையை மூடித் தரையில் போட்டு விட்டுக் கோபத்துடன் எழுந்தான். நாற்காலி மீது கிடந்த துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு இடது கரத்தால் கலைந்த முடியைச் சீராக்கியபடி வெளிவரத் திரும்பினான்.

மாதங்கி அவனுக்கு வழிவிட வெளியே வந்தாள்.

''இந்தா நில்லு!... ஒரு வார்த்தை கேட்கணும்—'' அதட்டினான் ஹர்ஷன்.

அறையை விட்டு வெளியே வந்துவிட்ட மாதங்கி வாயிற்படி அருகில் தயக்கமாக நின்றாள்.

''பல நாட்களாக நான் கேட்க நினைச்ச கேள்வி. வாய்ப்பில்லாமல் வாயை மூடிக்கிட்டிருந்தேன். சம்பந்தி மனுசனைக் கண்டதும் இப்போ கேட்கணும்னு மனம் துடிக்குது... ஆமாம்! உன் அக்கா வீட்டிலே நீ கூடவே தங்கி நெருங்கி வாழ்ந்தவளாச்சே. உனக்குக் கூட உன் அக்கா விவகாரம் ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லப் போறே? உன் பெரியப்பா-பெரியம்மா யாருக்கும் உன் அக்காவின் காதல் விவகாரம் கொஞ்சம்கூடத் தெரியாமலா இருந்திருக்கும்? ... தன் மகள் திடீரென்று இடக்குச் செய்தால் தம்பி மகளை என் தலையில் கட்டலாம்னுதானே உன் பெரியப்பா திட்டத்தோட திருத்தணிக்குப் புறப்பட்டு வந்திருந்தார்...?''

மாதங்கி திடுக்கிட்டுப் போனாள். சற்றுமுன் பெரியம்மா சொன்ன செய்தியால் ஏற்பட்ட கலவரத்திலின்று ஏற்கனவே குழம்பி விட்டிருந்தாள். இப்போது பெரியப்பா திட்டமிட்டு அவளைப் பலவந்தமாக அவனுக்கு மனைவியாக்கி விட்டதாகக் குற்றச்சாட்டு.

''எனக்கு எதுவுமே தெரியாது'' சொல்லிவிட்டு வேகமாகத் திரும்பினாள்.

''இந்தா!''-மறுபடியும் ஹர்ஷன் அதட்டினான்.

''கீழே போய் அம்மாகிட்ட நான் கேட்டதைப்பத்தி ஏதாவது வாய் திறந்தியோ நான் பொல்லாதவனா இருப்பேன்...'' உறுமிவிட்டு அவளைத் தாண்டிக்கொண்டு படிகளைத் தாவிக் கடந்து கீழே மறைந்தான்.

'இப்போது மட்டுமென்ன? நீங்க ரொம்ப சாதுவென்ற நினைப்பா?' தனக்குள்ளேயே சொல்லிக்கொண்ட மாதங்கி குபீரென்று சிரித்துவிட்டாள். சிரிப்பைச் சட்டென்று அடக்க முடியாது... சிரித்துக்கொண்டே அவன் பின்னால் கீழே இறங்கி வந்தாள்.

''சாப்பிட்டுவிட்டுப் போகலாமே?''-கஸ்தூரி உபசரித்தது தான், சாக்கென்று சுமதி உட்கார்ந்துவிட்டாள்.

அதிக நேரம் அங்கே தங்க நேரிட்டால் இன்னும் சில வம்புகளைச் சேகரிக்க இயலுமே என்ற ஆவல்தான் காரணம்.

மாதங்கி இரவு உணவுக்காகத் தயாரித்திருந்த நெய் மணத்த பரோட்டாவில் கூட்டும் கரியும் சாப்பிட மிகவும் ருசியாகத்தான் இருந்தன. தேவைக்கு மீறி ஒன்றை அதிகமாகவே சாப்பிட்டு விட்டாள் சுமதி. கை கழுவிவிட்டு முன்னறையில் வந்து உட்கார்ந்தவளுக்கு மூச்சு முட்டியது.

சுவையாகச் சமைத்துப் போட்டுக் கூப்பிட்ட குரலுக்கு அடிமையாக ஓடோடி வந்து பணி செய்த இந்தப் பெண்ணை இவர்கள் வீட்டுக்கு அனுப்பி விட்டோமே?

''என்னால் நம்பவே முடியலை-படுசோம்பேறியாக எங்க வீட்டில் மசமசவென்று நின்னுகிட்டு இருந்த இந்தப் பொண்ணு இங்கே வந்து ரொம்ப நல்லா வேலை செய்கிறது... எல்லாம் உங்க டிரெயினிங்'' புகழ்ச்சியாக ஆரம்பித்தாள்.



''அப்படி ஒன்னும் தெரியலையே. இங்கே வந்த நாளிலிருந்து நாள் முழுதும் நான் சொல்றதுக்கு முந்தி தானாகவே எல்லாம் செய்துடறாளே? இவ மட்டும் இல்லாதிருந்தா... சில நாளா நான் உடம்புக்கு முடியாம இருந்ததுக்கு ... உதவிக்கு யாரும் இல்லாமக் கஷ்டப்பட்டிருப்பேன்.''

மாமியார் மெச்சிய மருமகளாக மாதங்கி மாறி விட்டதை அறிந்த சுமதிக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

''எங்க வீட்டுக்காரருக்கு நேர் எதிர் குணம் அவர் தம்பிக்கு. நல்ல வேலையில்தான் இருந்தார். ஆனால் குடியும் குதிரைப் பந்தயமும் அவரை ஒழிச்சுக் கட்டிடுச்சு. ஆனால் மாதங்கிக்கு ஆறு வயசிருக்கும் அப்பா பொசுக்குன்னு போயிட்டார். அவ பிறக்கும்போதே தாயை இழந்தவள். தம்பி மகள் அனாதையாகிவிடக் கூடாதுன்னு இவர்தான் போய்க் குழந்தையை அவங்க தாய் வழிப்பாட்டன் வீட்டிலிருந்து எடுத்து வந்தார். தலையில் பேனும் உடம்பில் சிரங்குமாக ... கயிறு போல வந்து நின்ன குழந்தையை வளர்க்கப் பட்ட பாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும்.''

''அப்படியா?''

''படிப்பு நல்லா ஏறியிருந்தா இன்னும் மேலே படிக்க வச்சிருப்போம்.''

''அதனால் என்ன... எங்க வீட்டுக்கு இந்தப் படிப்புப் போதும். மேலே நாங்களே படிக்க வச்சுக்க முடியும். கோடை விடுமுறைக்குப் பிறகு மாதங்கியை நான் செகரட்டேரியட் கோர்ஸில் சேர்க்க ஏற்பாடு பண்ணிக் கிட்டிருக்கேன். அப்படியே கார் ஓட்டக் கத்துக்கவும் ஏற்பாடு செய்ய உத்தேசிச்சிருக்கேன். தட்டெழுத்து சுருக்கெழுத்து இதெல்லாம் கத்துக் கொண்டு தேர்ந்துவிட்டால் பிற்காலத்தில் அவளுக்கு உதவி

யாக இருக்கும். வீட்டிலே ஒண்ணுக்கு ரெண்டு கார் நிக்குது. வெளி வாசலில் அவளே ஒரு காரை எடுத்துட்டுத் தாராளமாகப் போய் வரலாமே. என்னைப் பொறுத்தவரை அவள் எனக்கு மகள் போலத்தான்...'' கஸ்தூரி மென்மையாகச் சிரித்தாள்.

சுமதியின் தாடை இறுகியது. என்ன சொன்னாலும் காதில் போட்டுக்கொள்ள மாட்டேங்கிறாளே? மாமியாரை மாதங்கி அப்படிக் கையில் சுருட்டி வச்சுக்கொண்டிருக்கிறாள். கெட்டிக்காரி...

சுற்றுமுற்றும் பார்த்தாள். குரலை மெல்லத் தாழ்த்திக் கொண்டாள்.

''பி.யூ.சி.க்கு மேலே மாதங்கியை நாங்க படிக்க வைக்காம நிறுத்தினதுக்கு வேறே ஒரு காரணம் இருக்கு.''

''மாதங்கி அசலாம்பிகை கல்லூரியில் படிக்க ஆரம்பிச்ச வுடனேயே கொஞ்சம் தன் சுபாவத்தைக் காட்டிட்டா. வீட்டிலே நான் அவளை எப்பவும் அடக்கி வைக்கிறதுண்டு. பால்காரனோட பல்லை இளிச்சுண்டு பேசுவாள். தையல்காரர் வந்துட்டா போதும் ஓடி வந்து தானே பேசத் தொடங்குவா... இந்தப் பெண்ணை வச்சுண்டு எப்படித்தான் மீதிக் காலத்தை ஓட்டப் போறோமோன்று எனக்குச் சதா திகில் தான் போங்க. நம்ப பெண்ணைப் படிக்க வச்சுட்டுத் தம்பி மகளுக்குப் படிப்புக் கொடுக்காட்டா நல்லாயிருக்காதுன்னு இவர் தான் ஒரே பிடியா காலேஜுலே கொண்டு சேர்த்தார். எனக்கு அப்பவே தெரியும். இவ ஒழுங்கா படிக்க மாட்டான்னு, பஸ் ஸ்டாண்டிலே பார்த்த ஒரு பையனோட சிநேகமாம். எனக்குப் பிறகுதான் தெரியும். அவன், அவளைத் தேடிக் கொண்டு காலேஜுக்குப் போய் விட்டான். ஆபிசிலே போய் விசாரிச்சானாம். இது கல்லூரித் தலைவி காதிலே பட்டு



அவங்க வந்து அவளைக் கூப்பிட்டுக் கடுமையாகச் சாடி வெளியே துரத்திவிட்டு இவருக்கு டெலிபோன் செய்தாங்க. இந்தப் பெண் நடத்தையாலே கல்லூரி பேர் கெட்டுடும். இந்த வருஷத்தோட வேற காலேஜ் பார்த்துக்கோங்கன்னு காரமா பேசிட்டாங்க. பி.யூ.சி. படிப்போட நாங்க அவளை வீட்டோட வச்சிகிட்டோம். இந்த மாதிரித் தகராறுகள் மேலே நடக்காதபடி நான் கண்டிப்பும் கறாருமாகத்தான் வச்சிருந்தேன்.''

கஸ்தூரி முகம் சுருங்கிப் போனாள்.

'மாதங்கியைப் பற்றி அவள் சொல்வதெல்லாம் உண்மையா?... தன் பெண்ணுக்குக் கிடைக்காத இடம் தன் கொழுந்தன் மகளுக்குக் கிடைத்து விட்டதே என்ற ஆத்திரத்தில் ஏற்பட்ட கற்பனையா?' ஆனாலும் அவளால் மௌனமாக இருக்க முடியவில்லை.

—''நீங்கள் இந்த விஷயத்தைத் திருத்தணியிலேயே... பெண்ணை மணையில் வைக்கும் முன்பே என்னிடம் சொல்லியிருக்கணும்... இப்போ வந்து சொல்றதின் அர்த்தம் என்ன?'' என்று ஏளனமாகக் கேட்டாள்.

''ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடிக்கணும்னு சொல்வாங்களே... எங்கேயாவது நம்ப வீட்டுக் குழந்தை சுகமா இருக்கட்டும்னு நல்ல எண்ணத்தோடத்தான் பேசாம இருந்துட்டேன். இப்போ வேறே யாராவது வந்து சொல்லிடப் போறாங்களேங்கிற கவலையிலே உண்மையை விளக்கிட்டேன்.''

''அங்கேயே சொல்லியிருந்தா இந்தத் தயானந்த் வீட்டுச் சங்கதியே வேண்டாம்... அக்காவைப் போலவே தங்கையும் இருக்கா—இது குழந்தைகள் தப்பில்லை... அவங்களை வளர்த்தவங்க தப்புன்னு எங்கண்ணா பட்

டுன்னு சொல்லி உதறிவிட்டு எங்க உறவுப் பெண் யாரை யாவது வச்சு எப்படியோ கல்யாணத்தை முடிச்சிருப்போம். எங்க உறவிலேயே என் மகனுக்குப் பெண் கொடுக்க எத்த னையோ பேர் தயாரா இருந்தாங்க... அதனாலே உங்க வீட்டுப் பெண் இல்லாதிருந்தா காரியம் ஒண்ணும் கெட்டுப் போயிருக் காது.'' அதட்டலாக சம்பந்தி என்ற மெதப்பிலேயே கஸ்தூரி பேசினாள்.

சுமதிக்கு மேலே என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஏன் வீணாக வாய் கொடுத்தோம் என்று உள்ளூரப் பயந்து விட்டாள்.

''இந்தச் சங்கதியை இத்தோட விட்டுடுங்க. என் மகன் காதில் பட்டால் வீண் பொல்லாப்பு. மாதங்கி எங்க வீட்டு மருமகளாகி விட்டவள். இனி அவளை அந்தத் தகுதிக்கு ஏத்தவளா வச்சு நடத்திக் கொள்றது எங்க பொறுப்பு. நீங்க கவலைப்பட வேண்டாம். நடந்து போனதைப் பத்தி நான் கவலைப்படப் போறதில்லை. இனி நடக்கப் போவதைப் பத்தித்தான் கவலைப்படுவேன். நீங்களும் மனதைக் குழப் பிக்க வேண்டாம். நாளைக்கு நான் ஆபீசுக்குப் போகலாம்னு தீர்மானிச்சிருக்கேன். அதனாலே'' சுவரில் தெரிந்த கடி காரத்தைப் பார்த்தாள்.

'நேரமாகி விட்டது... நீங்கள் கிளம்பலாம்' என்று பேசாமல் பேசிய அவளது கண்களைச் சந்திக்க சுமதிக்கு மிகவும் வெட்கமாக இருந்தது.

''நாழியாச்சு... நீங்களும் அந்தப் பக்கம் வந்துண்டு இருங்கோ. மாதங்கியை முடிஞ்சபோதெல்லாம் அனுப்பி வையுங்கோ...'' முணுமுணுத்துவிட்டு எழுந்தாள்.

வராந்தாவில் உட்கார்ந்து ஒப்புக்குப் பேசி அறுத்துக் கொண்டிருந்த தயானந்த் தாமாகவே உள்ளே வந்தார்.



''புறப்படலாமா?'' என்று அவர் கேட்டதுமே வெற்றிலை, பாக்கு, குங்குமத்தைப் பெற்றுக் கொண்டு சுமதி கிளம்பிவிட்டாள்.

படுக்கை விரிப்பை உதறிப் போட்டுச் சரி செய்து விட்டு கண்ணாடி கூஜாவில் நீரும் டம்ளரும் கொண்டு வந்து தலைமாட்டிலிருந்த மேஜைமேல் வைத்துவிட்டு... கட்டி லின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்ட மாதங்கியை ஓரக் கண்ணால் பார்த்தாள் கஸ்தூரி.

விடி விளக்கு ஒளியில் மென்மையான அந்த முகத்தில் ஒளிவிட்ட கண்களில் கபடத்தின் சாயையே சிறிதும் தெரி யாததை வியப்புடன் பார்த்துக் கொண்டாள்.

'சே! மாதங்கி அப்படிப்பட்ட பெண்ணாக இருக்க முடியாது... இது கட்டாயம் ஒரு கட்டுக்கதையாகத்தான் இருக்கும்.' முயன்றால் அவளால் இதைப்பற்றி ஆராயவா முடியாது?

எத்தனை கட்டுப்படுத்தியும் அமைதியானதொரு நீர்ப் பரப்பின் மேல் விழுந்த சிறு கல்லால் வட்ட வட்டமாக எழுந்த சிற்றலைகள் போல அவள் மனத்தினுள் ஒரு குறு குறுப்பு சஞ்சலப் படுத்திக் கொண்டிருந்ததால் அவளுக்கு நிம்மதியாக உறங்க முடியவில்லை.

## 12

**சி**ல நாட்களில் வீட்டிலேயே தங்கிவிட்டதனால் அலுவலகத்தில் கஸ்தூரிக்கு வேலை குவிந்து விட்டிருந்தது. கணக்கு வழக்குப் பகுதியில் உதவி அக்கௌண்டன்ட்டாகப் பணி புரிந்து கொண்டிருந்தாள். சில மாதங்களில் தலைமைப் பதவி கிட்டக்கூடும் என்றதொரு பேச்சு அடிபட்டுக் கொண்

டிருந்தது. அலுவலகத்திலே அவளுக்கு நல்ல பெயர். வேலையில் கறாரான ஆசாமி என்றதொரு புகழ்.

மேஜை மேல் குவிந்து கிடந்த ஃபைல்களை ஒரு வழியாகக் கவனித்துவிட்டு அவள் நிமிர்வதற்குள் பகல் உணவு நேரம் நெருங்கி விட்டிருந்தது. எழுந்து சென்று வாஷ்பேஸினில் முகத்தைக் கழுவி முடியைச் சீர்திருத்திக் கொண்டு தன் அறைக்குள் வந்து உட்கார்ந்தாள். சாதாரணமாக அவள் தினமும் தன் கையோடு கொண்டு வரும் டிபனைத் தன் அறைக்குள் அமர்ந்தபடியே சாப்பிட்டு முடிப்பது வழக்கம். அவசரத்தில் டிபனை மறந்து விடும் போதுதான் அலுவலகப் பையனை அனுப்பி ஹோட்டலிலிருந்து சிற்றுண்டி ஏதேனும் தருவித்துக் கொள்வாள். சில நாட்கள் வெறும் காப்பியுடன் பகல் உணவை முடித்துக் கொண்டு பல்லைக் கடித்துக் கொண்டு வேலை பார்ப்பதும் உண்டு. கடும் பசியுடன் வீட்டுக்குத் திரும்பும் போது சமைக்கணுமே என்று அடுப்பைக் கண்டு அரண்டு போய் நிற்பதும் உண்டு. அலுவலகத்து வேலைக்குப் பின் அவள் அப்படிக் களைத்துப் போவது வழக்கம். ஆனால் இப்பொழுதெல்லாம் பள்ளிக்கூடக் குழந்தை சாப்பாட்டு டப்பாவை வேகமாகத் திறந்து அம்மா என்ன டிபன் அனுப்பியிருக்கிறாள் என்று ஆவலுடன் பார்ப்பது போன்று—சாப்பாட்டு வேளையின் போது அலுவலகத்துக்குக் கையோடு கொண்டுவரும் அந்த அழகான சிறு சதுர மூங்கில் கூடையைச் சட்டென்று திறந்து பார்ப்பதில் ஓர் உற்சாகம் இருந்தது. அலுப்பு ஏற்படாது மாமியாருக்கு மருமகள் நாளைக்கொரு விதமான டிபனைக் கட்டிக் கொடுத்து அனுப்பி வந்தாள். மாமியாருக்கும் வயதை மறந்து பள்ளிக்கூடப் பாப்பாவைப் போல ஆவலுடன் திறந்து பார்ப்பதில் எத்தனை ஆசை? அறையின் ஓரமாக ஆபீஸ் பையன் கொண்டு



வைத்திருந்த பிரம்புக் கூடையை எடுத்து மேஜையின் மேல் வைத்துக் கொண்டாள்.

மாதங்கி, வீட்டுக் காரியங்களைக்கூட ரசனை உணர்வோடுதான் செய்து வந்தாள்.

சுச்சிதமாகக் கூடைக்குள் வெள்ளைத்துணி மடிப்பை போட்டு, அதற்குள் சூடு தணியாத ஸ்டீல் கண்டெய்னரில் இட்லியும் வெங்காயச் சட்னியும் வைத்து அனுப்பியிருந்தாள். பிளாஸ்கில் காப்பி—தாகத்துக்குக் குடிக்கக் காய்ச்சி ஆறவைத்த தண்ணீர் ஒரு சிறு பாட்டிலில், கடைசியாகச் சாப்பிட ஒரு சிறு ஆரஞ்சுப் பழம்.

இட்லி பூப்போல் சாப்பிடச் சுகமாகவே இருந்தது.

அதுவும் சில நாட்களாகக் கஞ்சியும் மோருமாகச் சாப்பிட்டு அலுத்துவிட்ட நாக்குக்கு வெங்காயத் துவையல் வெகு ருசியாகத்தான் இருந்தது.

டிபன் அடுப்பின் மூன்றாவது காலி தட்டுக்குள் ஒரு துண்டுக் கடிதத்தை வைத்திருந்தாள் மருமகள்.

கூடை ஓரத்தில் சின்ன பிளாஸ்டிக் டப்பாவுக்குள் 'நீங்கள் பகல் வேளைக்குச் சாப்பிட வேண்டிய மாத்திரைகளை வைத்திருக்கிறேன். இன்னும் தொடர்ந்து சில நாட்கள் மட்டும் சாப்பிட்டால் போதும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். மறக்காதீர்கள்'—மாதங்கி.

காப்பியுடன் மருந்தையும் சேர்த்து விழுங்கிவிட்டுக் கூடையை மூடி அப்பால் வைத்தாள். கையைக் கழுவிக் கொண்டு மறுபடி உள்ளே வந்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

வயிறு நிறைந்து விட்டிருந்தது. ஆனாலும் கண்களில் பட்ட தூசி போல் சந்தேகத்தின் அடிப்படையில் எழுந்த

ஒரு கேள்வி வேதனையாக மனத்தைச் சதா உறுத்திக் கொண்டிருந்தது. வேலையின் போது மறந்து விட்டிருந்தாள். பகல் மறுபடியும் அலுவலகம் துவங்க கொஞ்ச நேரம் இருந்தது. அந்த ஓய்வு நேரத்தில் மனத்துக்குள்ளே மீண்டும் மீண்டும் அந்த உறுத்தல்.

இந்தப் பெண் மாதங்கி நீண்ட நாள் அனுபவம் உள்ள குடும்பத் தலைவிபோல் வீட்டைச் சாமர்த்தியமாகத்தான் நிர்வகிக்கிறாள்.

அடக்கமாக—பொறுமையாக—அன்பாகவே நடந்து கொள்கிறாள்.

இப்படிப்பட்டவள் பெரியம்மா சுமதி சொன்னதைப் போன்றதொரு காரியம் செய்திருப்பாளா?

தனது பழைய காதல் விவகாரம் மாமியாருக்குத் தெரியக் கூடாது என்பதற்காகப் பொறுமையாக இருப்பவள் போல நடிக்கிறாளா?

தனக்குள்ளே பலவாறு எண்ணி முடிவு காண முடியாது சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தாள் கஸ்தூரி.

அன்று காலை புறப்படுமுன் மருமகள் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தபோதுகூட மனத்தில் அதே கேள்வி தான்.

கபடமே இல்லாது வெளிப்படையாகப் பேசும் இவள் அந்தக் காரியத்தைச் செய்திருப்பாளா?...

காதலிப்பது என்பது பெரும் குற்றமா என்ன? இளம் வயது. தாய் தந்தை இல்லாததாலே எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள ஒரு நல்ல தோழி கிடையாது. உணர்ச்சிவசத்திலே ... இளமை மயக்கத்திலே ஏதாவது ஒரு தவறு செய்திருக்க



லாம். அதற்காக இப்போது அவளைத் திரும்ப பெரியப்பா வீட்டுக்கு விரட்டப் போகிறாளா?

அவள் மகன் ஹர்ஷன் மட்டும் பண்பின் சிகரமா? ஒழுக்கத்தின் இலக்கணமா? ஊர்மிளாவுடன் காதல் என்று ஊரைச் சுற்றி வரவில்லையா? மகனுக்கு ஒரு நியாயம் இன்னொருத்தி மகளுக்கு ஒரு நியாயமா?

பெண்களின் உரிமையைப் பற்றி அழுத்தமாகக் கூட்டங்களில் பேசும் மாதர் சங்கத்துத் தலைவி அவள்.

அவள் வீட்டு விஷயம் என்றதுமே அடிப்படைக் கொள்கைகள் கலகலத்து விட்டனவோ?

மனச்சாட்சி முள்ளாகத் தைத்தது.

திடீரென்று மேஜையின் மேலிருந்த தொலைபேசியில் எண்களைச் சுழற்றினாள்.

'ஹலோ!'—மறுபக்கத்தில் மாதங்கியின் இனிய குரல் காதைத் தழுவியது.

''அத்தையா?—என்ன இந்த நேரத்தில்... உடம்புக்கு ஏதாச்சும்...'' கவலையுடன் கேட்டாள் மருமகள்.

அந்தக் குரலில் தொனித்த ஆதங்கமும் அன்பும் கஸ்தூரியைப் புல்லரிக்கச் செய்தன.

'என்ன மட்டமான புத்தி எனக்கு? மருமகள் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று துப்புத் துலக்கக் கூப்பிட்டேன்! சே!...' என்று தன்னைத்தானே சாடிக் கொண்டாள்.

''பத்து நாளா வீட்டோட உன்னோடு கூடவே இருந்துட்டு இப்ப ஆபீசுக்கு வந்துட்டேன் இல்லையா... உன் குரலைக் கேட்கணும் போல இருந்தது. கூப்பிட்டேன். ஏதாவது சாப்பிடு; பட்டினியா வேலை செய்துக்கிட்டு இருக்காதே...''

"அத்தை! நீங்க ஒரு பச்சைக் குழந்தை!" கலகலவென்று மாதங்கி சிரித்தாள்.

தொலைபேசியை வைத்துவிட்டு முகத்தைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள் கஸ்தூரி.

அவள் செய்த காரியம் அவளுக்கே அவமானமாகத்தான் இருந்தது.

மாலையில் காரை ஓட்டிக்கொண்டு வீட்டை நோக்கி வந்த சமயம் பாதி வழியில் அந்த நினைப்பு வந்தது.

அசலாம்பிகை கல்லூரியின் தலைவி ராதிகாவை அவளுக்கு நன்றாகவே தெரியும். இருவரும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். நெருங்கிப் பழகினவர்கள். ஹர்ஷன் கல்யாணத்தின் போது வெளியூரிலிருந்து வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தாள்.

கல்லூரி விடுமுறை முடிவடையும் தருவாயிலிருந்ததால், அவள் வெளியூரிலிருந்து கட்டாயம் திரும்பியிருப்பாள். அவள் வீடு போகும் வழியில்தான் இருக்கிறது. எதேச்சையாக அந்தப் பக்கம் போனவள் அவளைப் பார்த்துவிட்டுப் போக வந்தேன் என்று சொல்லிக் கொண்டு ராதிகாவை அணுகினால்?

நெடுஞ்சாலையினுள் குறுக்கே ஓடிய தெருவிலிருந்த சிறிய வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டுக் கஸ்தூரி இறங்கினாள்.

கம்பிக் கதவிடப்பட்டிருந்த வராந்தாவில் ராதிகா சாய்வு நாற்காலியில் மாலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள். "வா... வா! பார்த்து ரொம்ப நாளாச்சு!" மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

"கல்லூரியில் யாருக்கோ இடம் வேண்டிச் சிபாரிசு செய்ய வந்துவிட்டதாகப் பயப்படாதே. இந்த வழியாகப்





போனேன். அப்படியே உன்னைப் பார்த்து நாலு வார்த்தை பேசிவிட்டுப் போகலாம்னுதான் வந்திருக்கேன்..." சிரித்தபடியே மோடாவில் அமர்ந்தாள்.

சிறிது நேரம் சம்பந்தமில்லாத பல கதைகளைப் பேசிவிட்டு மெல்ல ஆரம்பித்தாள். கேட்டுத் தெரிந்து கொள்ள அவமானமாகத்தான் இருந்தது, கேட்காதிருக்கவும் மனம் ஒப்பவில்லை.

"ஹர்ஷன் கல்யாணத்தின் போது உன் வாழ்த்துச் செய்தி கிடைத்தது. நீ நேரில் வர முடியாது போனது கொஞ்சம் வருத்தமாகத்தானிருந்தது. நான்கூட உன் வாழ்த்துச் செய்திக்கு நன்றி தெரிவிச்சு எழுதியிருந்தேன். கடிதம் கிடைச்சிருக்கும். உனக்குக் கல்யாணத்தின் போது நடந்த விபரீதம் தெரிய நியாயமில்லை... கல்யாணத்துக்கு முதல் நாள்...

ராதிகா சட்டென்று கஸ்தூரியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

"நீ விவரிக்க வேண்டாம். ஜயந்திக்குப் பதில் அந்தப் பெண் மாதங்கியை வச்சுக் கல்யாணத்தை நீ சமாளிச்சுட்டேன்னு கேள்விப்பட்டேன். உண்மையில் அதைக் கேட்டதும் ரொம்பச் சந்தோஷப்பட்டேன்."

"என்ன சொல்றே?"

"நாம படிச்ச காலம் வேறே—இப்பப் படிக்கிற மாணவிகளின் மனநிலைக்கும் நமது மனநிலைக்கும் இடைவெளி ரொம்பவே அதிகம்; அதனாலே ஒரு கல்லூரியைத் திறமையா நிர்வகிக்கணும்னா தலைவிக்கும் ஆசிரியர்களுக்கும் அதில் படிக்கும் மாணவிகளைப் பற்றி ஓரளவு நன்றாகவே தெரிந்திருக்க வேண்டும். அதுவும் கொஞ்சம் மாறுபட்ட நடத்தை உடைய பெண்களை நாங்கள் தீவிரமாகவே கண்காணிக்கிறது வழக்கம்."

கஸ்தூரியின் நெஞ்சம் படபடத்தது.

''இரு... நாம சாப்பிடத் தேநீர் எடுத்து வர சமையல்கார அம்மாகிட்டச் சொல்லி விட்டு வர்ரேன்...'' ராதிகா எழுந்து உள்ளே சென்றுவிட்டாள். அவள் திரும்புவதற்குள் நேரம் யுகமாகக் கஸ்தூரிக்குக் கனத்தது.

''கல்யாணப் பத்திரிகையைப் பார்த்தபோது என் மனம் கொஞ்சம் சங்கடப்பட்டது. திருமணம் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்கிறார்களே... எத்தனை பெரிய உண்மைன்னு நான் வியந்து போனேன். கடைசி நிமிஷத்தில் வந்து குழப்பறது நல்லதல்லவே; அதனால் மௌனமாக இருந்து விட்டேன். உன் சம்பந்தி வீட்டைப் பற்றிப் பேசுகிறேன் என்று கோபிச்சுப்பியோ?''

சமையல்கார அம்மாள் கொண்டு வந்து வைத்த தேநீர்க் கோப்பையை எடுத்துத் தோழியிடம் நீட்டினாள் ராதிகா.

''உண்மையைச் சொன்னால் ஏன் கோவிச்சுக்கணும்...'' கஸ்தூரி மெல்லச் சிரித்துக் கொண்டே தேநீரை ஒரே மூச்சில் பருகி முடித்தாள். விவரிக்க முடியாத ஒரு அச்சத்தில் அவள் உடம்பில் ஒரு நடுக்கம் பரவிக் கொண்டது.

ராதிகா என்ன சொல்லப் போகிறாள்...? ரொம்பச் சுற்றி வளைக்கிறாளே...

''பிறகு நடந்ததைக் கேள்விப்பட்டபோது நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரின்னு நினைச்சு மகிழ்ச்சி அடைந்தேன்.''

''உன் மருமகள் மாதங்கி வகுப்பிலே ரொம்பக் கெட்டிக்காரி. எல்லாத்திலும் முதல் இடம் பெறுகிறவள். அடக்கமான பெண். ரொம்பப் பணிவான குணம்; எனக்கு அவளை ரொம்பப் பிடிக்கும்.

''ஆனால் தயானந்தனின் சொந்த மகள் ஜயந்தி படு பொல்லாத குட்டி. ரொம்ப வாய்த்துடுக்கு. பெரிய சண்டைக்



காரி. மொத்தத்தில் ரெட்டை வால். அவளைச் சமாளிக்க ஆசிரியைகள் ரொம்பவே பாடுபட்டார்கள். போதாதற்குச் சின்ன வயதிலேயே ஒரு பையனுடன் சிநேகம். பஸ் நிலையத்தில்... கடைத் தெருவில்... என்று சந்திப்புகள். அது போதாது போல அவன் அவளைத் தேடிக் கொண்டு கல்லூரிக்கே வரத் தொடங்கினான்.

''கல்லூரி மாணவிகள் காதலிக்கட்டும். ஏராளமாகக் காதலித்து தொலைக்கட்டும். நாம் தடுத்து நிறுத்திவிடக் கூடிய காரியமல்ல காதல் விஷயம்.

''அதை எங்கள் கல்லூரிக்கு ஒரு விளம்பரமாக அமைப்பதைத்தான் விரும்புவதில்லை.

''கல்லூரி வாயிலுக்கு அப்பாலே மாணவிகள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். அது எங்கள் பொறுப்பல்ல என்பது என் கொள்கை. அதனால் அவளது அப்பாவைத் தொலைபேசியில் அழைத்து மகளின் நடத்தையைப் பற்றி ரொம்பக் கடுமையாக நான் பேசிவிட்டேன். ஆனால் என்ன காரணத்தினாலோ அவர் தம் மகளை அடக்குவதைவிட்டு நன்றாகப் படித்துக் கொண்டிருந்த மாதங்கியை பி.யு.சி. படிப்புடன் நிறுத்திக் கொண்டு விட்டார்.

''ஜயந்தி படிப்பை முடித்துக் கொண்டு எங்கள் கல்லூரியை விட்டுப் போகும் வரை எங்களுக்கு அவள் ஒரு தலைவலியாகவே இருந்தாள். அதனால்தான் முதலில் கல்யாணப் பத்திரிகையில் அவள் பெயரைப் பார்த்தபோது மனவேதனைப்பட்டேன்.

''நம் சிநேகிதி கஸ்தூரிக்கு இவளா மருமகளா அமையணும்... அட கடவுளே! என்று சங்கடப்பட்டேன். பிறகு நடந்தது வேறு என்று தெரிந்த போது நான் பட்ட மகிழ்ச்சி கொஞ்சநஞ்சமல்ல.''—புன்முறுவலித்தாள் ராதிகா.

"அப்படியா..." கஸ்தூரிக்கு இதுவரை தொண்டையை அடைத்துக் கொண்ட கனம் எங்கேயோ மறைந்து விட்டது போன்றதொரு லேசான உணர்வு ஏற்பட்டது.

"மாதங்கி ரொம்பவும் நல்ல பெண். எனக்கு அவளை ரொம்பவும் பிடிச்சிருக்கு. ஒரு மாமியார் மருமகளுக்குக் கொடுக்கும் சான்றிதழ் இது... ஞாபகமிருக்கட்டும்!" சிரித்து விட்டு எழுந்தாள்.

கேட்டை அகலமாகத் திறந்து வைத்து விட்டு ஆவ லுடன் கார் அருகே ஓடிவந்த மருமகளின் முகத்தை உற்றுப் பார்த்த கஸ்தூரி மனம் கரைந்து போனாள்.

மாதங்கி எத்தனை அருமையானதொரு மருமகள்?

"என்ன அத்தை ஒரு மாதிரி இருக்கீங்க?" கையிலிருந்த பிரீஃப்கேஸை வாங்கிக் கொண்டபடி கேட்டாள், மாதங்கி.

"ஒன்றுமில்லை, நாமெல்லோரும் சாப்பிட்டதும் ஒரு சினிமாவுக்குப் போய் வரலாம்னு பார்க்கிறேன்."

"அவரும் கூட வருவாரா அத்தை?" ஆவலுடன் மாதங்கி கேட்டாள்.

"ஹர்ஷனுக்கு நகைச்சுவை நிறைந்த படம்னா ரொம்பப் பிடிக்கும். வயிறே வலிச்சுடுமாம். அப்படிச் சிரிக்கிற காட்சி களாம் அந்தப் படத்திலே. எனக்குக் கூட வாய்விட்டு நல்லாச் சிரிக்கணும் போல ஆசையா இருக்கு. அதனாலே மூணு டிக்கட்டு வழியிலேயே ஏற்பாடு பண்ணிட்டு வந்திருக் கேன். சரியா?"

முகம் மலர்ந்து போன ாதங்கியின் முதுகில் அன் போடு தட்டினாள்.



'ராதிகா சொன்னது போல் மாதங்கியை மருமகளாக அடைந்தது பெரிய அதிர்ஷ்டந்தான்.'—எண்ணியபடியே மன நிறைவுடன் உள்ளே சென்றாள்.

## 13

கஸ்தூரிக்கு ஏற்பட்ட குற்ற உணர்வு சடுதியில் அடங்கி விடவில்லை. எல்லா விதத்திலும் நல்லவிதமாக நடந்து கொள்ளும் ஒரு பெண்ணை, தானே நன்கு கவனித்து மனத் துக்குள்ளே கணிப்புச் செய்து கொண்ட பின்னரும்—கேட் போர் பேச்சைக் கேட்டுச் சந்தேகித்துக் கலவரப்பட்டது எத்தனை பெரிய குற்றமாகும்?

பெண் உரிமைக்காகப் போர்க்கொடி ஏந்துகிறவள் போயும் போயும் ஒரு பொறாமைக்காரியின் பேச்சைக் கேட்டுத் தன் மருமகளைப் பற்றித் தப்பாக எண்ணிக் கொண்டு விட்டாளே... அவள் செய்தது ரொம்பத் தவறு.

மனசாட்சியின் உறுத்தலைத் தாள முடியாது. அந்தத் தவறுக்கு என்ன ஈடு செய்தாலும் போதாது என்ற நினை வுடன் அவள் தினமும் ஏதாவது ஒரு பரிசை வரும் வழியில் தன் மருமகளுக்காக வாங்கி வந்தாள்.

"திராட்சைப் பழம் உனக்கும் பிடிக்கும்னு தெரியும். வண்டிக்காரன் பச்சைத் திராட்சையை மலைபோல் குவிச் சுண்டு போறதைப் பார்த்தேன். உடனே காரை நிறுத்தி ஒரு கிலோ வாங்கிண்டு வந்தேன்."

"அத்தை! என்னத்துக்கு உங்களுக்கு இந்தத் தொந்தர வெல்லாம்?"—செல்லமாகச் சிணுங்கியபடி பொட்டலத்தை மாதங்கி தன் மாமியாரிடமிருந்து ஆசையுடன்தான் வாங்கிக் கொண்டாள். அவளுக்கு ரொம்பப் பெருமையாகத்தான் இருந்தது. மாமியாருக்கு அவள் மீது இத்தனை அன்பா?

இன்னொரு நாள்... "அகர்வாலில் உனக்குப் பிடிக்குமேன்னு ஜிலேபி கொஞ்சம் வாங்கிக்கிட்டு வந்தேன். ஒண்ணைப் பிட்டு வாயில் போட்டுப் பார்... கரைஞ்சு தேனாக வாயெல்லாம் தித்திக்கும்... உனக்கு இனிப்புப் பண்டம்னா உசிரு என்று கல்யாணத்தும் போதே கண்டு பிடிச்சுட்டேனே!" மிட்டாய்ப் பெட்டியை மருமகள் கையில் கொடுத்துவிட்டுச் சிவந்து போன அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளி விளையாடினாள்.

மாதங்கிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

அவள் ஒரு வழியில் மிகவும் கொடுத்து வைத்தவள்.

சொந்த மகளைவிட ஒரு்படி மேலான அன்புடன் கஸ்தூரி அவளைக் கவனித்துக் கொள்கிறாளே!

'ஜயந்தி அக்காவுக்குப் புத்தி ஏன் இப்படித் தடுமாறிப் போகணும்? கண் நிறைந்த கணவன் ஹர்ஷன்—வசதியான வாழ்க்கை—உள்ளங்கையில் வைத்துத் தாங்கும் மாமியார். இப்படி ஒரு நல்ல இடம் கிடைப்பது ரொம்பக் கஷ்டமாச்சே!'

தன் அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி அடிக்கடி வியந்து கொண்டாள். ஆனாலும் நெஞ்சத்தின் ஒரு மூலையில் தாங்க முடியாத வருத்தமும் அழுத்திக் கொண்டுதான் இருந்தது.

தன் மேல் பாசமும் நேசமுமாக இருக்கும் மாமியாரின் மனதை நோகச் செய்யக்கூடாது என்று பொறுமையாகத் தான் இருக்க முயன்றாள்.

சில சமயம் அவளையும் மீறித் துயரம் அவள் மனதைக் குலுக்கியது. கல்யாணத்தின் போது ஏற்பட்ட ஒரு கலவரத்தை நிவர்த்திக்கப் பெரியவர்கள் செய்த ஒரு திடீர் மாற்றத்துக்காக ஹர்ஷன் அவளை ஏன் இவ்வாறு தண்டிக்க வேண்டும்?



ஜயந்தியை மணந்து கொண்டிருந்தால் மட்டும் அவன் வாழ்க்கை மிகவும் ஆனந்தமாகவோ அமைதியாகவோ இருந்திருக்குமென்பது என்ன நிச்சயம்?

ஜயந்தி அக்கா நினைத்த போது கோபத்திலே வெடிக்கும் குணம் கொண்டவளாச்சே? யாரையும் துச்சமாகத் தூக்கி எறிந்து விடுவாளே! வீட்டில் எதையும் செய்ய விரும்பாத படுசோம்பேறியாச்சே?

இவையெல்லாம் ஹர்ஷனுக்குத் தெரியுமா?

பெண் பார்க்க வந்த போது ஒப்பனையில் அழகாகத் தெரிந்த ஜயந்தி அக்காவைப் பார்த்து மயங்கிப் போனான்.

பெரியவர்கள் ஏற்பாடு செய்தபடி—முன்னறையில் உட்கார்ந்து ஒரு சில வார்த்தைகள் இருவரும் பேசினார்கள்.

அவன் போன பின்பு உள்ளே வந்த ஜயந்தி அக்கா அவளிடம் வந்து சொன்னது என்ன என்பது அவளுக்கு அல்லவா தெரியும்?

அன்று என்ன சொன்னாள்?

"ஸ்டுபிட் ஃபெல்லோ! நான் வேலைக்கு இண்டர்வியூவுக்கு வந்து நிக்கறது போல் கேள்வி மேலே கேள்விகளாகப் போட்டுத் தொலைச்சுட்டான்.

"பாடத் தெரியுமா? பரதம் வருமா? சமைக்கத் தெரியுமான்னு ஒரே தொண தொணப்பு.

"எனக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. நானும் பதிலுக்குச் சில கேள்விகளை படபடன்னு கேட்டு வச்சேன்.

"டென்னிஸ் ஆடத் தெரியுமா? ஏதாவது பந்தயத்திலே ஜெயிச்சுக் கோப்பைகள் வாங்கின மகிழ்ச்சியான அனுபவங்கள் உண்டா? கல்லூரி நாட்களில் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறீர்களா?

''உற்சாகமாக அவன் எல்லாத்துக்கும் தலையாட்டின போது எனக்கு ஆத்திரம் பொங்கிண்டு வந்தது.

''நீஞ்சத் தெரியுமா? ஏதாவது போட்டியில் கலந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படின்னு ஒரு கேள்வியை எழுப்பினேன். மனிதன் ஆடிப்போயிட்டான்!

''பந்தயத்திலே கலந்துக்கிற அளவுக்குப் பயிற்சி இல்லே, ஓரளவுக்கு நீச்சல் வரும் என்றான் அசட்டுச் சிரிப்புடன்.

''ஓரளவு என்கிற வார்த்தைக்கு இதில் அர்த்தமே இல்லை. ஆற்றில் இறங்கிவிட்டு ஓரளவு நீஞ்சத் தெரியும்னு தண்ணி கிட்டச் சொன்னா என்ன நடக்கும்? மூழ்கிப் போய் விடுவீங்க. நீஞ்சத் தெரியும் தெரியாது என்கிற இரண்டில் ஒரு பதில் தான் அதுக்குச் சொல்லணும். கிணற்றை ஓரளவு தாண்டு வேன்னு சொல்லிட்டுப் பாதிக் கிணத்தைத் தாண்டினால்...''

''நான் குபீர்னு சிரிச்சுட்டேன். மாப்பிள்ளைப் பையன் முகம் போன போக்கை நீ பார்த்திருந்தால் விழுந்து விழுந்து கூடவே சிரிச்சிருப்பே. பிள்ளையாண்டான் ஒரு பெரிய 'அம்மாக்கோண்டு'ன்னு கேள்வி. அதுதான் அப்படி ஒரு அசட்டுப் பார்வை...'' என்றாள் ஜெயந்தி அக்கா.

மாதங்கிக்கு ஏனோ அவள் மேல் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

உரிமை ஒன்றும் இல்லாத போது, ஹர்ஷனை இப்படிப் பரிகசித்து வேடிக்கை பண்ணுகிறவள் நாளைக்கு மனைவி என்கிற அந்தஸ்து வந்ததும் அவனை எப்படி ஆட்டிப் படைத்து அட்டகாசம் பண்ணப் போகிறாளோ! ஐயோ பாவம்... இவளது பொல்லாத்தனத்தை யார் அவனிடம் எடுத்துச் சொல்ல முடியும்?...

தனக்குள்ளே ஹர்ஷனுக்காகப் பரிதாபப்பட்டாள்.



அவனுக்கும் அவளுக்கும் இடையே உறவொன்று ஏற்படாததற்கு முன்னரே, அந்தப் பெண் யார் என்று ஹர்ஷன் அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூட முயலாத அந்தச் சமயம்... மாதங்கி அவனுக்காக எப்படி உருகித் தவித்துப் போனாள்?

ஜெயந்தி செய்த அசட்டையைக் கண்டு கோபமடைந்தாள். வருந்தினாள். தனக்கேற்பட்ட அவமானம் போலத் துடித்தாள். ஆனால் அவன்?

மனைவி என்ற உறவுடன் அவன் வீட்டுக்குள் வந்து விட்டவளுக்கு ஹர்ஷன் தந்த வரவேற்புத்தான் என்ன? தொடர்ந்து அவன் காட்டும் அசட்டைதான் எத்தனை?

எந்தப் பெண்தான் இவைகளை நீடித்துப் பொறுத்துக் கொள்ள இயலும்?

யாரும் வீட்டில் இல்லாத போது உணர்வுகள் தொய்ந்து விடும்போது அவள் தனக்குக் கிடைத்திருக்கும் அந்தப் போலியான மண வாழ்க்கையை எண்ணிச் சில சமயம் கண்ணீர் வடித்தாள். குமுறி அழுதாள். தன்னைத்தானே சமாதானம் செய்து கொள்ளவும் முயன்றாள்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து கஸ்தூரி திரும்பிய போது கையில் ஒரு பார்சலுடன் காரிலிருந்து இறங்கினாள்.

''என்ன அத்தை இது?''—உரிமையுடன் கடிந்து கொண்ட மாதங்கி ஓடிச் சென்று பிரீஃப் கேஸையும் பார்சலையும் சட்டென்று வாங்கிக் கொண்டாள்.

''ஆபீசிலே வேலை நடுவே—நாளைக்கு உனக்குப் பிறந்த நாளுங்கிற ஞாபகம் திடீர்னு வந்தது. ரொம்பவும் பிரமாதமா வாங்கிடலை, ஒரு சின்னப் பரிசு, ஒரு பிரின்

டெட் சாண்டேரி புடவை வாங்கினேன். அவ்வளவுதான். பார்சலைப் பிரிச்சுப் பாரேன்'' உத்தரவிட்டாள் மாமியார்.

ஆழ்ந்த நீல உடலில் ஜரிகைக் கட்டங்கள்; தலைப்பிலும் கரையிலும் பொடிப் பொடியாக அச்சிட்ட பூக்கள்... உடலோடு ஒட்டிக் கொண்டு விடும் போன்று லேசாக...

''உன் நிறத்துக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு தான் வாங்கினேன். ரவிக்கைத் துண்டும் பெட்டிக்குள்ளே அடியிலே வச்சிருக்கான் பார்... நாளைச் சாயங்காலத்துக்குள்ளே கொஞ்சம் அவசரப் படுத்தினா மூலைக் கடைத் தையற்காரர் தெச்சுக் கொடுத்துடுவார். இப்பவே வேலைக்காரிக்கிட்டக் கொடுத்தனுப்பு...'' என்றாள் கஸ்தூரி புன்னகையுடன்.

பெரியம்மாவிடம் வந்து அண்டிக் கொண்ட பிறகு எத்தனையோ பிறந்த நாட்கள் வந்து போயின. யாரும் அவைகளைப் பற்றி நினைத்ததில்லை. மருமகள் என்று வீட்டுக்குள் வந்து மாதம் இரண்டு கூட முடிவு பெறவில்லை. எத்தனை அக்கறையுடன் கஸ்தூரி மருமகளின் பிறந்த நாளைப் பற்றிக் கூட விசாரித்து நினைவு வைத்துக் கொண்டு இருக்கிறாள்—மறக்காது ஒரு பரிசு வேறு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாளே!...

''ரொம்ப நன்றி அத்தை!... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை'' உணர்ச்சி வசப்பட்டுப்போன மாதங்கி தடுமாறினாள்.

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். நாளைக்குச் சாயங்காலம் நீ இதை உடுத்திக் கொண்டு நாங்கள்ளாம் ஆபீஸிலிருந்து வந்ததும் பிள்ளையார் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வா... அதுபோதும். பிறகு நாம எல்லாரும் சேர்ந்து உட்கார்ந்து விருந்து சாப்பிடலாம். இப்பவே சொல்லிட்டேன். நாளைச் சாயங்காலம் வந்ததும்



சமையலை எங்கிட்ட நீ ஒப்படைச்சுடணும்...'' மாமியார் வேடிக்கையாகப் பேசினாள்.

மாதங்கி பூரித்துப் போய்விட்டாள். உண்மையில் அவள் அதிர்ஷ்டக்காரி என்பதில் சந்தேகமே இல்லை.

கஸ்தூரி ஒரு மாமியார் என்ற அந்தஸ்துடன் நடந்து கொள்வதேயில்லை.

சொந்தத் தாயார் போல—நெருங்கிப் பழகின ஒரு சிநேகிதியைப் போல் பரிவுடன்—நேசத்துடன்—அன்புடன்..

அவளை எப்படித் தாங்குகிறாள்!

இந்த அன்பான மாமியாருக்காக அவள் எத்தனை கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்ளக் கடமைப்பட்டவள்.

''அப்படியே செய்கிறேன் அத்தை...'' என்று சிரித்துக் கொண்டு பார்சலுடன் உள்ளே ஓடினாள்.

மறுநாள் மாலை அலுவலகத்திலிருந்து வந்து உள்ளே நுழைந்த கஸ்தூரிக்குச் சட்டென்று அந்த எண்ணம் தோன்றியது.

ஹர்ஷனை அவன் போகிற போக்கில் விட்டு வைப்பது சரியல்ல. தாய் என்று அவள் தன் அதிகாரத்தை ஒரு துளியாவது காட்டாது இருப்பது முறையும் ஆகாது என்று நினைத்தவளாக ஒரு முடிவுடன் முன்னறைக்கு வந்தாள்.

அலுவலக உடைகளைக் களைந்துவிட்டு முகத்தைக் கழுவித் தன்னைச் சிராக்கிச் கொண்டு, வேஷ்டியும் சட்டையுமாக மாடியினின்று கீழே இறங்கி அங்கு வந்தான்.

''ஒரு சின்ன உபகாரம் பண்ணுவியாப்பா! காப்பியைக் குடிச்சுட்டு மாதங்கியை நீ நம்ப பிள்ளையார் கோவில் வரை காரில் அழைச்சிக்கிட்டுப் போயிட்டு வா. எனக்கு வீட்டிலே

ஒரு முக்கிய காரியம் இருக்கிறதாலே நான் அவளைக் கூட்டிக்கிட்டுப் போக முடியலை'' என்றாள் கஸ்தூரி.

''நான் அவசியம் போகணுமாம்மா...'' ஹர்ஷன் கேட்ட போது தாய் அவனை உற்றுப் பார்த்தாள்.

''இன்னிக்குக் கோவிலில் விசேஷம். கூட்டம் வழிஞ்சுண்டிருக்கும். அவள் இங்கேயிருந்து நடந்து போய்க் காத்திருந்து அர்ச்சனையை முடிச்சுண்டு திரும்பறதுக்குள்ளே நல்லா இருட்டி விடும். இப்போதெல்லாம் இந்தப் பக்கம் இருட்டு வேளையிலே பெண் தனியாக நடக்கிறது அத்தனை நல்லதில்லேங்கிறாங்க. பிறகு உன் இஷ்டம்'' என்றாள் அழுத்தமாக.

பிடரியைப் பிடித்து யாரோ வேகமாகத் தள்ளி விட்டது போன்று ஹர்ஷனுக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது.

என்னவானாலும் மாதங்கி அவன் மனைவி.

இருட்டில் தனி வழி நடந்து—அவளுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால்?

நெருப்பாக மனத்தை ஒரு நூதன உணர்வு சுடுவதை உணர்ந்தான்.

அவசரமாகக் காப்பியைப் பருகிவிட்டுக் கார் சாவியுடன் வெளியேறினான்.

அவர்கள் இருவரும் தனியே வெளியே செல்வது அது தான் முதல் தடவை. அந்த அனுபவம் அவனுக்கு மிகவும் இனித்தது.

கையில் தேங்காய்ப் பழத் தட்டுடன் புதுப்புடவை சரசரக்க நடந்து வந்து காரில் அவனருகே ஏறி உட்கார்ந்து கொண்டாள்.



கோவிலைச் சமீபிக்கும் வரை அவன் பேசவில்லை. ஆனாலும் அவன் மனத்திலே ஏற்பட்ட அந்தப் புதுமையான உணர்வின் இனிமையை அவனால் ஒதுக்கிடவும் முடியவில்லை.

''ஆமாம்! இன்னிக்கு என்ன விசேஷம்?'' மெல்லக் கேட்டுவிட்டு அவளை லேசாகத் திரும்பிப் பார்த்தான்.

காற்றுவாக்கில் அவளது கூந்தலிலிருந்து முகத்தில் மோதிய மல்லிகையின் மணம் சுகமாகத்தான் இருந்தது. வழக்கமான முரட்டுத்தனமில்லாது மென்மையானதொரு புன்னகை அவன் முகத்தினிலே படர்ந்து ஒளிவிட்டதைக் கண்டு மாதங்கிக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி.

அவளைப்பற்றி ஒரு சிறிதளவு உணர்விலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அவள் பார்த்தது உண்மையா?

''இன்னிக்கு என் பிறந்த நாள். அத்தை அதுக்காக எனக்கு இந்தப் புடவை ரவிக்கை இதுகளைப் பரிசாக வாங்கித் தந்திருக்காங்க. விநாயகருக்கு அர்ச்சனை செய்துட்டு வரச் சொன்னாங்க... கேட்கமாட்டேன்னு பிடிவாதமாய் சமையலை அவங்க இன்னிக்குப் பிடிச்சுக்கிட்டாங்க...''

''இந்தப் புடவை உனக்கு ரொம்ப அழகா இருக்கு...''-காரிலிருந்து இறங்கிக் கோவிலுக்கு முன் நின்றவளிடம் மெல்லிய குரலில் சொன்னான்.

முகம் சிவந்துபோன மாதங்கியின் நெஞ்சு மகிழ்ச்சியில் படபடவென்று துடித்துக்கொண்டது.

இது உண்மையா? அவளது புருஷன் ஹர்ஷன் அவளிடம் அப்படி அன்பாகப் பேசுகிறானா?

''தாங்க்யூ'' மெலிதாகச் சிரித்துக்கொண்டு அவனுடன் கோவிலுக்குள் மகிழ்ச்சியுடன் சென்றாள்.

அர்ச்சனையை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பும்வரை அவன் மீண்டும் மௌனமாக இருந்தான்.

ஆனாலும் அவள் மனம் இன்ப வசத்தில் அலைபாய்ந்துகொண்டிருந்தது.

காரேஜில் காரை நிறுத்திவிட்டு இறங்கினவன் பிரசாதத் தட்டை எடுத்துக்கொண்டான்.

''உன் பிறந்த நாளுக்கு என் வாழ்த்துகள்! அம்மா அழகான ஒரு புடவை எடுத்துக் கொடுத்திருக்காங்க... நான் ஒண்ணும் உனக்குத் தரலையே?''-அவன் உல்லாசமாகப் பார்த்து உரத்த குரலில் சிரித்தான்.

''இந்தச் சிரிப்பு ஒண்ணே எனக்கு இந்த உலகத்தையே நீங்க பரிசாகக் கொடுத்த மாதிரி ரொம்ப மகிழ்ச்சியாயிருக்கு ...'' சொல்லவேண்டும் போன்று நா துடித்தது அவளுக்கு.

''அத்தை வேறு... நீங்க வேறா... யார் கொடுத்தாலும் ஒண்ணுதானே?'' சாமர்த்தியமாகக் கேட்டுவிட்டு, ''அத்தைக்கு முதல்லே பிரசாதத்தைக் கொடுத்து வணங்கிட்டு வரேன்'' சிரித்துக்கொண்டே அவனுடன் ஜோடியாக உள்ளே சென்றாள்.

தனக்கு ஒரு வருங்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் அவளது நெஞ்சு கட்டுக்கடங்காது மகிழ்ச்சியுடன் தீவிரமாகத் துடித்துக் கொண்டிருந்தது.

## 14

ஹர்ஷன் அப்போதுதான் கவனித்தான். முன் அறை மேஜைமேல் எப்போதும் வைக்குமிடத்தில் அவன் பெயருக்கு வந்த கடிதங்களை மாதங்கி ஒழுங்காக அடுக்கி, பிளாஸ்டிக் கூடைக்குள் வைத்திருந்தாள். சாதாரணமாக அவனுக்கு



வரும் கடிதங்கள் அனைத்தும் கம்பெனி முகவரிக்கே வந்துவிடும்.

நெருங்கிய நண்பர்கள் யாராவதுதான் அவனது வீட்டு முகவரிக்கு எழுதுவது வழக்கம்.

அநேகமாக அவனுக்கு வீட்டைத் தேடி வருபவை எல்லாம் அவனுக்குப் பழக்கமான 'டிரை கிளீனிங்' கடை 'பில்'தான்.

சில நண்பர்களின் கடிதங்கள், திருமண அழைப்பிதழ்கள், நிதி திரட்டும் சங்கங்கள் விடுக்கும் வேண்டுகோள் கடிதங்கள் ஆகியவற்றைப் பிரித்துப் படித்துவிட்டு அப்பால் வைத்தபின், அந்தப் பழுப்பு வண்ண உறையைக் கையில் எடுத்தான். அவனுக்கு வியப்பு மேலிட்டது.

பழக்கமில்லாத கையெழுத்து—அவசரமாகப் பென்சிலால் கிறுக்கிவிட்டது போன்ற முகவரி.

யாராக இருக்கலாம்?

உறையைப் பரபரப்புடன் பிரித்துக் கடிதத்தை எடுத்தான். அவனது ஊகம் ஓரளவுக்குச் சரியாகவே இருந்தது.

கையெழுத்தில்லாத ஒரு மொட்டைக் கடிதம்.

''அன்புள்ள நண்பரே!

உங்கள் நன்மையைக் கருதி உங்களுக்கு ஓர் உண்மையைத் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களை மணந்துகொண்டிருக்கும் மாதங்கி என்ற பெண் எனது நண்பனால் காதலித்துக் கைவிடப்பட்டவள். கல்லூரி நாட்களிலேயே இருவருக்குள்ளும் நெருங்கிய தொடர்பிருந்தது. என் நண்பன் அவள்மீது மட்டற்ற அன்பு வைத்திருந்தது உண்மை. ஆனால் அவள்

தனக்குத் துரோகம் செய்வதை உணர்ந்து, மனம் வெகுண்டு போய், ஒரேயடியாக உதறிவிட்டான்.

பலருடன் பழகிவிட்ட போதிலும் ஒன்றுமறியாத சாதுபோல் நடிப்பதில் அவள் கைதேர்ந்தவள். நீங்கள் நல்ல பெண் என்று நம்பி ஏமாந்து போகிறீர்களே என்று எண்ணும்போது வேதனையாக இருக்கிறது. உங்களை எச்சரிக்கவே இந்தச் சில வரிகள்.

உங்களது நலம் கோரும் நல்லதொரு
நண்பன்.''

உடல் முழுவதும் 'ஜிவ்'வென்று ஆத்திரம் அனலாகப் பரவியதை உணர்ந்தான் ஹர்ஷன்.

மொட்டைக் கடிதத்தை நம்புவதா? ஏன் நம்பக் கூடாது? முப்பத்தைந்து பைசா செலவழித்துக் கடும் சிரத்தையாக ஒருத்தன் காரணம் இல்லாமல் எழுதுவானா?

தயானந்தருடைய குடும்பத்தில் எவருமே ஒழுங்கானவர்கள் இல்லையா?

மூத்தவள் காதலனுடன் கல்யாண சமயத்தில் ஓடிப் போனாள். அதை ஈடுகட்டத்தான், இந்த மனிதன் தன் தம்பி மகளை என் தலையில் கட்டிவிட்டிருக்கிறாரோ? அயோக்கியப் பதர்...

இந்த அம்மாவும் ஒரு படுமுட்டாள். சிரித்துக் குழந்தை போல் பேசி, ஓடியாடி உழைக்கிறாளே மருமகள் என்று, அவள் போடும் வேஷத்தை நம்பி ஏமாந்து கொண்டிருக்கிறாளே!

கோவிலருகில் ஒரு நிமிஷம் என்னையே மயக்கப் பார்த்தாளே... சாகசக்காரி!



நல்ல சமயம் பார்த்துத்தான் இந்தக் கடிதம் வந்து சேர்ந்திருக்கிறது. இல்லாவிட்டால் நானும் ஏமாந்து போயிருப்பேனே!

பற்களைக் கடித்துக் கொண்டான். கடிதத்தை மடித்துச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டான்.

''சாப்பாடு தயார். மேஜை மேல் எல்லாம் எடுத்து வைத்திருக்கிறேன். சாப்பிட வாப்பா''-அம்மா அழைத்த போது உள்ளே எட்டிப் பார்த்தான்.

சாப்பாட்டறை மேஜை மீது புத்தம் புதியதொரு வெண் விரிப்பின் மேல் ஒருபுறம் பளபளத்த ஸ்டீல் பாத்திரங்களில் விதம் விதமான உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன. ஓரத்தில் மூன்று பேருக்குச் சாப்பிடத் தட்டுகள் தயாராய் இருந்தன.

வண்ணக் கண்ணாடி கூஜாவில் நீர், மூன்றுவண்ணக் கண்ணாடித் தம்ளர்கள்—நடுவே பீங்கான் ஜாடிக்குள் ஒரு பெரிய கொத்து ரோஜா மலர்கள்.

பூஜை அறைக் கதவைத் திறந்து வைத்திருந்தாள் கஸ்தூரி. அதனின்றும் கமழ்ந்த ஊதுவத்தியின் நறுமணத்துடன் கலந்து மல்லிகைப்பூ வாசம் வீட்டையே தூக்கிக் கொண்டிருந்தது.

''இப்படி விமரிசையாகப் பிறந்த நாள் ஒரு கேடா இந்தக் கெட்டழிந்து போன மாதங்கிக்கு?'' ஆத்திரத்துடன் அவன் கொதித்தான்.

''அங்கேயே ஏன் நிக்கிறே. உள்ளே வந்து கை கழுவி விட்டு உட்காரு. சாப்பாடு சூடா இருக்கு. ஆறிப் போறதுக்கு முந்திச் சாப்பிடலாம். உனக்குப் பிடிச்ச பால் பாயசம் வச்சிருக்கேன்''—அம்மா புன்முறுவலுடன் மகனைப் பார்த்தாள்.

''பாயசத்தை உன் மருமகள் தலையில் கொட்டி அபி ஷேகம் செய். எனக்கொன்னும் தேவையில்லை. நான் வெளியில் சாப்பிட்டுக் கொள்ளப் போறேன்'' எரிச்சலுடன் கத்திவிட்டு, வேகமாக வெளியே சென்று காரில் ஏறிக் கொண்டான்.

சில நொடிகளில் காரும் சீறிக்கொண்டு சென்று விட்டது. பிரமிப்புடன் நின்றுவிட்டாள் கஸ்தூரி.

மனைவியோடு ஜோடியாகப் பேசிய வண்ணம் வந்தவனுக்கு இப்போது என்ன நேர்ந்து விட்டது? அவளுக்கு ஒரே கலவரம்.

மாமியாருக்குக் கூட உதவ அருகில் வந்து நின்ற மாதங்கியும், அவனது வார்த்தைகளைக் கேட்டுவிட்டாள்.

சற்று முன் தென்றல் போல் அன்பை அவள் பக்கம் அள்ளி வீசிய ஹர்ஷன் இப்படித் 'திடும்' என எரிமலையாக வெடிக்க என்ன காரணம் இருக்கக் கூடும்?

தாங்க முடியாது அவள் விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். பிறந்த நாளுக்கு அழுகையும் கண்ணீரும்தான் அவளுக்குப் பரிசாகத் தர விரும்பினானா?

அவளை இப்படிச் சித்திரவதை செய்ய அவள் செய்த தவறுதான் என்ன? கஸ்தூரி ஒரே எட்டில் மருமகளை அடைந்து, தன் மார்போடு அவளை அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தினாள்.

''ஹர்ஷனுக்கு இப்படித் திடீர்னு கோபம் வர என்னவோ நடந்திருக்கணும், அது என்னன்னு முதல்லே நான் கண்டு பிடிக்க முயற்சி செய்யறேன், மாதங்கி! இதோ பாரு, எனக்காக அதுவரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரும்மா'' — அவள் சொல்லி முடிக்கவில்லை.



மாதங்கி அவளது அன்புப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அருகிலிருந்த அவளது அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

கஸ்தூரி குழப்பமும், துயரமுமாகச் சிறிது நேரம் சாப்பாட்டறையிலேயே ஒரு நாற்காலி மீது உட்கார்ந்திருந்தாள். வேகமாக இருட்டிக் கொண்டு வருவதை உணர்ந்து எழுந்து சென்று வாயிற் கதவை அடைத்து 'விட்டு வந்தாள்.

சாப்பாட்டறை விளக்கைப் போட்டாள். அவள் தன் உடல் அயர்ச்சியைப் பாராது வெகு கவனமாகத் தயாரித்திருந்த உணவு வகைகள் அப்படியே கைபடாது மேஜை மேல் இருந்தன.

படுக்கையறையிலிருந்து மாதங்கி விசும்பி அழும் சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

முன்னும் பின்னும் சிறிது நேரம் யோசனையுடன் கஸ்தூரி உலவினாள். அவளது பிள்ளையின் குணத்தை தெரிந்து கொண்டிருந்தும் தாய்ப் பாசம் கண்ணை மறைக்க அவள் செய்துவிட்ட தவறு இப்போது ஒரு பெண்ணின் கண்ணீருக்குக் காரணமாகி விட்டதே? இது நிவர்த்திக்க முடியாத ஒரு சிக்கலாக ஆகிவிட்டதா?

பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட போதிலும் அவளுக்குத் தன் மகனது உண்மை ஸ்வரூபம் இன்னும் பிடிபடவே இல்லை. உண்மையில் ஹர்ஷன் அவனது வாழ்க்கையில் மனைவி ஸ்தானத்தில் இருப்பவளிடம் எதை எதிர்பார்க்கிறான்? அவள் மனம் குழம்பித் தவித்தாள்.

சாப்பிடப் பிடிக்காதவளாய், கொஞ்சம் பாயசத்தைத் தம்ளரில் ஊற்றி எடுத்துக் கொண்டாள். நேராக மருமகளைத் தேடிச் சென்றாள்.

மாதங்கி அருகில் உட்கார்ந்தாள். ''எழுந்திரும்மா, பிறந்த நாளும் அதுவுமா... இப்படி அழக்கூடாது. இதை யாவது சாப்பிடும்மா'' வற்புறுத்தி உபசரித்தாள்.

மாமியாருக்கு மரியாதை கொடுக்கும் உத்தேசத்துடன் மாதங்கி, பாயசத்துடன் கண்ணீரையும் கலந்து விழுங்கினாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவள் எதையோ பேசத் துடிப்பதைப் போல உதடுகள் தவிப்பதைக் கண்ட கஸ்தூரி மனம் உருகிப் போனாள்.

''மாதங்கி! நீ மனசிலே நினைக்கிறதை வெளிப்படை யாகவே சொல்லிடும்மா, பயப்படாதே'' அவளது கன்னத்தை மெல்ல வருடினாள்.

''அத்தே! என்னைத் திருப்பி பெரியம்மா வீட்டுக்கே அனுப்பிடுங்க... அப்புறம்...'' மேலே பேச முடியாது அவள் விம்மினாள்.

கஸ்தூரி வேதனையுடன் உதட்டைக் கடித்துக் கொண் டாள்.

''பிறகு உங்கப் பிள்ளைக்குப் பிடிச்ச பெண்ணாப் பார்த்துக் கல்யாணம் செய்துக்கட்டும். எனக்கு விவாகரத்து வாங்கித் தந்திடுங்கன்னு சொல்ல நினைச்சே இல்லையா? பிறந்தநாள் அன்னிக்கு இப்படி விநோதமான ஒரு பரிசை மாமியார் கிட்டயே கேட்கிறாயேன்னு எனக்கு ரொம்ப சங்கடமா இருக்கு... உன் நிலையை நினைச்சு நானும் ரொம்ப வருத்தப்படறேன்.''

மாதங்கி தலையைக் குனிந்து கொண்டாள்.

''எங்கேயாவது போய் உனக்குத் தனியே எங்களை விட்டு இருக்கணும்னு ஆசையா இருந்தா ஏற்பாடு செய்யறேன் மாதங்கி. ஆனால் மறுபடியும் உன் பெரியம்மா வீட்டுக்குத்



திருப்பி அனுப்ப எனக்கு மனசு இல்லேம்மா. அங்கே போனால், நீ இன்னும் பல கஷ்டங்கள் அனுபவிக்க நேரும்னு தெரியும். என்கிட்ட இருந்து அனுத்துக் போயிட்டிருக்க லாம். ஆனால், உன் பெரியம்மாகிட்ட நீ சிறுமைப்படறதை என் கற்பனையால் கூட நினைச்சுப் பார்க்க முடியலேம்மா''

''அத்தை, நீங்க என்னைத் தப்பாப் புரிஞ்சு கொள்ளக் கூடாது. உங்கள் மேலே நான் பெத்த தாய் போலப் பாசமும் நேசமும் வச்சிருக்கேன். ஆனா நான் இங்கே இருக்கறது ஒரு முள் போல் உங்கள் பிள்ளைக்கு இடைஞ்சலா இருக்கு. மருமகள் நான் இந்த வீட்ல கால் வச்சதுமே தாய்க்கும் பிள் ளைக்கும் இடையே என் வரவு பெரிய பிளவை உண்டாக் கிட்டதேன்னு ரொம்ப மனவருத்தப்படறேன். இத்தனை யையும் மனசில் அடக்கி வச்சிக்கிட்டு பொறுமையா இருக்கத் தான் முயற்சி செய்தேன். முடியலை. மன்னிச்சுக்குங்கோ. உண்மையைக் கேட்டீங்க சொல்லிட்டேன்.'' கட்டுக்கொள் ளாது 'ஓ' வென்று அழுதாள்.

''கவலைப்படாதேம்மா. உன் பிரியப்படி நீ வேற எங்கேயாவது நிம்மதியா வாழும்படி ஒரு ஏற்பாடு செய் றேன். இப்ப எழுந்து வந்து ஒரு வாய் சாப்பாடு என்னோ சாப்பிடும்மா. சமைச்ச மீதியை எடுத்து 'பிரிஜ்'ஜில் வச்சுட் சமையல் அறையை ஒழுங்குபடுத்திட்டுப் படுக்கப் போ லாம். ஹர்ஷன் வீட்டுக்கு எப்ப வேணுமானாலும் வரட்டு எனக்கு அக்கறை இல்லை. உன்னை அவன் இப்படி இம் செய்த பிறகு எனக்குப் பிள்ளை பிறக்கலைனு ஒதுக் ணும்னு மனசு விட்டுப் போச்சம்மா.''

''அத்தை!''

''வேண்டாம். அவனுக்காக நீ எதுவும் பேசாதே. பிள்ளை மிகவும் அகம்பாவம் பிடிச்சவன்னு என

தெரியும். எத்தனையோ பட்டும் இன்னமும் அவனுக்குப் புத்தி வரலை. எனக்கு உன் மேலே துளிகூட கோபமில்லை. ஒரு மாமியார் என்று என் அதிகாரத்தை உபயோகித்து உன்னை நான் இங்கே வற்புறுத்தித் தங்க வைக்கமாட்டேன். ஆனால் கொஞ்சம் நாள்தான் என்றாலும், இந்த வீடு நீ வந்ததும் கலகலப்பா இருந்தது. சுத்தமா, அழகா மாறிப் போனது. நீ போன பிறகு மறுபடியும் வீடு இருக்கப் போற நிலையை நினைச்சுப் பார்த்துக் கலங்கிப் போறேன். நான் கொடுத்து வச்சது அவ்வளவுதான்'' துயரத்துடன் பெருமூச்செறிந்தாள், அவளது கண்கள் கலங்கிப் போயின.

வெகுநேரம் தூங்காது படுத்திருந்தாள் மாதங்கி. நடு இரவை சமீபிக்கும் நேரம் வாயிற் கதவைத் தன் சாவி கொண்டு திறந்த ஹர்ஷன் உள்ளே வருவது தெரிந்தது.

பின்னர் மாடிப் படிகளின் மீது மெல்ல ஏறித் தன் அறையை அடைந்து கதவை மூடியதும் மிகத் தெளிவாகக் கேட்டது.

காலடி ஓசையைக் கேட்டு அவன் தன் கணவன் என்ற அளவுக்கு அவள் அவனைப் புரிந்து வைத்திருந்தாள். ஆனால் அவன்... அவளை ஏனோ புரிந்துகொள்ள மறுக்கிறான். மெல்லக் கண்களைத் துடைத்துக்கொண்டு படுக்கையில் திரும்பிப் படுத்துக்கொண்டாள். அவளுக்கு வருங்காலம் என்று ஒன்று இருக்கிறதா? வேதனையினால் அவள் நெஞ்சு கனத்தது.

## 15

அன்று இரவு கஸ்தூரியும் வெகுநேரம் உறங்கவில்லை. 'மேற்கொண்டு என்ன செய்வது?' தனக்குள்ளேயே எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தவளுக்குத் திடீரென்று பங்களூர்



தோழி நர்மதாவின் நினைவு வந்தது. பின்னர்தான் மனத்தில் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது. விடியற்காலைவேளை உறக்கத்தின் மயக்கத்திலே ஆழ்ந்து போய்விட்டாள்.

பதற்றமாக விழித்துக்கொண்டு எழுந்தபோது பொழுது விடிந்து வெகுநேரமாகி விட்டதை உணர்ந்து பரபரப்பாக வெளியே வந்தாள். சமையல் அறையில் வழக்கம்போல் மருமகள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

முன்னறையின் நடுவே கிடந்த வட்ட மேஜை மேல் ஒரு கடிதத் துண்டு கண்ணாடி பேப்பர் வெயிட்டின் கீழ்... காற்றில் சலசலத்தது. அவசரமாகப் பிரித்தாள்.

''கம்பெனி விஷயமாக ஹைதராபாத்திற்கு இரண்டு வாரம் போக வேண்டியிருக்கிறது. ஆபீஸிலிருந்தே இரவு விமானத்தில் போய்விடுவதாக உத்தேசம். என் மனம் இருக்கும் நிலையில் நான் தனிமையாக இருப்பதுதான் உத்தமம் என்று நினைக்கிறேன். திரும்பி வரும்பொழுது வீட்டில் அந்த நிம்மதி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கிளம்புகிறேன்

—ஹர்ஷன்.''

தாய்க்கு மகன் அவசரத்தில் கிறுக்கி வைத்துவிட்டுப் போன கடிதத் துண்டு அது.

கோபத்துடன் அதைச் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு, அலுவலகத்துக்குக் கிளம்ப ஆயத்தமானாள் கஸ்தூரி.

மேஜை மீது தட்டில் இட்லியும் சாம்பாரும் பரிமாறி விட்டு, காப்பி டம்ளரை வைத்த அந்தப் பிஞ்சு விரல்களைப் பார்த்தபோது அவள் இதயத்தை யாரோ கசக்குவது போன்ற

தொரு துன்பம் ஏற்பட்டது. கண் இமைகளைச் சுட்ட நீரைச் சமாளித்துக்கொண்டாள். அன்பும், அடக்கமுமான மாதங்கிக்கு கணவனாக வாழ ஹர்ஷனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஒதுங்கிப் போகிறானே! ஒழியட்டும்! சிறு வயதிலேயே அனாதையாகிப் பல துன்பங்களை அனுபவித்துவிட்ட அந்தப் பெண் குழந்தைக்குக் கஸ்தூரி தங்க இடம் அளித்து, தாய்ப்பாசம் காட்டி அரவணைப்பதைக்கூட, இந்தப் பாவிப் பயல் தடுக்கிறானே! அவள் மனம் தவியாகத் தவித்தது.

புருஷன் வீட்டுக்குப் போகப் போகிற மகளைப் பிரியவிருக்கும் பெற்ற தாயைப் போலக் கண் கலங்கினாள். மாதங்கியை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் துயர வசப்பட்டுப் போனாள்.

ஸ்நானம் செய்த கூந்தலைக் கோடாலி முடிச்சிட்டுக் கொண்டு, பளிச்சென்ற குங்குமப் பொட்டுடன் வீட்டில் வளைய வரும் அவளை இனி பார்க்க முடியுமா என்ற நினைவே அவளது அடிவயிற்றைப் பிசைந்தது.

''மாதங்கி!... ரெண்டு மூணு நாள் பொறுத்துக் கொள்ளும்மா... உனக்கு ஒரு நல்ல ஏற்பாடு செய்யறேன். எதுக்கும் நீ உன் சாமான்களை எடுத்துப் பெட்டியில் அடுக்கி வச்சுக்க...''

அள்ளித் தெளித்த அவசரக் கோலம் போல நடந்த கல்யாணம் அவளுடையது. திருமணமானவுடனேயே மாமியாருடன் புறப்பட்டு வந்துவிட்டவள்—பெரியம்மா சம்பிரதாயத்துக்காகக்கூட புக்ககத்தில் ஏற்றி வைக்க ஒரு காமாட்சி விளக்கோ பித்தளைத் தட்டோ ஒரு செம்போகூட சீராகக் கொடுத்து உதவவில்லை. கல்யாண மண்டபத்துக்கு எடுத்து வந்த பெட்டியில் கொண்டு வந்திருந்தாளே ஒரு பட்டுச்



சேலை, இரண்டு நூல் சேலைகள், கொஞ்சம் உள் ஆடை, சோப்பு, சீப்பு, கண்ணாடி—இவை தாம் அவள் கொணர்ந்த சொத்து. மற்றபடி மூக்கு காது யாவற்றிலும் கவரிங் உருப்படிகள்.

இவைகளைத் தயாராக எடுத்து வைத்துக்கொள்ள எத்தனை நேரமாகும்?

''அத்தே! பத்தே நிமிஷத்தில் என் மூட்டையைக் கட்டித் தயாராக்கிடுவேன்'' சோகத்துடன் மெல்லியதாகச் சிரித்தாள்.

அவள் சொல்ல நினைத்ததைக் கஸ்தூரி புரிந்து கொண்டுவிட்டாள்.

''நீ இங்கே வரும்போது ஒரு பெட்டியும் கொஞ்சம் துணிமணிகளுடன் வந்தவளாயிருக்கலாம். ஆனால் இங்கிருந்து நீ போகும்போது அப்படி உன்னை அனுப்பறதாக எனக்கு எண்ணம் இல்லை. கூரைச் சேலையிலிருந்து நான் நேத்து வரை உனக்கு வாங்கித் தந்த அத்தனையையும் எடுத்துப் பெட்டியில் வச்சுக்க. நான் போட்ட நகைகள் எல்லாம் உன்னைச் சேர்ந்தவைதான். ஆனால் அதையெல்லாத்தையும் இங்கே உன் பேரில் வங்கி பாதுகாப்புப் பெட்டகத்தில் வச்சுட்டு, சாவியை நீயே கவனமா எடுத்து வச்சுக்கோ. நான் வேலைக்குப் புறப்படுமுன், உங்கிட்ட கொஞ்சம் பேசணும். அதனால் இப்படி உட்காரு'' என்றாள் கஸ்தூரி.

மாமியாரின் தாராளமான மனத்தைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தாள் அவள். கஸ்தூரியின் எதிரே கிடந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்துகொண்டு ஆவலுடன் அவள் முகத்தைப் பார்த்தாள்.

''பங்களூரிலே என் தோழி ஒருத்தி இருக்கா. விதவையானவள். குழந்தைகள் எதுவுமில்லாத தனி மனுஷி. அவளைப்

போல நானும் ஒண்டிக்கட்டையா இருந்திருக்கலாகாதா... இப்ப நினைச்சுக் கொள்கிறேன். எத்தனையோ பிரச்சனைகளைச் சந்திச்சிருக்க வேண்டாமேன்னு அங்கலாய்க்கிறேன். ஹூம்! அதுப்பத்தி இப்பப் பேசி என்ன பயன்?'' அலுப்புடன் கஸ்தூரி தொடர்ந்தாள்.

''மேலே நடக்கவேண்டியதைக் கவனிக்கிறதுதான் புத்திசாலித்தனம். உன்னை, உன் பெரியப்பா வீட்டுக்கு நான் எக்காரணம் கொண்டும் அனுப்பப் போறதில்லை. நீயும் அங்கே போகக்கூடாது. அப்படி எனக்கு ஒரு வாக்குக் குடுப்பாயா மாதங்கி!''

''அத்தே! நீங்க என்னை எங்கே அனுப்பினாலும் போகத் தயார். சரிதானே'' மெல்லிய குரலில் மேஜையைப் பார்த்தபடி சொன்னாள் மாதங்கி. அவளுக்கு அழுகை பொங்கி வந்தது. அவளது திருமணம் இப்படி ஒரு சிக்கலாக மாறும் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. திருத்தணியில் அன்று காலை கொட்டு மேள கோஷத்திடையே ஹர்ஷன் அவள் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்தபோது அந்த நினைப்பே இல்லை. சுவர்க்கபோகத்தை அனுபவிக்கப் போகிறோம் என்ற கனவில் அல்லவா மிதந்தாள்.

''என் தோழி நர்மதா தனி வீடு, சமையலுக்கு ஆள், கார் என்று வசதியா வாழ்கிறவள். தன்னந்தனியாக இருக்கிறோமே என்று குறை. அவள் தனிமையைப் போக்கத் துணையாக இருக்க உன்னை அவளிடம் அனுப்பப் போறேன். ஆனால் உன்னால் ஆகப்போகும் சாப்பாடு, மற்றச் செலவுக்கு அவளுக்கு மாதா மாதம் பணம் அனுப்பி விடுவேன். என்னதான் சிநேகிதமானாலும் நான் இதுபோல விஷயங்களில் மிகவும் கண்டிப்பும் கறாருமாக இருப்பேன்'' கஸ்தூரி சற்று நிறுத்தினாள். மாதங்கி பதில் கூறவில்லை.



''ஒரு ஹாஸ்டல்லே தங்கி இருக்கிறது போல் கௌரவமான ஒரு பெண்மணியோட பாதுகாப்பில் நீ இருப்பாய்-அதே சமயம் நீ நாட்களை வீணே கழித்துக் கொண்டிருக்கப் போவதில்லை! எனக்குக் கணவர் சாப்பாட்டுக்குப் போதுமானது வச்சிட்டுத்தான் போயிருக்கார். இருந்தும் நான் ஏன் இன்னமும் வேலை செய்யறேன் தெரியுமா? தனிமையின் துயரை மறக்கவும்-சுதந்திரமான ஓர் உணர்வில் தன்னம்பிக்கையோட வாழவும்தான். ஒவ்வொரு பெண்ணுக்கும் தன்னம்பிக்கையும், சுதந்திர உணர்வும், தன்னைத்தானே காத்துக்கொள்ளும் கல்வி அறிவும் தேவைன்னு மேடைகளில் கூக்குரல் இடுகிறவள் நான். என் மருமகளுக்கு அவைகளை வழங்க நான் மறுத்தால் நியாயமாகுமா? நர்மதாகிட்ட டெலிபோனில் பேசி, எல்லா ஏற்பாடும் செய்யப் போறேன் மாதங்கி!''

அவள் மாமியாரின் பேச்சுக்குத் தலையை அசைத்தபடி பொம்மையாக அமர்ந்திருந்தாள்.

''நர்மதாவும் என்னைப்போல் கொள்கை உடையவள். அவள் உதவியுடன் நீ சந்தோஷமாக இரு. அருகில் இருக்கும் வேலை வாய்ப்பு பயிற்சி தரும் நிறுவனத்தில் சேர்ந்து கொள். டைப்பிங், செக்ரட்டேரியல் கோர்ஸ் என்று உபயோகமானதாகப் படித்து பாஸ் செய்திடு. அதுக்காகத்தான் உன்னை அங்கே அனுப்பறேன். உனக்கும் ஹர்ஷனுக்கும் கடவுள் கிருபையால், இடையில் ஏற்பட்டிருக்கிற வீண் மனத்தாங்கல் இந்தப் பிரிவினால் மறைஞ்சு, மன நெருக்கம் ஏற்பட்டால் நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன். இல்லை ஒரேயடியாக அதிகரிச்சு, பிரிஞ்சு போக நேர்ந்தால் உன்னைக் காப்பாத்திக் கொள்ள உன் கையில் ஒரு நல்ல தொழில் இருக்கு. பிழைத்துக் கொள்வாய்ன்னு நிம்மதியடைவேன்.'' படபடவென்று பேசிய

கஸ்தூரி, மேலே பேச முடியாமல் சட்டென எழுந்தாள். வாஷ்பேசினருகில் சென்று கையைக் கழுவினாள். மருமகள் பாராத சமயம் பார்த்துக் கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

மீண்டும் திரும்பி வந்தவள், ''இந்த வீட்டுப் பொறுப்பு இன்னும் சில நாட்களுக்குத்தான். பிறகு நீ ஒரு சுதந்திரப் பறவை வரட்டுமா!'' துயருடன் சிரிக்க முயன்றபடி தன் பிரீஃப் கேஸைத் தானே தூக்கிக் கொண்டு வெளியேறினாள்.

அதற்குப் பின்னர் கஸ்தூரி வேகமாகச் செயல்பட்டாள். ஒரு நாள் காலை, அலுவலகத்துக்குக் கிளம்பும் போது மருமகளையும் கூடவே காரில் அழைத்துச் சென்றாள்.

அருகிலிருந்த அவர்களது வங்கியில் மாதங்கியின் பெயரில் ஒரு கணக்கை ஆரம்பித்து அதில் கணிசமான ஒரு தொகையைக் கட்டினாள்.

பாதுகாப்புப் பெட்டகச் சாவி, 'பாஸ்' புத்தகம் இரண்டையும் மருமகள் கையில் கொடுத்து வீட்டில் கொணர்ந்து விட்டுவிட்டு வேலைக்குத் திரும்பினாள்.

அன்று காலை பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் மாதங்கி பெங்களூருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். ஜன்னல் ஓரமாக உட்கார்ந்தவளிடம் கஸ்தூரி தாழ்ந்த குரலில் சொன்னாள்.

''உன் அவசரச் செலவுக்குன்னு கொஞ்சம் பணம் உன் பேர்ல பாங்கில கட்டி வச்சிருக்கு. மாசம் தவறாமல் நான் பணம் அனுப்பி வைக்கிறேன். கவலைப் படாதே. அடிக்கடி கடிதம் போடு. நீ அங்கே போய்ச் சேர்ந்ததும் நர்மதா அம்மா உன்னிடம் ஒரு தடிமனான கடித உறையைத் தருவாள். அதைப் பிரிச்சுப் பார்த்துட்டுப் பத்திரமா வச்சுக்கோ.''



''அத்தே!'' கலவரத்துடன் விழித்தாள்.

''அது என் உயில்... அசல் நமது குடும்பத்து வக்கீல் கிட்ட இருக்கு. நர்மதா கொடுக்கப் போறது நகல், உன் பார்வைக்கு வைச்சுக்கொள்ள வேண்டியது. என் உயில் பிரகாரம் நம் வீட்டில் பாதி உன்னது. எனக்குப் பின் பாங்கியில் என் பேரில் இருக்கிற பணம், என் நகை எல்லாமே உன்னைச் சேரணும்னு எழுதி வச்சிருக்கேன்.''

''அத்தே! எதுக்காக இப்படியெல்லாம்'' மாதங்கியின் குரல் தழுதழுத்தது. கையை நீட்டி மாமியாரின் கரத்தை ஆதரவுடன் தொட்டாள்.

''என் மகன் எனக்குத் தந்திருக்கிற அதிர்ச்சியின் துயரமே என்னை விழுங்கிடும்னு ஒரு திகில் ஏற்பட்டுடுச்சு. ஒரு சமயம் உன்னைத் திரும்பப் பார்க்க முடியாமல் உடம்புக்கு வந்து நான் போயிட்டா அநியாயமா ஒரு பெண்ணை நிர்க்கதியாக்கி விட்ட பாவம் எனக்கு வரக்கூடாதும்மா மாதங்கி! குழந்தே! என்னை மன்னிச்சுடும்மா...'' கஸ்தூரி கண் கலங்க, மருமகளின் கரத்தை அழுத்திப் பிடித்த பொழுது, ''அத்தே!'' என விம்மினாள் மாதங்கி. அதற்குள் வண்டி நகரத் துவங்கவே பிணைத்துக் கொண்ட கரங்கள் பிரிய வேண்டி வந்தன.

## 16

பெரியம்மா சுமதியைத் தவிர யாருக்கும் மாதங்கியைச் சட்டென்று பிடித்துவிடும். வீட்டு மனிதர்களுடன் நட்புக் கொண்டு கபடமற்று உறவாடும் ஒரு சுபாவம் அவளுக்கு இயற்கையாகவே அமைந்து விட்டிருந்தது. வந்து சில நாட்களிலேயே நர்மதாவுக்கு அவளை மிகவும் பிடித்து விட்டது.

அல்சூர் சாலையில் சண்பக மரங்கள் சூழ்ந்த தோட்டத்துக்குள்ளே அடங்கியிருந்த சின்னஞ்சிறு வீட்டில் அவள் இரண்டு வேலை ஆட்களுடன் தனியே வசித்துக் கொண்டிருந்தாள். உயரமும் பருமனுமான தோற்றம். சிவந்த மேனி. அறுபது வயதை எட்டிவிட்டது தெரியாத மிடுக்கு நடை. அதட்டலான பேச்சு. நரை தெரியாத கருப்புப் பூச்சில் கழுத்து வரை வெட்டி விடப்பட்டிருக்கும் அடர்ந்த முடி. கைவிரல்களில் நகப் பூச்சு. உதட்டில் அழுத்தமான சாயம். முகத்தில் மிதமான பவுடர் பூச்சு. தோற்றத்திலும் பேசும் தோரணையிலும் மாமியார் கஸ்தூரிக்கு முற்றிலும் மாறுபட்டவள். ஆனால் நெருங்கிப் பழகிய போது கஸ்தூரியிடம் காணப்பட்ட அதே அன்பும்—பண்பும்—பாசமும் தெரிந்தன. அதனால்தான் தோற்றத்திலே முற்றிலும் மாறுபட்ட இருவர்—மனத்தால் ஒன்றுபட்டிருப்பதால் நெருங்கிய தோழிகளாக இருக்கின்றனர் போலும். மாதங்கி தனக்குள்ளே நர்மதாவைப் பற்றிக் கணிப்பு செய்து கொண்டாள்.

தன் பாதுகாப்பில் வந்து மாதங்கி தங்கத் தொடங்கிய சில நாட்களுக்குப் பின்னர் ஒருநாள் காலை அவள் அந்தப் பெண்ணைத் தன் காரில் கூட அழைத்துச் சென்றாள். கங்கா காவேரி இன்ஸ்டிடியூட் என்னும் வேலை வாய்ப்பு பயிற்சி தரும் ஸ்தாபனத்தில் அவளை ஒரு மாணவியாகச் சேர்த்து விட்டாள். அந்த ஸ்தாபனத்தின் மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் சட்டென்று வேலை கிடைத்துவிடும் என்றதொரு பெருமை அதற்கிருந்தது. அங்கே இடம் கிடைப்பதே சிரமமான காரியம். ஆனாலும் நர்மதா தனது செல்வாக்கைத் தெரிந்தவர்கள் மூலம் உபயோகித்து மாதங்கிக்கு அதில் இடம் பிடித்துக் கொடுத்துவிட்டிருந்தாள். செகரடேரியல் கோர்ஸ் என்னும் பகுதியில் மாதங்கி சேர்ந்து பயிலத் தொடங்கிவிட்டிருந்தாள்.



நர்மதா மிகவும் வெளிப்படையாகப் பேசுகிறவள். முதல் நாள் கங்கா காவேரி இன்ஸ்டிடியூட்டுக்கு மாதங்கி கிளம்பியதும் தானே அழைத்துச் செல்ல முன் வந்தாள். காரில் முன் ஆசனத்தில் தன் அருகே உட்கார வைத்துக் கொண்டு தோட்டத்திலிருந்தபடியே தான் சொல்ல விரும்பியதைப் படபடவென்று பேசத் தொடங்கினாள்.

''மாதங்கி, முதலில் நீ ஒண்ணு தெரிஞ்சுக்கணும். நான் உன்னை எவ்விதமான கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்த மாட்டேன். நீ சுதந்திரமாக எங்க வேணுமானாலும் போகலாம்—வரலாம். யாருடனும் பழகலாம், பேசலாம். உனக்குப் பூரண உரிமை உண்டு. ஆனால் நான் சொல்லப் போறதைக் கொஞ்சம் கவனிச்சு வச்சுக்கோ. இந்த ஊர்க்காரங்க உங்க ஊர்க்காரங்களை விடக் கொஞ்சம் முற்போக்கானவங்க—பத்தாம் பசலித்தனத்தை இந்த வட்டாரத்தில் நீ அதிகம் பார்க்க மாட்டே. ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கிற இடம் நீ சேர்ந்திருக்கும் அந்த ஸ்தாபனம். உள்ளத்து உணர்வுகளைப் பூட்டி வைக்காமல் சகஜமாக சரளமாக எல்லாரும் எல்லாரிடமும் பேசுவாங்க—பழகுவாங்க. நீயும் அப்படிப் பழகத் தெரிஞ்சுக்கணும். தொட்டாச் சுருங்கி போல பயந்தவளாட்டம் நடந்துக்கக் கூடாது. வெளி உலகில் பல பேரோடு பழக சந்தர்ப்பம் இருந்தும் தனது வரம்புக்குள்ளே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பழகத் தெரிஞ்சுக்கிற போது தான் ஒரு பெண்ணை உண்மையான ஒழுக்கம் உடையவள்னு சொல்ல முடியும். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இல்லாததால் ஒழுக்கமாக ஒரு பெண் இருப்பது உசத்தியல்ல.

''அப்புறம் இன்னொரு முக்கிய விஷயம். நீ நாளடைவில் கன்னடம் படிக்க, எழுத, பேசக் கத்துக்கணும். நான் தமிழ் நாட்டிலே வாழ்ந்த காலத்தில் உன் மாமியாரை விட

தமிழ் அதிகமாகவே படிக்க—பேசக் கத்துக் கொண்டிருந்தேன். அந்தந்த ஊர்க்காரங்க மொழியிலே பேசத் தெரியும் போதுதான் நமக்கும் மற்றவங்களுக்கும் இடையே நேச பாவம் நெருக்கமடைகிறது. புரிஞ்சுதா?''

நர்மதா ஒரே மூச்சாகப் பேசிவிட்டு உரத்த குரலில் சிரித்தாள்.

நர்மதாவின் யோசனைப்படியே மாதங்கி மற்ற மாணவ மாணவிகளுடன் நட்புரிமை பாராட்டிப் பழகத் தெரிந்து கொண்டாள். வீட்டு வேலைகளை மட்டுமே கவனித்துக் கொண்டு பெரியம்மாவுக்கு ஓர் எடுபிடி ஆளாகப் பணி புரிந்து கொண்டிருந்த நிலையிலிருந்து பழையபடி மாணவியாக, கவலையற்றுச் சுதந்திரமாக வாழ நேர்ந்த அந்தப் புதிய அனுபவத்தை அவள் மிகவும் ரசித்தாள்.

மிக விரைவில் பெங்களூரில் அவர்கள் வசித்த பகுதியிலிருந்த பல தெருக்களை அவள் தெரிந்து கொண்டு விட்டிருந்தாள். நர்மதா வீட்டிலிருந்து பயிற்சி ஸ்தாபனத்துக்கு விரைவாகச் செல்ல எந்தத் தெருவுக்குள் நுழைந்தால் சீக்கிரம் போக முடியும் என்றெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு விட்டாள்.

கோடை வெய்யிலே தெரியாது குளுமையாக வீசிய காற்றில் சாலை ஓரத்தில் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் மரங்கள் அணி செய்யும் அழகைக் கண்டுகளித்தபடி மெல்ல நடந்து போய்விடுவது அவளுக்கு மிகவும் சுவையானதொரு அனுபவமாக இருந்தது.

கல்வி நிறுவனத்தில் விரைவில் அவளுக்குப் பல தோழிகள் சேர்ந்துவிட்டனர். சில மாணவர்களிடம் கூட அவள் நெருங்கி சகஜமாகப் பேசத் தெரிந்துகொண்டு விட்டிருந்தாள். நத்தையைப்போல உள்ளே இழுத்து நாணிக் கோணிக்கொள்ளாது நிமிர்ந்த முகத்துடன் கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களை அவர்களுடன் சரிக்குச்சரியாக விவாதித்துப் பேசும் ஆற்றலை வளர்த்துக்கொண்டு விட்டாள்.



நெருங்கிப் பழகின மாணவிகளில் ஒருத்தி ஒருநாள் அவளிடம் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டாள்.

''உன் பெயருக்கு முன் ஸ்ரீமதின்னு இருக்கிறதைக் கவனிச்சேன். பிறகு கழுத்தைப் பார்த்தேன். தாலிச்சரடு தெரிந்தது. உன் கணவனைவிட்டு இங்கே ஏன் படிக்க வந்தே? உங்க சென்னையிலும் இதுமாதிரி பல கல்வி நிறுவனங்கள் செயல்படுவதாகக் கேள்வி...''

ஓங்கித் தலையில் யாரோ குட்டிவிட்டதைப் போன்ற வேதனை, மாதங்கிக்கு. நெருங்கிப் பழகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் நர்மதா உபதேசித்திருந்தாள். எல்லாரிடமும் அவள் வாழ்க்கையின் விவகாரத்தை அப்பட்டமாக அவிழ்த்துவிட வேண்டும் என்று சொல்லவில்லையே?

''இந்த நிறுவனத்தில் படிக்கணும்னு என் மாமியார் உத்தரவு.''

''உன் கணவனைப் பிரிஞ்சு இருக்கியே, மனதுக்கு கஷ்டமாக இல்லையா?''

நெஞ்சை அடைத்த வேதனையை விழுங்கிக் கொண்டாள் மாதங்கி.

''அவர் வெளிநாடு போயிருக்கிறார். அதை மறக்கத்தான் இந்த ஏற்பாடு'' சட்டென்று அந்தத் தோழியின் அருகிலிருந்து அப்பால் நழுவினாள்.

ஹர்ஷனின் நினைவு மனதிலே தோன்ற இடமின்றி வேலை பயிலும் முயற்சியில் நாட்கள் வேகமாகத்தான்

நகர்ந்துகொண்டிருந்தன. காலை எட்டு மணியிலிருந்து பன்னி ரண்டு மணி வரைதான் அவளது பயிற்சி. பற்பல எல்லை மீதிப் பொழுதை அவள் மனக்குழப்பத்திலே கழிக்க நர்மதா அனுமதிப்பதில்லை.

காலை வேளையில் தன்னுடன் அமர்ந்து காப்பி டிபன் சாப்பிட்டு விட்டுத்தான் அவள் கங்கா காவேரிக்குப் புறப்பட வேண்டும் என்று நிர்ப்பந்தித்தாள். பகல் அவள் வீடு திரும் பும் வரை அவளுக்காகக் கூடச் சாப்பிடக் காத்திருந்தாள். பகல் உணவுக்குப் பின்னர் தன்னுடன் அவளை இந்திரா நகரில் தான் வைத்து நடத்திக்கொண்டிருந்த 'நர்மதா பொட்டிக்' என்னும் பெண்கள் ரெடிமேட் ஆடைக் கடைக்கு உதவி செய்யக் கூடவே அழைத்துச் செல்வது வழக்கம். சனி ஞாயிறு களில் கார் ஓட்டும் பள்ளியிலே கார் ஓட்டக் கற்றுக்கொள் ளும் பயிற்சியில் ஈடுபடுத்தினாள். இரவு உணவுக்குப்பின் முன் அறையில் உட்கார்ந்து கொண்டு ஊர்க் கதைகளைப் பேசிப் பொழுதைக் கழித்து விட்டுத்தான் உறங்கப் போவது வழக்கம்.

நாள் முழுவதையும் வேகமாகப் புதிய அனுபவங் களிலே கழித்தபோதிலும் இரவில் தனிமையில் அவளுக்கு திடீரென்று புக்ககத்தின் நினைவு ஏற்படத்தான் செய்தது.

மாமியாரின் கருணையினால்தானே அவளுக்கு இப்படிப் பட்ட கல்வி அனுபவமும் சுதந்திரமான சுகமானதொரு வாழ்க்கையும் அமைந்திருக்கிறது. கஸ்தூரியின் தாராள மனத்தை எண்ணி மனம் கசிந்தாள். ஹர்ஷனின் நினைவை என்னமுயன்றும் மனத்திலிருந்து ஒதுக்க முடியாது அவதிப் பட்டாள்.

பிறந்த நாள் அன்று கோவிலுக்குக் கூட வந்தபோது அன்பாகப் பேசத் தெரிந்த அவனுக்குத் திடீரென்று என்ன



வந்துவிட்டது? அவளை அந்த வீட்டில் மறுபடியும் பார்க்க விரும்பாத அளவுக்குத் துவேஷம் வரக் காரணம்?

புரியாத அந்தப் புதிர் முள்ளாக மனத்தை நெருட... அதன் வேதனையைத் தாளாது இரவின் தனிமையில் தன் அறையில் தலையணை மீது முகத்தைப் பதித்தவாறு ஓசைப்படாது கண்ணீரை உகுத்தாள்.

அடிக்கடி அவள் கஸ்தூரிக்குக் கடிதம் போட்டுக் கொண்டிருந்தாள். மாமியாரிடமிருந்து தவறாமல் பதில்கள் வந்துகொண்டிருந்தன. அவளது படிப்பைப் பற்றியும் உடம்பு சுகம் பற்றியும் அக்கறையாக விசாரித்துக் கேட்டிருந் தாள். தப்பித் தவறிக்கூடத் தன் மகனைப்பற்றி ஒரு வரிகூட அவள் எழுதவில்லை. கணவனைப்பற்றி அறிய ஆவல் இருந்த போதிலும் கேட்டெழுத மாதங்கிக்குத் துணிவு இருக்கவில்லை.

இந்த நிலையில் ஆறு மாத காலம் ஓடிச்சென்று விட்டது.

மாதங்கி வேகமாக டைப் அடிக்கவும், தொலைபேசி தொகுதிகளை இயக்கவும் தெரிந்துகொண்டு விட்டாள். அலுவலகத்தில் காரியதரிசியாகப் பணிபுரிய வேண்டிய தகுதிகளை வேகமாகப் பயின்று கொண்டுவிட்டாள். நர்மதா அம்மாளைக் காரில் இங்குமங்கும் அழைத்துச் செல்லுமள வுக்குக் கார் ஓட்டும் திறமையும் பெற்று விட்டாள். இன்னும் இரண்டு மாத காலப் பயிற்சிக்குப் பின்னர் தேர்வு. அதில் வெற்றி பெற்றுவிட்ட பின்னர் அவள் என்ன செய்யப் போகி றாள்? உள்ளூர ஒரு கவலை அவளை மெல்ல அரிக்கத் தொடங்கியது.

அச்சமயம் ஒரு ஞாயிற்றுக்கிழமை சாப்பாட்டறையில் அவர்கள் இருவரும் காப்பி டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம் நர்மதா திடீரென்று ஆரம்பித்தாள்.

''உன்னை ஒன்று கேட்கப் போகிறேன். மனம்விட்டு உண்மையை நீ சொல்லணும்.''

கையில் பிடித்திருந்த காப்பிக் கோப்பையைத் திகைப்புடன் மேஜைமேல் வைத்துவிட்டு மாதங்கி குழப்பத்துடன் விழித்தாள்.

''நீ உன் வாழ்க்கையைப்பற்றி ஏதாவது ஒரு முடிவுக்கு வரணும் இல்லையா? சின்ன வயசுப் பெண், வெறும் பெயரளவில் நடந்த பொம்மைக்கல்யாணத்தை வெச்சுக்கிட்டு உன்னையே நீ பாழாக்கிக்கொள்ள முடியாதல்லவா... பத்தாம் பசலித்தனத்தை உதறிவிட்டு இந்தக் காலத்துப் பெண்ணாக நீ நினைக்கவும் செயல்படவும் தெரிஞ்சுக்கணும்னு ஆரம்பத்திலே சொல்லியிருக்கேன் இல்லையா?''

''என்ன சொல்றீங்க... ஒண்ணுமே புரியவில்லையே'' மாதங்கி மெல்லிய குரலில் வியப்புடன் கேட்டாள்.

''அந்தக் காலத்தில் நான் பார்த்த நாடகத்தின் ஒரு காட்சி ஞாபகத்துக்கு வரது. கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்ற முடியலையேன்று கோவலன் கலங்கிக்கொண்டு பாடுவான். அதுபோல உன் கழுத்தில் விழுந்த மாலைக்குத் தனிமையானதொரு மகிமை ஏதாவது ஏற்பட்டு விட்டதா என்ன?... வற்புறுத்தலுக்கு இணங்கி உன் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு கோழை போல் ஒதுங்கிக் கொண்டுவிட்ட ஹர்ஷனையே நீ நினைச்சுக்கொண்டு ஏன் கலங்கணும்?

''கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்றித் தூர வைக்க முடியும்னு நீ ஏன் நினைச்சு வாழ்க்கையை மாத்தி அமைச்சுக்கக் கூடாது?''

''அம்மா!'' மாதங்கி வியப்பும் துயரமுமாக அவளை நிமிர்ந்து பார்த்தாள்.



''ஒரு வருஷ காலம் நீயும் ஹர்ஷனும் பிரிஞ்சு இருந்துட்டு இருவரும் மனம் ஒப்பினால் எந்தவிதச் சிக்கலுமின்றி விவாகரத்து செய்துகொள்ள முடியும். உன் அழகுக்கும் உன் படிப்புக்கும் உன் குணத்துக்கும் வேறே நல்லவனாக ஒரு கணவன் கிடைப்பான். வற்புறுத்தலில் இணைந்த கல்யாணத்திலே ஆணுக்கும் சரி, பெண்ணுக்கும் சரி, நீடித்து அந்தத் துன்பத்தில் உழலவேண்டிய அவசியமில்லை. விடுதலை பெற்றுக் கொள்ள உரிமை இருக்கு... புரிஞ்சுதா?...''

விவாகரத்து பற்றி நர்மதா ஏன் திடீரென்று பேசுகிறாள்? மாமியார் கஸ்தூரி எடுத்துவிட்டிருக்கும் முடிவா?

நேரிடையாகத் தான் கடிதத்தில் அவளுக்கு எழுத அஞ்சிக்கொண்டு தோழி மூலம் இப்படித் தெரிவிக்க விரும்புகிறாளா?...

தொண்டைக்குள் என்னவோ அடைத்த உணர்வில் கண் ஓரத்து இமைகளில் கனத்த நீரைச் சமாளித்துக் கொண்டாள் மாதங்கி.

''என் கணவர் விடுதலையை விரும்பினால் அவருக்கு ஒரு தொல்லையாக இருந்து அவரை இம்சிப்பதை நான் விரும்பவில்லை. அதில் அர்த்தமும் இல்லை. இதைப்பற்றி யோசித்து முடிவுக்கு வர எனக்கு அவகாசம் தேவை'' மெல்லிய குரலில்... கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல் மாதங்கி பதிலளித்தாள்.

## 17

ஒரே வீட்டில்தான் வசித்தனர். தாயும் மகனும் அன்னியர்களைப் போலப் பேச்சு வார்த்தையின்றி வாழ்ந்து கொண்டிருந்தனர். ஹர்ஷன் தன் வெளியூர் பயணத்துக்குப்

பின்வர் ஊரிலிருந்து திரும்பிய போது வராந்தாவில் வேலைக்காரி வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டான். முன்னைவிட மெலிதாகி விட்டது போல் தெரிந்த ரோவர் அவனைக் கண்டு ஓடி வந்து மேலே விழுந்து கொஞ்சியது. என்னென்னவோ சொல்ல நொய் நொய் என்று புலம்பியது.

''அம்மா மீட்டிங் போயிருக்காங்க. அறைச் சாவிகளை நீங்க வந்தாக் கொடுக்கச் சொன்னாங்க.'' வேலைக்காரி தன் பொறுப்பைக் கழித்து விட்டு வேகமாகக் கிளம்பி விட்டாள். இருட்டிக் கொண்டு வந்ததை உணர்ந்து முன்னறை விளக்கைப் போட்டுவிட்டு ரோவரைத் தோட்டத்தில் தள்ளிக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றான்.

'ஹோ'வென்று பயங்கரமானதோர் அமைதியில் வீடு மூழ்கிக் கிடந்தது. வீடு பழைய நிலைமைக்கு மாறி விட்டதையும் அவன் கவனிக்கத் தவறவில்லை. முன்னறையில் பத்திரிகைகள் தாறுமாறாக மடிக்கப்பட்டுப் போட்ட நிலையில் கிடந்தன.

சமையலறையில் வேலைக்காரி அவசரமாகக் கழுவி வைத்து விட்டுப் போன பாத்திரங்கள் மேடை மீது குவியலாகக் கிடந்தன. மாடியில் அவனது அறையில் அவன் கிளம்பிய அன்று உபயோகித்த படுக்கை விரிப்பு மாற்றப்படவில்லை. களைந்து போட்ட பைஜாமா சட்டை தோய்க்கப்படாது நாற்காலி மீது அப்படியே கிடந்தது. தாடை இறுகக் கோபத்துடன் தன் அறையை வெறித்துப் பார்த்துவிட்டுப் பயணக்களைப்புத் தீரக் குளித்து வேறு உடை உடுத்திக் கொண்டான். படுக்கை மீது கிடந்த அழுக்கு விரிப்பை இழுத்துச் சுருட்டி அறையின் மூலையில் விட்டெறிந்தான். அலமாரியைத் திறந்து சுத்தமானதொரு விரிப்பை எடுத்துப்



படுக்கையின் மீது போட்டான். கட்டிலைச் சுற்றிச் சுற்றி விரிப்பை இழுத்து மடித்து மெத்தை மீது ஒழுங்கு செய்வதற்குள் அவனுக்குத் தோள் பட்டைகள் வலித்தன. களைப்பும் பசியும் எரிச்சலை ஊட்டவே மாடிப்படிகளை வேகமாகக் கடந்து சாப்பாட்டறைக்கு வந்தான்.

''ஹாட்கண்டெய்னரில் சாப்பாடு இருக்கு. எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடலாம். எனக்காகக் காத்திருக்கத் தேவையில்லை...'' அம்மா மொட்டையாக எழுதியிருந்த கடிதத் துண்டுடன் ஒரு ஸ்டீல் பாத்திரத்தில் சாப்பாடு தயாராக வைக்கப்பட்டிருந்தது.

''பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த என்னை விட நேற்று வந்த எவளோ ஒருத்தி அம்மாவுக்கு உசத்தியாகி விட்டாள். ரோவருக்குச் சாப்பாடு போடுவது போல் அல்லவா இந்த அம்மா...'' பற்களைக் கடித்துக் கொண்டான். பசி வயிற்றைச் சுருட்டவே தட்டை எடுத்து வைத்துக் கொண்டு பிரிஜ்ஜிலிருந்து குளிர் நீர் கொண்ட பாட்டிலைத் தூக்கி வைத்துக் கொண்டு கொட்டு கொட்டென்று தன்னந் தனியே மௌனமாகச் சாப்பிடத் தொடங்கினான். அவனுக்கு ஆத்திரமாக வந்தது. இதுநாள் வரை தாய்க்கும் மகனுக்கும் இடையே எத்தனையோ சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அம்மா கஸ்தூரி சமைத்த உணவைத் தன் கையாலேயே அவனுக்குப் பரிமாறத் தவறியதில்லை. எத்தனை நேரம் கழித்து வீட்டுக்கு வந்தாலும் தூக்கத்தை உதறிவிட்டு அவனுக்குச் சாப்பாடு போட வருவது வழக்கம். அத்தனை கருத்துடன் கவனித்த தாய் இப்போது ஒரேயடியாக இப்படி விலகிக் கொண்டு விட்டாளே?...

மனதை வேதனை நெருடியது. சாப்பிட்டுவிட்டுத் தட்டை அப்படியே மேஜை மேல் போட்டுவிட்டுக் கையைக் கழுவிக்கொண்டு மாடி அறைக்குப் போய்விட்டான்.

தோட்டத்துக்குள் கார் வரும் சத்தம் கேட்டது. கேட் திறக்கப்பட்டு கதவு மூடும் ஓசையும் கேட்டது. ரோவர் உற்சாகத்துடன் குரைத்தது காதில் விழுந்தது.

ஆனாலும் அவன் எழுந்து கீழே வந்து தாயைப் பார்த்துப் பேச விரும்பவில்லை.

கஸ்தூரிக்கு அவன் வந்துவிட்டது புரிந்தது. ஆனால் அவளும் கண்டுகொள்ளவில்லை.

அம்மா பேசட்டும் என்று பிடிவாதமாக மௌனமாக அவன் இருந்தான்.

அவளும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. விளைவு, இருவரும் விரோதிகள் போல் ஒரே வீட்டில் பேச்சு வார்த்தை இன்றி வசித்துக் கொண்டிருந்தனர்.

மாதங்கியை வீட்டைவிட்டு அனுப்ப அவன் நிர்ப்பந்தித்ததின் காரணம் என்ன என்று தாயார் அவனிடம் கேட்க முயலவில்லை.

'பெரியப்பா வீட்டுக்குத்தானே அனுப்பினீங்க?'— அவனும் கேட்க முன்வரவில்லை.

ஆரம்பத்தில் தான் சமைத்ததை ஃபுட் கன்டெய்னரில் போட்டு மேஜை மீது அவனுக்காக வைத்துவிட்டு விரைவாகத் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, ரோவருக்கு உணவு தந்துவிட்டுத் தன் அறைக்குள் சென்று முடங்கிக் கொண்டாள் கஸ்தூரி.

பின்னர் அந்த வழக்கத்திலும் சில மாறுதல்களைச் செய்யத் தொடங்கினாள்.

''இன்னிக்குச் சிநேகிதி வீட்டிலே சாப்பிடப் போறேன். சமைக்கப் போவதில்லை.''



''இட்டிலிக்கு அரைத்த மாவு பிரிஜ்ஜிலே இருக்கு. காஸ் அடுப்பு இருக்கு. வேண்டுமானால் ஒரு சுடு வச்சுச் சாப்பிட்டுக்கலாம்.''

இந்த மாதிரி துண்டுக் கடிதங்களைக் கண்டு ஹர்ஷன் கோபத்தில் கொதித்துப் போனான்.

தானும் தினமும் வெளியிலேயே சாப்பிட்டுவிட்டு வீடு திரும்பத் தொடங்கினான். அதுவும் சில நாட்களில் அலுத்துப் போனது.

காரக் குழம்பு, மெத்தென்ற தோசை... இவைகளை நினைத்து நாக்கு தவித்தது.

இரவு உணவுக்குப்பின் தூக்க மயக்கத்திலே சோர்ந்து போய்த் தன் அறைக்குள் வரும்போது, படுக்கையைத் தட்டிக் கொட்டிச் சுத்தமான விரிப்புப் போட்டு கண்ணாடி கிளாஸில் தண்ணீரும் டம்ளரும், பிளாஸ்கில் சூடான பாலும் யாராவது தயாராக வைத்திருக்க மாட்டார்களா என்றுதான் ஏக்கமாக இருந்தது.

ஒருசில தினங்களுக்குப் பின் அம்மா மேஜை மேல் வைத்துப் போயிருந்த துண்டுக் கடிதத்தை எடுத்துப் படித்து விட்டு அவன் ஆத்திரத்தில் ஆடிப் போய் விட்டான்.

''நான் இப்போது உடல் நலனைக் கருதிப் பத்தியமாகச் சாப்பிடத் தொடங்கியிருக்கேன். எனக்குக் கஞ்சி மட்டும் போதும்—சம்பிரதாயமான சாப்பாட்டை விரும்புகிறவங்க தானே சமைத்துக் கொள்வது நலம்.''

'இந்தம்மா ரொம்பத்தான் விளையாடறாங்க... இருக்கட்டும். நானும் யார் என்று காட்டுகிறேன். ஒரு பெண்ணுக்குத் தான் குடும்பத்தை நிர்வகித்து வீட்டைக் கவனிக்கத் தெரி

யுமா? ஓர் ஆண் பிள்ளைக்குச் சமையல் அறையில் புகுந்து ஒரு கப் காபி கூடக் கலந்து சாப்பிடத் தெரியாதா? நளனும் பீமனும் ஆண்பிள்ளைகள்தான்... அம்மா மறக்க வேண்டாம்' என்று தனக்குள்ளே வெகுண்டபடி சமையலறையில் புகுந்து சுயம்பாகத்தில் ஈடுபட்டான்.

எத்தனையோ முறை கைகளைச் சுட்டுக் கொண்டு விட்டான். பால் பாத்திரத்தைக் கீழே தவற விட்டான். டிக்காஷனை தரையில் ஓடவிட்டான். அவசரமாகக் குக்கரைத் திறந்துவிட்டு அது ஆக்ரோஷமாக உணவைக் கூரை முகட்டில் வாரித் தெளிப்பதைக்கண்டு அரண்டு வெளியே ஓடினான்.

இத்தனையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு மௌனமாக விலகிப் போய்க் கொண்டிருந்த தாய் மீது அவனுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது.

சில மாதங்களில் வீட்டைப் போலவே தோட்டமும் சீர்குலைந்து போய்விட்டிருந்தது. முழங்கால் உயரத்துக்குப் புல் வளர்ந்து புதர்கள் மண்டித் தோட்டம் காடாகிப் போனதைக் கண்டு கவலைப்பட்டான். ஓர் ஓய்வு நாளன்று தோட்டத்தைச் சீராக்கத் தோட்ட வேலையாள் ஒருத்தனை அமர்த்தினான்.

மாதங்கி எப்படித்தான் அந்தத் தோட்டக்காரனிடம் வேலை வாங்கிச் சமாளித்தாளோ, தெரியாது.

காலையில் மண் வெட்டியைக் கையில் எடுக்கு முன் ''ஐயா பசிக்குது... காப்பி பலகாரம் ஏதாச்சும் இருந்தா கொடுங்க'' என்று வற்புறுத்தினான்.

ஹர்ஷனுக்கே சாப்பாடு திண்டாட்டமாக இருந்த நிலையில் பகல் உணவு வேறு கொடுக்கச் சொல்லித் தோட்டக்காரன் அடம் பிடித்தான்.



அரை குறையாக வேலையைச் செய்துவிட்டு இருபது ரூபாய்களை வாங்கிக் கொண்டு முணு முணுத்தபடி முண்டாசை இறுக்கிக் கட்டிக் கொண்டு வெளியேறிய தோட்டக்காரனுடன் அவன் விவாதம் செய்ய இயலவில்லை.

தொடர்ந்து தோட்டப் பராமரிப்பை ஒரேயடியாகக் கைவிட்டுவிட்டான்.

**அ**ன்று காலை திமர் காப்பியைத் தானே கலந்து குடித்து விட்டுத்தான் அலுவலகத்துக்குக் கிளம்பியிருந்தான். தேநீர் வேளையின்போது அருகிலிருக்கும் ஹோட்டலுக்குச் சென்று ஏதாவது சாப்பிடாவிட்டால் வேலை ஓடாது போன்றதொரு பசியில் அவன் எரிச்சலோடு ஃபைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

அலுவலகப் பையன், கொண்டு வந்த ஒரு சீட்டை மேஜைமேல் வைத்துவிட்டு, ''உங்களைப் பார்க்க ஒரு ஐயா வெகு நேரமாகக் காத்திட்டு இருக்கார்'' என்றான்.

''ரமேஷ்—நீலகண்டன்'' யார் இவன் என்று எண்ணியபடி சீட்டைப் பார்த்து முகத்தைச் சுளித்துவிட்டு, ''வரச்சொல்'' என்று உறுமினான்.

கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு ஏ.சி. அறைக்குள் புகுந்த அந்த வாலிபனை ஏற இறங்கப் பார்த்தான்.

எங்கேயோ பார்த்த நினைவு—திடீரென்று நெஞ்சில் நெருப்பாகக் கனன்றது.

அவன் மணக்கவிருந்த ஜயந்தியை அழைத்துக் கொண்டு கல்யாணத்துக்கு முதல் நாள் திருத்தணியிலிருந்து மறைந்து போன திருடன்... இல்லை இல்லை, தயாளந்தின் மதிப்புக்குரிய மருமகன்.

''உங்களுக்கு என்னை யார்னு...'' ரமேஷ் ஆரம்பிக்கு முன் எரிச்சலோடு கையை அமர்த்தினான். ''தெரியும், உட்காருங்கள், வந்த விசயம்'' என்று அழுத்தலாகக் கேட்டான்.

''என் தந்தையின் அறுபதாவது பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறோம். வீடு சிறியதாக இருப்பதால் விழாவை எங்கள் வீட்டருகிலுள்ள கல்யாண மண்டபத்திலே வச்சிருக்கோம். நீங்க கட்டாயம் வந்திருந்து கௌரவிக்க வேணும்னு நேரிடையாக அழைக்கத்தான் வந்தேன். பத்திரிகையை அலுவலகத்திலே கொண்டு வந்து கொடுக்கிறதைப்பத்தி மன்னிக்கணும். நான் ஓவர்டைம் வேலை செய்வதால் மாலை வீட்டுக்கு வந்து அம்மாவிடமோ, தங்களிடமோ நேரில் தர இயலவில்லை'' சொல்லிக் கொண்டே கையோடு கொண்டு வந்திருந்த தோல்பையைத் திறந்து அழைப்பிதழ் ஒன்றை எடுத்தான்.

''அம்மாவுக்கும் உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் சேர்த்து ஒரே பத்திரிகையைக் கொடுப்பது பற்றி உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே...'' என்று கேட்டுக் கொண்டு பேனாவை கையில் எடுத்தான் ரமேஷ் நீலகண்டன்.

'மனைவி' என்று அவன் குறிப்பிட்டவளை எண்ணிய போது சாட்டையால் அடித்தது போன்ற வேதனையில் முகத்தைச் சுளித்துக்கொண்டான் ஹர்ஷன்.

மாதங்கி இப்போது அவர்கள் வீட்டில் இல்லை என்ற சங்கதி தயானந்த் குடும்பத்தாருக்குத் தெரியாது போலல்லவா இந்த ரமேஷ் பேசுகிறான்? வம்பு எங்கே என்று அலையும் குடும்பமாச்சே அவனது மாமனார் வீடு. மனத்துக்குள்ளே வெகுண்டபடி மௌனமாகத் தலையை அசைத்தான்.

திரு. ஹர்ஷன் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் என்று எழுதி முகவரியைக் குறித்துப் பத்திரிகையை அவனிடம் நீட்டினான் ரமேஷ்.



பெற்றுக்கொண்ட ஹர்ஷன் ஒருகணம் திடுக்கிட்டுப் போனான்.

அந்தக் கையெழுத்து... மிகவும் பழக்கமானது போல் அடிமனத்தை உறுத்துவதை உணர்ந்தான்.

காப்பி வரவழைத்து வந்தவனை உபசரித்து அனுப்பிய பின்னும் பலமுறை அழைப்பிதழ் உறையின் மீதிருந்த கையெழுத்தை ஊன்றிப் பார்த்து மண்டையைக் குழப்பிக் கொண்டான்.

அன்று மாலை அவன் வீடு திரும்பியபோது கஸ்தூரி வீட்டில் இருக்கவில்லை. மாதர் சங்கக் கூட்டத்தில் பேசப் போயிருந்தாள். பிரிஜ்ஜிலிருந்த தோசை மாவை எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தான் ஹர்ஷன். தோசைக் கல் சூடானதும் மாவை வார்த்து எண்ணெயை ஓரத்தில் ஊற்றிக் கொண்டிருந்தபோது திடீரென்று அவன் நினைவில் பொறி தட்டியது.

அப்படியே மாடிக்கு ஓடி அலமாரியில் புத்தகங்களின் இடுக்கிலே ஒரு பக்கமாக பத்திரமாக வைத்திருந்த அந்த மொட்டைக் கடிதத்தை உறையோடு எடுத்துக்கொண்டு கீழே ஓடி வந்தான்.

விளக்கு வெளிச்சத்தில் அழைப்பிதழ் முகவரியில் காணப்பட்ட கையெழுத்தையும் அந்த மொட்டைக் கடிதத்தின் உறை மீது காணப்பட்ட கையெழுத்தையும் ஊன்றிக் கவனித்தான்.

மார்பு படபடவென்று துடிக்கக் கோபத்தில் மனம் நெருப்பாகக் காய்ந்தது. அடுப்பிலே அதே சமயம் கல்மீது அவன் வார்த்த தோசையின் தீய்ந்த மணம் வீடு முழுவதும் பரவியது.

# 18

பல் துலக்கிவிட்டு முகத்தைக் கழுவிக்கொண்டு கலைந்துவிட்ட முடியை சீப்பால் அழுத்தி வாரியபடி தன் முகத்தை வாஷ்பேசினுக்கு மேல் தெரிந்த கண்ணாடியில் கவனித்தான் ஹர்ஷன்.

தலை பாரமாகக் கனத்தது. இரவு முழுவதும் சரியான தூக்கமின்றி படுக்கை மீது பற்பல சிந்தித்தபடி புரண்டதன் விளைவு... முகம் உப்பி, கண்கள் சிவந்து ஒரே இரவில் சில ஆண்டுகளைத் தாண்டிவிட்ட முதிர்ச்சி தெரிந்தது.

கீழ் உதட்டை அழுத்திக் கடித்துக்கொண்டு தன் உருவத்தையே கோபத்துடன் வெறித்தான்.

திடீரென்று அவன் மூளையில் மறுபடியும் ஒரு நினைப்பு மின்னல் அடித்தது.

அவனது திருமணம்தான் வேடிக்கையாகி விட்டதே ஒழிய, அதற்கென வந்து குவிந்த பரிசுகள், வாழ்த்துக் கடிதங்கள் ஒன்றும் குறைச்சலாக இருக்கவில்லை.

அம்மாவுக்காகவும், அவனுக்காகவும் இரு பக்கங்களிலிருந்தும் குவிந்த வாழ்த்துக்கள் பரிசுகள்—ஏராளமாகத் தானிருந்தன.

மணநாள் அன்றே கோபத்தில் வெளியூருக்குப் புறப்பட்டுப் போய்விட்டிருந்தான். திரும்பி வந்தவன் பார்வைக்காக அம்மா அவைகளை அவனது அறையில் ஒரு மேஜை மீது வைத்திருந்தாள்.

'பார், உனக்கு எத்தனை பரிசுகளும் பாராட்டுக்களும்!' அம்மா அவைகளைக் காட்டித் தான் கல்யாணப் பெண்ணை மாற்றிய தவறை நியாயப்படுத்த முயல்கிறாளோ என்று அப்போது அவனுக்கு எரிச்சல் வந்தது உண்மை.



இரவு உறக்கம் வராதபோது ஒருநாள் அந்த வாழ்த்துக் கட்டை அவிழ்த்து இந்த அழகான கல்யாணத்துக்குப் பாராட்டுத் தெரிவித்த பிரகஸ்பதிகளின் பெயரைத் தெரிந்து கொள்ள விழைந்தான் ஹர்ஷன்.

அவர்களில் அசலாம்பிகை கல்லூரித் தலைவி ராதிகாவின் வாழ்த்துச் செய்தியைப் படித்த நினைப்புத்தான் இப்போது சட்டென உதயமாகியது. உடனே சங்கிலித் தொடராக நினைவுகள் கோவையாக மனத்தில் மாலையிட்டன.

ஜயந்தியைப் பெண் பார்க்கப் போனபோது தயானந்த் தன் மகள் அசலாம்பிகை கல்லூரியில் படித்தவள் என்று பெருமையடித்துக் கொண்டது.

தாய் தந்தையில்லாது அநாதையாகிவிட்ட தம்பி மகளைத் தாமே வளர்த்து அவளையும் அதே கல்லூரியில் படிப்புக் கொடுத்த தமது தாராளப் போக்கைத் தம்பட்டம் அடித்தது.

எல்லாமே நினைவில் சுழன்றது. அத்துடன் கூடவே ஒரு யோசனை உதயமாகியது. பரபரப்புடன் அலுவலகத்துக்குப் புறப்பட ஆயத்தமானான்.

தயக்கமாகத்தான் இருந்தது. எப்படிக் கேட்பது? அதுவும் இதுபோல...? ஆனால் ஆவல் அவனது வெட்கத்தை மீறியது.

அலுவலகத்திலிருந்து தொலைபேசி எண்களைச் சுழற்றினான்.

''ஆமாம்! அசலாம்பிகை கல்லூரித் தலைவி ராதிகா தான் பேசறேன்... நீங்க...?'' மறுமுனையிலிருந்து ஒலித்த குரல் கண்டிப்புடன் பேசியதும் ஒருகணம் அசந்து விட்டான்.

''உங்க சிநேகிதி கஸ்தூரி அம்மாவின் மகன் ஹர்ஷன் ... உங்ககிட்ட பேசணும்'' தடுமாறினான்.

''ஹர்ஷன்! உன் மனைவி மாதங்கிக்கு கல்லூரியில் இடம் கேட்கவா? இனிமே அடுத்த வருஷம்தானே முடியும்?''

''இல்லே மேடம்! மாதங்கியைப் பத்திப் பேசணும்... வந்து—'' அவன் முடிக்குமுன் ராதிகா குறுக்கிட்டாள்.

''எங்க வீடு தெரியுமில்லையா? சாயங்காலமா வீட்டுப் பக்கமா வா... நிதானமா பேசலாம்...'' போனை வைத்து விட்டாள்.

அன்று மாலை ஆபீசிலிருந்து வீடு திரும்புமுன் முதல் வேலையாக ராதிகாவின் வீட்டை அலைந்து கண்டுபிடித்தான்.

தெரு ஓரத்திலேயே காரை நிறுத்திப் பூட்டிவிட்டு, கம்பிக் கதவின் மேல் பொருந்தியிருந்த அழைப்பு மணியை அழுத்தினான். அச்சத்தில் அவன் மனம் படபடத்தது.

ராதிகாவே வந்து கதவைத் திறந்தாள். ''வா வா! இது தெரு வீடு. கம்பித் தடுப்புக்குள்ளே பாதுகாப்பாக இப்படி ஒரு சிறை!'' வேடிக்கையாகக் கூறியபடி அவனை வரவேற்றாள்.

''நீ சின்னவனா இருந்தப்ப பார்த்த நினைப்பு, அடையாளமே தெரியாம வளர்ந்திட்டே. கல்யாணத்தையும் திருத்தணியிலே வச்சுக்கொண்டே, போகட்டும், உன் மூக்குத்தான் கஸ்தூரி பிள்ளைன்னு சொல்லுதே!'' கம்பிக் கதவைத் தாளிட்டபடி அவனைப் பின் தொடர்ந்தாள்.

வெகுகாலம் அடைத்து வைக்கப்பட்டது போன்ற மக்கல் வாசனையும் வெளிச்சக்குறைவுமான முன்னறை. தாத்தா காலத்து உயரமானதொரு நாற்காலி, அதில் அவனை அமரச் சொல்லி உபசரித்தாள். விளக்கைப் போட்டுவிட்டுத் தானும் எதிரே அமர்ந்தாள்.



''அம்மா! டிபன் தயாரா?'' உட்கார்ந்தபடியே உரக்கக் கேட்டாள்.

ஒருசில விநாடிகளில் தட்டுக்களில் பக்கோடாவும், டம்ளரிலே காப்பியும் சுமந்தபடி சமையற்கார அம்மாள் தோன்றினாள். அவற்றை வைத்துவிட்டு அரை நொடியில் மாயமானாள்.

''இப்பச் சொல்லு ஹர்ஷன்! மாதங்கி பத்தி என்னவோ பேசணும்னியே...'' பக்கோடாவை கொறித்தபடி உற்சாகமாக ஆரம்பித்தாள் ராதிகா.

ஹர்ஷன் வார்த்தைகளை பக்கோடாவோடு மென்று தின்றான். தேர்வு அதிகாரி முன் உட்கார்ந்திருப்பது போன்ற ஒரு பயத்திலே சரிவரப் பேசக்கூட வரவில்லை.

கல்யாணத்திலே பெண்ணை மாத்தியதால் கோபமடைந்தது முதல், மாதங்கியை அவன் ஒதுக்கியது—ஒரே வீட்டில் விரோதிகள் போல் வாழ்ந்தது, அம்மாவுக்கும் அவனுக்கும் அதனால் ஏற்பட்ட மனஸ்தாபம் வரை கூறி முடித்தவன், ''எனக்கே மனம் மாறும்போலக் கொஞ்சம் இடம் கொடுத்த சமயம் இந்தக் கடிதமும் வந்தது'' என்றான். கையில் தயாராக வைத்திருந்த மொட்டைக் கடிதத்தையும் எடுத்து அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கி வேகமாகப் படித்து முடித்த ராதிகா வெறுப்புடன் அதை அருகிலிருந்த மேசை மீது விசிறிப் போட்டாள்.

''ஹர்ஷன், நீ ரொம்பப் படித்தவன், ஒரு பெரிய நிறுவனத்தின் பொறுப்பான பதவியில் உயர் அதிகாரியாக இருப்பவன். உன் கீழ் இருக்கிற அத்தனை பேரையும் கட்டிச் சமாளிக்கத் தெரிந்த புத்திசாலி. அப்படியெல்லாம் இருந்தும் இன்னும் விவேகமும் உலக அனுபவமும் ஏற்படாதது

தான் ஆச்சரியமாக இருக்கு. கேவலம் ஒரு மொட்டைக் கடிதத்தை நம்பி...''

ஹர்ஷன் முகத்தில் அசடு தட்டியது.

''விஷயம் உண்மையாக இருந்தால் அந்த நண்பன் உனக்கு நேரிலேயே சொல்லி இருக்கலாமே. எதற்காகத் தன் பெயரை மறைச்சிட்டு, உண்மையான தன் பெயரைச் சொல்லப் பயம், தயக்கம், கோழைத்தனம், அதனால் கையெழுத்துப் போடவில்லை. அப்படியிருக்க, கடிதத்திலே கண்ட விஷயம் மட்டும் உண்மைன்னு எப்படி நம்பமுடியும்? சிந்தித்துப் பார்! உன் நிர்வாகத்திலே, உன் கீழ் வேலை செய்யும் ஒருவர்மேல் இப்படி ஓர் அபத்தமான கடிதம் வந்தால் நீ என்ன நடவடிக்கை எடுப்பாய்?''

ஹர்ஷன் மௌனம் சாதித்தான்.

''அவனை வேலையிலிருந்து நீக்கிவிடுவாயா?''

அவன் முகம் சிவந்து போனான்.

''போகட்டும். மாதங்கி இப்போ எப்படி இருக்கா?'' என்று படபடவென்று கேட்டாள்.

''அவள் இப்ப எங்ககூட இல்லே.

''ஆமாம்! இருக்கக் கூடாதுன்னு நான் கண்டிப்பா சொன்னதால் அம்மா மனம் கசந்துபோய் அவளை எங்கேயோ அனுப்பிட்டாங்க. அவ பெரியப்பா வீட்டிலேயும் இல்லைன்னு தெரியும்... எங்கேன்னு அம்மாகிட்ட நான் கேட்கலை.''

ராதிகாவின் முகம் கோபத்தால் பளபளத்தது. ''ஹர்ஷன்! உங்கம்மா ஸ்தானத்தில் நான் சொல்கிறேன். நீ ஒரு படித்த முட்டாள்! உனக்கு வாழ்க்கை கொடுத்த அதிசயமான



சந்தர்ப்பத்தைச் சட்டென்று பிடித்துக் கொண்டு வாழத் தெரியாத மடையன் நீ. மாதங்கியை எனக்கு நன்றாகத் தெரியும். அவளைப் போல அடக்கமான குணவதியான புத்திசாலிப் பெண்ணை என் கல்லூரி வாழ்க்கையிலே நான் அதிகம் சந்தித்ததில்லை.

''எங்கள் கல்லூரி விழாவிலே அவள் பிரார்த்தனை கீதம் பாடினால் அப்படியே மெய்மறந்து போவோம். அப்படி ஒரு குரல். அவள் வளர்ந்த வீட்டில் அன்போ, ஆதரவோ கிடையாதுன்னு எனக்கு ஓரளவு தெரியும். முறையான சங்கீதப் பயிற்சிக்கு வகையில்லை. ஆனால் கிடைத்த ஒரு துளி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அதில் அமைதியாக வாழத் தெரிந்தவள் என்பதை அவளது சங்கீதப் பயிற்சி மூலம் தெரிந்து கொண்டேன். பொய் பேசத் தெரியாத, கபடமற்ற பெண். பொறுப்புணர்ச்சி அதிகம் உள்ளவள். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்.

''ஒருமுறை கல்லூரி ஆண்டுவிழா நடந்த சமயம் பாத்திரங்களைக் கணக்கெடுத்து ஒப்படைக்கும் பொறுப்பு மாதங்கியுடையது.

''ஒரு கண்ணாடி டம்ளர் கணக்கில் குறைந்தது. நான் கேட்பதற்கு முன்பே சொன்னாள்: 'மேடம் கை தவறி உடைச்சிட்டேன். விலையைக் கட்டிடறேன், மன்னிச்சிடுங்க.''

''எனக்கு ஒரே வியப்பு! வேண்டுமானால், பழியை யார் மீதும் சுமத்தியிருக்கலாமே. நானும் நம்பியிருப்பேன். அவள் உண்மையை ஒப்புக்கொண்ட அந்த வெளிப்படையான பேச்சு என்னைக் கவர்ந்துவிட்டது. அப்படிப்பட்ட பெண்ணை கஸ்தூரி மருமகளாக்கிக் கொண்டதில் என் தோழி ரொம்பக் கொடுத்து வைத்தவள் என்று நினைத்தேன். ஆனால் நீயோ... அந்தக் குழந்தைக்கு எப்படிப்பட்ட கொடுமையை

இழைச்சிருக்கே! நினைக்கவே என் நெஞ்சு கொதிக்கிறது'' உக்கிரமாக அவனைப் பார்த்தாள் ராதிகா.

ஹர்ஷன் தலையைக் குனிந்தபடி ''எனக்கு மாதங்கியைப் பற்றி விவரம் தெரியாததால், முதலிலேயே யாரிடமும் கேட்காததனால்...'' என்று தடுமாறினான்.

'''எனக்கு எரிச்சலை ஊட்டாதே ஹர்ஷன்! நீ என்ன செய்திருக்கணும்னு கேட்டா உண்மையை மாதங்கியிடமே கேட்டுத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அதைவிட்டு, மூன்றாவது மனிதர் சொன்னதைக் கேட்ட நீ ஒரு முட்டாள். மாதங்கியின் தோழிகளைக் கேட்டால், அவளைப்பற்றி ஆகா, ஓகோ என்று புகழ்வார்கள். அவளைப் பிடிக்காதவர்களைக் கேட்டால், 'அவளா...? அவள் ஒரு'—அப்பட்டமாகப் புனைந்து கூறுவார்கள். உண்மையை நீயே உணர முன் வந்திருக்கவேண்டும். மத்தவர்கள் சொல்லித் தெரிஞ்சுகொள்ள வேண்டிய விசயம் இல்லே இது'' சாட்டையாக அவன் மனத்தைச் சாடினாள்.

''மன்னிச்சுக்கோங்க மேடம். நான் செய்த தவறுகளை எப்படித் திருத்திக்கொள்றதுன்னு முயல்கிறேன்'' காப்பி டிபனை முடித்துவிட்டுத் தட்டுத்தடுமாறியபடி அந்தக் கடிதத்தைக் கவனமாகப் பையில் போட்டபடி வெளியேறினான்.

இரண்டு நாட்கள் சென்றதும் அவன் மனம் சீராக இல்லாமல் கொதித்துக்கொண்டே இருந்தது. ராதிகா அவனை வார்த்தைகளால் சுட்டது முதல் முள்மேல் இருப்பவன் போல் தவிக்க ஆரம்பித்தான். இந்த மொட்டைக் கடிதத்துக்கு ஒரு தீர்வு காணவேண்டும்.

அன்று மாலை உட்லண்ட்ஸ் டிரைவ் இன்னில் ரமேஷை முன்கூட்டியே அழைத்திருந்தான். பையில் மொட்டைக்



கடிதம் உறுத்த, மனத்தில் அதைவிடப் பெரும் உறுத்தலோடு அலுவலகத்திலிருந்து புறப்பட்டான்.

உட்லண்ட்ஸ் வாசலிலேயே ரமேஷ் அவனைச் சந்தித்துப் புன்னகைத்தான். தொங்கு மீசையும், ஒல்லியான உருவமுமாக அவனைப் பார்த்த ஹர்ஷனுக்கு உள்ளூர ஆத்திரம். 'இவனா இப்படி ஒரு வேலையை செய்தான்?'

டிபன் காப்பி முடிந்ததும் 'பில்' என்று ஹர்ஷன் உத்தரவிட்டான். பிறகு ரமேஷ் பக்கம் திரும்பி ''மிஸ்டர் ரமேஷ், இந்தக் கடிதம் நீங்க எழுதினதுதானே?'' என்றான் சட்டப் பையிலிருந்து உருவிய கடிதத்தைப் பிடித்தபடி.

ரமேஷின் முகம் இருண்டது. ஏதோ பேச முயன்றான். ''பொய் சொல்ல வேணாம். அன்னிக்கு அழைப்பிதழில் நீங்க எழுதினீங்களே அதே எழுத்துதான் இதிலேயும் இருக்கு. எனக்கு உண்மை தெரியணும். இல்லே, இதைக் கையெழுத்து நிபுணர் வரை கொண்டு போய், போலீஸ் கேஸாக்கிற சாமர்த்தியம் எனக்குண்டு'' மிரட்டினான்.

''தயவு செஞ்சு மிஸ்டர் ஹர்ஷன், என்னை... என்னை மன்னிச்சுடுங்க.''

''உம், சொல்லுங்க!''

''இது என் மாமியார் சொல்லிக் கொடுத்து என் மனைவி மூலமா என்னை எழுத வச்சது. அவங்களுக்கு மாதங்கி மேலே பொறாமை. ஒருமுறை மாதங்கியிடமே உங்களுக்கு ஒரு விபத்தில் நடந்த கோளாறுல தாம்பத்திய வாழ்க்கைக்குத் தகுதியில்லாம ஆகிவிட்டதா சொன்னாங்களாம். ஆனா அவள் அதை அசட்டை செய்திட்டா. அதனால்...''

''இப்படி ஒரு குழப்பம் செய்யப் பார்த்தீங்க இல்லையா மிஸ்டர் ரமேஷ்? இவங்க தான் சொன்னா, உங்க புத்தி

எங்கே போச்சு? இதனால் எத்தனை விபரீதம் ஏற்படும்னு யோசிச்சுப் பார்த்தீங்களா? நீங்கள்ளாம்...'' உறுமியபடி ரமேஷின் சட்டையைப் பிடிக்கப் போனான் ஹர்ஷன்.

''ஸார் பில்!'' குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பியவன் முகத்தருகே பையன் பில்லை நீட்டவே அதன் மீது சட்டென்று பணத்தை எடுத்து வைத்தான். பையன் அப்பால் நகர்ந்ததும் ரமேஷை மீண்டும் உறுத்துப் பார்த்தான்.

''பிழைச்சிப் போ... இனி இப்படி ஏதாச்சும் உங்க மனுஷா செஞ்சா அத்தனை பேரும் போலீஸ் ஸ்டேஷனில் இருப்பீங்க, ஜாக்கிரதை!'' அடிக் குரலில் அதட்டி விட்டுச் சில்லறைக்குக் காத்திராது சட்டென்று எழுந்து காரைக் கிளப்பிக் கொண்டு கன வேகமாகப் புறப்பட்டான்.

## 19

அன்று மாலை வேலையினின்று திரும்பிய கஸ்தூரி மிகவும் களைப்புடன் இருந்தாள். அவளது அலுவலகத்திலே அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தலைமைப் பதவி —அவளது பகுதியின் தலைவி என்ற அந்தஸ்து—சம்பள உயர்வு—சலுகை எல்லாமே, அவளுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் கிட்டியிருந்தது.

வேலையினின்று ஒய்வு பெற்றுக் கொள்ளு முன் அந்தப் பகுதியின் தலைவியாக... அலுவலகத்தின் அந்த ஏ.சி. அறை சுழல் நாற்காலி மீது அமர்ந்தபடி அதிகாரம் செய்ய வேண்டும் என்றதோர் ஆசை அவளுக்கு இருக்கத்தான் செய்தது.

ஹர்ஷனின் திருமணத்திற்கு முன்னர்தான் அந்தப் பதவிக்காக அவளது மனம் பறந்தது. முடிவில் அந்த ஆசையும் பூர்த்தியாகிவிட்டது.



வேலையினின்று ஒய்வடையும் முன்பே அந்தப் பகுதி ஊழியர்கள் அனைவரும் 'மேடம், மேடம்' என்று அவளுக்குச் சலாம் போட்டபடி ஓடிவர—வெகு மிடுக்காக நடந்து மெத்தென்று நாற்காலியில் உட்காரும் அந்தஸ்து கிட்டியிருக்கிறது.

ஆனால் அதை எதிர்பார்த்த ஆனந்தம்... இப்போது துளியளவுகூட ஏன் அவளிடம் இல்லை? மனத்தில் எந்த வித சலனமும் இல்லையே? மாறாக அதே பதவி இப்போது பெரும் சுமையாகத்தான் தோன்றியது.

முன்னை விட எக்கச்சக்கமான பொறுப்பு. கண நேரத்தில் பல லட்ச ரூபாய்கள் பற்றிய கணக்கு வழக்குகளுக்கு முடிவு எடுக்க வேண்டிய சிக்கலானதொரு நிலைமை.

வீட்டுக்குச் சாமான்கள் வாங்கவே, இரண்டு மூன்று நாட்கள் சிந்தித்துச் செயல்பட்டுப் பழகியவள் ஆயிற்றே அவள்! இப்பொழுது விநாடியில் முடிவு செய்ய வேண்டும் என்ற நிலை. பொறுப்புகளால் அவளைக் கட்டுப்படுத்தக் கூடிய கடிதங்களில் விரைவாக நாள் முழுவதும் கையெழுத்திட்டுக் கழுகு போல் கூர்மையான பார்வையில் கணக்குகளை அலசி முடிவெடுத்து, அப்பப்பா... யாருக்கு வேணும் இந்தத் தலைமைப் பதவி? அவள் மனத்துள் 'ஹோ' என்ற அலறல்?

நாள் முழுவதும் கடுமையாக உழைத்து விட்டுக் களைத்துச் சோர்ந்து வருகிறவள் முன் வீட்டின் நிர்வாகம் பூதமாக நின்று பயமுறுத்தவே, அவள் ஒரேயடியாக மனம் நொறுங்கிப் போய்விட்டிருந்தாள்.

குடும்பத் தலைவி என்னும் பதவியிலும், ஏகப்பட்ட பொறுப்புகள் இருப்பதால்தான் விஷயம் தெரிஞ்சவர்கள் அதையும் ஓர் உத்தியோகம் என்கிறார்கள்.

வெளியிலும் வேலை செய்துவிட்டு வீட்டிலும் வேலை செய்ய நேர்ந்தால், எந்தப் பெண்ணால்தான் திறமையாக நிர்வாகம் செய்ய முடியும்?

பால் குக்கரில் வேலைக்காரி காய்ச்சி வைத்துவிட்டுப் போன பால் சூடாகவே இருந்தது.

அவள் தள்ளாடியபடி சமையல் அறைக்குள் புகுந்து பாலை ஒரு டம்ளரில் சரித்துக் கொண்டாள். நெஸ்க் காப்பித் தூளையும் சிறிது சர்க்கரையையும் போட்டுக் கலக்கி எடுத்துக் கொண்டு முன்னறையில் வந்து உட்கார்ந்தாள். மாதங்கியின் நினைப்பும், அவளது பரிவான உபசரணையும் அவள் மனத்தில் நிழலாடின. அப்போதுதான் கறந்த பாலின் காய்ச்சிய மணத்துடன் சுடச் சுட இறக்கிய டிக்காஷனைக் கலந்து அளவோடு சர்க்கரையிட்டு நுரை பொங்க ஆற்றிப் பதமாக அவள் அன்போடு தம்ளரில் எடுத்து வருவாளே, அப்போது வீசும் காப்பியின் ரம்யமான நெடி, வீடு முழுவதும் சூழ்ந்து கொள்ளும். சிரித்தவண்ணம் அன்புடன் மாதங்கி தன் கையால் கொடுத்த நாட்களை நினைவு கூர்ந்தபடி கையிலிருந்த காப்பியை விஷம் போல குடித்து முடித்தாள் அவள்.

மனதில் துயரம் சுமையாக அழுத்தியது.

மாதங்கி அவர்களுடன் வீட்டிலிருந்தால் தன் மாமியாருக்குப் பதவி உயர்ந்துவிட்ட சங்கதியைக் கேட்டதும் எப்படி மகிழ்ந்து போயிருப்பாள்.

"அத்தே! பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்யக் குடுக்கணும். இன்னிக்கி, உங்களுக்கும் உங்க மகனுக்கும் பிடிச்ச சாப்பாடு, பாயசம் வடையோடு ஜமாய்க்கணும்..." ஆர்ப்பரித்திருப்பாள். மாமியாரைக் கொண்டாடி ஆனந்த வெள்ளத்தில் முழுக்காட்டியிருப்பாள்.



'சூடு ஒரு சுசி' என்றவன் வாயில் சர்க்கரையைத் தான் போட வேண்டும்.

இந்தப் பதவி அவளிருக்கும் போது வந்திருக்க வேண்டியது! ஆறிப்போன காபி போல... இப்போது பொறுப்பு வேண்டாம் என்று உதறித் தள்ளும் சமயம், அவளாகவே நகர்ந்து கொண்டிருக்கும் நேரத்தில், பளுவான பாறாங்கல் போல் தலை மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

மகனிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டதால் அவனிடமும் தெரிவிக்க முடியவில்லை. மகிழ்ச்சியைத் தருவதற்குப் பதில் மனச் சுமையைத் தரும் இந்தப் பதவி அவளுக்குத் தேவைதானா?

டம்ளரை மேஜை மேல் வைக்க எழுந்த போது தான் வேலைக்காரி அன்று தபாலில் வந்த ஒரு கடிதத்தை வைத்திருப்பதைக் கவனித்தாள். பூச்சாடி அருகே அவளது பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த உறை மீது குண்டு குண்டான கையெழுத்து... நெஞ்சு படபடத்தது. மாதங்கி எழுதியிருக்கிறாள்.

அவளது மகளைப் போன்றவள். அவளது கடிதத்துக்குப் பதில் எழுதியிருக்கிறாள். பரபரப்புடன் உறையைக் கிழித்துக் கடிதத்தை உருவிப் படித்தாள்.

அன்புள்ள அத்தை அவர்களுக்கு,

வணக்கம் பல, உங்களுடைய கடிதத்தைக் கண்டதும் எனக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டது. அயரா உழைப்புக்கு முடிவில் பலன் கிடைத்து விட்டிருக்கிறது. அலுவலகத்தில் அந்தப் பகுதிக்கே நீங்கள் தலைவராகச் செயல்படத் தொடங்கி விட்டீர்கள் என்பதை அறிந்து நான் பெருமையில்

பூரித்துப் போனேன். எனது மனமார்ந்த பாராட்டுகள்.

உங்களுக்கும் நான் ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்கப் போகிறேன். நான் எடுத்துக் கொண்ட 'டிப்ளமா கோர்ஸ்'ஸில் பாஸ் செய்துவிட்டேன். மிக அதிக மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறேன். அப்படி முதலாவதாகத் தேறிய முதல் பத்து மாணவிகளை இந்தப் பயிற்சிக் கல்லூரியே நல்ல கம்பெனிகளுக்கு வேலைகளுக்குச் சிபாரிசு செய்து ஏற்பாடு செய்கின்றது.

அதனால், இரண்டு மூன்று கம்பெனிகளில் அதி விரைவிலேயே எனக்கு நல்லதொரு வேலையும் கிடைத்துவிடும். அவற்றில், நல்ல சம்பளம் தரும் உயர்தரக் கம்பெனியைத் தேர்ந்தெடுக்கலாம் என்றிருக்கிறேன். நர்மதா அம்மாளும் அதையேதான் சொல்கிறார்கள்.

அதுவரை நர்மதா அம்மாவின் 'பொட்டிக்'கைக் கவனித்து அவர்களுக்கு உதவுவது என்ற தீர்மானத்தில் இருக்கிறேன். ஹாஸ்டலில் சென்று தனியே வசிப்பது கூடாது என்று இவர்கள் வற்புறுத்துவதால், இங்கேயே தங்கி, இவர்களுக்குக் கூடமாட வீட்டு வேலைகளில் கொஞ்சம் உதவி செய்யலாம் என்று எண்ணுகிறேன். ஒழிந்த வேளைகளில் அவருக்குக் கார் ஓட்டவும் செய்வேன். இதனால் இனாமாக உணவும், தங்க இடமும் நர்மதா அம்மாவிடம் கிடைக்கும்.

நீங்கள் இனிமேல் என் சாப்பாட்டுக்காக மாதா மாதம் அனுப்பும் தொகை தேவையிராது.



அத்தை! என்னையே நான் காத்துக் கொள்வதற்கு இப்படி ஒரு தொழிற்கல்வியைப் பயில எனக்கு நல்லதொரு வாய்ப்பை நீங்கள் அளித்து உதவினீர்கள். அதை நான் மறக்கவே மாட்டேன்.

கொஞ்ச நாட்களாகவே நான் தீவிரமாகவே யோசிக்கிறேன். இப்போது என் விருப்பத்தினால் எழுந்த ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்.

அத்தை! இது சமயம் உங்களிடம் ஓர் உண்மையை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஜயந்தியைப் பெண் பார்க்க வந்தபோது எனக்கு உங்கள் மகனை மிகவும் பிடித்துவிட்டிருந்தது. ஜயந்தி அக்காவின் இடத்தில் நான் இருக்கக் கூடாதா என்று அது சமயம் நான் ஏங்கிப் போனேன்! இது ஒரு தலைக் காதல்தான்! உங்கள் மகனுக்கு ஜயந்தி கிடைக்கவில்லை என்று ஏமாற்றம். அதனால் ஏற்பட்ட ஆத்திரம்தான்—என்மீது வெறுப்பாக மாறியது.

இப்போது தொலைவில் இருந்தபடி சிந்தித்துப் பார்த்ததால், தெளிவாகத் தெரிகிறது. உங்கள் மகனது உணர்ச்சி நியாயமானதே.

ஆண், பெண் யாராயிருந்தாலும் என்ன? திருமணம் என்பதில் மனப்பூர்வமான ஈடுபாடு இல்லாது, வற்புறுத்தப்படுவது தவறுதான். என் விஷயத்தில் நான் புரிந்து கொண்ட உண்மை இதுதான். இதற்காக நான் தங்களையோ அல்லது என் கணவரையோ குற்றம் கூறவில்லை. பெரியப்பா தம் மகளுக்குப் பதிலாக மணையில் உட்காரும்படி என்னைக் கேட்டுக் கொண்டபோது நானே மறுத்திருக்கலாமே? அவரது மகளைப் போலவே தாலி கட்டும் முன்பு மாயமாக மறைந்திருக்கலாமே... ஹர்ஷனை எனக்குப் பிடித்

திருந்தது. ஆனால் அவருக்கு என்னைப் பிடிக்காமல் போய்விடும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை. உங்கள் அன்பும், ஆதரவும் என்னைப் பொறுமையுடன் இருக்கச் செய்தது. எப்படியும் நிலைமை மாறிவிடும் என்றுதான் இதுநாள் வரை இருந்தேன். ஆனால் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? அதனால் இந்தத் துயர அனு பவத்தை நான் மேலும் நீடித்துக்கொண்டிருக்க விரும்பவில்லை.

கணவனும், மனைவியும் ஒரு குறித்த கால வரம்பு வரை பிரிந்திருந்து—பின்னர் இருவரும் ஒப்புக் கொண்டால் எளிதில் விவாகரத்துப் பெற்றுவிடலாம் என்கிறார்கள்—இதைப்பற்றித் தாங்கள் ஒரு வக்கீலைக் கலந்து ஆலோசித்து ஆவன செய்தால் நல்லது. ஹர்ஷனுக்கும் இந்த விருப்பமில்லாத விவாக பந்தத் திலிருந்து விடுதலை கிடைக்கும். நானே அவருக்கு விடுதலை அளிக்கப் பூரண சம்மதம் தெரிவித்து விட்டதாக அவரிடம் சொல்லவும்.

இனி, இப்படி ஒரு தீர்மானம் மேற்கொண்டு விட்டதால், என் பெயருக்கு தாங்கள் எழுதி வைத் துள்ள சொத்து விவரம் அடங்கிய உயிலையும், வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்துச் சாவியையும் தபால் மூல மாகவோ அல்லது நர்மதா அம்மாள் சென்னைக்கு வரும்போதோ அனுப்பிவிட எண்ணுகிறேன்.

எனது வருங்காலத்துக்கு வழி காட்டினீர்கள். அதற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் மிகுந்த தாராள மனத்துடன் நகை, ஆஸ்தி யாவும் கொடுத்தீர்கள். ஆனால், மருமகள் என்ற ஸ்தானம் எனக்கில்லாதபோது அவைகளைப் பெற்றுக்



கொண்டு வாழ்வது மிகவும் தவறு. அவற்றைத் திரும்ப உங்களிடமே ஒப்படைப்பதுதான் முறை என்று தோன்றியதால், திருப்பத் துணிந்துவிட்டேன். மன்னித்துக்கொள்ளுங்கள்.

தங்கள் மகளிடம் கலந்து ஆலோசியுங்கள். ஆவன செய்வீர்கள் என எண்ணும்,

என்றும் தங்கள் மாதங்கி.

அந்த நீண்ட கடிதத்தை முதலில் படித்த கஸ்தூரி நிலை கலங்கிப் போனாள். மீண்டும் ஒருமுறை ஆழ்ந்து அதைப் படித்தாள். படித்து முடிப்பதற்குள் நெஞ்சைத் துயரம் இறுக் கியது. கண்களில் நீர் புரள, விம்மலாகத் துயரம் சிதற கடிதத் தையே வெறித்தாள் அவள். மூளைக்குள், வண்டு குடை வதுபோல் துன்பம் ரீங்காரம் செய்தது.

''ஆ இதென்ன வீடே சுழல்வதுபோல்''—கஸ்தூரி மயக்கமாகத் 'தடால்' என முன்னறைக் கம்பளத்தின் மீது நினைவிழந்து விழுந்துவிட்டாள்.

## 20

காரேஜில் அம்மாவின் கார் நிற்பதை ஹர்ஷன் கவனித்தான். தனது காரையும் உள்ளே நிறுத்திக் கதவை சாத்திப் பூட்டிவிட்டு, வீட்டை நோக்கி நடந்தவனுக்கு ஒரே வியப்பு.

இருட்டத் துவங்கிவிட்டது. ஆனால் வராந்தாவில்கூட விளக்கு இருக்கவில்லை. அவசரமாகத் தன் சாவியைக் கொண்டு கதவைத் திறந்தபோதுதான் கவனித்தான்.

ரோவர் கதவருகே 'ஙொய் ஙொய்' என்று புலம்பிய படி படுத்துக் கிடந்தது. வழக்கம்போல் உற்சாகத்துடன்

அவனைக் கண்டு குதித்தோடி வரவில்லை. நடை விளக்கைப் போட்டுவிட்டுச் சுற்று முற்றும் பார்வையிட்டான்.

வீட்டில் நிலவிநின்ற இறுக்கமான அமைதி அவனைக் கலவரத்தில் ஆழ்த்தியது. என்ன ஆயிற்று? இந்த அம்மா எங்கே?

முன்னறையிலிருந்து லேசான முனகலைக் கேட்டுத் திகைத்துப் போனான். அதற்குள் அவனையும் தள்ளிக் கொண்டு ரோவர் ஒரே பாய்ச்சலில் அந்த அறைக்குள் ஓடியது.

வாயிற் கதவை மூடிவிட்டு வேகமாக வந்து முன்னறை விளக்கைப் போட்டவன் "அம்மா!" என்று அலறி விட்டான்.

நாற்காலி ஒன்றின் கையைப் பிடித்து எழ முயன்ற கஸ்தூரியின் முன் நெற்றியில் பட்டிருந்த சிறு காயத்திலிருந்து ரத்தம் கோடாக வழிந்து தாடைமீது ஓடி, அவளது முன்னங்கை மீது சொட்டியிருந்தது.

இத்தனை நாளாகக் கடைப்பிடித்து வந்த விரோதமெல்லாம் காற்றில் பஞ்சாய்ப் பறந்து போயிற்று அவனுக்கு. அவனது அருமை அம்மாவின் நிலையைக் கண்டு மெய் பதற அருகே ஓடிவந்தான். எஜமானியின் கன்னத்தின் மீது மூக்கை வைத்துக்கொண்ட ரோவரைத் தள்ளிவிட்டு, தாயாரை அப்படியே தூக்கினான் மிகுந்த வாஞ்சையுடன்.

"அம்மா! என்னம்மா ஆச்சு!" என்று பதறினான்.

அம்மாவும் மனத்தாங்கலை மறந்து போனாள். அவளது செல்வ மகனின் அன்பும், பரிவும் நிறைந்த குரலில் மனம் கரைந்துபோனாள். "மயக்கமா வந்தது... அவ்வளவுதான் தெரியும். சுரீர்னு ஒரு வலி... கீழே விழுந்திருக்கேன் போல இருக்குது. காப்பி மேஜை முனை நெத்தியிலே குத்தி



இருக்கணும். வலியில சட்டுனு முழிப்பு வந்தது. நெத்தியைத் தொட்டுப் பார்த்தப்போ... பிசுபிசுன்னு கையில பட்டுச்சு... விளக்கைப் போடணும்னு நினைச்சேன்... முடியல்லே... தலையைச் சுத்திக்கிட்டு மறுபடியும்... மயக்கமா வந்திச்சு ..." அம்மா அழுகையில் நிணறினாள்.

"பயப்படாதீங்கம்மா. நான்தான் வந்திட்டேனே. ஒரு சின்னக் காயம். அவ்வளவுதான். இருங்க எல்லாம் சரியா விடும்"—சமாதானமாகச் சொல்லியபடி தன் கைக்குட்டையை உருவிக் காயத்தின் மீது வைத்து அழுத்தினான்.

ஆட்டுக்குட்டியை தூக்குவது போல அப்படியே தாயாரைத் தூக்கிக்கொண்டு அருகில் இருந்த படுக்கையின் மீது கிடத்திவிட்டு, ஜன்னல் கதவைத் திறந்து விட்டான். மின்விசிறியைச் சுழலவிட்டான்.

டாக்டர் சிகாமணியை அவசரமாகத் தொலைபேசியில் அழைத்துவிட்டு, ரோவரைப் பிடித்துக் குளியலறைக்குள் தள்ளி மூடினான். அம்மாவின் அருகில் வந்து ஆதரவாக உட்கார்ந்தவன் மனத்தில் வேதனை கனமையாகக் கனத்தது.

கஸ்தூரி தொடர்ந்து முனகிக் கொண்டிருந்தாள். "தலையை வலிக்குதே!" இடையே அரற்றினாள். குடும்ப வைத்தியர் வருவதற்குள் யுகமே முடிந்துவிடும் போல அவனுக்கு மலைப்புத் தட்டியது.

முடிவில் வைத்தியர் வந்தார். நெற்றிக் காயத்தை முதலில் கவனித்துவிட்டு பின்னர் பரிசோதனை செய்தார். அவரையே கவலையுடன் பார்த்தான் ஹர்ஷன். ஜாடை செய்து அவனை வெளியே அழைத்தார் வைத்தியர்.

ஏதேனும் விபரீதமாகச் சொல்லிவிடப் போகிறார் என்ற பயத்தில் ஹர்ஷனுக்கு மார்பு படபடத்தது. மூச்சு முட்டியது. திகிலுடன் அவரையே பார்த்தான்.

''அம்மாவுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகவே இருக்கு. அதனால உடனடியா ஆஸ்பத்திரியில் அனுமதிச்சு ஒரு வாரம் வைத்தியப் பாதுகாப்பிலே வைக்கலாம்னு நினைக்கிறேன்.''

''ரொம்ப ஆபத்தா இருக்குன்னு சொல்றீங்களா டாக்டர்?''—'ஓ'வென்று அழவேண்டும் போன்ற துயரம் நெஞ்சைக் கவ்வியது. ஆண் பிள்ளையாயிற்றே. வெட்கத்துடன் உதட்டை அழுத்திக் கடித்தவாறு துயரை விழுங்கிக் கொண்டான்.

''இரண்டு நாளைக்கு முன் அம்மா தொலைபேசியில் எங்கிட்ட பேசினாங்க... அலுவலகத்திலே ரொம்ப வேலை; பல கவலைகள். அதனாலே அவங்களுக்கு இரவிலே தூக்கமே இல்லை... அடிக்கடி தலை நோவு வந்துடறதுன்னாங்க. நீங்க கிளினிக்குக்கு வந்து இரத்த அழுத்தத்தைப் பரிசோதிச்சுக்கறது நல்லதுன்னேன். அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு ... அவங்க மேலே குத்தம் சொல்லலை. இப்போ அவங்க அலுவலகத்திலே அவங்க வேலை பார்க்கற பகுதிக்குத் தலைவியாக உயர்த்தப்பட்டிருக்காங்க இல்லையா? அதனால அதிகப்படி வேலை வேற...'' அவர் பேசிக் கொண்டே போனார்.

தூக்கிவாரிப் போட்டது ஹர்ஷனுக்கு. அவருக்குத் தெரிந்திருந்த விஷயம் அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லையே! அவமானமாகவும் இருந்தது.

''அத்தோட வீட்டு விவகாரமும்...'' சொல்லிவிட்டுக் குடும்ப வைத்தியர் அலங்கோலமாகக் கிடந்த அறையைச் சுற்றிலும் நோட்டம் விட்டார்.

''முன்போலிருந்தால் அம்மாவை வீட்டிலேயே வைச்சுக் கவனிச்சுக்கலாம். பொறுப்பாப் பார்த்துக் கொள்ள இப்ப வீட்டிலே யாரும் இல்லாததனாலே... உடனடியா ஆஸ்பத்



திரியில் அனுமதிக்கிறது நல்லதுன்னு சொன்னேன்''—அழுத்தமாகக் கூறினார் அவர்.

ஹர்ஷன் முகம் சிவந்தது. உடல் அனலாக எரிந்தது. மெல்ல அவரைத் தலைநிமிர்ந்து பார்த்தான் கூச்சத்துடன்.

மாதங்கி அங்கே இல்லாதது கூட அவருக்குத் தெரிந்திருக்கிறது! அவருக்கு மட்டுமென்ன... இத்தனை நாளில் ஊருக்கே தெரிந்திருக்கும்.

''எங்க வீட்டிலே ஏற்பட்ட குழப்பத்தினாலே அம்மாவுக்கு உடம்புக்கு இப்படியாயிட்டதாகச் சொல்றீங்களா?''—தடுமாறினான் ஹர்ஷன். குற்ற உணர்வு மனத்தில் முள்ளாக நெருடியது.

''உங்க பாட்டன் காலத்திலிருந்து உங்க குடும்பத்தை எனக்குத் தெரியும். வெறும் கடும் உழைப்பால் உங்கம்மா உடம்பு கெட்டுப் போகலை. இன்னிக்கு அவங்க மனத்துக்கு பெருத்த அதிர்ச்சி தரக்கூடிய சங்கதி ஏதோ நடந்திருக்கு. கடும் உழைப்பும், மன அதிர்ச்சியும் சேர்ந்துக்கவே, ரத்த அழுத்தம் 'ஓஹோ'ன்னு போயிட்டுது. நல்ல வேளை மயக்கமா விழுந்ததிலே கையைக் காலை உடைச்சிக்கலை. சரி!. 'அபர்ணா நர்ஸிங் ஹோமு'க்கு அம்மாவைக் காரில் படுக்க வச்சு அழைச்சிகிட்டு வா. நான் முதல்லே போய் ஒரு ஏ.ஸி. ரூம் ஒண்ணு ஏற்பாடு செய்யறேன்''—விடை பெற்றுக் கொண்டார் அவர்.

அம்மாவை நர்ஸிங் ஹோமில் தனியாக விட்டுவிட்டுத் திரும்ப ஹர்ஷனுக்கு மனமே வரவில்லை.

''இரவில் மறுபடியும் மயக்கம் வந்து விபரீதம் ஏதாவது நேர்ந்து விட்டால்...? உயிருக்கு ஆபத்தாகி விட்டால் ...'' உள்ளூர நடுங்கினான். அதே சமயம் அவன் மனத்திற்

குள்ளே ஓர் அதிசயம். "அம்மா மீது இத்தனை பிரியமா அவனுக்கு! இதை ஏன் அவன் சரிவரப் புரிந்து கொள்ள வில்லை?"

காரை காரேஜில் நிறுத்திவிட்டு... மறுபடியும் வாயிற் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவன் மனத்தில் வீட்டின் 'ஆ'வென்ற தனிமை, அவனையும் அறியாது கண்ணீரை வரவழைத்தது. இதுவரை ஆண்பிள்ளை என்ற வீம்புக்காக அடக்கிக் கொண்டிருந்த அழுகை விம்மலாக அவனது உடலைக் குலுக்கியது.

தனிமையின் கொடுமையைத் தவிர்க்க ரோவர் காலடியில் துணையாகச் சுருண்டு கிடக்க, முன்னறையில் சோபாவில் சாய்ந்து கொண்டான்.

அம்மாவின் ரத்த அழுத்தம் அதிகமாகி ஒருவேளை உயிருக்கே உலை வைத்துவிட்டால்! நெருங்கிய அந்த ஓர் உறவும் அற்றுப்போன பின்னர்... அந்த இழப்பின் துயரை அவன் எப்படித் தாங்கிக் கொள்வான்!

பத்து வயது சிறுவனாக இருக்கையில் மாரடைப்பால் மறைந்து போன அப்பாவின் பேரிழப்பு தந்த அதிர்ச்சியை அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுது... அவளுடன் துயரைப் பகிர்ந்து கொண்டு... தாங்கிக் கொண்டான்.

அப்பா வைத்துவிட்டுப் போனது அந்த வீடும் கொஞ்சம் பணமும்தான். அதை மட்டுமே நம்பி வாழத் தொடங்கியிருந்தால் இப்போது நிலைமை வேறாகிப் போயிருக்கும். அப்பாவின் மறைவுக்குப் பின்னர் அம்மா வேலைக்குப் போக ஆரம்பித்தாள். ஆரம்பத்தில் கார் போன்ற வசதிகள் கிடையாது. அலுவலகத்திற்கு பஸ்ஸில்தான் போய் வந்தாள். பரீட்சை நாட்களில் அவன் கூடவே கண் விழித்துக் கொண்டு காப்பியும், டீயும் போட்டுக் கொடுத்து உற்சாகப் படுத்தி



னாள். ஏன்? அந்தக் கார் விபத்தின் போது, அம்மா ஆஸ்பத்திரிக்கு நடந்த நடை—அவள்பட்ட வேதனை? எத்தனை இரவுகள் கண் அயராது அவன் அருகே அமர்ந்தபடி அப்பப்பா... அவள் செய்த பணிவிடைகள்!

இவ்வளவையும் மறந்து போனானே அவன்! நன்றியற்ற ஒரு மிருகம் போல நடந்து கொண்டானே! இத்தனை நாளாக அவளது மனம் நொந்து போகும்படி அல்லவா நடந்து வந்திருக்கிறான்.

சுயநலக்காரி ஊர்மிளா அவனை உதறிவிட்டு வேறு ஒருத்தனை மணந்த பின்னரும் அவனை வீழ்த்த எப்படியெல்லாம் ஒரு வலை விரித்தாள்?

அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் அடங்கி, அவள் பின்னால் நாய்க்குட்டி போல ஓடிக்கொண்டிருந்தவன்... பெருத்த தவறு செய்ய இருந்தவனை நல்லவேளை, குடும்ப நண்பர் நாராயணசாமியின் சாட்டையடி அவனை மீட்டு விட்டது!

சிந்தனை செய்தபடி கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தவன் வயிற்றைப் பசி கருட்டி எடுத்தது. எழுந்து சென்று பிரிட்ஜைத் திறந்து குளிர் நீர் பாட்டிலைத் திறந்து மடமடவென்று நீரைப் பருகினான்.

அவனாகச் செய்து கொண்ட அவலம் இது. கை நிறையச் சம்பாதித்தும் வயிறு நிறையச் சாப்பிட முடியாத திண்டாட்டம். மாதங்கியின் நினைப்பு திடீரென்று நெஞ்சைக் கவ்வியது. தான் செய்த தவறை எண்ணி மருகின படியே மீண்டும் முன்னறைப் பக்கம் வந்தான்.

வாயிற் கதவைத் தாளிட்டுவிட்டு, சோபாவின் மீது அமர்ந்தவனுக்கு மீண்டும் மாதங்கியைச் சுற்றியே எண்ணம் வட்டமிட்டது.

மனைவி என்று அவள் வீட்டுக்குள் வந்த பின்னரும் தான் ஆண்பிள்ளை என்ற ஆணவத்தினால்தானே வீட்டினுள் நுழைந்த ஊர்மிளாவை அவள் கண் எதிரிலேயே கொண்டாடினான்!

ஆனால் எவனோ ஒரு பொறாமைக்காரன் எழுதிப் போட்ட மொட்டைக் கடிதத்தைப் படித்துவிட்டு எப்படிக் கொதித்துப் போனான். உடனடியாக அவளை வீட்டை விட்டே துரத்த ஏற்பாடு செய்தான்? இது என்ன நியாயம்? எத்தனை பெரிய தவறு? அதிர்ஷ்டம் மாதங்கி வடிவில், மனைவி என்ற உரிமையில் அவனை வலுவிலே தேடிக் கொண்டு வந்தது. முட்டாள்! அதை எப்படி உதைத்து விட்டு... தனக்கே அழிவைத் தேடிக் கொண்டு விட்டானே!

மனைவியில்லாத தனிக்கட்டை என்பதை உணர்ந்து கொண்டு விட்டதால்தானே, ரிஸப்ஷன் சரோஜா அவனைப் பார்த்த போதெல்லாம் கண்களால் சிரித்துக் காதல் வலை வீசுகிறாள்? ஸ்டெனோ தங்கம், அனாவசியமாக மிக அருகில் வந்து இடிக்காத குறையாக நின்று தொலைக்கிறாள்?

எல்லோரும் தூண்டில் போடும் அளவுக்கு அவன் ஒரு காட்சிப் பொருளாகி விட்டானே, கர்மம்.

மாதங்கியிடம் அவன் கண்ட குறை என்ன? வீண் மனப்பிரமையால் அவளது அடக்கத்தையும், பண்பையும் சந்தேகித்தான், எரிச்சல்பட்டான், வாழ்க்கை தந்த நல்ல வாய்ப்பை நழுவ விட்டான்.

அவள் மட்டும் இப்போது கூட இருந்திருந்தால் வீடு இப்படியா அலங்கோலமாக இருக்கும்? அவர்களது வாழ்வு தான் இவ்வாறு சீர் குலைந்திருக்குமா?

'அட முட்டாள் ஹர்ஷா! ஒரு நல்ல பெண்ணை, சொல்லாலும், செயலாலும் அடித்து விரட்டி விட்டாயே!



சே! நீயும் ஒரு ஆண்பிள்ளைதானா?' தன்னைத்தானே கடிந்து கொண்டு துயரத்திலே துவண்டவனாகக் கண்களை மூடிக் கொண்டிருந்தவன் உறங்கிப் போனான்.

புடவை சரசரக்க, மாடிப்படிகளை மெல்ல ஏறி வந்து மாதங்கி கதவை லேசாகத் தட்டும் ஒலி... தொடர்ந்து கம் மென்று பன்னீர்ப் பூவின் மணம்.

திடுக்கிட்டு விழித்தான் ஹர்ஷன். ஜன்னல் ஓரத்தில் வளர்ந்து நின்ற பன்னீர் மரத்திலிருந்து காற்று வாக்கில் பூவின் வாசனை அறைக்குள்ளே வீசிக் கொண்டிருந்தது. வேலைக்காரி முனியம்மா கதவைத் தட்டினாள்—நன்றாக விடிந்து விட்டது.

உள்ளே வந்தவள் சங்கதியைக் கேட்டதும் முகவாயில் கையை வைத்துக் கொண்டு அப்படியே நின்று விட்டாள்.

''அம்மாவுக்குப் பெரிய வேலை கிடைச்சதுன்னுட்டு ஆபீசிலே கண்ணு போட்டுட்டாங்க... அதனால்தான் பாவம் உடம்புக்கு முடியாம வந்திருச்சு. அப்பவே நான் சுத்திப் போடணும்னு நினைச்சேன்.''

''ஆபீஸில் உள்ளவர்கள் போட்ட கண் இல்லை; அம்மாவுக்கு நான் கொடுத்த மனப்புண்!'' சொல்ல முடி யாது தவித்தான் ஹர்ஷன். சோம்பல் முறித்தபடி எழுந்து திரும்பியவனின் கண்களில் தரைமீது கிடந்த அந்தக் கடிதம்... பட்டது.

'என்னவாக இருக்கும்?' வியப்புடன் எடுத்துப் பிரித்துப் படித்தவன் அதிர்ந்தே போனான்.

அம்மாவுக்கு ஏற்பட்ட துயரத்தின் உச்ச நிலையை அப் போது அவனால் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது.

# 21

சில தினங்களில் கஸ்தூரி குணமடைந்து விட்டிருந்தாள். படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்து கொண்டு வந்தவர்களைப் பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசக்கூடிய அளவுக்கு உடலில் தெம்பு கூடியிருந்தது.

ஆனால் அவளைத் தனியே கவனித்துக் கொள்ள தனிப்பட அமர்த்தப்பட்டிருந்த நர்ஸ், யாரையும் அதிக நேரம் அங்கே நிற்கக்கூட அனுமதிக்கவில்லை.

காலை, பகல், மாலை என்று மூன்று வேளைகளும் அம்மாவைப் பார்க்க ஹர்ஷன் அலுவலகத்துக்கும், மருத்துவ மனைக்கும் இடையே அலைந்ததுதான் மிச்சம். காலை வேளையில் டாக்டர்கள் வரும் நேரமாகையால் அம்மாவைப் பார்த்துவிட்டுச் சட்டென்று அறையின் வெளியே வந்து நிற்க வேண்டியிருந்தது.

பகல் உணவு நேரத்தின்போது அம்மா தூங்கிக் கொண்டிருந்தாள். பார்வையாளர் நேரத்தின் போது அவள் வேலை செய்த அலுவலகத்து ஆபீஸ் பையன் முதல் மேலதிகாரி வரை, ஒருவர் பின் ஒருவராக மாறி மாறி வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அம்மாவிடம் மனம்விட்டு ஒரு வார்த்தைகூட அவனுக்குப் பேசுவதற்கு அவகாசமே கிடைக்கவில்லை.

பார்வையாளர் நேரம் கழிந்த பிறகு, அறைக்குள்ளே தயக்கமாக நிற்பவனை, இரவு வேளை நர்ஸ் வந்து பள்ளிச் சிறுவனை அதட்டுவதுபோல அதட்டுவாள். ''உஸ்! பேசாதீங்க. அவங்க இத்தனை நேரம் ரொம்பப் பேசி அலண்டு போயிருக்காங்க. அவங்களுக்கு ஓய்வு தேவை''—அவனைப் பயமுறுத்தி விரட்டி விடுவாள்.



அந்தச் சில நாட்களில் அவன் பட்ட வேதனை கொஞ்ச நஞ்சமல்ல.

மருத்துவ மனையிலிருந்து திரும்புமுன் வழியில் ஏதாவது ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பியவன், படுக்கையில் போய் விழுந்தால், உறக்கமேயின்றித் தவித்துக்கொண்டிருந்தான்.

அந்தச் சில நாட்களில் அவன் மாதங்கியின் அந்தக் கடிதத்தைப் பலமுறை படித்துவிட்டான்.

வீட்டின் மருமகளாக வந்த அன்றே, ''இவள் வேண்டாம்'' என்று ஒதுக்க மனத்தில் துணிவிருந்தது. ஆனால் இப்போது?

அவளே வேண்டாம் என்று ஒதுங்கிவிடத் தீர்மானித்திருக்கிறாள் என்பதை ஏற்று ஜீரணிக்க முடியாதவனாக, மனம் அவமானத்தில் தவிக்கத் துடித்துப் போனான்.

மாதங்கிக்கு விவாகரத்து வேண்டுமாமே? அவனை விட்டுப் பிரிந்த பின் அவள் என்ன செய்யப் போகிறாள்?

ஒருவேளை வேறு ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டு விடுவாளோ? முடியாது... முடியாது... அந்த அவமானத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியாது...

மனத்தினுள் பலப்பல எண்ணித் தவித்தான் ஹர்ஷன். உணர்வுகள் குழம்பின நிலையில், உணவு பிடிக்கவில்லை. உறக்கம் வர மறுத்தது. ஒரே தத்தளிப்பு.

அன்று மருத்துவமனைக்கு எதிரே இருந்த ஹோட்டலில் சாப்பாட்டை வேண்டா வெறுப்பாக முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

மாடிக்குச் சென்று விளக்கைப் போட்டு உடைமாற்றிக் கொண்டு படுக்கை மீது சாய்ந்துகொண்ட பொழுதுதான் அந்த யோசனை தோன்றியது.

சட்டென்று எழுந்தான். மாதங்கியின் கடிதத்தை மேஜை இழுப்பறையிலிருந்த தன் டைரிக்குள்ளிருந்து எடுத்துப் பிரித்தான். மிகக் கவனமாக அந்தக் கடிதத்தில் முகவரியுடன் கொடுக்கப்பட்டிருந்த நர்மதா அம்மாவின் டெலிபோன் எண்ணை ஒரு துண்டுக் காகிதத்தில் குறித்துக் கொண்டான்.

இரவின் அந்த வேளையில் நர்மதா அம்மாள் நிச்சயம் தூங்கப் போயிருப்பாள். நேரிடைத் தொடர்பு கொண்டு தொலைபேசியில் மாதங்கியிடமே பேசிவிட்டால்...?

'ரத்த அழுத்தம் அதிகமாகி—மயக்கம் போட்டு விழுந்து காயத்துடன் அம்மா மருத்துவமனையில் இருக்கிறார்கள்' என்று ஆரம்பித்துப் பேசிவிட்டால் என்ன?

'அம்மா உன்னைப் பார்க்க மிகவும் ஆவலாக இருக்கிறார்கள். உடனே புறப்பட்டு வா' என்று பேசினால் தவறா?

தனக்குத்தானே பலவாறாக ஆட்சேப சமாதானங்கள் கூறிக்கொண்ட பிறகு பரபரப்புடன் தொலைபேசியை இழுத்துத் தலைமாட்டு மேஜையருகில் வைத்துக் கொண்டான்.

துண்டுக் கடிதத்தில் குறித்துக் கொண்ட எண்ணை மடமடவென்று வேகமாகச் சுழற்றினான்.

''ஹலோ!''—மறு பக்கத்திலிருந்து ஒலித்த குரலைக் கேட்டதும், அவனையுமறியாமல் ஒரு சிலிர்ப்பு. கரம் லேசாக நடுங்கியது. மாதங்கியின் குரலேதான்!

இத்தனை மாதங்களுக்குப் பிறகு கேட்ட அவள் குரல் இத்தனை புதுமையாக... மிக இனிமையாக... அவன் மார்பு படபடத்தது.



''யார் பேசறது?''

''திருமதி நர்மதா அம்மா வீடுதானே?'' சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள மெல்லக் கேட்டவனுக்கு மூச்சு அடைத்துக் கொண்டது.

''ஆமாம், நீங்க யார்?''

காது மடல்கள் சூடாகி, நெஞ்சத் துடிப்பும் வேகமாகி ... ஒரு கணம் அவமானத்தில் நொறுங்கிப் போனான் அவன்.

மனைவியின் குரல் அவனுக்குத் தெரிந்த அளவுக்கு, அவளுக்கு அவனது குரல் விளங்காதது யார் குற்றம்? ''நீங்கள் யார்?'' என்று அவள் கேட்கும் அளவுக்கு எவ்வளவு தூரம் விலகிப் போய்விட்டிருக்கிறான்?

தைரியத்தை வரவழைத்துக் கொண்டவனாய் ''சென்னையிலிருந்து நான்தான் ஹர்ஷன் பேசறேன்—கஸ்தூரி அம்மாவின் மகன்'' என்றான் உரக்க.

மறுமுனையிலிருந்து அழுத்தமாக மூச்சு விடுவது கேட்டது. தொடர்ந்து ஒரு மௌனம். அவன்மேலே பேசு முன் தொலைபேசி படக்கென்று துண்டிக்கப்பட்டு விட்டது.

அவன் முகத்தில் யாரோ ஓங்கி அறைந்துவிட்டது போன்ற வேதனையும், வெட்கமுமாக ரிசீவரை வைத்தான்.

மாதங்கி அவனிடம் பேச விரும்பவில்லை. அவனைத் தெரிந்து கொள்ளவோ, உறவைப் புதுப்பித்துக் கொள்ளவோ சிரத்தை காட்டவில்லை. அவனிடமிருந்து கடிதத்தில் கண்டபடி விவாகரத்து வாங்கிக் கொண்டு விலகிச் செல்லவே திட்டமிட்டிருக்கிறாள்!

'ஐயய்யோ! அவன் வாழ்க்கையில் ஒன்றன்பின் ஒன்றாக எப்படிப்பட்ட தலைகுனிவுகள்?'

ஊர்மிளா அவனை உதறிவிட்டுப் போன விஷயம் ஊரே தெரிந்து... அந்த அதிர்ச்சியிலிருந்து நிமிர்வதற்குள்... ஜயந்தி, கல்யாணத்துக்கு முதல் நாள் மண்டபத்திலிருந்து மாயமான கிசுகிசுப்பு... அது அலுவலகம் முழுவதும் பரவி அவன் காதுகளிலும் லேசாக எட்டிய போது அனலை வாரித் தலை மீது கொட்டிய அவமானத்தில் பொங்கிப் போனான்.

இப்போது மாதங்கி...! ஐயோ! இந்த அவமானத்தை அவன் எப்படித் தாங்குவான்? ஹர்ஷன் படுக்கையில் வீழ்ந்தான். மாதங்கியை இந்த அளவுக்குக் கொண்டு வந்ததற்கு யார் காரணம்? ஆரம்பதில் அந்த வீட்டில் வாயில்லாத வேலைக்காரியாக அவளை அவன் எப்படிக் கேவலப் படுத்தியிருக்கிறான்? எத்தனை சிறுமைகளை அவளுக்கு இழைத்திருக்கிறான். இப்போது மட்டும் மாதங்கி விவாகரத்து வாங்கிக் கொண்டு போய் விடுவாளோ என்று ஏன் பயந்து சாகிறான்? மாதங்கியைப் பிடிக்காமல் அவளை மீண்டும் வீட்டில் கொண்டு வந்து வதைப்பதில் என்ன பலனைக் காணப் போகிறான்?

'இல்லை... இல்லை... அவன் இப்போது மாதங்கியை இழக்க விரும்பவில்லை! அதுதான் உண்மை. அவளை மனைவியாக ஏற்று வாழ விரும்புகிறான். உண்மை விவரம் தெரிந்த பிறகு தன் செய்கைக்கு வருந்தி அவன் பச்சாதாபத்தில் பரிதவிப்பதை அவளிடம் யார் எடுத்துச் சொல்லப் போகிறார்கள்?'

தொலைபேசியை வேண்டுமென்றே மாதங்கி துண்டித்து விடக்கூடிய பெண்ணா?

பலவாறு எண்ணி, நெஞ்சமெல்லாம் புண்ணாகிப் போனான் ஹர்ஷன். துயரத்தின் கனமையினால் கண்கள் உறங்க மறுத்தன.



மறுநாட் காலை அலுவலகம் போகும் முன் தாயாரைப் பார்த்துவிட்டு வர, சற்று முன்னதாகவே புறப்பட்டுப் போனான்.

கஸ்தூரியின் உடல் நிலை முற்றிலும் குணம் அடைந்து விட்டது என்றாலும், மருத்துவப் பாதுகாப்பில் இன்னும் சில நாட்கள் இருந்தாக வேண்டியிருந்தது.

கதவை மெல்லத் தட்டி விட்டுத் திறந்து கொண்டு உள்ளே சென்ற ஹர்ஷன் அம்மா படுக்கை மீது அமர்ந்தபடி பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

'அப்பாடா! நல்லவேளை அறைக்குள் நர்ஸ். வேறு பணியாள் இல்லை.' சுற்றும் முற்றும் நோட்டம் விட்டுத் திருப்தியடைந்தவனாய், அம்மாவின் கட்டில் அருகில் கிடந்த நாற்காலி மீது உட்கார்ந்தான்.

''உங்க உடம்பு இப்ப எப்படிம்மா இருக்கு''—அன்புடன் கேட்டபடி அவளைப் பார்த்தான்.

''தேவலை'' என்றபடி பத்திரிகையை மடித்து வைத்து விட்டு, மகனை உற்றுப் பார்த்தாள் கஸ்தூரி.

இந்தச் சில தினங்களில் ஏற்பட்ட அலைச்சலில் அவனும் மிகச் சோர்ந்து காணப்பட்டான்.

''ரோவர் கூட ரொம்ப இளைத்துப் போய்விட்டது. நீங்களும் வீட்டில் இல்லையா? சாப்பிடாம அது ரொம்பப் பிடிவாதம் பிடிக்குதும்மா.''

கஸ்தூரிக்கு மகன் என்ன சொல்ல வருகிறான் என்று புரிந்துவிட்டது.

''எனக்குக்கூடச் சாப்பாடே பிடிக்க மாட்டேங்குது. காலையில வெறும் வாட்டின ரொட்டியும், டீயும் குடுத்

தாங்க. வீட்டுக்கு வந்ததும் மெத்துன்னு தோசையும் தொட்டுக்கக் காரக்குழம்பும் செஞ்சு... யாராச்சும்...'' முடிக்காமல் பெருமூச்சு விட்டாள்.

''நீங்க இங்க வந்த பிறகு...'' மென்று விழுங்கியபடி ஆரம்பித்த மகன் ''முன்னறை தரையிலே ஒரு கடுதாசி கிடந்ததை எதேச்சையாக எடுத்துப் பிரிச்சேன். அது... அது ... மாதங்கியோட கடிதம்—'' தடுமாற்றத்துடன் முடித்தான்.

''நீயே விவரம் தெரிஞ்சுகண்டது நல்லதாப் போச்சு. உன்கிட்ட எப்படிச் சொல்றதுன்னு ரெண்டு நாளா என் மனசில ஒரே குழப்பம்...''

''குழப்பம், கவலை இதெல்லாம் உங்க உடம்புக்கு ஆகாது—அதையெல்லாம் தீர்க்க நான் ஒன்று செய்யப் போகிறேன்.''

கஸ்தூரி வியப்புடன் மகனைப் பார்த்தாள்.

''நானே பெங்களூருக்குப் போய் மாதங்கியைக் கண்டு பேசி, அவளை அழைச்சுக்கிட்டு வரப்போறேன்.''

''என்னைக் கவனிக்க ஒரு வேலைக்காரியா அவளை அழைச்சுக்கிட்டு வரப்போறியா? இங்க வந்து அப்படி அவதிப்பட அவளுக்குத் தலைவிதியா என்ன?''

''இல்லேம்மா! என் மனைவியா என்னோட வாழ வீட்டுக்கே திரும்பி வரும்படி கெஞ்சிக் கேட்கப் போறேன். நான் செய்த தப்புக்கெல்லாம் பிராயச்சித்தமா அவளை அன்போட கவனிச்சுக்கொள்றேன்னு உறுதி சொல்லப் போறேன்.''

''காலம் கடந்த பிறகா?'' கஸ்தூரி அலுப்புடன் கேட்டாள்.

''அவ ஒரு நல்ல பெண். எனக்கு மனைவியாக் கிடைச்சது என் அதிர்ஷ்டம்னு இப்பதானம்மா புரிஞ்சு கொண்டேன்.



அவளை நான் ரொம்பக் கஷ்டப்படுத்தினதுக்கு வருத்தப் படறேனம்மா!''

''பரிதாபப்பட்டா மட்டும் போதாது ஹர்ஷன்!''

''இல்லேம்மா, உண்மையிலேயே எனக்கு அவ மேலே விருப்பம் இருக்கு... காதல், கல்யாணத்துக்கு முந்தியும் வரலாம், பிந்தியும் வரலாம் இல்லியா?''

கஸ்தூரி மகனை நிதானமாகப் பார்த்தாள்.

''பெங்களூருக்குப் போய்ப் பார். பத்தாம் பசலியா நம்ம வீட்டுப் படியை மிதிச்ச மாதங்கி இல்லை அவள். வேலை செய்து தன்னைத்தானே காத்துக்கொள்ளும் திறமை கொண்ட ஒரு சுதந்திரமான பெண்... ஒரு சமயம் அவள் மனசில வேற யாரா...''

''அம்மா!'' ஹர்ஷன் தன்னை மறந்து உரத்த குரலில் கத்தினான். கண்ணும், மூக்கும் சிவந்து போயின.

அவனது உரிமை மனைவி மாதங்கி! அதை வேறு யாருக்கும், அவன் லேசில் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. உரிமை உணர்வும், ஆத்திரமும் பொங்கும் குரலில்,

''நாளைக்குக் காலை பெங்களூர் புறப்படுகிறேன். எல்லாம் நல்லபடியாகட்டும்னு ஆசீர்வதியுங்க அம்மா!'' ஹர்ஷன் முதன் முதலாக, தாயாரின் முன் துயரமும் வெட்கமுமாகத் தலை குனிந்தான்!

## 22

ஹர்ஷன் படித்தவன்—அலுவலகத்தில் பெரிய பதவி வகிப்பவன். ஆனாலும், வீட்டு நிர்வாகத்தைப் பொறுத்த மட்டில் பொறுப்பில்லாத பிள்ளையாகவே இருந்து வந்திருக்கிறான்.

வீடு என்பது ஒரு தங்குமிடம் போலவும், அம்மா அதைக் கட்டிக்காக்கக் கடமைப்பட்டவள் எனவும், சமீப காலமாக உறவு என்ற உரிமையில் வீட்டினுள் புகுந்து விட்ட மாதங்கி ஒரு உயர் மட்டத்து வேலைக்காரி என்றும் நினைத்து அசட்டையாக இருந்துவிட்டவன்.

வாழ்வில் தனக்கு ஏற்பட்ட தோல்விகளையே சதா எண்ணி, தன் சொந்தத் துயரத்திலேயே கரைந்து கொண்டு, சுயநலம் பாராட்டி, ஒரு வட்டத்தினுள்ளேயே வாழ்ந்து பழகிவிட்டவன்.

இப்போது, எங்கிருந்தோ திடீரென ஒரு புத்துணர்ச்சி, பொறுப்பு உணர்வு விழித்துக்கொண்டு விட்டது அவனிடம்.

இனி காலத்தை ஒருகணமும் விரயம் செய்யக்கூடாது, என அவன் உள்மனம் உந்தியது. பரபரப்புடன் பொழுது புலரும் முன்பே, தன் காரிலேயே பெங்களூருக்குப் புறப்பட்டு விட்டான்.

பெங்களூருக்கு வரும்போதெல்லாம் ஹோட்டல் ஹம்ஸாவில்தான் அவன் தங்குவது வழக்கம். அங்கேயே தங்குவதற்கு முன் ஏற்பாடு செய்துட்டே புறப்பட்டிருந்தானாகையால், நேரே ஹோட்டலை அடைந்தான்.

பயணக் களைப்புத்தீர குளித்து வேறு உடை உடுத்திக் கொண்டு மாடியிலிருந்த தனது அறையினின்றும் கீழே இறங்கி வந்தான். அதற்குள் காலை மணி பதினொன்று ஆகி விட்டிருந்தது.

அவசரக் காரியமாக வெளியூருக்கு இரண்டு நாள் போக வேண்டியிருப்பதால் அம்மாவை அவன் வரும் வரை கவனமாகப் பார்த்துக்கொள்ளும்படி மருத்துவமனை மேட்ரனிடம் பல முறைகள் கிளிப்பிள்ளையைப் போலச்



சொல்லிவிட்டுத்தான் கிளம்பி இருந்தான். டாக்டர் சொர்ணமணியிடமும் கூறிவிட்டே புறப்பட்டான். இருந்தாலும் அவனைப் பலவிதமான கவலைகள் அச்சுறுத்தின.

அம்மா உடம்பு நன்றாகத் தேறி வந்து கொண்டிருக்கிறது. திடீரென ஏதாவது கோளாறு நேர்ந்துவிட்டால்...?

வீட்டை வேலைக்காரி வசம் ஒப்படைத்துவிட்டு வந்திருக்கிறோமே? அவள் சரிவரக் கவனிக்காவிட்டால்?

அவனும் வீட்டில் இல்லாதபோது ரோவர் சாப்பிட மறுத்துப் பட்டினி கிடந்தால்...?

சங்கிலித் தொடராக ஆயிரம் கவலைகள் அவன் மனத்தைக் குடைந்தன.

பகல் உணவு நேரம் நெருங்கி வரும் சமயம். நர்மதா அம்மாவின் வீட்டுக்குப் போய் வேண்டாத விருந்தாளியாக அவர்களுடன் சாப்பாட்டில் கலந்துகொள்ள அவன் விரும்பவில்லை.

நேரத்தை வீணாக்காது உடனடியாகக் காரில் அல்சூர் சாலையை நோக்கி விரைந்தான்.

நர்மதா அம்மாளை அவன் சந்தித்துக் கொஞ்ச காலம் ஆகியிருந்தது. வீட்டை நெருங்கியதும் ஏனோ அவனுள் சிறு அச்சம் தலை தூக்கியது.

அவன் அம்மாவுக்கு நர்மதா மிக நெருங்கிய சிநேகிதிதான். ஆனால் பேச்சிலும், செயலிலும் மிகவும் கண்டிப்புக்காரி. அவள் போதனையால் மாதங்கியின் மனம் ஒரேயடியாக மாறிவிட்டிருந்தால்?...

அவனுக்கு எத்தகைய வரவேற்பு கிடைக்குமோ? காரை நிறுத்திவிட்டு இறங்கிக் கேட்டைத் திறந்து கொண்டு

வண்டியை மெல்ல நடைபாதை மீது ஓட்டி, வீட்டுக்கு முன்னால் கொண்டு நிறுத்தினான்.

மெல்ல இறங்கி, வராந்தாவைக் கடந்து அழைப்பு மணியை அழுத்துவதற்குள் அவனுக்கு நெஞ்சு உலர்ந்து போயிற்று.

நர்மதா அம்மாதான் கதவைத் திறந்தாள்.

''ஹர்ஷன்! என்ன ஆச்சரியம்? உன்னைப்பத்தி இப்பத்தான் நினைச்சிட்டு இருந்தேன். ஆயுசு நூறு உனக்கு... வாப்பா வந்து உட்கார்!'' அன்பாக அழைத்தாள்.

முன் அறையில் உட்கார்ந்தவன் அவள் தந்த குளிர் பானத்தைக் குடித்துவிட்டுச் சட்டெனப் பேச முடியாமல் சுற்றும் முற்றும் கண்களால் துழாவினான்.

''முந்தாநாள் ராத்திரி நீ டெலிபோன் செய்தப்போ நான் தூங்கிவிட்டிருந்தேன். மாதங்கி சொன்னாள்...'' நர்மதா மெல்லச் சிரித்தாள். வெட்கத்தில் முகம் சிவக்க நெஞ்சு படபடக்க ஹர்ஷன் உட்கார்ந்திருந்தான்.

''நீ வருவேன்னு எனக்கு அப்பவே தெரியும்!'' கேலியா—குத்தலா இனம் தெரியாத குரலில் அவள் சொன்னதைக் கேட்டுப் பதில் பேசத் தோணாது மௌனமாக விழித்தான்.

''மாதங்கி வேலை விஷயமா ஒரு இண்டர்வியூவுக்குப் போயிருக்கிறாள். காலைல போனவ சாப்பாட்டுக்குக்கூட இங்கே வரமாட்டா''—ஹர்ஷனை மேலும் கீழுமாகப் பார்த்தாள் நர்மதா. அவள் கண்களில் லேசாகக் கடுமை மின்னுவதை அவன் உணர்ந்தான்.

''நான் நடத்துகிற ரெடிமேட் ஆடைக் கடையில் அவதான் உதவி செய்யறா... அதைக் கவனிக்க அப்படியே நேரே போயிடுவா.''



ஹர்ஷனுக்கு நாவறண்டு பேசமுடியாது உணர்வுகள் நெஞ்சை அடைத்துக் கொண்டன. மாதங்கி எப்போ வருவாள்?—கேட்கத் துணிவில்லாது குழம்பினான்.

''அநேகமாக இந்த வேலை மாதங்கிக்குக் கிடைச்சுடும். பிறகு அவ தன்னைத் தானே காப்பாத்திக் கொள்ளக் கூடிய சுதந்திரமான பெண்ணாகி விடுவாள். பிறகு யாரோட தயவும் அவளுக்குத் தேவை இருக்காது'' நர்மதாவின் வார்த்தைகளின் கூர்மை அவனைத் தாக்கியது.

தவறு செய்துவிட்டு ஆசிரியர் முன் தண்டனை பெறக் கைகட்டி வாய் புதைத்து அச்சத்தில் நிற்கும் பள்ளிச் சிறுவனைப் போல் உடல் கூசி உட்கார்ந்திருந்தான் ஹர்ஷன்.

''பகல் பன்னிரண்டு மணிக்கு மேலே, கடையில் அதிகமான கூட்டம் இருக்கும். வாடிக்கைக்காரங்களை விட்டு மாதங்கி கடையிலிருந்து வெளியே வர முடியாது. நாலு மணிக்கு நான் கடைக்கு வருவேன். அப்போ அவளுக்கு ஓய்வு கிடைக்கும். உன்னோட வெளியே வந்து பேச முடியும்... அதுவரையில் வேணுமானால் இங்கேயே இருந்திட்டு என்னோட சாப்பிட்டுட்டு...'' அவள் முடிக்கு முன் ஹர்ஷன் வேகமாக விடைபெற்றுக் கொண்டான்.

நர்மதா அம்மாள் மீது எரிச்சல் படுவதால் என்ன லாபம்? அவன் வேண்டாம் என்று அடித்து விரட்டிய போது, அடைக்கலம் கொடுத்து ஆதரித்தது அந்தம்மா அல்லவா? அந்த உரிமையில் பேசுகிறாள். அதில் என்ன தவறு? தும்பை விட்டு வாலைப் பிடிக்க நினைத்தால்... இப்படித்தான் அவமானமும் சங்கடமும் ஏற்படும்... தன்னையே நொந்தபடி புறப்பட்டான்.

'நர்மதா பொட்டீக்' கடை வாயிலின் எதிர்ப்புறம் கொஞ்ச தூரத்திலேயே காரை நிறுத்திவிட்டுக் கண்களை உள்ளே ஓட்டியபடி உட்கார்ந்திருந்தான்.

பகல் வேளை... 'பொட்டீக்'கில் இளசுகளின் கூட்டம் நிறையவே இருந்தது. காரில் இருந்தபடியே கடை முகப் பின் பெரிய கண்ணாடிக் கதவு வழியே ஊடுருவியபடி மாதங்கியைத் தேடினான்.

ஒரு இளம் பெண்ணுக்கு அலமாரியில் இருந்த மாக்ஸி களை எடுத்துக் காட்டியபடி விற்பனை மும்முரத்தில் இருந் தாள் அவள். அந்த இளம் பெண் அருகே அவளை யொத்த ஒரு இளைஞன் துணையாக நின்றவன் மாதங்கியிடம் விழுந் தடித்துக் கொண்டு பேச முற்பட்டுக் கொண்டிருந்தான்.

என்ன சொன்னாளோ அவள்... கடையே அதிரும் போல அந்த இளைஞன் சிரித்தான்.

மாதங்கி மேலே இடித்துக் கொண்டுவிடும் நெருக்கத் தில் என்னவோ கேட்டுக் கொண்டிருந்தான். ஹர்ஷனுக்கு எரிச்சலாக வந்தது. அழகான பெண் ஒருத்தியைக் கண்டால் போதும், என்னமாய்ப் பல்லை இளிக்கிறான்கள். தானும் இப்படி இருந்தவன்தான் என்பதும், ஒரு காலத்தில் கண் ணுக்குக் கவர்ச்சியான பெண்ணின் பின்னால் ஓடினவன் என்பதும் அவனுக்கு மறந்தே போய்விட்டிருந்தது.

மாதங்கியும் புன்னகை மாறாத முகத்துடன் பதில் அளித்தபடி இருந்தது வேறு அவனுக்குள் புகைச்சலைக் கிளப்பி விட்டது. சதா மிரட்சியுடன் காணப்படும் அவள் கூடவல்லவா இப்பொழுது தைரியமாக புன்முறுவலுடன் தலையை ஆட்டி ஏதோ பேசுகிறாள்! அவளும் மாறிப் போயிருக்கலாம்.

இத்தனை நாட்களின் இடைவெளியில் அவள் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டு விட்டிருக்கலாமே? அவளை வீட்டை விட்டு வெளியே துரத்த அவனுக்கு நெஞ்சுரம் இருந்தது



போல் அவளுக்கும் அவனை நிராகரிக்க இப்போது உறுதி யும், துணிவும் ஏற்பட்டிருக்கலாமே?

மாதங்கி இப்போது வெளி உலகில் பழகி விட்ட பெண். நர்மதா அம்மா சொன்னது போல் தன் சுய முயற்சி யாலேயே தனித்து வாழும் தகுதி பெற்று விட்டவள். இனி அவனது தயவுக்காகவோ, அன்புக்காகவோ ஏங்கி, அடிமை வாழ்வு வாழத் தேவையில்லை அவளுக்கு.

பெண் உரிமை, சுதந்திரம் என்று பேசிவரும் அவளது அம்மாவும் மாதங்கியின் மனப் போக்குப்படிதான் பேசு வாள். எனவே மாதங்கி அவனை உதாசீனம் செய்தாலும், வெறுத்துப் பேசினாலும் அவனுக்காகப் பரிந்து பேச யாருமே முன்வர மாட்டார்கள்.

ஹர்ஷன் மீண்டும் கண்ணாடிக் கதவின் வழியே ஊடுருவிப் பார்த்தான். மாதங்கி, அந்த வாலிபனிடம் சிரித்துப் பேசியது அடக்கமாட்டாத ஆத்திரத்தைத் தூண்டி யது. பற்களைக் கடித்துக் கொண்டு, பொறுமையுடன் காத் திருந்தான்.

அவனாகச் செய்த கோணலை அவன்தானே சீர்செய் தாக வேண்டும். பொறுமை. பொறுமை! மனம் எச்சரித்தது.

சிறிது பொழுதில் நர்மதா அம்மாவின் காரைக் கண்ட தும் இலேசாக மூச்சு வந்தது அவனுக்கு.

காரை நிதானமாக ஒருபுறம் நிறுத்தியதும், அவனிடம் வந்து, ''நான் போய் மாதங்கியை அனுப்புகிறேன். எங்கே யாவது ஒரு தனி இடத்தில் உட்கார்ந்து கொண்டு நீ பேசிக் கொள்'' என்றாள் கண்டிப்புத் தொனிக்கும் குரலில்.

'கடை வாயிலில் ஏதேனும் ரசாபாசமாகப் பேசி விடாதே' என்ற பொருள் தொனித்தது அவள் குரலில்.

ஹர்ஷன் கோபத்தைச் சிரமத்துடன் அடக்கியபடி தலையை ஆட்டி வைத்தான்.

"நீ பேசறதை பேசிக் கொள். பிறகு அவள் இஷ்டம்" நறுக்கெனக் கூறிவிட்டு, கடைக்குள் சென்று விட்டாள்.

ஒரு விநாடியே ஒரு யுகமாகக் கனத்தது. நெஞ்சு படபடக்க ஆவலுடன் கடையையே வெறித்தபடி இருந்தான்.

மாதங்கி, 'போனை'த் துண்டித்தது போல் அவனைப் பார்க்க மறுத்து விடுவாளோ? அவன் நேரே ஊரிலிருந்து வரக் கூடும் என்று எதிர்பார்த்து இண்டர்வியூவைச் சாக்காக வைத்து வீட்டிலிருந்து வெளியேறி விட்டாளோ?

மாதங்கி கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தாள். எதிர்ப்புறமாக நிறுத்தப்பட்டிருந்த அவனது காரைக் கண்டதும் தயக்கத்துடன் அப்படியே நின்று விட்டாள்.

"மாதங்கி"—உரக்க கூவி அழைக்க வேண்டும் போல அவனுக்குள்ளே ஆவேசம் அலையாகப் பொங்கியது. அதே சமயம், ஒருவிதமான வெட்கமும், அவமானமும் அவனை அடக்கின. கையை மட்டும் உயரத் தூக்கி, தான் நிற்கும் இடத்தைக் காட்டுவது போல் அசைத்தான்.

மாதங்கி அதைப் பார்த்தது தெரிந்தது. ஆனால் நின்று கொண்டே இருந்தாள். அதற்கு மேல் ஹர்ஷனால் பொறுக்க முடியவில்லை.

சட்டெனக் காரை விட்டு இறங்கினான். ஒரே தாவலில் எதிர்ப்பக்கம் நின்ற அவளருகில் ஓடி மூச்சிரைக்க நின்றான்.

"மாதங்கி! உன்கிட்ட நேராகப் பேச வேண்டும் என்று ஓடோடி வந்திருக்கேன்."

மாதங்கி மெல்ல அவனைப் பார்த்தாள். முன்போல் அவனைக் கண்டதும் அவளது கண்களில் காணப்படும் மிரட்சி இப்போது அவளிடம் இல்லை.



"அம்மாவுக்கு ரொம்பவும் உடம்புக்கு முடியலே, நர்ஸிங் ஹோமில சேர்த்திருக்கு... அதனாலே காரை எடுத்து கிட்டே சென்னையிலிருந்து ஓடோடி வந்தேன்" அவசர மாக முடித்தான்.

"தெரியும். நர்மதா அம்மா சொன்னாங்க." அவளது குரலில் எந்தவிதமான சலனமும் இல்லை. இதுநாள் வரை காணாத கணவனைக் கண்ட மகிழ்ச்சி, பரபரப்பு ஊஹூம்! எதுவுமே இல்லாத விருப்பு வெறுப்பற்ற குரல்!

ஹர்ஷனின் முகம் அவமானத்தால் சிவந்தது. இத்தனைக்கும் அவன்தானே காரணம். தன்னையே சாடியபடி, "என்னோட கொஞ்சம் வெளியே வரமுடியுமா மாதங்கி?" என்றான் தடுமாற்றத்துடன்.

"எங்கிட்டப் பேசப் போறீங்களா?"

"மாதங்கி! ப்ளீஸ்!" ஹர்ஷன் கெஞ்சினான்.

"ஒண்ணு செய்யலாமே. நாம ரெண்டு பேர் சம்பந்தப் பட்ட விஷயம்-அதைப்பத்தி பேசணும்னா நர்மதா அம்மா வீட்டுத் தோட்டத்திலேயே அமர்ந்து பேசுவோமே" என்றாள் தீர்மானத்துடன்.

"அப்ப புறப்படலாமா?"

"இல்லே. நீங்க புறப்பட்டுப் போங்க, நான் நர்மதா அம்மாவிடம் சொல்லிட்டு அங்கேயே வந்து சேருகிறேன்," கடை உள்ளே மறைந்து விட்டாள் மாதங்கி.

ஹர்ஷனின் முகம் ஏமாற்றத்தால் தொங்கிப் போயிற்று. காரில் ஏறி அமர்ந்தவனுக்கு நெடுநேரம் தெருவே சூன்ய மாகக் காட்சி அளித்தது. அவனது மனக்கோட்டை நொறுங்கு வது போன்ற பிரமிப்பில் அயர்ந்து போனான்.

## 23

ஷெண்பக மரத்தடியில் போடப்பட்டிருந்த சிமெண்ட் ஆசனத்தில் இருவரும் அமர்ந்துகொண்டனர், சொன்னபடியே மாதங்கி நர்மதா அம்மா வீட்டுத் தோட்டத்தில் அவளைத் தேடி வந்துவிட்டது ஒரு சிறு ஆறுதலை அளித்தது.

எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? தொண்டையைச் செருமிக்கொண்டான். ஓரக்கண்ணால் அவளைக் காலோடு தலைவரை ஆராய்ந்தான்.

நீலவண்ண வாயில் சேலை இடையில். காதுகளில் முத்துத்தோடு. கழுத்தில் தாலிச் சரடு... அப்பாடா! அதைத் தூக்கி எறியவில்லை! கைகளில் பிளாஸ்டிக் வளையல்... மிக எளிமையான கோலத்தில், அதிக அழகுடன் அவள் காணப்பட்டாள். இத்தனை நாளும் இந்த அபூர்வ அழகை ரசிக்கத் தெரியாத மடையனாக இருந்துவிட்டோமே! உள்ளம் வருந்தியது.

''என்னவோ பேசணும்னு சொன்னீங்க'' மாதங்கி அவனை நிமிர்ந்து பார்த்தபடி கேட்டாள்.

''இந்த நீல நிறச் சேலை உனக்கு ரொம்ப அழகா பொருத்தமா இருக்கு...'' மென்று விழுங்கியபடி முடிப்பதற்குள், அவள் 'களுக்'கென்று சிரித்தாள்.

''இதைச் சொல்லவா சென்னையிலிருந்து இவ்வளவு தூரம் புறப்பட்டு வந்தீங்க?'' வேடிக்கையாக அவள் கேட்டதும் திடுக்கிட்டுப் போனான் அவன்.

மாதங்கி மாறித்தான் போயிருக்கிறாள். முன்னை விடப் பளிச்சென்று காணப்படுவது போலவே பளீரென்னு மிகத் துணிச்சலாகப் பேசவும் தெரிந்து வைத்திருக்கிறாளே?



''சுத்தி வளைக்காம சொல்லிடறேன் மாதங்கி! அம்மாவுக்கு உடம்புக்கு முடியாம நர்ஸிங் ஹோமிலே சேர்த்திருக்கு.''

''சொன்னீங்களே.''

''நீ இல்லாம வீடு வீடாவே இல்லே. அதனாலே... உன்னைக் கூட்டிக்கிட்டுப் போகணும்னு வந்தேன்.''

''எதுக்கு? வீட்டைப் பார்த்துக்கொள்ளவா?''

''மாதங்கி! என்னை மன்னிச்சிடு. எனக்கு எப்படி எங்கே ஆரம்பிச்சுப் பேசறதுன்னே விளங்கலே'' பரிதாபமாகக் கூறினான் அவன்.

மாதங்கி மெதுவாகப் புன்னகைத்தாள்.

''உன்கிட்ட முதல்ல, நான் செய்த தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, உன்னை என் மனைவியா வாழும்படி வேண்டிக்கொள்ளத்தான் வந்தேன், மாதங்கி சத்தியமாக என்னை நம்பு...''

''கட்டாயக் கல்யாணத்திலே ரொம்ப வெறுப்பு ஏற்பட்டிருந்திச்சே...!''

''ஆரம்பத்திலே வெறுப்பு இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் நாளடைவில் உன் மேலே கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு உண்மையான அன்பு ஏற்பட ஆரம்பித்திருந்ததை நானே உணரத் துவங்கின சமயம் தான் அந்த மொட்டைக் கடிதம் வந்து மனசைக் குழப்பிட்டது.''

''இப்பத் தெரிஞ்சுட்டதாக்கும்'' குறும்பாகக் கேட்டாள் அவள்.

''ஆமாம். அந்த மொட்டைக் கடிதம் உங்க பெரியம்மாவோட சூழ்ச்சின்னு தெரிந்துவிட்டது. நான் பிற்பாடு எத்தனை வேதனைப்பட்டேன் தெரியுமா? ஆனால் அதே சமயம்

உன்மேல ஏற்பட்ட பிரியத்தால்தான், எனக்கு அப்படி ஒரு கோபம் வந்ததுன்னு புரிஞ்சு கொண்டேன்'' பெருமூச்சு விட்டான்.

மாதங்கி பதில் பேசவில்லை.

''அதுமட்டுமா? உன்கிட்ட வேறே, என்னைப்பத்தி உங்க பெரியம்மா கதை கட்டி விட்டாங்களாமே?''

''ஆமா, சொன்னாங்க... ஏதோ கார் விபத்துல...''

''அது பெரும் பொய்!'' என்று கூவினான் ஹர்ஷன்.

''இப்ப என்ன அதுக்கு? நான்தான் அதை நம்பலையே? பயமுறுத்தினாங்க, வெளியே சொல்லவில்லை.''

''மாதங்கி! நீ ரொம்ப உயர்ந்த மனசுடைய பொண்ணு. என்னைப் போல ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு முடி வெடுக்கலே.''

''நடந்ததைப் பத்தி இப்ப என்னங்க.''

''இல்லே மாதங்கி! உங்க பெரியம்மா சொன்னது பொய்யின்னு நாம் வாழ்ந்து காட்டணும். தயவுசெஞ்சு எனக்கு ஒரே ஒருமுறை சந்தர்ப்பம் கொடு. நல்ல கணவனா நான் வாழ்ந்து காட்டுகிறேன்'' கெஞ்சினான்.

மாதங்கியின் கண்கள் கலங்கின.

''எங்கம்மாவைச் சரிவரப் புரிஞ்சுகொள்ளாம, அவளை யும் அவளோட நல்ல மனசையும் நான் நோக அடிச்சேன். அதனால், என் அம்மாவுக்கும் நல்ல பிள்ளையா வாழ்ந்து. அவங்க மனசையும் குளிரச் செய்ய முயலணும்னு ஆசைப் படறேன், மாதங்கி! என்னை நம்பு. உறுதியாச் சொல்றேன். என்னை இனியாவது மன்னிப்பாயா?'' என்று உணர்ச்சி வசத்தால் தடுமாறினான் ஹர்ஷன்.



''கொஞ்சம் நிதானமாகப் பேசுங்க'' என்றாள் மாதங்கி கனிவாக.

''உன் கடிதத்தைப் படிச்சேன். விவாகரத்து தேவைன்னு நீ மிக அவசரமான முடிவை எடுத்திட்டேன்னு எனக்குத் தோணிட்டது. அதைப்பத்தி சரியா எடுத்துச் சொல்லி நேராகவே பேசித் தீர்த்துப்பிடலாம்னு தான் உன்னை டெலி போனில் கூப்பிட்டுப் பார்த்தேன். ஆனா, நீ போனை பட் டுன்னு வச்சிட்டயே...'' குழந்தை போல அரற்றினான் அவன்.

''கடிதாசியைப் படிச்ச கோவத்திலே, என்னைத் தாறு மாறாத் திட்டத்தான் 'போன்' பண்றீங்கன்னு நினைச்சேன். அந்தப் பயத்துல 'டக்'குனு போனை வச்சிட்டேன்'' முறு வலித்தாள் மாதங்கி.

''என்னைப்பத்தின தப்பான எண்ணம்தானே உன் மனசிலே உருவாகியிருக்கு... இல்லையா...?''

''உருவாக்கினது... நீங்கதானே...''

''மாதங்கி! நான் பழைய ஹர்ஷன் இல்லே!''

''சந்தோஷம்!''

''நீ இன்னிக்கு 'இன்டர்வியூ'க்குப் போய் வந்திருக்கே, வேலை கிடைச்சிடும்னு நர்மதா அம்மா சொன்னாங்க.''

''ஆமாம்.''

''மாதங்கி! உனக்கு வேலை பார்க்க ஆசையா இருக்க லாம் இல்லியா?'' என்று குழைவுடன் கேட்டான் ஹர்ஷன்.

''ஆமாம். எனக்கு வேலை பார்க்க எப்போதுமே ஆசைதான்'' கூறியபடி எழுந்தாள் மாதங்கி.

ஹர்ஷன் முகம் சுருங்கியது. ''அப்படியானால்...''

''நர்மதா அம்மா வரட்டுமே. அவங்க எனக்கு கை கொடுத்து ஆதரிச்சதாலே, தாய் போல... அவங்களும் வந்த பிறகு முடிவு செய்தா நல்லது...''

சட்டென மாதங்கியின் கரங்களை ஒரே தாவலில் எட்டிப் பற்றிக்கொண்டான் ஹர்ஷன்.

''ப்ளீஸ்! மாதங்கி! என்னை ஏமாற்றிவிடாதே! நான் ஒரு நல்ல முடிவுகாண வேணும்னுதான், இத்தனை தூரம் ஓடோடி வந்திருக்கேன், தவறு செய்தவன் திருந்துவதற்கு ஒரே ஒரு வாய்ப்புத்தான் நான் கேட்கிறேன்.''

மாதங்கியின் கண்களில் நீர் பனிச்சிட்டது. ''கையை விடுங்க... நர்மதா அம்மா வராங்க'' மெல்லத் தன் கரங்களை விடுவித்துக் கொண்டாள்.

காரை நிறுத்திவிட்டு இறங்கிய நர்மதா இருவரையும் ஒரே கணத்தில் பார்வையால் அளந்தாள்.

''மாதங்கி! பேசி முடிச்சிட்டியாம்மா?''

மாதங்கி மகிழ்ச்சி பொங்கச் சிரித்தாள்.

ஹர்ஷன் வியப்புடன் நின்றான். 'மனம்விட்டு இன்னும் மாதங்கி எந்த முடிவும் சொல்லவில்லையே? இதென்ன கேள்வி?'

நர்மதா உரக்கச் சிரித்துவிட்டு ஹர்ஷன் பக்கம் திரும்பினாள்.

''உள்ளே போ ஹர்ஷன்! வீடு தேடி வந்த மருமகப் பிள்ளைக்கு காப்பி டிபன் கூடக் கொடுக்காம வாசலிலேயே நிறுத்தி வச்சுப் பேசிக்கிட்டிருக்காளே இந்தப் பொண்ணு!'' என்றாள் உற்சாகமான குரலில்.

மாதங்கி ஹர்ஷனை மென்மையாகப் பார்த்து முறுவலித்துவிட்டு உள்ளே சென்று விட்டாள்.



ஹர்ஷன் உள்ளத்திலே நம்பிக்கை உதயமாகியது. புதுத் தெம்புடன் அவன் நர்மதாவைப் பின்பற்றி உள்ளே ஆவலுடன் சென்றான்.

'இன்னிக்கு ராத்திரி உங்க ரெண்டு பேருக்கும் நம்ப வீட்டிலே விருந்து. இன்னிக்கு என்னோட தங்கியிருந்து ரெண்டு பேரும் நாளைக் காலை புறப்பட்டுப் போனால் போதும். என்ன நான் சொல்றது கேட்கிறதா?'' அதட்டலாக உரிமையுடன் உத்தரவு போட்டாள் நர்மதா.

முட்டுக்கட்டையாக நர்மதா இருப்பாள் என்று அஞ்சிக் கொண்டு வந்தவனுக்கு ஆனந்தம் கட்டுக் கொள்ளவில்லை.

கண்டிப்புக்காரி என்றாலும் கடமை உணர்ச்சி உடையவளாக இருக்கிறாள். நல்லவேளை... எல்லாம் எளிதிலே கைகூடி விட்டது. தன்னுள் எண்ணி மகிழ்ந்தாள்.

இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு கழுவிக் கொண்ட கையைத் துடைக்கத் துவாலையுடன் வந்த மாதங்கியை ஆசையுடன் பார்த்தான் ஹர்ஷன்.

''பெரிய ஆள் மாதங்கி நீ! என்னை எப்படிக் கலங்க அடுச்சுட்டே தெரியுமா? எங்கே நீ என் முகத்தில் அடிச்சாப்பலே வர மறுத்து விடுவாயோன்னு என் மனசு பட்ட பாடு... அப்பப்பா...'' சொல்லியபடியே துவாலையுடன் அவளது கரங்களைச் சேர்த்துப் பிடித்தான். உரிமையோடு அவளை அருகே இழுத்துக் கொண்டான்.

''ஸ்... நர்மதா அம்மா வராங்க... அதையெல்லாம் நம்ம வீட்டிலேயே வச்சிக்கலாம். இருபத்து நாலுமணி நேரம் பொறுக்கக் கூடாதா?!'' கேலியாக மாதங்கி சிரித்தாள்.

மறுநாள் நர்மதாவிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு ... கணவனுடன் மாதங்கி சென்னைக்குப் புறப்பட்டாள்.

காரைத் தங்கள் வீட்டுத் தோட்டத்துக்குள் செலுத்திய ஹர்ஷன் திகைத்தே போனான்.

செம்மண் கரை கட்டிய மாக்கோலம் வராந்தாவைப் பளிச்சென அலங்கரித்தது.

ஆரத்தித் தட்டுடன் வழி மேல் விழி வைத்தபடி வேலைக்காரம்மா நெற்றி நிறைய குங்குமம் வாய் நிறைய வெற்றிலைக் காவியுமாக நின்று கொண்டு சிரித்தாள்.

வாயிற் பக்கத்துக் கதவின் மீது மாவிலைத் தோரணம் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. உள் பக்கமிருந்து ஊதுபத்தியின் மணம் கம்மென்று முகத்தில் வந்து மோதியது.

''அம்மா! அவங்க வந்தாச்சு...'' வேலைக்காரம்மா பரபரப்பாக உரக்கக் குரல் கொடுக்கக் கஸ்தூரி ஆவலாக வெளியே வந்தாள்.

திடுக்கிட்டுப் போனான் ஹர்ஷன். ''அம்மா நீங்க இங்கே எப்படி?...'' வியப்புடன் கேட்டபடி காரிலிருந்து இறங்கினான்.

''நேத்தே நர்ஸிங் ஹோமிலிருந்து என்னை டாக்டர் வீட்டுக்கு அனுப்பிட்டார். நர்மதா எனக்கு விவரமாப் போன் செய்திருந்தா'' என்ற கஸ்தூரி உரிமையுடன் முன்னே வந்து ''ம்...! ரெண்டு பேரும் அப்படியே ஒரு நிமிஷம் நில்லுங்க...'' என்று உத்தரவிட்டாள்.

வேலைக்காரம்மா ஆரத்தி சுற்றிக் கொட்டின பிறகு உள்ளே வந்த மாதங்கி... ''அத்தே!'' என்று ஆசையுடன் ஓடி வந்து மாமியாரை அணைத்துக் கொண்டாள்.

மருமகளை ஆதரவோடு மார்பில் அணைத்துக் கொண்ட கஸ்தூரியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் முத்துக்கள் பெருகின, மாதங்கியின் தலைமீது ஆசித் துளிகளாகச் சிதறின.



''எப்படி இருக்கிங்க அத்தே! நான் இல்லாம ரொம்பக் கஷ்டப்பட்டீங்களாமே...?'' அன்புடன் வினவினாள் மாதங்கி.

''எனக்கு இனி ஒரு வியாதியும் இல்லே. எந்தக் கஷ்டமும் ஏற்படாது. நீ வந்துட்டேங்கற மகிழ்ச்சியிலே நான் வாழப் போகிறேன். ஏன் தெரியுமா?...'' என்று கேட்டபடி இருவரையும் இருபக்கமும் அணைத்தபடி உள்பக்கம் சென்றாள் கஸ்தூரி.

''சொல்லுங்கம்மா...'' என்றான் ஹர்ஷன் அருமையுடன்.

''என் பேரப் பிள்ளைகளை மடியிலே வச்சுக்கொண்டு அவங்களுக்குக் கதை சொல்ல வேணாமா? அதுக்காகத் தான்...'' உரக்க மகிழ்ச்சியுடன் சிரித்தாள் கஸ்தூரி.

எல்லாவற்றையும் புரிந்து கொண்டுவிட்டது போல் அவர்களுக்கு முன்னால் ரோவர் உற்சாகமாகக் குரைத்தபடி குதித்தோடி வந்து கொண்டிருந்தது.

**முற்றும்**